உ

சிவமயம்.

# சங்கரநாராயணசாமி கோயிற் புராணம்.

இது

சீவலமாறபாண்டியனரால் அருளிச்செய்யப்பெற்று

ஊற்றுமலைச்சமஸ்தான வித்துவான்

புளியங்குடி

முத்துவீரக்கவிராயர் செய்த

மூன்றாறு சருக்கமும்

மதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரிசோதகர்

மு. ரா. அருணாசலக்கவிராயர் எழுதிய

அரும்பதவுரையும், சருக்கவசனமும்

ஒருங்குசேர்த்து

சங்கரநாராயணசாமிகோயில் தர்மகர்த்தர்களாகிய

ஸ்ரீமாந்

என். ஏ. வி. சோமசுந்தரம்பிள்ளையவர்கள்

ஸ்ரீமாந்

வி. திருவேங்கடம்பிள்ளையவர்கள்

இவர்களால்

மதுரை,

விவேகபாநு அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1909.

(இரண்டாம் பதிப்பு).

Copy Right Registered.

சிவமயம்.

# முகவுரை

உலகம் பலவற்றுள் இந்நிலவுலகம் ஏழு தீவும ஒன்பது கண்டமுமெனப் பெயரிட்டுப் பிரிக்கப்பட்டுள்ளது; அவற்றுள் சம்புத்தீவிலுள்ள இப்பரதகண்டம் பல சிறு பகுப்புக்களாகப் பகுக்கப்பெறும். இதில் சேர சோழ பாண்டியர்களால் அரசாட்சி செய்யப்பெற்ற தமிழ்நாடு மூன்றனுள் பாண்டிநாடு அநாதிமுத்த சித்துருவாகிய பார்வதி, பரமேசுரன், குமாரக்கடவுளாகிய மூன்று தெய்வங்களும் செங்கோல்செலுத்தி, ஆண்டுவந்தமையா லெல்லா நாட்டினு முயர்ந்த தெய்வநாடென்று சொல்லுதற்கு ஐயமொருசிறிதுமில்லை; இத்தகைய பாண்டிநாட்டில் ஆண்மனைநாடு, முள்ளிநாடு, பூழியநாடு முதலிய உட்பிரிவுகள் சிலவுள்ளன; இவற்றுள் ஆண்மனைநாடு-சேறை (சேற்றூர்) முதலியநகரங்களை யுடையது. முள்ளிநாடு - பாவநாசமுதலிய தலங்களை யுடையது. பூழியநாடு - திருக்குற்றாலமாகிய க்ஷேத்திரங்களையுடையது; இவற்றுள் புன்னைவன க்ஷேத்திரமுமொன்று; இந்த க்ஷேத்திரம்: விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனனு மூவகை ஆன்மாக்களுக்கு முறையே அருவத் திருமேனியாலும், உருவத்திருமேனியாலும், அருவுருவத் திருமேனியாலுந் திருவருள்செய்யுஞ் சிவபிரான் கடம்பவன க்ஷேத்திரமென்னும் மதுரைநகரத்தைப்போல வேணுவன க்ஷேத்திரமாகிய திருநெல்வேலிக்குச்சமீபமான செப்பறைப்பதிக்கடுத்தமண்ணூர் முதலிய சில்லிடங்களை இராசதானிகளாகக் கொண்டிருந்த உக்கிரபாண்டிய ராசாவின் பொருட்டுத், தன்னிடத்திலுள்ள பிருதிவியாலமைந்த ஒரு புற்றினடியிலே அருவுருவமாகிய சிவலிங்கவடிவாய்த் தாமே யெழுந்தருளி (சுயம்புவாகி) [illegible]பெற்ற மான்மியமுள்ளது; இஃதன்றி உமாதேவி[illegible]க்கும், சங்கன், பதுமனென்னு நாகராசாக்க ளிருவருக்

கும் அரியும் அரனும் பேதமாயிருந்தாலும் ஐக்கத்தில் அபேதமென்றுகாட்டியருளிய அற்புத விசேடமுமுள்ளது.

ஆதலா லிந்த க்ஷேத்திரத்துக்குச் * சங்கரநாராயண கோயிலெனப் பிரசித்திபெற்ற திருநாமம் வந்தது. இம்மட்டோ! இன்னும் பற்பல மான்மியங்கள் பொதிந்த இத்தல புராண சரிதம் வடமொழியிலுள்ளது; அதைச் சீவலமாற பாண்டியனார் நம்போன்றவர் உய்தல் காரணமாகத் தென்மொழியில் மொழிபெயர்த்துப் பாடியருளினர். இப்புராணத்துள் நதிச்சருக்கம், நாட்டுச்சருக்கம், நகரச்சருக்கம், தலவிசேடச்சருக்கம், தீர்த்தவிசேடச்சருக்கம், மூர்த்திவிசேடச்சருக்கம் என்னும் ஆறு சருக்கங்களும், கடவுள் வாழ்த்துள் 3 கவிகளும், புராணவரலாற்றுள் 2 கவிகளும், திருநெல்வேலியைச்சார்ந்த ஊற்றுமலைச் சமஸ்தான வித்துவானாயிருந்த புள்ளியங்குடி முத்துவீரக்கவிராயரால் இற்றைக்கு 2 வருடங்கட்குமுன் பாடிச் சேர்க்கப்பட்டுள்ளன வென்பது இதற்கு முந்திய பதிப்புப் புத்தகத்தால் தெரியவருகிறது. நதி, நாடு, நகரத்தைப்பற்றிய விசேடணங்களைத் தனித்தனியே கூறுதல் சமஸ்கிருத முறைப்படி பண்டைநூலாசிரியர் வழக்கமின்மையால், அங்ஙனமே சீவலமாற பாண்டியனார் நதி, நாடு, நகர மூன்றையுங் கூறாது விடுத்துத் தலம் தீர்த்தம் மூர்த்தி விசேடங்களைச் சருக்கந்தோறும் வேண்டுமிடமெல்லாம் விளங்கக்கூறியிருந்தனர்.

இனி, சீவலமாற பாண்டியனார் காலமின்னதென்று ஓரிவாற்றானுந் தெரிந்திலது. ஒரு நூலைப்பாடினோர் அப்பாட்டுடைத்தலைவன்முன் அரங்கேற்றுதல் மரபாமாதலின் இந்நூலரங்கேற்றிடம் சங்கரநாராயணர் ஆலயமென்றே சொல்லலாகும். அதுபோல நூல் பாடியதற்குக் காரணம் நமையே வி[illegible]ய்த்தலன்றி வேறொன்றும் தெரிதலில்லை. "புராணமு

* இது: இக்காலத்துச் சிவகரன்கோயில் எனவும், சங்கரநயினார் கோயிலெனவும் வழங்கப்பெறுகின்றது.

ழுவதும் உய்த்துணருங்கால் அரியசொற்பொருட் பிரயோ
கங்களும் விசேடண, விசேடியங்களும் நிறைந்து கிடப்ப
தோடு, பத்திரசம்பூழ்க்கச் சுருங்கச் சொல்லல் விளங்கவை
த்தல் முதலிய வனப்புக்களும் வாய்ந்திருக்கின்றன.

இவ்வருமைபெருமைக டொல்லா நாணுணர்வாலு
ணர்ந்து, சங்கரநாராயணர் கோயிலுக்குத் தருமகருத்தரா
யிருக்கின்ற திருநெல்வேலியைச்சார்ந்த வண்ணார்பேட்டை
யில் வசிக்கும் ஐக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் என். ஏ. வி.
சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் கற்றாரன்றி மற்றாரும் எளிதி
னறியும்பொருட்டு ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலுஞ்
சுருக்கவசன மெழுதிச்சேர்த்து, இப்புராணத்தை யிரண்டா
பதிப்புச் செய்துகொடுக்க வேண்டுமென்று பரோபகார
ருமம்ர்க என் கனிட்ட சகோதரர் மதுரை வித்தியாபாநுப்
த்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயருக்கு நிருபமெழுதி
டுத்ததுடன் ஒரு அச்சுப்பதிப்புப் புத்தகமு மனுப்பினார்
ள். அவர் தற்காலும் வேறு லௌகிகப் பிரவிருத்தியிலிரு
த்தமையால் என்னை யிவ்வேலையைச் செய்து முடிக்கும்படி
கட்டுக்கொண்டனர். அதன்மேல் அவ்வச்சுப்பிரதியில்
ழுதுவோராலும் பதிப்பித்தோராலும் நேர்ந்த பிழைகளை
ன்னறிவிற் கெட்டியமட்டுந் திருத்தஞ்செய்து வைத்துக்
காண்டு, சிவல்மாறுபூரணடியனார் செய்த * சுயம்புருவாகிய
கையெழுத்துப் பிரதியொன்று செந்தமிழ் நிலையமாகிய திரு
வாடுதுறை யாதீனத்திலிருந்ததைச் சீகாழி ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகளால் வரவ
ழைத்து, அதனோடு ஒப்புநோக்கிச் சருக்கந்தோறு
ள்ள சரிதங்களைச் சுருக்கவசனமாக எழுதியதுடன் நதி
ங்கரமாகிய மூன்று சருக்கங்களுங் கற்பனையலங்காரந்
நிரம்பப்பெற்றிருத்தலால் அவற்றிற்குமட்டும் அருஞ்
வுரை யெழுதிச்சேர்த்து மதுரை விவேகபாநு அச்சி

---

* சுயம்பு - கலப்பின்மை.

யந்திரசாலையிற் பதிப்பித்துள்ளேன். அறிவுடையோ ரங்கீகரிப்பாராக.

"செயற்கரியசெய்வார் பெரியர்" என்றதற்கேற்ப இங்ஙனஞ் செய்வித்த சிவநேசச் செல்வராகிய ஸ்ரீமான் சோமசுந்தரம்பிள்ளையவர்களைப்போல மற்றைத் தேவஸ்தான தருமகர்த்தர்களும் அவரவர் பரிபாலனத்துக்குட்பட்ட தலபுராணங்களை இலைமறை காய்போல் மறைந்துகிடவாமல் வெள்ளிடைமலைபோல விளங்குமாறு, 'தமிழ்சுருங்கிய இக்காலத்துக்குத்தக்கபடி, எல்லாருமொருவருதவியின்றித் தாமே தெரிந்துகொள்ளச் சுருக்க வசனங்களெழுதி அவ்வச் சருக்கங்களினிறுதியிற்சேர்த்து ஆயிரக்கணக்காக அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தினால் எல்லாருஞ் சிவபத்தி முதிர்ச்சியடைந்து வழிபாடுசெய்து இம்மை மறுமைப்பயன்களைப் பெறுவார்களென்பது திண்ணமாம்.

சங்கரேசர் திருவடிவாழ்க.

இங்ஙனம்,

மதுரைத்தமிழ்ச்சங்க நூற்பரிசோதகர்,

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

சிவமயம்.

## மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்
## மு. ரா. கந்தசாமிக்கவிராயரியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

---

பொன்னிமய மலையாளாம் பூரணியும் வெள்ளிவரைப்
புனிதர்தாமு, மன்னுமலை தொறுமேவும் வள்ளிமணவாள
னுமுன் மௌலிசூடி, நன்னரர சாட்சிபுரி பொதியவரைத்
தென்னாட்டி னண்ணக் கூற, வுன்னரிரு செவிகேட்க வுடன்
ய பேறுமுழு துதவுந் தானம். (௧)

ஆயவர ராணைநகர் மான்மியத்தை வடமொழியி னமை
க் கேற்பத், தூயதமிழ் மொழிக்கவியாச் சிவலமா றக்கோ
ன் சொன்னான் முன்னை, நேயமுடன் முத்துவீ ரக்கவிமூ
ருசருக்க நிகழ்த்தி யிந்நா, ளேயவைத்தா னித்தகுநூன்
கற்பதிப்பொன் றச்செழுத்தி லியைந்த தூண்டால். (௨)

உண்டெனினுங் கிடைப்பரிதா முதுநோக்கிப் பலருமு
ர்ந் துய்யு மன்பு, கொண்டனைய தலத்தருமை கருத்தமுவுற
த்துரிமை குலவ வாய்ந்தோன், கண்டனைய நயவசனு
வாயன் சிவநேயன் கருத்துங் தூய, னெண்டிசையும் புகழ்
ரமு சுந்தரநான் மீட்டுமச்சி லிடுதற் குன்னி. (௩)

மாமதுரைத் தமிழ்ச்சங்க நூற்பரிசோ தனையுஞற்றி
னுமென்னுன், னூழமலி தருமருணை சலக்கவிஞற் கொண்
பார் நலிவு தீர்ப்பா, னேமமுற வரும்பதங்கட் கியல்பொ
ருஞ் சருக்கங்க ளீற்றி னங்கங், காமரிய கதைச்சுருக்க
ரமுகன் கெழுதுவித்தொன் றாகச் சேர்த்தே. (௪)

எழுதாத வெழுத்தினிலீ ராயிரம்புத் தகமாக்கி யெவர்
நீங்க, தொழுதாரும் புகழ்தருமை கருத்தாவா முறை
தோன்றச் செய்தான், பழுதகற்றி திவ்வகைநூல் விள
க்க லாற்சமயம் பல்கு மாற்றன், முழுதாய்ந்த புரி
சுந்தரவேள் பேரறிவின் முதிர்ச்சி நன்றே. (௫)

# சருக்க அட்டவணை


| நம்பர். | சருக்கப்பெயர். | பக்கம். |
|---|---|---|
| க. | காப்பு | க |
| உ. | பாயிரம் | உ. |
| ௩. | திருநதிச்சருக்கம் | எ |
| ௪. | திருநாட்டுச்சருக்கம் | க௪ |
| ௫. | திருநகரச்சருக்கம் | உஅ |
| ௬. | புராணவரலாறு | ௫௪ |
| எ. | தலவிசேடச்சருக்கம் | ௫௬ |
| அ. | தீர்த்தவிசேடச்சருக்கம் | ௬௪ |
| ௯. | மூர்த்திவிசேடச்சருக்கம் | எ0 |
| க0. | சங்கரநாராயணரானசருக்கம் | அ௯ |
| கக. | உக்கிரன் வழிபடுசருக்கம் | ௯௬ |
| கஉ. | தக்கணைதவம்புரிசருக்கம் | க0௫ |
| க௩. | வீரசேனன் பிணிதீர்ந்தசருக்கம் | கக௩ |
| க௪. | சயந்தன் வினைதீர்த்தசருக்கம் | கஉ௬ |
| க௫. | காவலன் வீடுபெற்ற சருக்கம் | க௩0 |
| க௬. | கர்மாட்சருக்கம் | க௩உ, |

உ

கணபதிதுணை.

## சங்கரநாராயணசாமி

# கோயிற்புராணம்

## காப்பு.

### விநாயகர்.

பைந்நாகந் தொழுதேத்தப் பாணிறமெல் லரும்பவிழ்ந்து
நபந்தே னூற்றும், புன்னாக வனத்துறையும் புராதனன்
றந்நூன் னூல்வேட்கை புரிந்து கூற, மைந்நாகத் துடன்பிறந்த,
மலைமடந்தை திருவயிறு வாய்ப்ப வந்த, கைந்நாகப் பசுந்
தழுவி காமருசே வடிக்கமலங் கருது வாமே. (க)

* மும்மைப் புவன முழுதீன்ற முதல்வி யோடும் விடைப்
பாக, னம்ம தருக முத்தமென் வணைப்ப வாங்கே சிறிது
நன்று, தப்பின் முத்தங் கொளநோக்கிச் சற்றே நகைக்கும்

---

• (அரும்பத உரை) 1. பை - படம். அவிழ்ந்து - விரிந்து. புன்னாகம் - புன்னைமரம். புராதனன் - அநாதியேயுள்ள சிவபிரான். தந்திரநூல் - பண்டைநூல் விதிப்படி. வேட்கை - புணர்ச்சியை. புரிந்து - விரும்பி. கூற (ஒரு புத்திரனைப் பெறவேண்டுமென்று) சொல்ல. மைந்நாகம் - மைநாகமலை. மலை - இமயமலை. மடந்தை (அம்மலையிலவதரித்த) பார்வதி. வயிறுவாய்ப்ப - கருப்பங்கொள்ள. வந்த - (அக்கருப்பத்தினின்று) தோன்றிய. கைந்நாகம் - யானை. காமரு - அழகிய.

* இவ்வடையாளமிட்ட பாடல்களும் சருக்கங்களும் ஊற்றுமலைச்சமஸ்தான வித்துவான் புளியங்குடி முத்துவீரக்கவிராயரால் பிற்காலத்துப் பாடிச் சேர்க்கப்பெற்றவை.

வேழமுகன், செம்மை முளரித் திருத்தாளுஞ் சென்னி
மிசையிற் புனைவாமே. (உ

* காராளை வலமாவென் றிசைக்குமொழிற் கருங்கூந்தற்
களத்து விம்பி, வாராளை யுடன்மருவு வளர்தனக்கோ மட்
மலைக்கு வேந்தாய் மன்னும், பேராளை மலைமகள்சேர் சிங்
கரேசர்புகழ் பேசச் செல்வச், சீராளைத் திருநகர்வாழ்
சிந்துரமா முகன்றிருத்தாள் சென்னி சேர்ப்பாம். (ங

# பாயிரம்.

## கடவுள் வணக்கம்.

### சங்கரலிங்கம்.

நீர்கொண்ட செழுஞ்சடைமே னிலவுமிழ்வெண் பிறை
யயங்க நெடுவான் பூக்க, வேர்கொண்ட தாரகையி னிடை
யிடையே தவளமுகை யீன்று தோன்றுங், கார்கொண்ட
பொன்னைவனங் காமுற்று வாழ்கருணைக் கடலை மல்லிற், சீர்
கொண்ட சீராளைத் திருநகர்வாழ் சிவக்கொழுந்தைச் சிந்
தை செய்வாம். (ச

### ஆவுடையம்மை.

வேறு.

தேன்கனிற் பரவிப் பல்கா னணைகமழ் நறுந்தண் போது
விழிழ்ந் திறைஞ்சு நாகச் சூட்டொளிர் மணியின் சோதி

---

2. மும்மை - மூன்று. விடைப்பாகன் - இடபவாகனத்தை யூர்கின்ற சிவபிரான். அம்ம - அன்னை. தம்பின் - தங்களுக்குள். முத்துக்கொள - முத்திக்கொள்ள. நகைக்கும்-சிரிக்கும்.

3. காரா - மேகமா. சைவலமா - பாசிக்கொத்தா. பேர் பெரிய. ஆசைமலை - பொன்னிறமலை, இமயமலை. ...ராரைநகர் ...ஆகிய தலம். சிந்துரம் - யானை.

4. நிலவு உமிழ் - கிரணத்தை வீசுகின்ற. யங்க - விளங்க. ... - அழகு. தாரகை- நக்ஷத்திரங்கள். தவளமுகை - வெள்ளிய அரும்புகள். கார் - கற்றிறம். மல்லல் - வளம்.

மேவலாற் பஞ்சி யூட்டி விளங்கிய வண்ணங் காட்டு
மாவுடை மாது செம்பொ னடித்துணை சென்னி வைப்பாம்.

## விநாயகர்.

ஒருமுலை சுரந்த தீம்பா லுண்புழி மறுமுலை நஞ்சொன்
முருகனுக் கென்றே யீன்ற முதலவி னைவுத் திருந்த மற்றைத்
திருமுலை வருடு வான்போற் றிரள்புழைக் கரத்தா லுன்னுழு
வரிந்தநற் களிற்றின் செந்தா மரையடி வணங்குவாமே (௬)

## சுப்பிரமணியர்.

மாமுத றடிந்த வொள்வேல் வலத்தனை யிருந்தாங் கோடி
காமர்வண் டுழலுங் கூந்தற் கதிர்முலை வள்ளி மைக்கட்
டாமவேல் புரளுந் தோளுந் தனதுளங் குழையுஞ் செவ்வே
டேமரு கமல மன்ன சேவடி சென்னி வைப்பாம். (௭)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

இழிதொழிலமணரென்னுமிருள்கெடுத்திமையோர்போற்றப்
பழுதற நின்ற தொல்லைப் பரம்பொருள் விளங்கச் செய்த

---

5. நனை - விரியும் பருவமுள்ள அரும்பும். நறும் - நல்ல. தண் - குளிர்ச்சி. போது - மலரும். நாகம் - பாம்பு. சூட்டு - உச்சியில். ஒளிர்மணியின்சோதி - பிரகாசிக்கின்ற இரத்தினத்தின் காந்தி. பஞ்சி - செம்பஞ்சுக்குழம்பு.

6. சுரந்த - பெருகிய. உண்புழி - உண்ணுமிடத்து. வருடுவான் - தடவுதல். (வான் - தொழிற்பெயர் விகுதி.) புழைக்கரத்தால் - துவாரம் பொருந்திய துதிக்கையினால். வரி - இரேகை (குழந்தைகள் பாலருந்தும்போது மற்றொருதனத்தைக்கையிற்பிசைதல் வழக்கிற்காண்க).

7. மாமுதல் - (சூரபன்மனாகிய) மாமரத்தின் தூர். ஒள் - ஒளி. வலத்தன் - வெற்றியுடையவன். காமர் - அழகு. கதிர் - பிரகாசம். கண்தாமவேல் - கண்ணாகிய கூரியவேல். தேம் - தேன். மரு - வாசனை.

பொழிகதிரிரவி தன்னிற் பொழில்புனை புகலி வாழும்
வழிமறைக் கமலப் பைந்தார் வள்ளலை வணங்கல் செய்வாம்.()

## திருநாவுக்கரசுநாயனார்.

### வேறு.

கழைபொரு திரங்கு விரிதிரைக் கடலிற் கட்டின ரிட்
டகற் றிரளே, பரிவுறு புணையா வதனில்வீற் றிருந்து பழுத்
தபாண் மிழற்றுவண் டினமார், முருகவிழ் தழிக் தொடை
சடை முடித்த முதல்வனை வழுத்திய கோமான், மருவுயிர்த்
தினிய முருகுகொப் பளிக்கு மரயடி வணங்குதல்செய்வாம்

## சுந்தரமூர்த்திநாயனார்.

### வேறு.

ஏனமாய் மாயோன் வேலை யிருநிலங் கீண்டுங் காணாத்
தேனவிழ் கமல மன்ன சேவடி படியிற் றோய
மானவார் குழலி பங்கி னொருத்தனைத் தூது விட்ட
பானுலாம் பொழில்சூழ் நாவன் மன்னனை வணங்கல் செய்வாம்

---

8. தொல்லைப் பழம்பொருள் - அநாதியாகிய சிவபிரானை. விளங்க - தெரிய. கதிர்பொழி - கிரணத்தைச் சொரிகின்ற. இரவியின் - சூரியனைப்போலும். புகலி - சீகாழி. வள்ளல் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

9. பொருது - மோதி. இரங்கு - முழங்குகின்ற. கட்டினர் - கட்டினவராகி. திரள்கல்லை - திரண்டகல்லை. பரிவு - அன்பு. புணை - தெப்பம், தோணி. பழுத்த - முதிர்ந்த. முருகு - வாசனை. அவிழ் - விரிந்த. மரு - வாசனை. உயிர்த்து - [illegible]ந்து. முருகு - தேன்.

10. ஏனம் - பன்றி. வேலை - சமுத்திரஞ்சூழ்ந்த. இரு - பெரிய. கீண்டும் - கிழித்தும். படியில் - பூமியில். தோய - பட. மானம் - கஸ்தூரி. நாவல் - திருநாவலூர்.

## மாணிக்கவாசகசுவாமிகள்.

### வேறு.

கள்ளயின் றுகளிக்கும் வரிச்சிறைப்
புள்ளலம்பு பொழிற்புனை வாதவூர்
வள்ளல் மாணிக்க வாசகன் சேவடி
யுள்ள மன்புற் றுருக வணங்குவாம். (௧௧)

## அகோரசிவாசாரியர்.

பாகு மால்விடைப் பாக னவிற்றிய
தூய வாகம நூற்றுறை போய்மறை
யாயுங் கேள்வி யகோர சிவனடிச்
சேய தாமரை சென்னியிற் சூட்டுவாம். (௧௨)

## அவையடக்கம்.

### வேறு

கடகரி யுரித்த கடவுண்மான் மியத்தைக் கவின்பெறு பாடைகட் கரியாம் வடமொழி தன்னிற் பவுடியோர் தாமா புராணத்தின் வகுத்ததை யறிகின் மடமையேன் றமிழாற் சொல்லுக றெய்வ மாநதிக் கெதிர்சிறு வாய்க்காலிடைவரு புனலொப் பெனினும் பெரியோ ரிகழ்ந்திடா ரீசன் கதை யதனால். (௧௩)

---

11. அயின்று - உண்டு. வரி - கீற்று. புள் - வண்டு. புனை - அலங்கரிக்கின்ற.

12. மால்விடை - விஷ்ணுவாகிய இடபவாகனம். நவிற்றிய - சொல்லிய. நூற்றுறை - நூல்வழி. போய் - சென்று. கேள்வி - கல்வி. சேய - சிவந்த.

13. கடகரி - மதயானை. கவின் - அழகு. வகுத்ததை - பகுத்துச் சொல்லியிருப்பதை. மடமையேன் - இளமைப்பருவத்தை யுடையேன். (சிறியேனென்றபடி).

## நூலாசிரியர்.

### வேறு

எட்டிணர்சேர் புன்னைவனத் தீர்ஞ்சடைவா னவன்றெ
ன்னா லெழுதா வேத, நாட்டுபெறா சரன்மால நவின்றபடி செ
ங்கதிரா னயந்து சொன்னான், கோட்டுவரிச் சிலைகுனித்துக்
கோளுழுவை துரந்திமையக் குன்றி னேற்றித், தீட்டுசெழு
ங் கயலுயர்த்த சீவலபூ பாலனியற் செழியர் கோவே. (கச)

---

14. எட்டிணர் - இதழ்களையுடைய பூங்கொத்து. ஈர்ஞ்சடை - குளிர்ந்தசடை. எழுதாவேதம் - ஆரியவேதம். சால-மிக. நயந்து - விரும்பி. கோட்டுவரிச்சிலை - வளைவாகிய வரிந்துகட்டுடையவில். குனித்து - வளைத்து. கோள் - வலிமை. உழுவை - (சோழராசனுடைய) புலிக்கொடியை. துரந்து - (காட்டில்) விரட்டி. தீட்டு - எழுதுகின்ற. உயர்த்த - மீனக்கொடியை யுயர்த்தி நிலைவைத்த. சீவலபூபாலன் - சீவல்மாறனென்னும். இயல் - தமிழறிவுடைய. செழியர்கோ - பாண்டிய அரசர்க்குள் தலைவன்.

### பாயிரம் முற்றிற்று.

முதலாவது

# திருநதிச்சருக்கம்.

சங்கபத்மர்செய் தவத்தினுக் கரனரி தானு
மெங்கு மொன்றெனத் திருவுருக் கொண்டரு ளிமைய
மங்கை பாலுடை மணாளர்தம் பெயரினை மருவிப்
பொங்கி யேயெழுங் கூழையா றணியினைப் புகல்வாம். (க)

முக்கு ணத்தினின் முதற்குண நிறத்தின்வான் முந்நீர்
புக்கு நீரருந் திக்கடைக் குணமெனப் புகல்சூ
றொக்கு மற்றிடைக் குணநிற மின்னொளி தோன்றத்
திக்கு மம்பர மும்பரந் தெழுந்தது திகழ்ந்தே. (உ)

அறுகு மம்புலி யாமையோ டணிமுடிக் கணிந்து
செறிமு னிக்குழாஞ் சூழ்தலாற் சிவன்வடி வென்ன
மறுவில் சித்தமா யோகர்வாழ் வாழைமா மலைமே
னறுமணத்தரு வடவியின் மேகநண் ணின்றே. (ங)

---

1. சங்கபத்மர் - சங்கன். பதுமனென்னும் நாகராஜர்கள். மணாளர் - நாயகராகிய. கூழைப்பெயரினை - கூழையென்னும் நாமத்தை. ஆறு அணி - நதியினழகை.

2. முதற்குண நிறமாவது - வெண்மை. வான் - மேகம் முந்நீர் - கடல். கடைக்குணமென - தாமதகுணமென்றுசொல்ல. சூல் தொக்கு - கருக்கூடி, கருநிறங்கொண்டு. இடைக்குணம் - இராசதகுணத்தின் நிறம் (போல) மின்னொளி - மின்னலின்பிரகாசம். அம்பரமும் - ஆகாயத்திலும். திகழ்ந்து - விளங்கி.

3. அறுகும் - சிங்கமும். (அறுகம்புல்லும்) அம்புலி - அழகிய புலி. (சந்திரன்) ஆமையோடு - ஆகிய அழகுடன். (ஆமையின் ஓடு) அணி - அழகிய. முடிக்கு - தலையில். செறி - நெருங்கிய. முனி - யானைக்கன்று. (இருடி) குழாம் - கூட்டம். மா - பெரிய. யோகர் - யோகிகள். நறு - நல்ல. அடவி - சோலை.

காழு றுங்கருஞ் சூல்கனத் தார்கலை குரலிட்
டூழ்த லத்திற்கீ ழுறும்பணி யுட்கமின் னெறிந்து
வீழும் வானமீன் றனித்தனி கதிர்விடுந் தொகைபோல்
வீழும் வெண்ணிறத் தாரைகள் விரைந்துபெய் தனவே. (௪)

ன்றின் மீதுபெய் குளிர்மழைத் தாரைக ளரனுங்
கொன்று மண்புடைத் தொண்டர்போ லொருவழிக் கொண்டு
ன்னுற யவ்வர னருளெனப் பெருகிமே லுயர்ந்து
சென்று கூழைபா றெனுந்திருப் பெயர்சிறந் தனவே. (௫)

கிரி வெஞ்சிலை தாங்கிய செவ்விய மானு
கல மீதுற வரவமேற் கொண்டிறு தலினுன்
தும ரக்கரை யெறிதலான் மேதினி புரக்கு
தகிலை யொத்தது முழங்கிய மூரிநீர்ப் பெருக்கே. (௬)

புலமெ டுத்துவன் பூணிற்கொடு மரங்களையி லமையக்
லக மாதரை மருவியே காலினை றுதலா

---

4. காழுறும் - முதிர்ச்சிபொருந்தும். கனத்து - மிகுத்து. ர் - நிறைகின்ற. கலைகுரலிட்டு - மிகமுழங்கி. ஏழ்தலம் - ஏழுலகம். பணி - ஆதிசேடன். உட்க - வருந்த. மின்னெறிந்து - மின்னலை வீசி. வானமீன் - நக்ஷத்திரங்கள். விடும் கதிர்த்தொகை - விடப்பட்ட கிரணக்கூட்டங்கள். (மேகம்)

5. ஒன்றும் - பொருந்தும். பின்னை - பின்னர். திருப்பெயர் - விசேடப்பெயரால். சிறந்தன - சிறப்புற்று விளங்கின.

6. கிரி - மூங்கில். (சக்கரம்) வெஞ்சிலை - விருப்பத்தை யுடைய ஒலி. (கொடியவில்) செவ்வியமான் - சிவந்தமான்கள். (சிவந்த இலக்குமி) அகலமீது உற - விசாலமாக மேலேபொருந்த. (மார்பின்மேலே பொருந்த) அரவமேற்கொண்டு - பாம்புகளை மேலேகொண்டு. (ஆதிசேடனாகிய பாம்பின்மேலிருந்து) மிகுமரக்கரையெறிதல் - மிகுந்தமரங்களையுடைய கரைகளை யழித்தல். (மிகுந்த ராக்ஷதர்களைக் கெடுத்தல்) முகிலை - முகில்போன்ற விஷ்ணுவை. மூரி - பெரிய. பெருக்கு - வெள்ளம்.

ஞாலக பிரானையு மமைத்தருள் வயிற்றினு னாதவுந்
தலைமை யாமதன் றமெனத் தழைத்தது தீத்தம். (எ)

உந்தி பூத்தலாற் கமண்டலத் துறுகையா லெகினை
முந்தி யேறலா னாற்றலை முகமுறு வதனு
லிந்து சேர்சடை யிறைவனு மொருதலை யிற்ற
கந்த நாண்மல ரயன்றனைக் கடுத்தது கனைநீர். (அ)

வேலை விண்டுவின் முழைப்பிளந் துருவிமேற் கோலந்
சால வேங்கையின் சட்டகங் கொண்டுறுந் தரத்தாற்
பால லோசனத் தரன்றரு கோழிபம் பதாகை
நீல மாமயின் முருகனை நிகர்க்குநீர் வெள்ளம் (௯)

---

7. அலர் - நீர். (பூ) வண்டுஅணி - சங்குகளின் வரிசை. (வண்டாகிய நாணிலே தொடுக்கின்ற) கொடுமரம்கையில் அமைய- கொடிமரங்கள் (தன்) இடத்தில்பொருந்த. (கரும்பாகிய வில் கையினிடத்தடங்க) கலகமாதரை - கல்லிடம் பெரியதரை. (போரையுடைய பெண்களை) காலின் ஏறுதல் - வாய்க்கால்களிற் சென்றுபாய்தல். (தென்றற்காற்றின்மேலேறுதல்) தலைமை - முதன்மை. மதன் - மன்மதன். தீத்தம் - வெள்ளம்.

8. உந்திபூத்தல்-நீர்ச்சுழிகளைத் தோற்றுதல். (விஷ்ணுவினுடைய உந்தித்தாமரையிற் பிறத்தலால்) கமண்டலத்துறு கையால் - (கம் - மேகம்) மேகமண்டலத்தைப் பொருந்துதலினால் (சலபாத்திரத்தைப் பொருந்திய கையினால்) எகினமுந்தியேறலானாற்றலைமுகம் - புளி மாமரங்களை. (உந்தி) செலுத்தி மேலேறிச் செல்லுதலினால். (நாற்றலை) நான்குதலையுடைய முகம். (அன்னவாகனத்தை) (முந்தி)முற்பட்டு ஏறுதலான். ஆற்றல் சூ முகம்- வலிமையும் அழகும் முகத்தில். கந்தம் - வாசனை. கடுத்தது - ஒத்தது. கனைநீர் - முழக்கத்தையுடைய வெள்ளம்.

9. வேல் - வேலமரங்களை. (வேலாயுதத்தை) விண்டு - மூங்கில். (கிரவுஞ்சமலை) உருவி - சென்று. மேற்கோலஞ்சாலவேங்கையின் சட்டகம் - மேலாகிய கமுகமரம் கூட்டமாகியபுலிகளின் உடல். (மேன்மையாகிய அழகுமிக்க வேங்கை மரத்தின் உரு

அருவி யாரமு மடர்சினை யாரமும் வரையின்
மருவு காஞ்சன மலர்த்துணர்க் காஞ்சனம் வாரித்
தருவ ரம்பையுந் தடமலை வரம்பையுந் தள்ளிப்
பொருகெ ழுந்திரைப் பரப்பொடு பெயர்ந்தது வெள்ளம். (௰)

பருங்கை யத்தியும் படரிலை யத்தியும் பணைத்து
நெருங்கு கோடர நெடியவாற் கோடர நீலக்
கருங்க ணாகமுங் கடிமலர் நாகமுங் கடந்து
சுரும்ப ரார்த்தெழ வெழுந்தது தூயநீர் வெள்ளம். (௧௧)

வேறு.

கானவர் சிற்றில் புக்குங் கிழங்ககழ் கருவி கூடை
தானமாக் கோடு பாயற் சருமமும் வெஞ் சிலையுஞ் சாடிக்
கேனொடு தினையும் வாரிச் சிறார்கனி வெருவ வார்த்துக்
கானமுங் கமழச் சென்று பாலையைக் கண்ணிற் றன்றே. (௧௨)

---

ம்) தரம் - தகுதி. பாலலோசனம் - நெற்றிக்கண். பதாகை - கொடி.

10. ஆரமும் - முத்துக்களும். அடர்சினை - நெருங்கியகிளைகளுடைய. ஆரமும் - சந்தனமரங்களும். வரையின்மருவு - மலையிற் பொருந்திய - காஞ்சனம் - பொன். மலர்த்துணர் - பூங்கொத்துக்களையுடைய. காஞ்சனம் - புன்கமரம். வாரி - அள்ளி. தருஅரம்பை - மரமாகிய வாழை. தடமலை - தடாகங்கள் பொருகின்ற. வரம்பு - கரை. தள்ளி - சாய்த்து. திரைப்பரப்பு - அலைகளின் விரிவு.

11. பருங்கை அத்தி - பெரியதுதிக்கையுடைய யானை. அத்தி - அத்திமரம். பணைத்து - பருத்து. கோடரம் - சோலை. கோடரம் - குரங்கு. நாகம் - பாம்பு. கடி - மணம். நாகம் - புன்னைமரம். கடந்து - அழித்து. சுரும்பர் - வண்டு.

12. கானவர் - குறிஞ்சிநிலமாக்கள். சிற்றில் - சிறுகுடில். கழ் - தோண்டுகின்ற. கருவி - மண்வெட்டிமுதலியன. தானமா - மதத்தையுடைய யானை. கோடு - கொம்பு. பாயற்சருமம் - படுக்கையாகிய தோல். சிலை - வில். சாடி - மோதி. சிறார் - பிள்ளைகள். கனிவெருவ - திகைப்படைய. கானம் - கஸ்தூரி. (வெள்ளம்)

எயினரா றலைபிற் கொண்ட பொருளெலா மள்ளி யெற்றி
மயினிற வெயிற்றி மாதர் மறத்தியர் விழியை யன்ன
வயின்முதற் படையும் வெம்போர்த் துடியுமீர்த் தடர்சூல் கொண்ட
புயனிறத் திருமால் காக்கும் புறவம்வந் தடைந்த தன்றே. ()

ஆவினங் கனைப்பு ரக்கு மண்டரை முடுக்கிக் கையின்
மேவிய தடியும் வாயி னூதும்வேய்ங் குழலும் வீழ்த்துக்
கோவியர் குறிப்பால் வெண்ணெய் தயிரெலாங் கொள்ளை கொண்டு
காவிரி பண்ணை சூழ்ந்த மருதத்திற் கலந்த தன்றே. (கச)

நால்வகை நிலனு நன்னீர் மகடனக் கனையா றாலுஞ்
செய்வகை யறிந்து போற்றுஞ் செவிலியா மருதத் தாற்றத்
துய்யபழுக் கனியு நெல்லுங் கொண்டுதன் றலைவ ரிற்செ
றையல ரென்ன நீத்த நெய்தலிற் சார்ந்த தன்றே. (கரு)

குறிஞ்சியிற் பொருளை யெல்லாம் பாலையிற் கொண்டங் குய்த்து
மறஞ்செறி பாலை யுள்ள பொருளைவன் புறவத் தாக்கிச்

13. எயினர் - பாலைநிலமாக்கள். ஆறலையில் - வழிப்பறியில். எற்றி - வீசி. எயிற்றிமாதர் மறத்தியர் - பாலைநிலப்பெண்கள் (இருபெயரொட்டு) அயில் - வேல். படை - ஆயுதங்கள். துடி - குறிஞ்சிப்பறை. ஈர்த்து - இழுத்துக்கொண்டு. அடர் - நெருங்கிய. புயல் - மேகம். புறவம் - முல்லைநிலம்.

14. ஆவினம் - பசு, எருமை, ஆடு. புரக்கும் - காக்கும். அண்டர் - இடையர். முடுக்கி - துரத்தி. தடி - தண்டு. வேய்ங்குழல் - மூங்கிற்குழல். வீழ்த்து - தள்ளி. கோவியர் - இடைச்சியர். கா - சோலை. பண்ணை - வயல். மருதம் - மருதநிலம்.

15. நால்வகைநிலன் - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நிலங்கள். நீர்மகள் - நதியாகியபெண். போற்றும் - ஆதரிக்கும். செவிலி - செவிலித்தாய். துய்ய - பரிசுத்தமுடைய. (தூய் என்பது முதல் குறுகித் துய் என்றாய் பெயரெச்சக்குறிப்பாய் நின்றது) தலைவரில் - நாயகரிடத்துக்கு. நீத்தம் - வெள்ளம்.

செறிநதிடும் புறவத் துள்ள பொருள்செழு மருதத் தாக்கி
நிறங்கிளர் மருதத் துள்ள நெய்தலிற் புகுத்து மாதோ. (௧௬)

வேறு.

நாற்றி சைப்பெரும் பொருளினாற் புருடர்நல் கிடினும்
கோற்றொ டிக்கரச் சூழையர் குணமற்றோர் புருடர்க்
கேற்ற வின்பம தளித்தவர் பொருள்கொள வேகும்
தோற்ற மாமெனத் தொடுகடற் புகுந்தது வெள்ளம். (௧௭)

நால்வ கைப்பெருஞ் சேனைகள் சமர்க்கள நண்ணிக்
கால்பெ யர்த்திடி னொன்றுவே றொன்றுடன் கலத்தல்
போல்வ ரைத்திணைப் பொருள்முதற் பொருளெலா மயக்கி
நீல வார்கலி கலந்தது நிறைந்தநீர் வெள்ளம். (௧௮)

மலையி னாரமும் புறவினோற் றளவமும் வனைந்திட்
டலையின் மேல்வரு நுரைத்துகில் விரித்துடுத் தம்பொற்
சிலையி னார்சங்க ரேசர்தென் னாரிய நாட்டுத்
தலைமை யாநதி தலைவனுங் கடற்பு விபதே. (௧௯)

---

16. கொண்டு - கொண்டுபோய், அங்கு உய்த்து. அவ்வி டத்துச்சொரிந்து. மறம் - வன்மை. செறி - நெருங்கிய. ஆக்கி- சேர்த்து (தாற்பரியம்) நிறம் - ஒளி. கிளர் - விளங்குகின்ற உள்ள- உடையபொருள்களை. புகுத்தும் - புகச்செய்யும் (வெள்ளம்)

17. நாற்புருடர் - நானிலத்து ஆடவர். கோல் - திரண்ட, தொடி - வளையல். சூழையர் - பரத்தையர். மற்றோர் - வேறொரு. ஏற்ற - தக்க. அளித்து - கொடுத்து. ஏகும் தோற்றம் - செல் லுங்காட்சி.

18. நால்வகை - ரதகஜதுரகபதாதிகள் (யதாதி-காலாள்) சேனை - படை. சமர்க்களம் - யுத்தகளம். கால்பெயர்த்திடின் - நடக்குங்கால். வரைத்திணை - குறிஞ்சிநிலம், மயக்கி - கலக்கச் செய்து. நீலம் - கருநிறம். ஆர்கலி - கடல்.

19. ஆரம் - சந்தனம். புறவின் - முல்லைநிலத்துள்ள. தளவம் முல்லைமலர். நுரைத்துகில் - நுரையாகிய சேலை. பொற்சிலையி

மனைவி நாயகன் மலரணை நெருங்கிட மகிழ்ந்து
தனது கைகளை நீட்டியே தழுவிக்கொள் வதுபோற்
கனைக டற்றிரைக் கரங்களாற் கமலமென் முகையாம்
புனைத னத்தினைப் பொருந்திடத் தழுவிய தன்றே. (௨௰)

## வேறு.

அகரமா மெழுத்தொன் றாகி யகலமாய் விரிந்து வேறு
தொகைவகை விரியாய் மல்கித் தோன்றிய பகுப்புப் போல
மிகுநதி யொன்று வேறு வேறுவாய்க் காலிற் சென்று
தருகுளந் தடாக மோடை யெங்கணுஞ் சார்ந்த தன்றே. ()

## * திருநதிச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௩௫.

---

ஞர் - மகாமேருவில்லையுடையாராகிய. தென் - அழகு. ஆரியநாட்டு - (பாண்டிநாட்டினுட்பிரிவாகிய) ஆரியநாட்டில். தலைமை - முதன்மை. தலைவன் - நாயகன்.

20. மனைவி - நாயகியானவள். கனை - முழங்குகின்ற. கடல் - சமுத்திரமானது. கமலம் - தாமரை. முகை - அரும்பு. புனை - அலங்கரிக்கின்ற. தழுவியது - (நதியாகிய மனைவியைக்) கலந்தது.

21. ஒன்று - ஏகம். அகலமாய் - விசாலமாகி. தொகைவகைவிரியாய் - தொகுத்தல், வகுத்தல், விரித்தலாகி. தொகுத்தலாவது - ஒலியே, எழுத்தென்றது. வகுத்தலாவது - அவ்வெழுத்து முதல், சார்பென்றது. விரித்தலாவது - முதலெழுத்து முப்பதென்றும் சார்பெழுத்து இருநூற்றுப்பதினொன்றென்பதுமாம். மல்கி - நிறைந்து. பகுப்பு - பாகுபாடு. வாய்க்காலிற்சென்று - வாய்க்காலால் நடந்து. குளம், தடாகம், ஓடை. (ஆய்) எங்கணும் - எவ்விடத்தும்.

இரண்டாவது:

# * திருநாட்டுச்சருக்கம்.

அலகி லாமறை பரவிய சங்கர ரருளா
லுலக மியாவையுங் கொள்வதற் குறுபய னெல்கிப்
பலகலைத்திறம் பயின்றவப் பாண்டிநாட் டினுக்குத்
திலக மாய்விளங் கியதுதென் னெறிப் நாடு. (க)

மாதர் கற்புநன் னெறியினன் மன்னவர் புரியு
நீதி யான்மறை வேள்விபா னின்மழை பொழிந்து
நோதி லாப்பெருஞ் செல்வமுங் குறைவறப் பொலிந்தெங்
கோது நல்லறம் புரியும்பொன் னெறிய நாடு. (உ)

கந்த வார்பொழிற் கழனிகள் சாலையார் தடங்கள்
சந்த மார்முலை மடவியர் நாடவர் தகைய
சேர்ந்த நாளுமோர் பான்மைய தாயிசைபெருகித்
தேந்த வாரிய நாட்டணி தெரிக்கவா மிசைப்பாம். (ங)

குரவன் வாய்மையாற் கலங்குறு முனிநெறி குதல்போன்
மீருதுட மாநிலத் திடைநல்கு பொருந்திய வளக்கால்
சேர்ந்த நன்னதி தடங்களின் மேவிய வெள்ளந்
தெருதி தும்பரின் காவெனத் தெளிவுநாட் டியதே. (ச)

1. அலகு - எண். கொள்வதற்கு - பெறுவதற்கு. உறுபயன் - பொருந்தியபலன். திலகம் - திலதம்; பொட்டு. தென் - அழகு.

2. புரியும் - செய்யும். வேள்வி - யாகம். பொலிந்து - விளங்கி. பொன் - அழகிய.

3. கந்தம் - வாசனை. கார் - மேகம். பொழில் - சோலை. கழனி - வயல். பான்மை - தன்மை. இசை - புகழ்.

4. குரவன் - குரு. இடை - இடத்தில். வெள்ளம் - நீர். தெளிவுகாட்டியது - தெளிந்தது.

மதத்த யானையைப் பாகர்கள் வசப்படுத் துதல்போற்
கதத்தின் மேவிய வெள்ளத்தைக் கால்களாங் கலினால்
விதத்தி லேரெலாஞ் செலுத்திவன் சிறையுறீஇ யிரும்பின்
பதத்து மள்ளர்க ளுழுதொழின் முயற்சியிற் பயின்றார். (௫)

வேறு.

ஏர்தரு மூரி யேறு மிருங்கடா வினமுங் கட்டிக்
கூர்நுதிக் கொழுக்க ளாழ வுழுவன வுழுது கோட்கள்
சீர்தரு நாளில் வானோர்க் கிறைவனுந் தெய்வம் போற்றிக்
கார்நிற மள்ளர் சாலி முளைதெளித் தனர்க ளிப்பால். (௬)

நிலமக ணகையே யென்ன முளைவெளி தாகி நீண்டே
யலமறு பெரியோ ருள்ளத் தறிவுபோல் வளர்ந்து மானக்
கலையுணர் கவிஞர் சொல்லுங் கவியென விதழ்வி ரிந்து
சைலமகள் வடிவ மென்னப் பச்செனத் திகழ்ந்த தன்றே. (௭)

அறநெறி யெய்து செல்வ மாமென வளர்ந்த நாற்றை
மறநெறிக் கூற்ற மன்ன வாள்விழிக் கடைசி மாதர்
முறைநெறி பேசிமா லியானை முபண்டரு மள்ளர் சொல்லாற்
பிறபிறசமையபேதம் பிரித்தல்போற் பெயர்த்தா ரன்றே. (௮)

---

5. மதத்த - மதத்தையுடைய. கதத்தின் - வேகத்தோடு. வன்சிறை - வலியகாவல். இரும்பின் - இரும்புபோலும். (வலிய) பதத்து - கால்களையுடைய. மள்ளர் - உழவர்.

6. ஏர்தரு - கலப்பையில் சேர்க்கப்படுகின்ற. மூரி - பெருமை. ஏறு - இடபம். இருங்கடா - பெரிய எருமைக்கடா. இனம் - கூட்டம். கூர் - கூர்மை. நுதி - நுனி. கோட்கள் - கிரகங்கள். சீர்தருநாளில் - சிறப்பைக் கொடுக்கும் நக்ஷத்திரங்களில். கார் - கரிய. சாலி - செல். களிப்பு - மகிழ்ச்சி.

7. நிலமகள் - பூமிதேவியின். நகை - பல். வெளிது - வெண்மையுடையதாகி. அலம் - சஞ்சலம். மானக்கலை - பெருமையுடைய கல்விநூல். இதழ் - தோகை. சைலமகள் - பார்வதி. பச்சென - பசியநிறமாக.

8. அறநெறி - தருமவழியால். மறநெறி - வஞ்சகவழி. முற

பெயர்த்தனர் நல்லோர் கூட்டம் பெயரினுஞ் சேர்தல்போல
வுயர்த்திடுங் குப்பஞ் செய்தா ருழுதெளிச் சேறு நாற
நயத்தழை யுரங்க ளேற்றி நன்முடி கைக்கொண் டேத்தி
வயற்றழைசெங்கெலோங்க வாழ்த்தியேநடவுசெய்தார். (௯)

பதித்திடு நாறு வீறி யெழுந்திடும் பருவ நோக்கி
மதித்திடு மள்ளர் சொல்லான் மள்ளிய ரெல்லாங் கூடிக்
குதித்திடுஞ் சேல்கள் கூர்வேற் கொலைவிழிக் கஞ்சி யோட
வுதித்திடுபகைபோற்றோன் றுங்களைகளைக்களைதலுற்றார். (௧௦)

மரகத நிறங்கொண் டோங்கி வளர்ந்திடு பைங்கூழ் சூலாய்ப்
பிரபல மாகப் பீள்கள் முதிர்ந்துதோ டகன்று பின்னர்க்
குரகத முகம்போற் றன்கா ளேக்கியே கலைகு னிந்து
தரையெனுந்தாயைப்போற் றுந்தன்மைபோனின்றதன்றே ()

துன்னியுள் ளமுதூறி விளைந்துபொற் சோதி யாக
முன்னிய செந்நெ னன்னாட் கதிர்கொண்டு மதுவ ருந்திக்
கன்னியர் நுதலே யன்ன குயங்களா லரிந்து கட்டி
நன்னிலப்புறமதுட்க நகங்கள்போற்போர்செய்தாரே (௧௨)

ம். சுளகுபோன்ற. நெறி - ஒழுங்குள்ள. செவி - காதுகளையு டைய. யானைமுரண் - யானையின்வலிமையை. பிற - அசை. பிறசமையம் - அன்னியமதத்தின். பேதம் - வேறுபாட்டை. பெயர்த்தார் - வேறுபடுத்தினர், பிடுங்கினர்.

9. பெயரினும் - பிரிந்தாலும். குப்பம் - மேட்டில். தெளிச்சேறு - கொழுத்தசேறு. நாற - உண்டாக. நயத்தழை - நல்ல குழை. முடி - நாற்றுமுடி. வத்தி - தெய்வம்பராவி.

10. வீறி - உயர்ந்து. மள்ளியர் - மள்ளப்பெண்கள். அஞ்சி - பயந்து. உதித்திடு - உண்டாகின்ற.

11. பைங்கூழ் - பயிர். சூலாய் - விளங்கி. பீள் - கரு. தோடுஅகன்று - தோகைவிரிந்து. குரகதம் - குதிரை. குனிந்து - வளைந்து.

12. துன்னி - நெருங்கி. பொற்சோதி - பொன்னிறம். மன் ... க்கிரக்கில். கதிர்

காரெலாஞ் சேர்த்துக் கட்டுந் தகுதிபோற் கடாக்கள் கட்டிப்
போரெலாம் பிரித்துத் தள்ளி யடித்ததிற் பதடி போக்கிச்
சீரெலாஞ் சிறந்த மள்ளர் தூற்றிநெற் கூட்டிச் சேர்த்துப்
பாரெலாம் புகழுங் கணேசர்ப் பணிந்துபின் னளந்தா ரன்றே. ()

அரிகர புத்திரன் காளிக் கமைத்தவோர் குறுணி நல்கிப்
புரவலர்க் காரி லொன்று நல்கிப்பேர் பூண்ப வெல்லா
முரியவா நல்குவோர்க்கு முள்ளவா றுதவி வந்த
விரவலர்க் கீத லாமெனற் குறைவிலா திருந்த வன்றே. (கச)

பண்டிக ணிறைய வேற்றிப் பழம்பல நாளா தாகக் [ர்க்
கொண்டுபோயில்லிற் சேர்த்தக் குதிர்களி னிறைத்துப்பின்னை
தண்டலை வரைப்பி னுள்ள தண்புற வத்தி னுள்ள
பண்டமதியாவுங்கொண்டா ரதனைத்தன் பருவம்பார்த்தே (கரு)

அறுசுவைப் பதார்த்த நெய்பா றயிருட னமைசிற் றுண்டி
நறியமுப் பலமுந் தேனுங் கலந்தநா லுணவோ டன்ன
மிறைதிரு வடியர்ப் போற்றி முகமனோ டினிது நல்கி
நிறைமனை மக்கள் சுற்றம் விருந்தொடு நேர்ந்துண் பாரால். (கசு)

---

கொண்டு - தநிறுத்து. மீது - கள். நுதல் - நெற்றி. குயம் - அரிவாள் அரிந்து. அறுத்து. புறம் - முதுகு. உட்க - வருந்த. நகம் - மலை.

13. கார் - மேகம். தகுதி - தன்மை. போர் - நெற்போர். பதடி - பதர். பார் - உலகம். கணேசர் - விநாயகர்.

14. அரிகரபுத்திரன் - ஐயனார், சாத்தா. புரவலர் - அரசர். ஏர் - கலப்பையில். பூண்ப எல்லாம் - அணியப்படுவனவாகிய கொழுவட்டு முதலிய சகலமான பொருள்களும். உரியவாக - உரிமையுடையனவாக. நல்குவோர் - கொடுப்பவராகிய கொல்லன், தச்சன், சக்கிலியன். உள்ளவாறு - அறுதியிட்டவிதம். இரவலர் - யாசகர். இருந்த - (நெற்கள்) இருந்தன.

15. பண்டிகள் - வண்டிகள். இல் - வீடு. குதிர் - நெற்பெய்கூடு. தண்டலை - சோலை. வரை - மலை. புறவம் - முல்லைநிலம். பண்டம் - பதார்த்தம், பொருள்.

16. சிற்றுண்டி - பலகாரம். நறிய - நல்ல. முப்பலமும்-

## வேறு.

நந்து லாவிய வாவியிற் கின்னரங் கண்டு நாரியர் பாடுவர் கின்னரம், பந்து சேர்வன மாதர் பயோதரம் பருவங் கண்டு பொழிவ பயோதரம், மிந்து தேரைத் தடுப்பன வில்லமே யீசன் பூசைக் கெடுப்பன வில்லமே, மந்தி பூகத்தின் மாவிக் குதிக்குமே மலைக ளெங்கும வளர்க் குதிக்குமே (௧௭)

போனகங்கள் பொருந்துமை சத்திரம் பூணை பன்னவர் போர்விழி சத்திரம், வான நாட்டை மருவுமிற் கேதனம் வாரிவர் வறியவர்க் கேதனம், கான மெங்குநற் காய்கனி மூலமே கருதுதி னுன்னல்பஞ் சாக்கர மூலமே, மோன மேபோர் மடங்களின் ஞானமே முயல்வ தாற்கெடு மோகவுஞ் ஞானமே. (௧அ)

பங்கயத்தின் மருவுபாலனம் பத்தரைப்புரி வர்ப்புரி பாலனந், சங்க ரன்பாத வச்சனைத் தானமே தான்செய் வார்சடைமுடிபர்சந் தானமே, பொங்கும் வீமமெ வொலிப்பன நந்தியேபரிச னூர்ந்தஞ் செழுவனு நந்தியே, மங்கலக்கொண்டார் வாய்ச்சொறே வாரமே மாந்தர் நெஞ்சினில்லைப்படமே வாரமே,

---

ழக்கனி. நால் உணவு - நால்வகையுணவு; உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன. அன்னம் - சோறு. இறை - சிவபிரான். முகமன் - உபசாரவார்த்தை. சேர்ந்து - உடன்பட்டு.

17. நந்து - சங்கு. வாவி - தடாகம். கின்னரம், ஓர் பறவை (வசிக்கும்) கின்னரம் - வீணை. சேர்வன - ஒப்பன. பயோதரம் - கொங்கைகள். பயோதரம் - மேகங்கள். இந்து - சந்திரன். இல்லம் - வீடுகள். வில்லம் - வில்வங்கள். மந்தி - குரங்குகள். பூகம் - கமுகமரம். இக்கு - கரும்பு. உதிக்கும் - தோன்றும்.

18. போனகம் - சோறு. சத்திரம் - வேலாயுதம். இற்கேதனம் - வீட்டிற் கட்டிய கொடிகள். தனம் - பொன். மூலம் - கிழங்கு. மூலம் - பிரணவமந்திரம். உன்னல் - நினைத்தல். மோனமே - மௌனம். முயல்வதால் - முயன்றுசெய்வதால்.

19. பால் அனம் - வெள்ளிய அன்னப்பறவை. புரிவார் -

மோகமாதர் திருவாயு முத்தமே மூரி நந்து தருவது முத்தமே, பாகமாகப் படிப்பதி ராகமே பற்ற றுந்தவர் நீப்பதி ராகமே, வாகு சேர்பட வார்நகை முல்லையே வண்டயிர்ப்ப வழங்குவ முல்லையே, தோகையாமென சோலைய ரங்கமே யென்ன நேருவ தோகைய ரங்கமே. (உ0)

மன்னி யூருவ மாவிர தங்களே மகளிர் செய்வது மாவிர தங்களே, பொன்னி னன்னவர் பூம்புலர் சந்தமே புலந்து வீசல் பொதியவ சந்தமே, தென்ன வாழை வருக்கைகள் காமரஞ் சேர்ந்து வண்டுகள் செப்புவ காமரம், கன்ன லன்ன கடவுள் காதையே கருதுங் கேள்வியில் வைப்பது காதையே. (உக)

வேறு

பாவலர் தந்நாவும் பணிலமிரை தவழ்பணையு
மேவுபுது செஞ்சொல்லில் விரிதரப் பூஞ்சோலையினும்

செய்வார். பரிபாலனம் - பாதுகாப்பு. அரசசுனை - ராகசுனைத் தீர்த்தம். தானம் - ஈனம். சந்தானம் - வமிசம். நந்தி - சிறு பறை; ஓர் வாச்சியம். நந்தி - இடபவாகனங்கள். அவை விஷ்ணுவாகிய இடபம், தருமமாகிய இடபம். வாரம் - அன்பு.

20. மூரி நந்து - வலியசங்கு. முத்தம் - முத்து. இராகம் - இசை. தவர் - முனிவர். நீப்பது - தள்ளுவது. இராகம் - ஆசை. வாகு - அழகு. நகை - பல். முல்லை - முல்லையரும்பு. முல்லை - முல்லைநிலங்கள். தோகை - மயில். அரங்கம் - சபை. நேருவ - ஒப்பன. தோகையர் - பெண்கள். அங்கம் - சரீரங்கள்.

21. மா இரதங்கள் - குதிரைகட்டியதேர்கள். மா - பெரிய. பொன்னின் - இலக்குமியை. சந்தம் - சந்தனம். வீசுவ - விசிறப்படுதல். பொதியம் - பொதியமலை. சந்தம் - தென்றற் காற்று. வருக்கை - பலா. கா - சோலை, மரம்; இதனை வாழை முதலியவற்றிற் சேர்க்க. செப்புவ - பாடுவன. காமரம் - ஓரிசைப் பாட்டு. கன்னல் - கரும்பு. காதை - மான்மியம். கேள்வியில் - கேட்டலில். காதை - செவியை.

கால்காட்டுஞ் செங்காலன் கரும்பிரச மொழிகாட்டு
மால்காட்டு மாதரைப்போல் வளங்காட்டு மாமருதம். (௨௯)

விடைத்தனைய திறன்மள்ளர் வெண்சாலி கரும்புவயற்
கடைத்தமடை திறந்துதே னரித்துவரு வெண்முத்தை
யிடைத்துகில்கள் சரிந்துவிழ விருநகையா லள்ளியளிப்
புடைத்துவிளை யாடுவர்கள் புனைமணிப்பொற் றொடிமடவார்.

தெங்கிளநீர் முதிர்ந்துபெருஞ் செய்யில்விழ மோதையினிற்
கொங்குலவு தடவாளை வெருவிவிண்ணின் மேற்குதித்து
மங்குலூ டேறிப்பந்த வான்மீனை வெருட்டியும்பர்
பங்கயப்பூந் தடமுழக்கிப் பாய்ந்துபழ னத்திலுறும். (௩௧)

ஆலையெந்தி ரஞ்சுழல்போ ததிரொலியு மடிக்குமடைக்
கால்கலிங்க தனில்வழிநீர் கடக்கிடைவ ததிரொலியு
நீலவிழி மள்ளியர்கள் குரவையிடு நீளொலியும்
வேலையொலி யல்லாது வேறொலியென் றுரைப்பரிதால். ()

---

29. சேல் - கெண்டைமீன். பால் - வெண்மை. ஒண் - ஒளி. தரளப்பந்தி - முத்துக்களின் வரிசை. நகை - பற்கள். கால் - பாதம். மொழி - சொல். மால் - ஆசைப்பெருக்கம், மயக்கம். மா மருதம் - பெரிய மருதநிலம். மூன்றாவதடி இறுதியில் ஆதலால் என்னுஞ் சொல் வருவித்து முடிக்க.

30. விடை - இடபேற்றின். தனைய - அளவுள்ள. திறல் - வலிபொருந்திய. மள்ளர் - உழவர். வயற்கு - வயலினிடத்து. தேன் அரித்துவரு - (அவ்வயலிற் பெருகியிருக்கும்) தேன் தள்ளிக்கொண்டுவரப்பட்ட. துகில் - சேலை. புடைத்து - கொழித்து. பொற்றொடி - பொன்வளையல்

31. செய்யில் - வயலில். கொங்கு - வாசனை. தடவாளை - தடாகத்திலுள்ள வாளைமீன். வெருவி - பயந்து. மங்குல் - மேகம். வான்மீனை - நக்ஷத்திரங்களை. வெருட்டி - பயப்படுத்தி. உம்பர் - தேவருடைய. தடம் - மானதவாவி. உழக்கி - கலக்கி மீண்டு. பழனத்தில் - வயலில்.

32. ஆலை - கரும்பு. எந்திரம் - கரும்பாட்டுங்கருவி. சுழ

ஊடுவதுங் கூடுவது முயிரனைய ருள்ளுருகப்
பாடுவதும் பாலனங்கள் பகுத்துண்டு மணமாலை
சூடுவதுந் தோழியர்கள் சூழவிளை யாடுவதும்
பேடையன மனையார்க்குப் பிரியாத பெருவேலை. (௩௩)

## வேறு.

சூத வனத்தினி லேகுயில் சூழுஞ்
சீத நதிக்கரை சேரு முனங்கள்
மாதர் முடித்த மலர்க்கள் விரும்பி
யோதி யினிற்குடி யாயுறும் வண்டே. (௩௪)

சிந்துர வாணுதன் மாதர் திரண்டு
நந்துறை வாவியி னாடந லாம்பல்
இந்திரை யன்னவ ரெழில்வத னங்க
ளந்தர சந்திர னெனவிள் ளும். (௩௫)

சிந்து கனித்திரள் பீறிய தேறல்
வந்து வயற்புக வாளை யருந்துஞ்
சந்தன வெற்புறு தென்றல்க டாவக்
கந்த மலர்க்கொடி யாவினி லாடும். (௩௬)

---

ல்போதில் - சற்றுங்காலத்தில். அடுக்கும் - வரிசையாயிருக்கும். கால் - வாய்க்கால். கலிங்கு - மதகு, குளத்தில் மிகுந்த நீர் போகக் கடையில் வைக்கப்படும்வழி. மள்ளியர் - உழத்தியர். வேலையொலி - சமுத்திரவோசை. (என்று சொல்லலாய்) அல்லாது - அல்லாமல். உரைப்பரிது - சொல்லமுடியாது.

33. பகுத்து - பாகித்து. பேடை - பெட்டை. பெருவேலை - பெரியதொழில்.

34. சூதவனம் - மாஞ்சோலை. சீதநதி - குளிர்ந்தஆறு. கள் - தேன். ஓதி - கூந்தல்.

35. சிந்தூரம் - பொட்டு. நந்து - சங்கு. ஆட - ஸ்நானஞ்செய்ய. நல் ஆம்பல் - நல்ல அல்லிப்பூ. இந்திரை - இலக்குமி. வதனம் - முகம். அந்தரம் - ஆகாயம். விள்ளும் - விரியும்.

36. பீறிய - பிளந்த. கனித்திரள் - பழக்கூட்டம். தேற

செம்முக மந்தி பிணவொடு சேர்ந்து
கொய்மலர் மெத்தைபி னன்பொடு கூடித்
தம்மின மோடெரு மைத்திர டண்கார்
மைமலி சோலையின் மாநிழ லுஞ்சும். (௩௭)

மூல மெடுத்த கிடங்குகண் முற்று
மாலுறு செம்மணி தீபமெ மானுஞ்
சோலையின் மந்திகள் சூழ விருத்தல்
காலு பனிக்குளிர் காய்தல் கடுக்கும். (௩௮)

மைக்குவ ளைக்கணின் மாதர் தடத்தின்
மொய்க்கு மலர்க்குழன் மேலுற மூழ்க
விக்குவி னுக்குடை யென்றறு வாரி
துய்க்கு முகிற்குல மென்று துலங்கும். (௩௯)

ஆகம சார மணைத்து மெடுத்துப்
பாகம தாவர னன்பர் படிப்ப
மோக முறுங்கிளி கேட்டதை முற்ற
நாகண வாய்க்கு நவிற்றுதல் செய்யும். (௪0)

---

ல் - தேன். வாளை - வாளைமீன். தாவ - பாய. கந்தம் - மணம். கா - சோலை.

37. மந்தி - குரங்கு. பிணை - பெட்டை. மலர் - பூவாகிய. இனம் - சாதி. எருமைத்திரள் - எருமைக்கூட்டம். கார்மை - கரிய மேகம். மா - பெரிய.

38. மூலம் - கிழங்கு. மால் - பெருமை. செம்மணி - மாணிக்கம். மானும் - போலும். காலு - கக்குகின்ற. கடுக்கும் - போலும்.

39. கணின் - கண்களையுடைய. தடத்தின் - குளத்தில். மேலுற - மேலேபொருந்த. இ - இந்த. குவினுக்கு - பூமிக்கு. உடை - ஆடை. வாரி - சமுத்திரம். துய்க்கும் - உண்ணும். முகிற்குலம் - மேகக்கூட்டம். என்று - என்றுசொல்லப்பட்டு.

40. பாகம் - பக்குவம். ஆய் - ஆக. (எச்சத்திரிபு) மோகம் - ஆசை. முற்ற - முதிர. நாகணவாய் - சாரிகைப்பறவை.

ஆசை யிகந்த தவத்தின ரன்பாய்ப்
பூசுவர் வெண்பொடி பூணுவர் கண்டி
பேசுவ ரண்டர் பிரான்றிரு நாம
மாசில் விழாத்தெரி சிப்பர் மகிழ்ந்தே. (௪௧)

மன்னவர் நீதி மறுவொரு நாளு
மன்னவ ராணை யயர்த்தில ராகித்
துன்னிய நன்குடி சூழ வளர்ந்து
பொன்னில மென்று பொலிந்ததிந் நாடு. (௪௨)

கற்புடை மங்கையர் காதல ரோடு
பொற்பொடு சேர்ந்துயர் பூக்கை நல்கிச்
சொற்புரை தீர்ந்து சகத்தினின் மல்கி
யற்புடன் வாழ்வதிவ் வாரிய நாடு. (௪௩)

### வேறு.

ஆற்றன்மிகு செந்தமி ழகப்பொரு ளுரைக்கு
மேற்றமிகு மைந்திணை யெனும்பகுதி தம்மிற்
பாற்றின முறுங்கொடிய பாலையை யகற்றி
நாற்றிணை மயக்கமன நன்குறச்செய் வாமே. (௪௪)

41. இகந்த - நீங்கிய. பொடி - விபூதி. கண்டி - உருத்திராக்கமாலை. மாசு - குற்றம்.

42. ஆணை - கட்டளை. அயர்த்திலர் - மறவாதவர். துன்னிய - நெருங்கிய. பொன்னிலம் - தேவலோகம். என்று - சொல்லப்பட்டு. பொலிந்தது - விளங்கியது.

43. காதலர் - கணவர். பொற்பு ஒடு - அழகோடு. சொல்புரை - கீர்த்தியின் குற்றம். தீர்ந்து - நீங்கி. அற்பு - அன்பு. வாழ்வது - வாழப்படுவது.

44. ஆற்றல் - வலி. அகப்பொருள் - அகப்பொருளிலக்கணநூல். ஏற்றம் - உயர்ச்சி. ஐந்திணை - ஐந்துநிலம், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல். பகுதி - பகுப்பு. பாற்றினம் - பருந்துக்கூட்டம். மயக்கம் - கலப்பு. நன்கு - நன்றாக.

## வேறு.

சந்த னாத்தினிற் படர்தரு மாலதித் தண்முகை வான்
றோய்,மந்த மால்வரைக் குறத்திய ரெடுத்திரு ளடர்குழற்
கணிவார்கள், குந்த நீள்பணைப் பிணைதரு வேங்கையின்
கொழுஞ்சினை நறவோடு, சிந்து மாமல ரிடைச்சிய ரெடுத்து
நந்துஞ் செழுங்குழற் கணிவாரே. (சரு)

மங்குற் றுற்றிய வரையினிற் கிழங்கஞ் குறத்தியர் மரு
ங்கெய்திப், பங்க யத்தன மனநடை கற்கும்பாட் டளிமு
ரன் றிடப்பைந்தார்க், கொங்கு யிர்த்தபூந் தடலையின் வா
ளொடு குளிர்தரு வினினண்ணி, யிங்கி தத்தினன் மொழி
க்கிளி யுழத்திய ரிடத்தினிற் பயில்கிறகும். (சசா)

ஒடியுஞ் சிற்றிடைக் குறத்தியர் சிறுகுடி லுச்சியின் மீ
தேறிக், கொடிக ளங்கைவாக் கெய்துநல் வரவினைக் குறிப்புட
னெடுத்தோதுங், கடிகொள் புன்னையின் காரிருங் கோட்டி
னின் பயிலினங் களித்தேறித், தொடிய மங்கைகை யுளத்தி
ரு சாயலைச் சுகமுறப் பயின்றிடும். (சஎ)

---

45. சந்தனம் - (குறிஞ்சிநிலத்துச்) சந்தனமரம். படர்தரு - படர்கின்ற. மாலதி - (முல்லைநிலத்து) முல்லைக்கொடி. முகை - அரும்புகளை. மால் - பெரிய. இருள் அடர் - இருள்நெருங்கிய. குந்தம் - (முல்லைநிலத்துக்) குருந்தமரத்தின். நீள்பணை - நீண்டகிளைகளில். பிணைதரு - கலக்கின்ற. வேங்கையின் - (குறிஞ்சிநிலத்து) வேங்கைமரத்தின். சினை - கிளைகளில். நறவு - தேன். இடைச்சியர் - (முல்லைநிலத்து) ஆய்ச்சியர்.

46. மங்குல் - மேகம். துற்றிய - நெருங்கிய. கிழங்குஅந்த - கிழ்ந்து தோன்றுகின்ற. மருங்கு - பக்கம். அனம் - (மருதநிலத்து) அன்னப்பக்ஷி. அளி - வண்டு. முரன்றிட - ஒலிக்க. தார் - பூந்தண்டு, பூங்கொத்து. கொங்கு - மணம். உயிர்த்த - தந்த. தடலையின் - (மருதநிலத்துச்) சோலையிலுள்ள. தருவினில் - மரத்தினில். இங்கிதத்தின் - மகிழ்ச்சியோடு. கிளி - (குறிஞ்சிநிலத்துக்) கிளி. உழத்தியர் - மள்ளிகள்.

47. சிறுகுடில் - (குறிஞ்சிநிலத்துச்) சிறுகுடிசை. தொடி

முல்லை மானினங் கன்றொடு சாமையின் முதிர்கதிர் கவின் மேய்ந்து, நல்ல மாமருதத்தினிற் சேரலையி னறாநிழல் விளையாடு, மொல்லு நீர்த்தடத் துகளுஞ்செந் நாய்கடம் பறழொடு நதியூடு, வல்லை வகிக்கா னியாற்றினன் னீரிடை மருவிய விளையாடும். (௪௮)

புலவு மீன்கமழ் புன்னையி னீழலிற் புகுந்தண்டர் சிறுபால, குலவி நின்றுசா தாரிபா டுவர்கடே னுறுகொன்றை நறுநீழ, லலைகடற்றலை யமர்ந்திடு புதல்வர்க ளுகுத்தாலன்ன, விலகு செவ்வழி யின்னிசை கண்டமொத் திசையப்பா டுதல்செய்வார். (௪௯)

கள் - (நெய்தநிலத்துக்) காக்கைகள். நல்வரவு - சுபங்களை. குறிப்புடன் - ஆராய்ச்சியோடும். எடுத்தோதும் - எடுத்துக்கூறும், இதைச் சகுனமென்பர். கடி - வாசனை. புன்னை - (நெய்தநிலத்துப்) புன்னைமரத்தின். கார் - கரிய. இருங்கோட்டினில் - பெரிய கிளையில். மயிலினம் - (குறிஞ்சிநிலத்து) மயிற்கூட்டங்கள். தொடி - வளையல். அளத்தியர் - நெய்தநிலப்பெண்கள். சாயலை - அழகோடு. பயின்று - பழகி.

48. முல்லை - முல்லைநிலமும். மருதம் - மருதநிலம். நறா - நல்ல. ஒல்லும் - பொருந்து. தடத்து - (மருதநிலத்து) வாவியில். உகளும் - துள்ளும். பறழ் - குட்டி. வல்லை - விரைவில். வகி - சென்று. கான்யாறு - (முல்லைநிலத்துக்) காட்டாறு. இன் - இனிய. நல் - நல்ல.

49. புலவு - புலால்நாற்றம். புன்னை - (நெய்தநிலத்துப்) புன்னைமரம். அண்டர்சிறுபாலர் - (முல்லைநிலத்து) இடையர் சிறு பிள்ளைகள். குலவி - விளங்கி. சாதாரி - ஓர்இராகம். கொன்றை - (முல்லைநிலத்துக்) கொன்றைமரம். கடல்தலை - (நெய்தல் நிலத்துச்) சமுத்திரத்தினிடத்தில். புதல்வர் - (பரவர்) பிள்ளைகள். உகுத்தாலன்ன - சொரிந்தாற்போல. இலகு - விளங்குகின்ற. செவ்வழி - ஓர்இராகம். இன்னிசை - இனியபாட்டும். கண்டம் - கழுத்தும். ஒத்து இசைய - சமமாகப்பொருந்த. (மருதநிலத்து)

விரவு செங்கெலின் முத்தமுங் கன்னலின் விளையுமுத்
தமுமள்ளிப்,பரவர் தங்குலப் பாவையர் பலாநிழற் புரிவர்சிற்
றில்கள்பண்பாய்,நரலை வாயலை யுந்திய நந்தக ளல்குமுத்
தமுதள்ளி,மரக தத்தளிர்ப் புன்னைநீழலிற் சிற்றில் வகுப்பர்
மள் ளியர்மாதோ. (௫௦)

ருவ ராவகை மெய்யடியவர்க்கருள் கருணையங்கடல்புற்றின்
ருவ ராவிரு வரும்வழி படுதற்கு மாலுமீ சனுமான
ருவ ராகமு மேகமாய்ச் சராசர மியாவையுந் தந்தென்று
மொருவரானவராரியநாட்டெழிலுரைப்பதற்கெளிதாமோ.

* திருநாட்டுச் சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள் - ௫௧.

---

## மூன்றாவது:

# *திருநகரச்சருக்கம்.

பணியினுக் கழகு புரிமதிச் சடையார் பரவிய பத்தர்தம்
றவிப், பிணியினுக் கமுதாங் கூழைநா யகர்வாழ் பெருமை
ற் பெருவிலை மதியா, மணியினுக் கழகாம் வயிரமே போல
ர்நிலத் துள்ளமா நகரி, னணியினுக் கெல்லா மணிசெய்சீ
ரை சயணிநகர்ச் சிறப்பினை யறைவாம். (௧)

---

50. விரவு - கலக்கின்ற. கன்னல் - கரும்பு. பரவர் - நெய்தல்நில மாக்கள். பலாநிழல் - (மருதநிலத்துப்) பலாமரத்து நிழல். சிற்றில் - சிறுவீடு, நரலைவாய் - (நெய்தல்நிலத்துக்) கடலினின்று. உந்திய - செலுத்தப்பட்ட. நந்துகள் - சங்குகள். மரகத - மரகதத்தைப் போலும். மள்ளியர் - மருதநிலப்பெண்கள்.

51. கரு - கருப்பத்தில். மருவு - பொருந்திய. அரா - பாம்பாகிய. இருவர் - சங்கன் பதுமன் என்பவர். ஆகமும் - திருமேனியும். ஏகமாய் - ஒன்றாக. (ஆய் - ஆகவென்னு மெச்சத்திரிபு) மாலுமீசனுமான இருவர் ஒருவராக எனக்கூட்டுக.

1. பணி - ஆபரணம். புரி - செய்கின்ற. கூழைநாயகர் - சங்
சர். நிலம் - பூமி. அணி - அழகு. சீர் - சீர்த்தி. சோலை -

அன்னவா கனனுங் கருடவா கனனு மணிமுடி யடியறி
யாத, வண்ணவார் சங்கக் குழையினர் கூழை நாயகர் மருவிய
வலத்தாற், பொன்னவா நகரும் பூவினு னகரும் போற்றுசீ
ராசைப்பொன் னகர்ச்சீ, ரென்னவா வாலே யியம்பலா
மென்ன வெண்ணுத லேழைமைத் திறமே. (௨)

இரவிதன் கிரண மற்பமுஞ் செல்லா திருணிறை நிழற்
றிட விண்ணிற், பரவிய தருவின் மேற்றரு வாகிப் பணைகளி
ன் டரும்பலர் மதுக்கீராய், விரவிய கனிகண் முவிரு ருதுவு
மிங்கவாய் வழங்கிமேற் புரிசை, மருவிய வகழிப் புறத்தி
னின் வளர்ந்து வளர்ந்தரு சோலை. (௩)

துணைகளும் பேடு மாகவண் டினங்கள் சூழ்ந்துபூந் துளி
மதுவருந்தி, யிணர்களிற் குடைந்து தாதுக ளுயிர்க்கு மெழி
ன்மரத் தொருசிறை யிருந்து, மணமுடித் திளஞ்சூன் மரு
விய மந்தி வாவுறு தெனவயி னணைத்துப், பணைகளிற் கடு
வன்பாய்ந்திடு சோலைப் பரப்பினைப் பகரலாம் படித்தோ. ( )

---

சீராசையென்னும் பெயரினையுடைய. அணி - நன்மை. நகர் - (சங்கர்நாராயணர் கோயிலென்னும்) தலம்.

2. அணிமுடி - அழகியதலை. அடி - திருவடி. வண்ணம் - நிறம். வார் - நீண்ட. வலம் - வலிமை. பொன்னவா நகர் - பொன்னுடையவாகிய தேவலோகமும். பூவினன் - பிரமன். பொன் - திரு. அவா - ஆசை. ஏழைமைத்திறம் - அறியாமையுடைத் தன்மை.

3. இரவி - சூரியன். அற்பம் - சிறிது. நிறை - நிறைந்து. நிழற்ற - நிழலைச்செய்தற்கு. பரவிய - விரிந்த. தரு - கற்பகம். மேல் தரு - உயர்ந்த மரங்கள். பணைகள் - கிளைகள். விரவிய - கலந்த. ருது - இருது, பருவகாலங்களிலும். வழங்கி - கொடுத்து. மேல்புரிசை - உயர்ந்த மதில். அகழி - அகழ். புறம் - பக்கம்.

4. துணைகளும் - சகாயமாகிய ஆண்களும். பேடும் - பெண்களும். மது - தேன். அருந்தி - உண்டு. இணர் - பூங்கொத்து. குடைந்து - கிண்டி. தாது - மகரந்தம். உயிர்க்கும் - சொரி

மொய்ம்மதி தரித்தார் முதுகரி யுரித்தார் மூவுல கத்து
ிக் கெல்லா, மிம்மையி னிருமைப் பயனருள் கூழை யிறை
ரு மக்கெயிற் புறம்போ, லெய்ம்மையே காப்பா மெனக்கி
-ட் டாற்றி னிசைவிலா வுவர்க்குண மகற்றிச், செம்மையே
ரிவ ரெனத்திரைக் கடல்சூழ் தாமெனத் திகழ்ந்தபோ தகழி.

வாளர வுலகிற் கீழுதா யாழ்ந்த வாழ்மு மற்றதன் விரிவு,
ளவுங் கணக்கா னிலைபடா மையினொ னிகர்பரம் பொருளாக
ண்ட, கோளமுங் கடந்த காப்பினுச் சியின்மேற் குலவிய
ாண்டல்கள் படித, னாளுமவ் வகழ்சீ ருணவரு கயங்கள்
நாங்கர்வக் தமர்தலை நாடும். (௬)

---

பும். ஒருசிறை - ஒருபக்கம். மணமுடித்து - விவாகஞ்செய்து.
ி - குரங்கு. வாவுறாது - தாவமாட்டாது. வயின் - வயிற்
ல். பணைகளில் - மரக்கிளைகளில். கடுவன் - ஆண்குரங்கு. படி
த்தா - தன்மையதே.

5. மொய் - வலிமை. மதி - சந்திரன். முதுகரி - பெரிய
ை. இம்மை - இப்பிறப்பு. இருமைப்பயன் - இம்மை, மறு
மப்பிரயோசனம். அருள் - கொடுக்கின்ற. கூழை இறை-
கரநாராயணர். எயில் - மதில். புறம் - பக்கத்தில். அகற்
ன் - தலைப்பிட்டால். இசைவு - பொருத்தம். செம்மை - நன்
ை. சூழ்தாமென - சூழ்தாற்போல. திகழ்ந்த - விளங்கியது.
கழ்ந்தது என்பதில் இறுதிகெட்டது)

6. வாள்அரவுலகில் - ஒளி பொருந்திய நாகருலகத்தினும்.
ழ்ந்த - ஆழ்ந்திய, தாழ்ந்த. விரிவு - விசாலம், அகலம். நிலைப
மை - அளவுபடாமை. அகழ் - அகழி. பரம்பொருள் - பிரம
பொருளை. நிகர் - சமானம். (ஆம்) அண்டகோளம் - (மேல்)
ண்டத்தின் வட்டம். கடந்த - தாண்டிய. காப்பின் - காவ
ிய மதிலின். குலவிய - விளங்கிய. கொண்டல்கள் - மேகங்
. படிதல் - தங்குதல். நாளும் - தினந்தோறும். கயங்கள் -
ளகள். நாங்கர் - (அகழியின்) பக்கத்தில். அமர்தலை - தங்
லை. நாடும் - ஒக்கும்.

இடங்கருஞ் சுறவும் வாளைபுங் கயலி னினங்களுங் கம
டமு நெருங்கித், தொடங்குபோர் புரிய நீங்குசை வலத்தின்
றொத்துகடொடர்ந்துபின் மூடன், மடங்கொன்மெய் யறிவு
நீங்கிய காலைத் தெய்திடு மாயையை நிகர்க்குங், கிடங்கரின்
பெருமை புறக்கடற் பெருமைக் கெண்மடங் காவதே கிளக்
கேன். (எ)

அல்லிவெண் கமலஞ் செங்கம லங்க ளார்பல்க ளலர்ந்
திபினிற், புல்லிய சிறைவண் டினமெலாங் கூடிப் புதுநற
வுண்டுபண் புகறல், வல்லியா ருடைசங் கரர்திருப் புகழை
யுண்டுருக் கொண்டுவா னவர்கள், சொல்லிசைப் பாட்டான்
திற்புறத் தாற்றுத் துதித்தல்போற் சொல்லலாந்தகைத்தே.

அறமுதல் வளர்க்கு மம்மைமேகோ மதியங் குறைதலா
வட்டரும் வரைநாற், புறமுகங் கவினு நான்குருக் கொண்
போந்துநின் றதுவெனப் பொருந்து, முறைபிர மனுநா
ரணனுநா டரிய வொருமுதக லும்பர்வா னவர்தன், னிறைமு
நிக் கணங்கள் பரவிய சங்க ரேசுரர் நீணக ரிஞ்சி. (கூ)

---

7. இடங்கர் - முதலை. சுறு - ஓர்மீன். வாளை - ஓர்மீன். கயல் - கெண்டைமீன். கமடம் - ஆமை. போர்புரிய - சண்டை செய்ய. நீங்கு - விலகுகின்ற. சைவலத்தின் தொத்துகள் - பாசி கொத்துக்கள். பின் - (போர்நீங்கிய) பின்னர். (வந்து) மூடல் - மறைத்தல். மடம் - அறியாமையை. கொல் - கெடுக்கின்ற. கிடங்கர் - அகழி. புறக்கடல் - பெரும்புறக்கடல்; சத்தசமுத்திரத்தையும் அப்பாற் சூழ்ந்துள்ள சமுத்திரம். எண்மடங்கு - எட்டு மடங்கு (அதிகப்பெருமை) ஆவது - உண்டாகப்பட்டது. கிளக்கின் - சொல்லுங்கால்.

8. அல்லி - அகவிதழ்களையுடைய. அலர் - மலர்கின்ற. புல்லிய - புணர்ந்த. நறு - தேன். பண்புகறல் - இசைபாடுதல். வல்லி - வல்லிக்கொடிபோன்ற. தகைத்து - தகுதியையுடையது.

9. அறமுதல் - தருமமுதலியவற்றை. அவள்தரும் - அவளாற்பெற்ற. வரை - இமயமலை. முகங்கள் - இடங்கள். உரு -

வான்முடி யளக்குந் தன்மையாற் றிருமான் பலரடி சேர்த்திடும் வான, மேன்மதி மேக முடியுறு தலினால் விரிசடை விபவனைப் பொருவுங், கான்முகந் துன்னுறுஞ் சேடன் மாமுடி மேற் கனமுற வடித்தலங் கதுவி, நூனயந் தெரிந்த சிற்பரும் பார்த்து நவிலுதற் கரியதந் நொச்சி. (௧௦)

நால்வகைச் சேனை பொருந்தலாற் பொறிக ளெண்ணிலா வியாளராற் றிருந்து, நூல்வழி நடத்துந் தன்மையா னன்னீர் மருவலா னோங்குவோர்க் கினிமைப், பாலுறப் புகழும் பான்மையே யுறலாற் பாய்திரைப் பரவைசூழ் கிடந்த, ஞால மேழ் புரக்கு மரசருக் கிணையாச் சாற்றலாந் தடமதிற் சிறப்பே. (௧௧)

வடிவம். கொடுபோந்து - கொண்டுவந்து. உறை - உயர்ச்சி. ஒருமுதல் - ஒப்பற்ற முதற்பொருளாகிய. நல்நிறை - நன்மைநிறைந்த. நீள் நகர் - நீண்டவராசையின், இஞ்சி - மதில். முதற்பொருளாகிய சங்கரேசனைக்கூட்டுக.

10. வான்முடி - ஆகாயத்துச்சி, திருமால் - விஷ்ணு. மதி - சந்திரன். மேகம் -, முடி உறுதலினால் - தலையிலே பொருந்துதலால். பொருவும் - ஒக்கும். (சிவபிரான்முடியில் சானிரு மேகங்களிருக்கின்றன: அதனைத் திருவிளையாடல் எல்லாம்வல்ல சித்தரானபடலம் முதலாவது செய்யுளிற் காண்க) கால் - காற்றை. முகந்து - வாரி. கனம் - பாரம். அடித்தலம் - அடிப்பாகம். கதுவி - பற்றி. நூல் நயம் - சாத்திரநன்மை. சிற்பர் - கம்மியர்; கம்மாளர். நவிலுதற்கு - சொல்லுதற்கு. அரியது - அருமையுடையது. நொச்சி - மதில்.

11. நால்வகைச்சேனைபொருந்தலால் - ரதகசதுரகபாதாதிகள் (சூழப்) பொருந்தியிருத்தலால். பொறிகள் - யந்திரங்கள். யாணராற்றிருந்து - தச்சர் (சொல்லிய) வழியிலிருந்து, (நன்மையாலே திருந்துகின்ற.) நூல்வழிநடத்தும் - சிற்பசாஸ்திரப்படி செய்யப்படும். (தருமசாத்திரப்படி (நீதி) செலுத்தும்) நல் நீர் - நல்ல அகழியை (நல்லகுணம்). நீர் - அகழியென்றது ஆகுபெயர். பால் உற -

நாற்றிசைப் புரிசை நடுவினி னிருந்து நன்னிலை வாயி
லிரு நான்கின், றோற்றமு துறைப்பிற் றொல்விதி முதலோ ரரி
யவ்வே முதலநாற் றுறைமேயோ, வேற்றமெய் யடியர்க் குதவு
சாலோக முதலநாற் பதங்கொலோ வெம்மாற், சாற்றவுந் தகு
மோ வவற்றின்மேற் சிகரந் தமனிய வுலகின்மேற் றயங்கும்.

மூன்றரணட்டார் முச்சுடர் விழியார் மும்மைகை யமைந்
தமோ னியர்கள், போன்றவர் யார்க்கும் பொருந்துமூ வகைக்
கம் புரிந்தருள் புண்ணிய மூர்த்தி, மான்றனி நோக்கி யாவு
டை வல்லி மணாளர்க்கு மகிழ் சிவபுரமாத், தோன்றுசீ ராகை
நற்றெழு சோலை யகழிதொன் மதினிலை யினைவயே. (௧௩)

வேறு.

புன்னை யின்னிழற் பூங்கொடி யாவுடை
யன்னை பாகத் தமர்சங்க ரேசரர்
மன்னி வாழ வளர்ந்தசீ ராசையா
நன்னகர்த்திரு வீதி நவிலுவாம். (௧௪)

மூவர் பாடன் முழக்கமு மொய்ம்மலர்ப்
பாவை யன்னவர் பாடலு மாடலுங்

---

நண்ணிறம்பொருந்த. (பகுப்பு உற) பரவை - சமுத்திரம். தா
- பூமி. சிறப்பு - சிறப்புடைய மதில் - மதிலை.

12. புரிசைநடுவினில் - மதில்கள் நடு இடத்தில். தோற்றம்-
. தொல்விதி - பெரிய பிரமதேவர். துறை - வழி. ஏற
- உயர்வுடைய. பதம் - பதவி. தகுமோ - கூடுமோ. அவற்
- அவ்வாயில்கள் நான்கின். சிகரி - கோபுரங்கள். தமனிய
- தேவலோகம். தயங்கும் - விளங்கும்.

13. அரண் - மதில். அட்டார் - கொன்றவராகிய. முச்சு
- சோமசூரியாக்கினி. விழியார் - நேத்திரங்களையுடையவர்
மை - காயம், வெருளி, மயக்கமாகிய பகை. பொருந்தும் -
ம். மூ ஐக்யம் - குருலிங்கசங்கமமாகிய மூன்றிலும் ஐக்யம்.

14. நிழல் - நிழலில். பூங்கொடி - பூங்கொடிபோலும். மன்
நிலைபெற்று. சீர் - சீர்த்தி. வீதி - தெருக்களின் சிறப்பை.

தேவ தேவன் விழா வணிச் செல்வமு
மோவி லாதென்று மோங்குமவ் வீதியே. (௧௫)

செய்பொன் மாளிகை செம்மணி மாளிகை
பம்பு சந்திர காந்தப்பன் மாளிகை
யம்ப ரத்தின ராளுமணி மாளிகை
யிம்ப ருற்றது போல விளங்குமே. (௧௬)

மாட மீது நிறுத்து மணிக்கொடி
யாட கப்புவிச் சென்றயி ராவதத்
தோடை மாறுத லொண்சிந் தூரத்தின்மேற்
சாடி யந்தத் திலகத்தைத் தீனுமே. (௧௭)

நீல மாளிகை மேனிலை நிற்பவர்
சால நீல நிறம்பெறு தன்மைதற்
கால மேகத்தைக் கண்டு களித்திடுங்
கோல மஞ்ஞையின் கூட்டத்தை யொக்குமே. (௧௮)

பத்தொ டாறு கலைப்பனித் திங்களை
யொத்த மாமுகத் தோவிய மன்னவர்
முத்து மாளிகை மேவலவெண் முண்டக
மெத்தை மேலுறு வெண்டிரு மானுமே. (௧௯)

---

15. மூவர்பாடல் - தேவாரம். மொய்த்த - நெருங்கிய. மலர்ப்பாவை - இலக்குமி. விழா - திருவிழா. ஓவிலாது - நீங்காமல்.

16. மாளிகை - மாடம். பம்பு - நெருங்கு. அம்பரத்தினர் - விண்ணுலகத்தவர். ஆள் - ஆளுகின்ற. இம்பர் - இவ்விடத்தில்.

17. மணி - அழகிய. ஆடகப்புவி - பொன்னுலகத்தில். அயிராவதத்து - வெள்ளையானையின். ஓடை - பட்டமணிந்த. மா - பெரிய. நுதல் - நெற்றி. சாடி - மோதி. திலகம் - பொட்டு. தீனும் - அழிக்கும்.

18. மேனிலை - மேலிடத்தில். சால - மிக. தற்காலம் - பருவகாலம், கார்காலம். கோலம் - அழகு.

19. பனி - குளிர்ச்சி. ஓவியம் - சித்திரம். முண்டகம் - தாமரை. வெண்டிரு - சரசுவதி. மானும் - போலும்.

பதும ராகத் தரங்கினிற் பாவையர்
சதிமு றைப்படி யாடுத றண்மதுப்
பொதிக டற்குட் பொடித்த துவர்க்கொடி
யதிருந் தென்றலி லாடுதன் மானுமே. (௨௦)

பொற்றொ டிக்கரப் பூவைய ராட்டவர்
துற்றி வெம்முலை தோளொ டுரோசலா
லற்ற மாமணி யாரமுந் தார்களு
முற்று குப்பையவ் வீதி முழுக்கவே. (௨௧)

தோர ணங்களுந் தூமலர் மாலையும்
பூர ணத்தரு பூம்புனற் கும்பமுஞ்
சீர ணங்கு செறிகிலைந் தேர்களு
மூர டங்கவெவ் வீதியு முண்டரோ. (௨௨)

தென்னை வாழை கமுகு செழும்பலா
மன்னு வீதி மருங்கில் வளர்ந்துமேற்
பொன்னு லோகத்திற் புக்குத் தருக்குலந்
தன்னோ டேயிகல் செய்து தருக்குமே. (௨௩)

20. அரங்கு - நடனசாலை. சதி - தாளவொற்று. தண்மது - குளிர்ந்ததேன். பொதி - பொதிந்த. பொடித்த - உண்டாகிய. துவர் - பவளம். அதிரும் - ஒலிக்கும்.

21. பொற்றொடி - பொன்வளையல். துற்றி - நெருங்கி. உரோசல் - உரோஞ்சுதல். அற்ற - அறுந்துவிழுந்த. ஆரம் - மாலை. தார் - (பூ) மாலை. முற்றுகுப்பை - நிறைந்தகுப்பை.

22. தூ - பரிசுத்தம். பூரணம் - நிறைவு. கும்பம் - குடம். அணங்கு - அழகு. செறி - நெருங்கிய. அடங்க - முழுவதும்.

23. மன்னும் - பொருந்தும். மருங்கில் - பக்கத்தில். புக்கு - புகுந்து. தரு - கற்பகவிருக்ஷம். இகல் - போர். தருக்கும் - கருவங்கொள்ளும்.

## வேறு.

அதிர்முகி றவழு மாடத் தமைத்தசா ளரமுன் னின்று
முதிரிள முலையார் செவ்வி முகத்தினை நோக்குந் தோறுங்
கதிர்கலை குறைவு றாமற் களங்கநீத் தமுத மூறும்
புதுமதி கோடி கோடி பொலிதல்போற் றோன்றுமன்றே. (௨௪)

பொன்னினா லமைத்த மேடை மிசைப்புக வதன்மேற் புக்குத்
துன்னிய தோகை யன்னார்க் கண்டுசூழ்ந் தருகி னுற்ற
மின்னெலா மிடைக்கே யஞ்சம் வெண்பிறை நுதற்கே யஞ்ச
மன்னிய முகில்க ளெல்லா மலர்க்குழற் கஞ்ச மாதோ. (௨௫)

கொம்மைவெம் முலைக ளாடப் பந்துகொண் டாடு வாரு
மம்மனை கழங்கு கைக்கொண் டாடல்கள் பயில்கின் றாருந்
தம்மன விருப்பத் தோடுங் கொழுநரைத் தழுவிக் கூடி
யிம்மையி லிந்த்ர போக மிதுவென மகிழ்கின் றாரும். (௨௬)

கலவியை வளர்ப்ப தற்குக் காரண மின்றி யூடித்
தலைவர்தம் மனத்து ளாசை வளர்த்துத்தந் தாளில் வீழ்ந்து
பலமுறை வணங்கச் செய்து பரிவுட னவர்தம் மார்பின்
முலைமுக டழுந்தப் புல்லி முயங்குதல் புரிகின் றாரும். (௨௭)

---

24. அதிர்முகில் - முழங்குகின்றமேகம். சாளரம் - சன்னல். செவ்வி - அழகிய. கதிர் - கிரணம். பொலிதல் - விளங்குதல்.

25. புக்கு - புகுந்து. துன்னிய - நெருங்கிய. அருகின் - பக்கத்தில். அஞ்சம் - பயப்படும். நுதல் - நெற்றி. மன்னிய - பொருந்திய. குழல் - கூந்தல்.

26. கொம்மை - வட்டம். அம்மனை - அம்மானை. கழங்கு - கழற்சிக்காய். பயில்கின்றார் - பழகுகின்றார். கொழுநர் - கணவர். இம்மை - இப்பிறப்பு.

27. ஊடி - ஊடல்செய்து. தலைவர் - கணவர். பரிவு - அன்பு. முகடு - உச்சி. புல்லி - தழுவி. முயங்குதல் - கலத்தல்.

கிள்ளைகட் கினம்பா லூட்டிக் கிளர்மொழி கேட்கின் றாரும்
வெள்ளன மயில்கள் பூவை விருப்பொடு வளர்க்கின் றாருங்
கள்ளமர் கரிய கூந்தல் விறலியர் கனிந்து கூறுந்
தெள்ளமு தனைய பாடல் செவிமடுத் துணர்கின் றாரும். ( )

மணிகளாற் செய்த பாவை யிரண்டினை மணக்கோ லஞ்செய்
தணிபெற வருகில் வைத்து வதுவைக ளாற்று வாரும்
பணிகளின் முலைபான் வல்லி யிடைதளர் பான்மை நோக்கித்
தணிவிறங் கலன்க ழற்றித் தாதியர்க் கணிகின் றாரும். (௨௯)

கோட்டுமா மலரும் வாசக் குளிர்தட மலரும் வல்லித்
தோட்டுமா மலரும் பூவிற் றோன்றிய மலருங் கொய்து
வேட்டுணைக் கொழுநர் நல்க விரைக்கருங் குழலிற் சூட்டி
யீட்டுபூண் முலையிற் றொய்யி லெழுதிப்பார்த் திறுமாப் பாரும். (௩௦)

வீசுமென் கரத்தி லிட்ட வண்டுக ளாட விம்மித்
தூசொடு தொடர்ந்த கொங்கைத் துணைகண்மே லுந்தியாடப்
பாசிழை யணியில் லாட மரகதப் பதுமை போல
வூசன்மீ தேறி யுள்ளத் துவகையோ டாடு வாரும். (௩௧)

28. கிள்ளை - கிளி. கிளர் - விளங்குகின்ற. பூவை - நாகணவாய்ப்புள். கள் அமர் - தேன் தங்கிய. விறலியர் - பாடும்பெண்கள். செவிமடுத்து - கேட்டு.

29. மணி - இரத்னம். மணக்கோலம் - கலியாணக்கோலம். அணி - அழகு. அருகு - பக்கம். பணி - ஆபரணம். வல்லி - வல்லிக்கொடிபோலும். தணிவு - தாழ்வு. கலன் - ஆபரணம். தாதியர் - பாங்கியர்.

30. கோட்டு - மரக்கிளைகளிலுள்ள. தடம் - வாவி. வல்லி - கொடியிலுள்ள. தோட்டு - இதழ்களையுடைய. பூவில் - நிலத்தில். கொய்து - பறித்து. வேட்டுணை - மன்மதனையொத்த. கொழுநர் - கணவர். விரை - (இயற்கை) வாசனை. பூண் - ஆபரணங்களை. ஈட்டு - தொகுத்த. தொய்யில் - சந்தனக்கோலம். இறுமாப்பார் - கர்வங்கொள்வார்.

31. வண்டு - வளையல். விம்மி - பருத்து. தூசு - வஸ்திர

மாரனும் விருப்புகின்ற வனப்புறு புருட ரெல்லா
மோர்தினந் தப்பா மலுவகைநல் லிருந்தோ டொன்று
வீரகேசரிபோற் கூடி மென்மலர் மாலை சூடி
சீதமென் களபம் பூசி யின்புறக் களிக்கின் றாரும். (௩௨)

சிவபுரா ணங்கள் கேட்டுச் சிந்தையுண் மகிழ்கின் றாருந்
தவமுறு பெரியோர்க் கண்டு சரணிணை பணிகின் றாரு
மலநெறி புலன்செல் லாம லத்துவி தங்க ளாய்ந்து
பவமறு ஞான முத்திப் பரம்பொரு ளுணர்கின் றாரும். (௩௩)

கதிருத யத்துக் கைந்து கன்னலி னெழுந்து நன்னீர்
நதியிடைப் படிந்து பூதி கண்டிகை புனைந்து நாவிற்
றுதிதரு மெழுத்தஞ் சோதிப் புன்னையி னீழற் சோதி
புதுமலர்ப் பாதம் போற்றித் தோத்திரம் புகல்கின் றாரும்.

இத்தகை மடவார் மாந்த ரெல்லியின் கடிகை மூன்று
பத்தையு மினிது போக்கிப் பரிதிபோய் மறைந்த பின்னர்த்
தத்தைநல் மொழியா ரோடு தண்மல ரமளி யெய்தி
முத்தணி தனங்கைக் கொண்டு முயங்குதல் புரிகின் றாரும். ()

---

மம். தொடர்ந்த - தொடர்ந்தெழுந்த. துணை - இரண்டு. மேலுந்தி - மேலேறி. பாசு - பசிய. இழைபணி - இழையாகிய ஆபரணத்தின். வில் - சோதி. ஆட - அசைய. ஆடுவோர் - விளையாடுவோர்.

32 வனப்பு - அழகு. தினம் - நாள். தப்பாமல் - தவறாமல். உவகை - மகிழ்ச்சி. வீரகேசரி - வீரமுள்ள சிங்கம். சீதம் - குளிர்ச்சி.

33. சரண் - பாதம். இணை - இரண்டு. அலநெறி - பாவவழியில். புலன் - இந்திரியங்கள். அத்துவிதம் - இரண்டற்றவொன்று, சிவமும் ஆன்மாவுங் கூடிநிற்குநிலை. பவம் - சனனம். பரம்பொருள் - உண்மைப் பொருள்.

34. கதிர் - சூரியன். கன்னல் - நாழிகை. பூதி - விபூதி. கண்டிகை - உருத்திராக்ஷம். சோதி - சங்கரேசுரர்.

35. இத்தகை - இந்தக்குணத்தையுடைய. எல்லியின்-பக

## வேறு

பொன்னாலு மவாவெழிலாற் போர்விழியாற் கனதனத்
தாற் பொட்டாள் மெட்டாற், கன்னீர்கொண் டதுபோலக்
கடினமனத் தாடவரையுங் கலக்கஞ் செய்து, மன்னாசை தனை
க்கொடுத்துத் தனைவிரும்பு வாராசை மயக்கில் வாங்கு,
மின்னாரிம் பரத்தையர்கள் விளங்குமணி வீதியணி விளம்ப
லுற்றும். (௩௬)

ஆடகத்தாற் பன்மணியா லமைத்தமணி மாளிகைமுன்
முகப்பி லன்னப், பேடுகுயில் மயில்கிளிபோ னடந்திசையா
டிச்சாயல் காட்டிப் பேசி, நீடுவிழிக் கொடுங்கணையைக் கா
முகர்மார் பகத்தெறிய நெஞ்ச மஞ்சித், தேடிவந்து காத்தி
ருந்து செல்வமெலாந் திறைகொடுக்கச் செய்யு நீரார். (௩௭)

வந்தபுரு டருக்கெலாம் வாய்மொழியா லுபசார வ
ணக்கஞ் செய்து, சொந்தமனை வியர்போலத் தோற்றுவித்து
நயப்படுத்தித் தொகையாச் செம்பொன், றந்தபுரு டரைம
ருவித் தாதவர்தம் பொருள்கவர்தந் திரங்கள் காட்டி, யெந்

---

ற்காலத்தில். கடிகை - நாழிகை. அ - அந்த. தத்தைநன்மொ
ழியார் - கிளிபோலும் நல்ல வார்த்தையுடைய பெண்களுடன்.
அழனி - மெத்தை. அம்மாந்தர் - அந்த ஆடவர்.

36. பொன்னாலும் - இலக்குமியாலும். அவாவு - விரும்பப்
படு. எழில் - அழகு. மெட்டு - குனிப்பு, கடித்தல். கல் நீர் - க
ல்லினிடத்துநீரை. கொண்டதுபோல் - (உரித்து) வாங்குதல்
போல. மன் - (தம்மிடத்தில்) நிலைபெற்ற. ஆசை - அன்பு.
விரும்புவார் - இச்சிக்கின்ற ஆடவரது. ஆசை - பொன்னை.
மணி - அழகிய. வீதியணி - தெருச்சிறப்பு.

37. ஆடகம் - பொன். மணி - அழகு. முகப்பு - முன்னி
டம். பேடு - பெட்டை. சாயல் - அழகு. காமுகர் - தூர்த்தர்.
அஞ்சி - (அக்காமுகர்) பயந்து. திறை - கப்பம். நீரார் - குண
த்தையுடையார்.

தவிதந் திஞும்பொருண்மே லிச்சைவைத்துத் தேடிமிக
விட்டு வார்கள். (௩௮)

விதிமுறையா மதனசாத் திரமறிந்த வாலிபராம் புருட
ர் மேவிக், கதமுறுபோ கத்தின்முயல் கருத்தையறிந் திகழ்
கொடுத்துக் கனிவு காட்டி, யிதமுறுநற் புறத்தொழிலின்
கலவியான் மோகவெறி யெல்லா நீக்கி, மதமுறும்யா னையை
ப்பாகர் வசப்படுத்தி நெருங்குதல்போன் மருவிக் கொள்
வார், (௩௯)

படுக்கைமனை யலங்காரஞ் செய்தமல ரமளிமிசைப் ப
டுத்துச் செம்பொ, னடுக்கனிகர் தனமிரண்டு மாடவர்தங்
கைக்கொடுத்தங் கவரைக் கட்டி, படுக்கையுரிந் தனைபொழுதி
னுகையுறும் போகத்தா லுயிருங் கூடக், கொடுக்கமன மு
றும்படிசெய் மாயவித்தை தனக்கொருகொள் கலமே யன்
னார், (௪0)

நாடகத்தி லரம்பையுரு வசியனையார் பாட்டின்கங்கு
ரூர தாதி, மாடகநல் லியாழுடையோர் மயங்கும்வகை புன்
னவன மருங்கின் வைகு, மாடகப்பொற் சிலைபுண்டயா ரங்கு
நடயம் பிகைபுகழை யன்பாப் பாடிச், சூடகக்கை யால்வர்க்
குத் தொண்டுசெய்து வழிபடுநற் றொழிலே பூண்பார். (௪௧)

---

38. தோற்றுவித்து - பாவனைகாட்டி. தொகையா - குவிய
ாக. கவர் - கிரகிக்கின்ற. தந்திரம் - உபாயம். ஈட்டுவார் - ச
ம்பாதிப்பார்.

39. விதிமுறையா - கிரமப்படியாக. மதனசாஸ்திரம் - கொ
க்கோக முதலிய நூல்கள். கதம் - வேகம். முயல் - தொடங்
கின்ற. புறத்தொழில் - வெளியே யவயவங்களிற்செய்யுங்கிரியை.
கலவி - புணர்ச்சி. வெறி - மயக்கம்.

40. அமளி - மெத்தை. அடுக்கல் - மலை. உடுக்கை - வ
ஸ்திரம். உவகை - மகிழ்ச்சி. போகம் - போகவிகற்பம், பலவித
மாகம். கொள்கலம் - பாத்திரம். அன்னார் - போன்றார்.

41. அரம்பை - உருவசி, தெய்வப்பெண்கள். நாரதாதி -

திருவிருந்த மருதவயற் செந்நெல்லின் பூளைகொணர
து. சிவனுக் கன்பால், பெருவிருந்து முன்பொருவன் செய்த
துவே கடைப்பிடியாப் பிடித்துக் காயார், கருவிருந்து வருமு
பொழுதீத நல்லொழுக்கஞ் சைவநெறி கைக்கொண் டெய்தி,
வருவிருந்து புரந்துமகிழ் வேளாளர் பெருமிதி விளைமை
சொல்வாம். (௪௨.)

மன்னவர்தங் கடமைநல்க லாணைவழி நிற்றன்மற்றுள்
வினைதொடங்க, றன்னகத்திற் குற்றமின்மை யூக்கமெழுக்
கம்விருந்து தனைப்புரத்தல், பொன்முதற்கைக் கடன்கொடு
த்த லொற்றுமைகொள் ளுங்தெய்வம் போற்றலான, வின்ன
பத்துமிங்கு வேளாளரென் றுங்குறையாமலியற்றுவார்கள்.

இறந்தோரை யிறவாம லிருந்திறந்தோ ரைப்பரற்றென்
றின்றித் தானே, துறந்தோரை யாச்சிரம மூன்றுபுரி தொல்
லோரைப் புரந்து சூது, மறந்தோரா யீசனணி மணிமுடிமே
லிருந்தகங்கை குலத்தின் வந்து, பிறந்தோராய் வாழுமவர்
பெருமையொரு நாவாலே பேசலாமோ. (௪௪)

---

நாரதமுனிவர் முதலிய. மாடகம் - முறுக்காணி. யாழ் - வீணை.
மருங்கில் - பக்கத்தில். ஆடகம் - பொன். சிலை - வில். சூடகம் -
மாதர்கையிலணியும் ஓர் ஆபரணம். வழிபடு - வணங்குகின்ற.

42. திரு - வளம். மருதம் - மருதநிலம். கொணர்ந்து -
(இரவிலே) கொண்டுவந்து. சிவனுக்கு - சிவபிரானிடத்து. அன்
பால் - அன்புடைமையால். பெருவிருந்து - (சிவனடியாருக்குப்)
பெருமைதங்கிய புதிதாகிய உணவு. ஒருவன் - இளையான்குடிமாற
நாயனார். கடைப்பிடியா - உறுதியாக. பிடித்து - கைப்பற்றி.
புரந்து - காத்து.

43. மன்னவர்கடமைநல்கல் - அரசர்க்குச்செய்யவேண்டிய
நியதிகளைச்செய்துமுடித்தல். ஆணைவழிநிற்றல் - (அவரது) ஆஞ்
ஞையினொழுகுதல். ஆள்வினைதொடங்கல் - முயற்சியின்மூளுத
ல். ஒற்றுமை - (அரசருடன்) மாறுபாடின்மை.

44. இறந்தோர் - தென்புலத்தார். இரந்தோர் - யாசித்

மறுவறுநன் னூலோதல் விதிமுறையே மகவினையை யாற்றன் மேலாந், தொறுவினத்தைப் புரத்தலுழல் வேளாண்மை நிதிவிர்த்தி செய்து தாய்மை, புறதொழிலாம் வாணிகமே யுறுதியாக் கொள்ளல்புக ழோங்கு மிந்த, வறுவகையார் தொழில்புரியு மெழில்வைசிய விதிபின்பா டறைதல் செய்வாம். (௪௫)

குன்றுக்கு நிகரான நவமணியா லிழைத்தகூ லத்திருந்து, கன்றுக்கு நலந்தருகைக் கன்னியினுக் கடுத்தவிரா சியைக்கைக் கொண்டே, யென்றுக்கு நிகரான பொற்பணியும் பலபொருளு மிசைவா வாங்கி, யொன்றுக்குப் பதின்மடங்கா விலாபமுறும் வாணிகமே யுஞற்று வார்கள். (௪௬)

நடுப்பேசி வழக்குரைப்பார் மறந்தேனுஞ் சொல்வாய்மை நழுவா ரொன்றை, வடுப்பேசார் தம்மரபின் மருங்கைவிடார் செய்தநன்றி மறக்க மாட்டார், கடுப்பான மொழிபகரார் நல்விடயத் திற்கோடி கனக மேனுங், கொடுப்பார்கள் குற்றம்வருங் காரியத்தைத் தங்கருத்திற் குறியா ரன்றே.

ந்தோர். பற்று - ஆசை. துறந்தோர் - முனிவர். ஆச்சிரமம் மூன்று - பிரமச்சரியம், வானப்பிரத்தம், சந்நியாசம். தொல்லோர் - பழையோர். புரந்து - பாதுகாத்து. மணி - அழகு.

45. மறுவறு - குற்றமற்ற. மகவினை - யாகஞ்செய்தல். ஆற்றல் - செய்தல். தொறுவினம் - பசுக்கூட்டம். புரத்தல் - காத்தல். வாணிகம் - வியாபாரம். பாடு - பெருமை. அறைதல் - சொல்லுதல்.

46. குன்று-மலை. இழைத்த-செய்த. கூலம் - கடைவீதி. கன்று - வளையல். நலம் - அழகு. கன்னி - பெண், கன்னிராசி. அடுத்த - (அக்கன்னிக்கு) பக்கமேயுள்ள. இராசி - துலாம், நிறைகோல். என்று - சூரியன். இசைவா - பொருத்தமாக. உஞற்றுவார் - செய்வார்.

47. நடு - நடுநிலைமை. நழுவார் - தவறார். வடு - குற்றம். மரபின்மருங்கு - குலாசாரம். கடுப்பு - வெறுப்பு. கனகம் - பொன்.

துன்னுகிளை மறையோத ரொல்விதியே யுயர்வேள்வித்
தொழில்கள் செய்தல், பொன்னிதியங் கொடுத்தலிந்தப் பூத
லத்தைப் புயமீது வைத்துக் காத்தல், மன்னுபடைத் தொ
ழில்பயிறல் போர்புரித லெனவாறு வகைத்தொழிற்கு, முன்
னவராய் முன்னவருக் கடுத்தகுல மன்னர்முறை விதி சொல்
வாம். (சஅ)

வேறு.

மதிமுக டுரோசு மாட மாளிகை மணிமு கப்புங்
கதிர்தொடு கோபு ரங்கள் கனமக மேரு நேர
விதியறி சிற்பர் செய்த மேனிலைச் சிறப்பு நோக்கிற்
புதியதோர் தெய்வ லோகம் புவனத்திற் றோன்றல் போலும்.

துன்னரி யேறு போலச் சுடர்முடி வேந்தர் மைந்தர்
மின்னும்வாள் பலகை கைக்கொண் டெதிரெதிர் வீசி நின்று
தன்னுடற் காப்பி யற்றி யெதிரிவாள் வெட்டுத் தாங்கிப்
பின்னவர் தம்மேல் வெட்டிப் பெயர்ந்துநின் றார்க்கின் றாரும்.

---

48. துன்னு - நெருங்கிய. கிளைமறை - உபவேதம். தொல்விதி - பழையவிதிப்படி. வேள்வி - யாகம். பொன்னிதியம் - பொன்னாகிய திரவியம். படை - ஆயுதம். போர் - யுத்தம். முன்னவர் - தலைவர். முன்னவர் - முதல்வருணத்தார், பிராமணர்.

49. மதி - சந்திரமண்டலத்தை. முகடு - உச்சி. உரோசும் - தேய்க்கின்ற. மாட மாளிகை - மாடமாகிய மாளிகை, வீடு. முகப்பு - முன்னிடம். கதிர் - சூரியமண்டலத்தை. கனம் - மேன்மை. மகமேரு - மகாமேருமலை. நேர - ஒப்ப. சிற்பர் - சிற்பசாத்திரங் கற்ற தச்சர். மேனிலை - மேற்றட்டு. புவனம் - பூலோகம்.

50. துன் - நெருங்கிய. அரியேறு - ஆண்சிங்கம். சுடர் - பிரகாசிக்கின்ற. மின்னும் - ஒளிவீசும். பலகை - கேடகம். பின் - பின்னர். அவர் - எதிரிகள், பெயர்ந்து - நீங்கி. ஆர்க்கின்றார் - ஆரவாரிக்கின்றவர்.

முரசதிர் வீதி தோறு நிரைநிரை முகிலோ டெட்டு
வரையெனப் பருத்து நீண்டு வாவுமைங் கதியி னாலே
விரையும்வெம் பரிகள் பூட்டி மிளிர்மணிக் கொடிகள் கட்டு
மிரதமூர்ந் திந்தி ரன்சே யெனப்பொலிந் தெய்து வாரும். ()

உன்னதம் முழமே யொன்பா னுளம துடைத்தா யொன்பா
னன்னுறுப் பதனாற் போரிற் சாடியிக் கரையின் மீதின்
மன்னுயிர் முறுப்புத் தோயு மத்தமா நடாத்தி யும்பர்
பொன்னுல கரச னென்னப் புகழ்புர வருகின் றாரும். (௫௨)

இரவித னொற்றை யாழித் தேரினை யீர்த்துச் செல்லு
மரகதப் புரவிக் கெட்டு மடங்குவல் வேகம் வாய்ந்த
துரகத மூர்ந்து சாரி வலமிடங் கொண்டு சுற்றிப்
பரதநா டகத்தி லாட்டிப் பரித்தொழில் பயில்கின் றாரும் ()

திருநவெங் கோட்டுச் செந்தீயனை பசெம்மயிர்க்கடாக்கள் [ம்
பொருதிடப்பொருத்திவென்றிகொண்டதைப்புகழ்கின்றரு

---

51. அதிர் - ஒலிக்கும். நிரைநிரை - வரிசைவரிசையாக. முகில் - மேகம். எட்டுவரை - அட்டகுல பருவதம். வாவும் - தாவும். ஐங்கதி - பஞ்சகதி; மல்லகதி, மயூரகதி, குரங்குக்கதி புலிக்கதி, இடபகதி. விரையும் - விரைந்துசெல்லும். மிளிர் - விளங்குகின்ற. இந்திரன்சேய் - சயந்தன். பொலிந்து - விளங்கி.

52. உன்னதம்- உயர்ச்சி. ஒன்பான் - ஒன்பது (முழம்.) உடைத்தாய் - உடையதாகி. ஒன்பான் உறுப்பு - ஒன்பது அவயவம்;- வால், கால்கள், சரீரம், துதிக்கை, கொம்புகள். போர் - யுத்தம். சாடி-மோதி. எழ் உறுப்பு - ஏழு அவயவம், கால்கள், கோசம், - துதிக்கை, வால். மத்தமா - மதத்தையுடைய யானை.

53. இரவி - சூரியன். ஆழி - சக்கரம். ஈர்த்து - இழுத்து. மரகதம் - மரகதநிறத்தையுடைய. புரவி - குதிரை. மடங்கு - பங்கு. துரகதம் - குதிரை. வலம் - வலப்பக்கம். இடம் - இடப்பக்கம். சாரிகொண்டு - உலாப்போந்து. பரதநாடகம் - பாவ ராக தாளத்தோடுகூடியநாட்டியத்தில். ஆட்டி - ஆடச்செய்து.

விரிசிறை யடித்துக் கூவும் வாரண வெங்கான் முள்ளாற்
குருதிகொப் பளிக்கக் குத்துங் கொடுஞ்சமர் பார்க்கின் றாரும். ( )

இருமலை கோடுண் டாகி யெதிரெதிர் மலைந்தா லென்னக்
கருமுகில் போலு மூற்றிக் கண்களிற் கனல்கள் சிந்தப்
பெருமத மூன்றுந் தத்தப் பெரும்பனைக் கரம்பி ணைத்துப்
பொருகரிப் போரி யற்றிப் புயங்கொட்டிப் பார்க்கின் றாரும்.

தேர்நிரை நாவா யாகச் செழுங்கரிக் குலநீ ருண்ணுங்
கார்நிரை யாகக் காலாள் கதித்தெழு மீன்க ளாக
ஏர்தரு புரவிக் கூட்ட மெற்றுவெண் டிரைக ளாகப்
பார்புக ழரசர் வீதி படர்பெருங் கடலை யொத்த. (௫௬)

வேறு.

மறையோத லோதுவித்தன் மகம்புரிதல் புரிவித்தல் வ
தேற் போர்க்கு, நிறைபாக நிதிகொடுத்த லேற்றலிந்தத்
தொழிலாறு நெறியிற் கொண்டு, முறையாழுத் தழலோம்பி
நாடோறு மூவர்முதற் றேவ ரியார்க்குங், குறையாம லவிப்
பாகங் கொடுக்குமறை யோர்வீதி கூறு கிற்பாம். (௫௭)

---

54. திருகு - முறுகிய. வெங்கோடு - வெய்ய கொம்புகளையுடைய. கடாக்கள் - ஆட்டுக்கடாக்கள். பொருத்தி - மூட்டி. வென்றி - வெற்றி. வாரணம் - கோழி. குருதி - இரத்தம். சமர் - யுத்தம்.

55. கோடு - கொம்பு. மலைந்தாலென்ன - சண்டைசெய்தாற்போல். ஊற்றி - பேரொலிசெய்து. கனல் - தீ. மதமூன்று - கன்னமதம், கைமதம், கோசமதம். தத்த - பெருக்கெடுத்தோட. பனை - பனைபோலும். கரம்பிணைத்து - கைகளைப்பின்னி. பொருகரி - போர்செய்கின்றயானை. கொட்டி - தட்டி.

56. நிரை - வரிசை. நாவாய் - மரக்கலம், தோணி. கார் - மேகம். காலாள் - வீரர்கள். கதித்து - மேலோங்கி. ஏர் - அழகு. புரவி - குதிரை. எற்று - மோதுகின்ற. திரை - அலை. வீதி - வீதிகள். படர் - விரிந்த. ஒத்த - போன்றன.

57. மறை - வேதம். மகம்புரிதல் - யாகஞ்செய்தல். நிறை-

ஆதிசைவ ராய்மறையா கமமனைத்துந் தேர்ந்தபிடே
கங்க ளாற்றிப், பூதியணிந் தைந்தெழுத்தைப் பொருளென
க்கொண் டரன்பூசைத் தொழிலே பூண்டோர், சோதிசிவ
சங்கரரா வுடைதிருவா லயத்தின்முன்னர்த் தோன்றுகின்
ற, வீதியினிற் சிவமறையோர் பொற்கிருக நிரைநிரையாய்
விளங்குந் தானே. (௫௮)

வந்திரவி யெழும்பொழுது மாத்யான மாலையென வகு
த்த மூன்று, சந்தியினுங் காயத்ரீ தனையுரைத்துச் சந்திசெ
யுந் தலத்தோ ராகி, யிந்துவணி சடைப்பெருமாற் குரியவே
ள் விக்கிரியை யியற்றி யென்று, மந்தணர்கள் சிறந்திருப்பா
ரருமறையின் முழக்கமறா தந்த வீதி. (௫௯)

பொய்புகலா வொருமொழியா ரிருபிறப்பார் முக்குற்
றம் போக்கி நான்கு, தெய்வமறை யுணர்ந்தைந்து புலனடக்
கி யாறுசம யங்க டேர்ந்து, செய்வார்த்தங் கெழுநாவா வீ
ளரியுண் ணும்படிநன் னியதி செய்து, வையகத்தி லுள்
ளோர்கள் போற்றுபூ சுரராகி வாழ்வா ரென்றும். (௬0)

---

அளவு. நெறியில் - முறையாக. முறையா - கிரமமாக. மூத்த
ழல் - மூன்று அக்கினி, காருகபத்தியம், ஆகவநீயம், தக்கணாக்
கினி. ஓம்பி - பாதுகாத்து. மூவர் - தென்புலத்தார், தெய்வம்,
விருந்து. அவி - உணவு. பாகம் - பங்கு. கூறுகிற்பாம் - சொல்
லுவாம்.

53. மறையாகமம் - வேதாகமம். ஆற்றி - செய்யப்பட்டு
பூதி - விபூதி. ஐந்தெழுத்து - பஞ்சாக்கரமந்திரம். கிருகம் - வீடு
நிரைநிரை - வரிசைவரிசை. பூண்டோராகிய சிவமறையோரென
க்கூட்டுக.

59. பொழுது - காலை. மாத்யானம் - உச்சிப்பொழுது. சந்தி-
காலம். காயத்ரி - காயத்திரிமந்திரம். சந்தி - சந்தியாவந்தனம்.
இந்து - சந்திரன். வேள்வி - யாகம். அந்தணர்கள் - (ஆதிசை
வரல்லாத மற்றைப்) பிராமணர்கள்.

60. மொழி - சொல். முக்குற்றம் - மூன்றுகுற்றம், காமம்,
வெகுளி, மயக்கம். தெய்வம் - தெய்வத்தன்மை. ஐந்துபுலன்

மறையிடத்தி னுதாத்தமனு தாத்தமுடன் மறையோ
தியங்க மாறி,னிறைபுடைத்தா முன்றென்றா மங்கோதிப்
பின்னைந்து நேயக் கல்வித், துறையிடத்தி லெடுத்தோதி
யுபசுருதி புராணநூ லோரென்ற யாரு, முறையிடத்தில் விரித்
தோதி மாணவகர்க் கப்பயனை யுறுத்து வார்கள். (கூக)

தந்திரவுத் திகளெண்ணான் குந்தேர்ந்து மதமேழுந்
தழுவிச் சான்றோர், முந்தவுரைத் திட்டப் பிரமாணங்
களுமுறையா வறிந்து முன்னார், வந்தெதிர்த்து வாதமிடுந்
தார்க்கிகர் தமைமறுத்து வாத மிட்டுச், சொந்தமாஞ் சைவ
நிலை நிறுத்தியே பிறமதத்தைத் தூளாச் செய்வார். (கூஉ)

வேறு

இற்றறந் திகயப் பற்றினை விடுத்திங் கினியொர்பற்
றிலையெனப் பொருளின், பற்றினைப் பற்றிப் பாவனை நீங்
கிப் பாவனை தீதராய்ப் பரிதி, யுற்றிடு குணம்போ லியாவை

பஞ்சேந்திரியம். வார்த்து-ஒழுக்கி. எழுநாவால்-எழுநாக்குகளால். நீள்எரி - நீண்ட அக்கினி. நியதி-நித்தியகன்மம். பூசுரர்-பூதேவர்.

61. மறை - வேதம். உதாத்தம், அநுதாத்தம் - உச்சரிப்பினோசைபேதங்கள். அங்கம் - வேதாங்கம். நிறை - நிறைவு. உடைத்தாம் - உடையதாம். முன்றொன்று - மந்திரம். பின்னைந்து - பின்னுள்ள ஐந்து, வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம். கல்வித்துறை - நூல்பயிற்சி செய்யுமிடம். உபசுருதி - உபவேதம். மாணவகர்க்கு - மாணாக்கர்கட்கு. உறுத்துவார் - உறச்செய்வார்.

62. தந்திரவுத்தி - நூலிற்கூறும்யுத்தி. மதம் - கொள்கை. சான்றோர் - மேலோர். முந்த - முற்பட. அட்டப்பிரமாணம் - எட்டுப்பிரமாணம்; அவையாவன:-காட்சி, அநுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உவமானம், அபாவம், சம்பவம், ஐதிகம் என்பன. இவற்றைச் சித்தாந்த சாத்திரங்களுட் காண்க. முறையா - முறையாக. வாதமிடும் - தர்க்கஞ்செய்யும். தார்க்கிகர் - தர்க்கஞ்செய்வோர். தூளா - பொடியாக.

யுஞ் சமயா புளத்திடை யுன்னியொப் பில்லா, நற்றுறவடை
ந்த மகான்களால் வசிக்க நண்ணிய மடங்களு மநேகம். (௬௩)

வேறு.

ஆறு கட்டிக்கண் டிகைவெண்ணீ றணிந்தபி டேகப்
பேறு கட்டினயந் தெழுத்துணர் பெரியரா யதனி
னீறு கட்டிய நிமலனை நினைத்துமெஞ் சகத்தில்
வீறு கட்டிய மெய்யறி வுடையராய் விளங்கி. (௬௪)

சைவ வாகமஞ் சைவசாத் திரம்பதி னான்கு
மெய்ப தாம்பசு பதியொடு பாசமும் விசாரித்
துய்ய நன்கடி யவர்க்குப தேசங்க ளுரைக்கு
மைய ராஞ்சைவா சாரியர் மடங்களு மநேகம். (௬௫)

வேறு.

தெரிவரும் பெருமைச் சங்கரே சுரர்கோ யிலின்றென்
மேற் காகிய திக்கி, னரியர வடிவா மரனுருக் காண்பா னம்
மைகோ மதியுளத் தன்பாற், பெரியநற் றவஞ்செய் தவசு
மண் டபமொன் றுளததன் பெருமைகள் கல்விக், குரியநா
மகளு மெடுத்தெடுத் தநேக யுகங்களி னுரைப்பினு முடியா.

---

63. இல் - இல்லறம். துறந்து - கடந்து. பற்று - ஆசை பொருள் - பிரமம். பாவனை - தியானம். அதீதர் - எட்டாதவர். பரிதிகுணமு - சூரியனுடைய குணம்; அஃது எல்லாவற்றையுஞ் சுடுதல். துறவு - சந்நியாசம். நண்ணிய - பொருந்திய.

64. ஆறுகட்டி - காமமுதலிய ஆறையும் உண்டையாகத் திரட்டிக் கட்டியதோர் காதணி. கண்டிகை - உருத்திராக்கம். பேறு - பயனை. கட்டி - ஆக்கி. நீறுகட்டி - விபூதிதரித்து. வீறு கட்டிய - பெருமையை ஆக்கிய.

65. மெய் - உண்மை. பசு, பதி, பாசம் - திரிபதார்த்த லக்ஷணங்கள். விசாரித்து - ஆராய்ச்சிசெய்து. உய்ய - பிழைக்க. ஐயர்-பெரியவர். சைவாசாரியர்-சைவர்களுடைய குருக்கள்.

66. தெரிவுஅரும் - அறிதற்கரிய. அரியரவடிவு - சங்கரநாராயணவுருவம். அரனுரு - சிவரூபம். காண்பான் -

அத்திவா ரங்க ணில்மா மணியா லமைத்ததன் மேற்
படிகத்தான், மெத்திய தளங்கள் பொருத்திப்பின் பதும
ராகத்தான் மிளிர்சுவ ரேற்றி, மத்தியிற் பவளக் கானிரை
நாட்டி வயிரநற் போதிகை மீதி, லுத்திரம் பச்சை யாற்ப
தித் துயர்வா யொளிர்வயி டூபக்கை யோங்க. (௬௭)

இசைத்துமேன் முகடு சேர்த்துமாற் றுயர்ந்த விரச
தத் தகட்டினால் வேய்ந்தங், கசைத்துவா னிரவி மதிபிர
தத்தை யடர்மணித் தூபிமீ தமைத்துத், திசைக்கெலா
மின்பஞ் செயுமிதன் கவினைத் தெரிந்திட வந்தவா னவர்க,
ளசைக்குமம் லாகி யவர்மனத் தினையுங் கவருகல் விசித்திர
மாக. (௬௮)

பொறிகளுங் கமைத்து வைத்தனர் கண்டோர் பொறி
புல னியாவுமப் பொறியாற், பறிகொள விடுத்துத் தாங்க
ளப் பொறியின் படிவமா யசைவற நிற்பின், மறிகொளுங்
கரத்தார் படிவினை நோக்கி வாயிமை மதிதிரு நாட்டத்,
துறிதவர் திருந்து தவஞ்செயுங் கோலங் காண்பவர் பெரு
மைகூ றரிதால். (௬௯)

---

காணும்பொருட்டு. உளது - இருக்கிறது. நாமகள் - சரசுவதி. முடி
ஞா - அடங்கா.

67. அத்திவாரம் - அடிவாரம், அடிப்பாகம். மணி - இரத்
னம். படிகம் - பளிங்குக்கல். மெத்திய - நிறைந்த. மிளிர் - விள
ங்குகின்ற. ஏற்றி - வளர்த்து. மத்தியில் - நடுவில். நிரை - வரி
சையாக. நாட்டி - நிறுத்தி. ஒளிர் - விளங்குகின்ற. கை - கை
மரம்.

68. இரசதம் - வெள்ளி. வேய்ந்து - மூடி. அசைத்து -
கட்டி. இரவிமதி இரதத்தை - சூரியசந்திரர்களுடைய தேர்களை.
அடர்மணி - நெருங்கிய மணிகள்பதித்த. தூபி - விமானம். மீது -
மேலே. அமைத்து - செய்து. கவினை - அழகை. கழைக்கு -
இருப்பதற்கு. மேல் - அதிகம். விசித்திரம் - சிறந்த அழகு.

69. பொறி - இயந்திரம். பொறி - இந்திரியம். புலன் -
அறிவு. அப்பொறியால் - அந்த இயந்திரங்களால். படிவம் - வடிவு

இத்தகைய புடைய தலசுமண் டபந்தா னியற்றிய வேந்
தன்யா ரென்னின், முத்தமிழ்ச் சங்க மூன்றுட னான்கா மு
றைபெற வளர்த்துமூ துலகில், வைத்திடு மூற்று மலைக்கர சு
ரிமை மன்னவன் மருதப்ப வள்ளல், பத்தியாற் செய்தின் கே
ழிரண் டுலகும் பரப்பினன் றன்புகழ்ப் பரப்பே. (௭௦)

## வேறு.

மேரு வென்னலா முதனிலைக் கோபுர மிளிர்பொன்
சார்வி மானங்க ளிரண்டும்வெண் கயிலைதண் மதிதோய்
காரு லாவிம யாசல மென்னலாங் கடாவு
மேரு யர்த்தவ னாலயத் தெழில்சொல வெளிதோ. (௭௧)

பண்ட பங்கயுந் திருமதி னிலைபுமா நடனங்
கொண்ட பொற்சபை மற்றுமிவ் வுலகினிற் குடிவந்
தண்டர் தச்சனு லமைத்ததா மன்றெனி லலர்ந்த
புண்ட ரீகத்தன் சிருட்டியா மியாரிது புகல்வார். (௭௨)

## வேறு.

பூமியே முதலா மெல்லுல கோர்க்கும் போகமும் வீடு
நல்குவதில், வாமிகோ மதியார் பாகனே யென்று வான்

---

ம். ஆய் - போன்று. சிற்பின் - சிற்பநூலோடு. மறி - மான். வாமி கோமதி - அழகுடையவளாகிய கோமதியம்மை. நாட்டக் குறி - எண்ணத்தின்குறிப்பு. தவாது - கெடாது. கோலம் - (தனம்) கோலத்தை. காண்பவர் - தரிசிப்பவர்.

70. முறை - ஒழுங்கு. மூதுலகு - பழைய உலகம். புகழ்ப்பரப்பு - கீர்த்தியின் விரிவு.

71. மிளிர் - விளங்குகின்ற. கயிலை - கயிலாசம். கார் - மேகம். உலாவு - சஞ்சரிக்கின்ற. இமயாசலம் - இமயமலை. கடாவும் - செலுத்தும். ஏறு - இடபவாகனத்தை. உயர்த்தவன் - (கொடியாகக்) கட்டிய சங்கரேசுரர்.

72. மற்றும் - பிறவும். குடிவந்து - குடியாக வந்திருந்து. அண்டர்தச்சன் - தேவகம்மியன். புண்டரீகத்தன் - பிரமதேவன். சிருட்டி - சிருட்டிப்பு.

73. போகம் - செல்வம். வீடு - மோக்ஷம். வாமி - அழகுடையவளாகிய. வான்மொழி - பெரியவேதம். வமம் - பொன்.

மொழி சாற்றுதல் போல, வேமமால் வரைபோ லுயர்ந்த
கோபுரத்தி லியற்றிய மணியிராப் பகலாத், தரமத மின்றிக்
கடிகைக டோறுங் கணகண வெனத்தனி யொலிக்கும். (எ௩)

வேறு.

ஆறு காலமு மருச்சனை நிவேதன மடியார்
கூறு பாடல்கள் கணிகைய ராடல்கள் கோல
நீறு பூசிய தொண்டர்தங் கூட்டங்க ளினைத்த
பேறு தந்திடுஞ் சன்னிதி தனிலென்றும் பெயரா. (எ௪)

ஐந்து வாத்திய முழக்கமு மரகர முழக்கு
நந்தி பின்னின்று நாவமு தூறநற் றமிழான்
முந்து மூவர்சொல் பாடல்க ளோதிடு முழக்குஞ்
சந்திரா தித்தர் மண்டலந் தாண்டியே முழங்கும். (எ௫)

சித்தர் கூட்டமுந் தேவர்கள் கூட்டமுந் தேர்ந்த
முத்தர் கூட்டமு முனிவரர் கூட்டமு முதிர்ந்த
பத்தர் கூட்டமும் பாவலர் கூட்டமும் பரவ
வத்தர் சங்கர ரம்மையோ டருள்புரிந் திருப்பார். (எ௬)

---

இயற்றியமணி - செய்துவைத்திருக்கப்பட்டமணி. கடிகை - நாழிகை. தனி - தனியே. ஒலிக்கும் - முழங்கும்.

74. நிவேதனம் - நைவேத்தியம். கணிகையர் - உருத்திர கணிகையர்; தேவதாசிகள். பேறு - பலன். பெயரா - நீங்கா.

75. ஐந்துவாத்தியம் - பஞ்சவாத்தியங்கள்; தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு ஆகிய கருவிகள். நந்தி - திருநந்திதேவர். முந்து - முற்பட்ட. பாடல் - தேவாரம். சந்திர ஆதித்தர் - சந்திரசூரியர்.

76. சித்தர் - அணிமாமுதலிய அட்டமாசித்திகள் செய்பவர். முத்தர் - சீவன்முத்தர். முனிவர் - துறவிகள். பாவலர் - பாட்டுக்களில் வலியவராகிய வித்துவான்கள். அத்தர் - பிதாவாகிய.

வேறு.

புன்னாக வனமுனிவர் போற்றநடம் புரிபவரைப் புகழ்
தல் போலென், புன்னாக வனம்புரிதல் பொருளெனக்கொண்
டார்வெண்ணம் புயத்தின் மாலைதப், புன்னாக வனந்தேடுங்
கடவுளர்க்கு நிழறந்து பூத்துக் காய்த்த, புன்னாக வனப்பெ
ருமை புகலவர வரியிராவும் போதாவே. (எஎ)

அன்பரகங் குவிவதுபோன் முகையரும்பி யவர்முகம்போ
லலர்ந்தெந் நாளு,மின்பமுற வருநாளத்திற் சிவஞான மூறுதல்
போ லெழிற்றே னூறி, மன்பதைக்கெல் லாந்துன்ப வினைநீ
க்கிப் பிறவிவெம்மை மாற்று தற்குத், தன்பதத்தி னிழற
நுவார் தமக்குநிழ றந்துபுக டழைக்கும் புன்னை. (எஅ)

மூலமே மறையாக முளைத்தெழுந்தா றங்கமதாய் முதி
ர்ந்து மேற்சென், றாலுமடர் சினையாக மாதிபுரா ணங்கலைக்
பா லங்க ளாகிச், சூலமேரி மழுமானுந் துணைக்கரத்திற்
கொண்டபரஞ் சோதி பச்சைக், கோலமயி லாவுடனே யம
ருக்குமிடங் கொடுத்துமேற் குலவும் புன்னை. (எகூ)

---

77. புல் - (முனிவர்) வியாக்கிரபாதமுனிவர். நாகவன முனிவர் - சர்ப்பவடிவமாகிய அழகிய பதஞ்சலிமுனிவர். நடம்புரிபவரை - நடேசமூர்த்தியை. புன் - சிறிய. நா - நாக்கு. கவனம்புரிதல் - பாடுதலை. பொருளென - பொருளாக. வெண் - வெள்ளிய. அம்புயத்தில் - தாமரை மலரில். புல் - பொருந்துகின்ற. நாக - இளமையுடைய. அனம் - பிரமாவாகிய அன்னப்பறவை. கடவுளர்க்கு - சங்கரேசுரர்க்கு. புன்னாகவனம் - புன்னைவனம். அரவு - ஆதிசேடன். போதா - பற்று. கொண்டாராகிய கடவுளரெனக்கூட்டுக.

78. அகம் - மனம். குவிதல் - திரளுதல். முகை - அரும்பு. அரும்பி - உண்டாகி. மன்பதை - மக்கட்கூட்டம். வெம்மை - வெப்பம். புகழ் - கீர்த்தி.

79. மூலம் - வேர். மறை - வேதம். அங்கம் - வேதங்களினுறுப்பு. ஆலும் - அசையும். அடர்சினை - நெருங்கிய கிளைகள்.

சங்கரா வுடையிருக்க வமைத்தருளும் விமானமென்ன
சங்கரேச ரிங்கிதமா வணிபரவப் பணியமைத்த வணிமணிப்
பெட் டகமே யென்ன, வங்கவினைப் பிணிதீர்க்க வமுதமை
த்த கடமென்ன வமர்ந்தெந் நாளு, மங்களமா வடிவுபெற்
வன்மீகப் பெருமைபெரி தாகு மாதோ. (அ0

பச்சைநிற மொருபுறமும் பவளநிற மொருபுறமும்
பணியுந் தொண்டர்க், கிச்சைதரு கௌத்துவமு மெழிலுர்
த்தி ராக்கமும்பூண் டினிமை யர்க, நச்சரவு சங்கபத்மர் தவ
த்திறனுக்கு வெளிப்படையா நாம ரூப, மச்சுதனு மரனு
மொன்றுஞ் சங்கரநா ராயணரே யநாதி மூர்த்தி. (அக

நடுக்குமுடற் பிணிதீர நன்மருந்து புற்றுமருந் தாக
நாளுங், கொடுக்கும்வயித் தியர்பிறவிப் பெரும்பிணியை
யருண்மருந்தாற் கொன்றெய் தர்மற், றடுக்கும்வயித் தியரா
ம் சங்கரர்கோ மதிவளர்சீ ராசைத் தன்மை, யடுக்குமல
ரயனுமுனிவ ரமரரா லும்புகழ வடங்கா தன்றே. (அ௨

*திருநகரச்சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள் கஅ௨

---

விலக்யானம் - கல்விநூல். எரி - சுடுகின்ற. துணை - இரண்டு
மயில் - மயில்போலும். குலாவும் - விளங்கும்.

80. விமானமென - தூவிபோல. அரவப்பணி - சர்ப்பாப
ணம். அமைத்த - வைக்கப்பட்ட. அணி - அழகிய. மணிப்பெ
ட்டகம் - இரத்தினிறைத்த பெட்டி. அங்கம் - சரீரம். அமுத
மைத்த - அமுதம் வைக்கப்பட்ட. கடம் - குடம். மங்களம் -
மங்கலம். வன்மீகம் - புற்று.

81. கௌத்துவம் - கௌத்துவமென்னும் மாணிக்கமணி
யும். எழில் - அழகு. நச்சு அரவு - நஞ்சையுடைய பாம்பாகிய
நாமரூபம் - பெயர் வடிவத்தால். அச்சுதனும் - விஷ்ணுவும். அர
னும் - சிவபிரானும், அநாதி - ஆதியில்லாதது. மூர்த்தி - கடவுள்.

82. அருள் மருந்து - கருணையாகிய மருந்து. சீராசைத்தன்
மை - சீராசையென்னும் பெயருடைய தலத்தின் குணம். அமரர்-
தேவர்.

# புராணவரலாறு.

இருநிலத் துயர்ந்த நைமிசா ரணியத் திட்டநற் றவத்தி
னர்க்காண்பான், பரிவுறு தவத்துச் சூதமா முனிவன் பழுத்
தகல் லருளினோ டெய்த, விரைமலர் தூவி யுயர்தவி சளித்து
விருப்புடன் முகிழ்த்தகை யினராய்க், கரையழி யின்பக் கட
லினுள் ளழுந்திக் கருதியோன் றுரைக்கலுற் றனரால். (க)

நறைகம ழிதழி நளிசடை முடித்த நாதன்வாழ்
பதிகளின் வீறு, குறையற வெமக்குப் பண்டைநா ளுரைத்
தாய் குருமணிச் சூட்டரா வசைத்த, கறைமிடற் றிறையும்
பசுந்துழா யலங்கற் கண்ணனு மோருருத் தாங்கி, யுறைதரு
பதியின் வீறெமக் கின்னே யுரைத்திட வேண்டுமென் றுரை
த்தார். (உ)

முரலுமஞ் சுரும்பர் விழ்கலா நினது முருகம லத்தினில்
விளைந்த, வரியநற் கதையாம் புதியசெந் தேனை யஞ்செவி
வள்ளவாய் முகந்து, பருகிடி லெவர்க்கே தெவிட்டும்வெண்
டரங்கப் பாற்கடற் றுயிறரு மாயன், புரைதரு வியாதன்
மலரடி போற்றிப் புராணமீ ரொன்பதுந் தெளிந்தோய். (ங)

வேறு.

விண்ணினிற் சிறந்தனன் வியாழன் வேலைசூழ்
மண்ணினிற் சிறந்தனை மதியின் மிக்கநீ
யண்ணலஞ் சேடனே யரவி னுட்டிடை
யெண்ணிடிற் சிறந்தனை யென்று கூறினர். (ச)

*முனிவரே நீங்கள் வினவிய தலத்தின் மகிமையுந் தீர்த்
தமூர்த் தியுமப், பனிவருஞ் சடையான் மாலுமீ சனுமாய்ப்
பகருருத் தாங்கிய பண்புங், கனிதரு மன்ப னுக்கிர வழுதி
வழிபடு கதையுந் தக்கனையாம், வனிதைசெய் தவமும் வீர
சேனப்பேர் மன்னவன் பிணிதவிர்ந் ததுவும். (ரு)

*சயந்தன்மா பாவந் தீர்த்ததுங் கான வேடுவன் கதியு
றுந் தகையுங், கயந்தனிற் பசுவை மாய்த்தகன் மாடன் கா
ணரும் வீடுபெற் றதுவு, முயர்ந்தபுன் னாக வனத்தினன் மக
த்வ மெனவுயர் வியாசன்முன் னெனக்குப், பயன்றரு பவுடி
யோத் தரபுரா ணத்திற் பகர்ந்தவா றேபகர் குவனால். (௬)

புராணவரலாறு முற்றிற்று.

ஆக செய்யுள் - ௧௱௬.

## புராணவரலாற்றுச் சுருக்கவசனம்.

பெரிய பூமண்டலத்திலுயர்ந்த நைமிசாரணியத்தில் வசிக்கும் இருஷிகள் (முனிவர்) முன்பு அன்புற்ற தவத்தையுடைய சூதமுனிவர் முதிர்ந்த கருணையுடனெழுந்தருள; அவரை அந்த இருஷிகள் பூசித்து உயர்ந்த ஆசனத்திலெழுந்தருளச்செய்து வணங்கியானந்தக்கடலிலே மூழ்கிச் "சுமாமீ! கொன்றைமாலையைத்தரித்த சிவபெருமானெழுந்தருளியிருக்குந் தலங்களின் பெருமையையடியேங்களுக்குப் பூருவகாலத்திலருளிச்செய்தீர். அந்தச் சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் ஒருவடிவமெடுத்து எழுந்தருளியிருந்த வராரசை (சங்கரநாராயணர்கோயில்) யின் பெருமையையினி அருளிச்செய்யவேண்டு" மென்று கேட்டனர்.

உடனே சூதமுனிவர் அம்மகருஷிகளைநோக்கி "முனிவர்களே! நீங்கள் கேட்ட வராரசைத்தலத்தின் மான்மியமும், அந்தத் தலத்திலுள்ள தீர்த்தத்தின் மகிமையும், மூர்த்தியின் மேன்மையும், சிவபிரான் சங்கரநாராயணராகத் திருவுருக்கொண்டருளியதும், உக்கிரபாண்டியன் வழிபாடுசெய்ததையும், தக்கணை யென்னும்பெண் செய்த தவமும், வீரசேன அரசன் வியாதிநீங்கிய சரிதமும், தேவேந்திரன் புத்திரனாகிய சயந்தன் பெரிய பாவந்தீர்த்ததையும், கானவனென்னும் வேடன் மோக்ஷமடைந்த அற்புதமும், பசுவைக்கொன்ற கன்மாடன் முத்திபெற்ற வரலாறும் புன்னைவன க்ஷேத்திரத்தின் மகத்துவமென்று வேதவியாசமுனிவர் பவுடியோத்தரபுராணத்திலெனக் கருளிச்செய்தபடியே யுங்களுக்குச் சொல்லுவே" னென்றுகூறியருளினர்.

## நான்காவது:

# தலவிசேடச் சருக்கம்.

இப்புவியிற் றலந்தீர்த்த மூர்த்தியோ ரிடத்திலிக பந்
தை நல்கு, மொப்பிறல மெத்தலத்து மில்லையிந்தத் தலந்த
ன்னுங் கட்டு என்பார், செப்புவல்யான் சித்தமொருப்
படவீவிர் கேண்மினெனச் செங்கை கூப்பி, யப்பணிபுஞ் செ
ருந்தடைபார் சங்கரே சுரர்த்தொழுதங் கறைவ தானன். (க)

அத்தலத்தி னிருந்துசரி யைபையியற்றி லரனுலகை ய
டைது வார்க, ளத்தலத்தி லிருந்துகிரி யையையியற்றி லரன்
பக்க லணுகு வார்க, ளத்தலத்தி லிருந்தியோ கம்புரியிற் சி
வரூப மாகு வார்க, ளத்தலத்தி லிருந்துமெய்ஞ்ஞா னந்தெரி
வோர் சாயுச்ய மடைகு வாரே. (உ)

புலைபரோ டுறவாகிப் புன்னெறிபா னன்னெறியைப்
போக்கி னோருங், கொலைபரே யானோருஞ் சிரான்சு யாமித
னிற் கூடி னல்ல, நிலையரே யாகியுயர் னெறியொழுக்க மாசார
நிலைத்துக் கல்வித், தலையரே யாவார்க ளிப்பிறப்பி லினிப்பி
றவாத் தன்மை யாவார். (ங)

முத்தொழிலு நடத்துசங்க ரேசுரர்வாழ் தலமகிமை
முன்னோ ராகி,யெத்தொழிலின் முயற்சினைக்கொண் டெய்தி
ஞரேனுமங்கோ ரிரவிருந்தாற், சித்தமலி னைதீர்ந்து சிவன
டியைச் சேவிக்குஞ் செல்வ ராகிப், பத்தரினும் பத்தராய்ப்
பசுபதிபா சத்தினுண்மைப் பயனைத் தேர்வார். (ச)

ஒருதினமங் குறைபவர்க ளும்மையிற்செய் பவந்தீர்வ
ருண்மை யாக, விருதினமங் குறைபவர்க ளிம்மையிற்செய்
பவந்தீர்வ ரீசன் பொற்றாள், கருதியே மூன்றுதினங் காத்தி
ருப்போர் மறுமைவினை கடந்து நிற்பார், சுருதிமொழி யிது
வாமென் றுறுதிகொள்வோர் சுவர்க்கபதந் தோய்குவாரே.()

ஆதிவா ரத்திலிந்தத் தலத்திலிருந் தரன்விழியா யமர்
ந்திருக்குஞ், சோதிபிர வியையினைந்து நோன்பியற்றிற் கண்
ணோவு தொலைந்து வெப்பாற், காதுகொடும் பிணிதவிர்ந்து
கதிரொளிபோ லெழில்விளங்கிக் காய நீங்கும், போதுகதி
ருலகிலுற்று வாழ்ந்துபின்பு பரகதியிற் பொருந்து வாரே. ( )

மதிவாரத் தரன்சடையிற் பிறையாகி விழியினிறை
மதியு மாகித், ஆதிவான வருக்கமுக மூட்டிலிக்குந் தண்சுட
ரோற் றொழுது போற்றிப், பதிவாக வித்தலத்தி னோன்பி
யற்றும் பெரியோரப் பதத்தி னண்ணிக், கதிவாய்த்துக்
கணம்பரவச் சிவலோக மிருப்பிடமாக் கைக்கொள் வாரே.

மங்களவா ரத்திலித்தலத்திருந்து நோன்பியற்றில்
வக்ர னூலே, பொங்குபிணி தோஷமும்போய்ப் பூமன
ரு ளாற்சிவபோ தந்துய்ப் பார்க, டிங்களருள் செய்புதனுட்
சிந்தித்து நோன்பியற்றிற் சிறந்த கல்வி, தங்குபுக ழுலக
மைந்து சிறப்புதிரு விலகமதிற் சார்கு வாரே. (அ)

குருதினத்தி லித்தலத்திற் குருவைநினைந் தேகபத்தி
கொண்டு நோற்போர், கருதுமவ னுலகடைந்து கடவுணறை
சிவபதத்திற் கலந்து வாழ்வா, ரொருதினமா வதுசுக்ர வார
விரதம்புரிந்தோ ரும்பர் செல்வம், பெருகுமவ னுலகடைந்து
பின்னூரன்றன் றிருவடிப்பே றெய்து வார்கள். (௯)

வேறு.

எவ்வமனைத்துந் தீர விருஞ்சனி தன்னை யுள்ளிச்
சைவநற் றலமாஞ் சீரா சைப்பதி தன்னி னோற்போ
ரவ்விய மகல வன்னோ னுலகிடை யமர்ந்து பின்னர்க்
கைவரு செல்வி பொன்னைக் கூடுடன் கீழலைச் சார்வார் (௧௦)

பலமொரு வருடங் காய்ந்த சருகொரு வருடம் பற்றில்
சலமொரு வருடங் காற்றுந் தாமொரு வருட முண்டு
நிலையிலா வுடம்பை வாட்டி நீடன்று செய்வோர் பேறிந்
நல்முறு தலத்தி னோர்பேரி தாண்டி நீத தவரை நண்ணும் (௧௧)

வேறொரு தலத்தி னூறு பரிமகம் வியந்து செய்த
பேறொரு பரிம கத்தா லித்தலத் தெய்தும் பேறு
மீறிலா வாச பேயம் பருண்டிடு மிராச சூய
நூறுசெய் பலன்க ளக்கினிட் டோமமோர் நொடியி னல்கும்.

தந்தையைத் தாயை யுண்மைச் சற்குரு பரனை வைது
நிந்தைசெய் தடித்துள் ளோரு நீயொரு தஞ்ச மென்று
வந்தவர்க் காவா தாரும் வறியவர்க் குதவா தாரு
மிந்நகர்ப் பதியி னெய்தி யிருங்கதி யடைவா ரன்றே. (கங)

பூதலந் தன்னி லுள்ள புண்ணிய தலங்கட் கெல்லா
மேதகு தலமீ தாகு மியாதினு மென்னில் வேத
நாதனை புற்று மண்ணை நன்மருந் தாக நல்கிப்
பாதக நோய்க ணீக்கிப் பரிந்துகாத் தருள்வ தாலே. (கச)

கங்கையைப் புனைந்த வீசன் கணங்களி னதிக நந்தி
மங்கையர்க் கதிகங் கற்பு வாய்த்திடு மடநல் லார்கள்
செங்கண்வா ளரவிற் சேட னதிகமாஞ் சிவத லத்திற்
சங்கர னுறையுஞ் சீரா சைப்பதி யதிகந் தானே. (கரு)

மணிகளொன் பதிற்சி ரேட்டம் வயிரமா மணியே யாகு
மணிகலை நூல்க டம்மி லத்துவி தஞ்சி ரேட்டங்
கணிதநூல் சொலுமி ராசி தனிற்கனி சிரேட்டஞ் சிங்கம்
பிணிதவிர் தலங்க டம்மிற் பெருஞ்சிரேட் டஞ்சீ ராசை. ()

விண்ணவர் தனிற்சி ரேட்டம் வயிரவாட் படைவ லாரி
சோலைமே கங்க டம்மிற் சொன்னமே கஞ்சி ரேட்டங்
கானமாக் களிற்சி ரேட்டங் கமழுங்கத் தூரி யாகு
ஞானமி றலத்திற் சீரா சைப்பதி யுயர்சி ரேட்டம். (கஎ)

பத்திரந் தனிற்சி ரேட்டம் பலநறு வில்வ மாகு
மத்திரந் தனிற்சி ரேட்டம் பாசுப தாஸ்த்ர மாகுஞ்
சத்திக டனிற்சி ரேட்டந் தையல்கோ மதித்தா யாகுஞ்
சித்திரத் தலங்க டம்மிற் சிரேட்டஞ்சீ ராசை யாமே. (கஅ)

மருக்கமழ் மலர்க டம்பில் வனசமா மலர்சி றேட்டங்
குருக்களிற் றேவர் போற்றுங் குலகுருப் பொன்சி றேட்ட
முருக்கிய பொன்னிற் சாம்பூ நதநிதி யுயர்சி றேட்டந்
திருக்கிளர் தலத்திற் சீரா சைப்பதி சிறேட்ட மாமே. (௧௯)

மாதவ முனிவர் தம்மின் மலையமா முனிசி றேட்டந்
தாதையைப் புரக்குஞ் சேயிற் றருபகீ ரதன்சி றேட்டங்
காதைக டனிற்சி றேட்டங் கடவுடன் காதை யாகு
மேதகு தலசி றேட்ட மிகுவர ராசை யாமே. (௨௰)

வேறு.

முன்னைவினை யிப்பிறப்பின் மோதுபிணி வினையனைத்து முடுகி யோட்டும், பின்னைவினை வாராமற் பிரமனெழுத் தையுமழிக்கும் பெருமை யுள்ள, தின்னதல மகிமைதனை யாவரே யெடுத்துரைப்பா ரிதனி னாமம், புன்னைவனஞ் சீராசை ஹராசைபுரமெனவும் புகல்வர் மேலோர். (௨௧)

புண்ணியங்க ளொன்பதுட னுபசாரஞ் செய்துசிவ னடியார்ப் போற்றிப், பண்ணிபம்பா லடிசிலன்பா யித்தலத் திலொருபோது படைத்த பேர்க, ளெண்ணியநா றாயிரம் பேர் சிவனடியார்க் கயற்றலத்தி லிடுபே றெய்திக், கண்ணு தறன் கயிலையினிற் கணங்களெலாம் பரவமனங் களித்து வாழ்வார். (௨௨)

இத்தலத்தின் மறையவருக் கொருசுரபி யன்பினொலீந்த பேர்க, ளுத்தமமான் சுரபிபணி கேட்பவா னவர்க்கிறையா யுற்று வாழ்வார், முத்தநகை நறுங்கூந்தற் கன்னிகா தான மொன்று முடித்த பேர்க, ளித்தமுமா யிரங்கன்னி யயற் பாதியி லுதவுபல னோர்[illegible]வாரே. (௨௩)

பூதியுருத் திராக்கமன்பாற் புனைந்துசிவ னடியிணை யைப் போற்று தாருஞ், சாதியினிற் கீழான சண்டாள சன்ம மாய்ச் சனித்த பேரும், பாதையி[illegible] போம்பொழுது சீரா

சைப் பதிபிழைநிற்கால் பதித்திட் டாரேன், மேதகுசன் மத்தி
லுற்று வினையெலாந் தீர்ந்துமெய்ஞ்ஞா னிகளா வாரே. (உச)

தூரதே சத்திருந்தித் தலமகிமை கேட்போருந் தொலை
வின் மூப்பாற், பாரதனி னடந்துவாச் செயலிலராய் மனத்
தினினைப் பக்தி யோரு, மேர்தருநல் விழியிலராய்த் தெரிசித்
தோ மிலையென்ன வெண்ணுவோருஞ், சீருயருங் கதிசேர்
வா ரெனிற்சீரா சைப்பெருமை செப்ப லாமோ. (உரு)

தீழுதவி ரித்தலத்திற் சிவனடியார் திருவடிக்குச் சே
மஞ் செய்யும், பாதுகையும் வெயிற்குடையும் பனிக்காடை
கோவணமும் பற்றிச் செல்ல, வாதரவாங் கைத்தண்டு விசிறி
முதற் பலதான மளித்த பேர்கள், பூதகண நாதர்விமா னஞ்
சுமப்பச் சிவலோகம் புகுது வாரே. (உசா)

எவ்வகைய தவப்பேறு மெவ்வகைய தானத்தா லெய்
தும் பேறு, மெவ்வகைய யாகப்பேறு மெவ்வகைமெய்ந் நூல்
வழிக்கா யெய்தும் பேறு, மெவ்வகைய தலந்தீர்த்த மூர்த்தி
யினு லியாவருக்கு மெய்து கின்ற, வெவ்வகைய பெரும்பே
று மித்தலமே கொடுக்குமென விசைக்கு மெய்ந்நூல். (உஎ)

### வேறு.

குன்று போலுந் தவத்தர்கள் கோவெல்லாம்
வென்ற குதன் விரைச்சரண் போற்றியே
யின்று நீசொ றலத்தின் விசேடமே
நன்று நன்றினித் தீர்த்த நவில்கென்றார். (உஅ)

கார்த்தி கேயனைத் தந்த கடவுளைப்
பூர்த்தி யாவுளப் போதி லிருத்தியே
பார்த்த பேர்கள் பவப்பிணி நீத்திடுந்
தீர்த்த மான்மியஞ் செப்பத் தொடங்கினான். (உகூ)

* தலவிசேடச்சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் உ0கூ.

அத்திவா ரங்க ணீலமா மணியா லமைத்ததன் மேற்
படி கத்தான், மெத்திய தளங்கள் பொருத்திப்பின் பதும
ராகத்தான் மிளிர்சுவ ரேற்றி, மத்தியிற் பவளக் காணிகிர
னாட்டி வயிரநற் போதிகை மீதி, லுத்திரம் பச்சை யரும்ப
தித் துயர்வா யொளிர்வயி டூரியக்கை யோங்க. (௬௭)

இசைத்துமேன் முகடு சேர்த்துமாற் றுயர்ந்த விரச
தத் தகட்டினால் வேய்ந்தங், கசைத்துவா னிரவி மதிய்ர
தத்தை யடர்மணித். தூபிமீ தமைத்துத், திசைக்கெலு
மின்பஞ் செயுமிதன் கவினைத் தெரிந்திட வந்தவா னவர்க,
ளாசைக்குமே லாகி யவர்மனத் தினையுங் கவருநல் விசித்திர
மாக. (௬௮)

பொறிகளங் கமைத்து வைத்தனர் கண்டோர் பொறி
புல னியாவுமப் பொறியாற், பறிகொள விடுத்துத் தாங்க
ளப் பொறியின் படிவமா யசைவற நிற்பின், கறிகொளுங்
கூரத்தார் வடிவினை நோக்கி வாயிகோ மதிதிரு நாட்டக்,
குறிதவா திருந்து தவஞ்செயுங் கோலங் காண்பவர் பெரு
மைகட் டரிதால். (௬௯)

---

காணும்பொருட்டு. உளது - இருக்கிறது. நாமகள் - சரசுவதி. முடி
யா - அடங்கா.

67. அத்திவாரம் - அடிவாரம், அடிப்பாகம். மணி - இரத்
நம். படிகம் - பளிங்குக்கல். மெத்திய - நிறைந்த. மிளிர் - விள
ங்குகின்ற. ஏற்றி - வளர்த்து. மத்தியில் - நடுவில். நிரை - வரி
சையாக. நாட்டி - நிறுத்தி. ஒளிர் - விளங்குகின்ற. கை - கை
மரம்.

68. இரசதம் - வெள்ளி. வேய்ந்து - மூடி. அசைத்து -
கட்டி. இரவிமதி இரதத்தை - சூரியசந்திரர்களுடையதேர்களை.
அடர்மணி - நெருங்கிய மணிகள்பதித்த. தூபி - விமானம். மீது,
மேலே. அமைத்து - செய்து. கவினை - அழகை. ஆசைக்கு -
விருப்பத்துக்கு. மேல் - அதிகம் விசித்திரம் - சிறந்தஅழகு.

69. பொறி - இயந்திரம். பொறி - இந்திரியம். புலன்
அறிவு. அப்பொறியால் - அந்த இயந்திரங்களால். படிவம் - வடி

இத்தகைமை யுடைய தவசுமண் டபந்தா னியற்றிய வேந் தன்யா ரென்னின், முத்தமிழ்ச் சங்க மூன்றுட னங்கா முறைபெற வளர்த்துமூ துலகில், வைத்திடு மூற்று மலைக்கரச ரிமை மன்னவன் மருதப்ப வள்ளல், பத்தியாற் செய்திங் கேழிரண் டுலகும் பரப்பினன் றன்புகழ்ப் பரப்பே. (௭௦)

வேறு.

மேருவென் னலா முதனிலைக் கோபுர மிளிர்பொன்
சார்வி மானங்க ளிரண்டுமெய் கயிலைதன் மதிதோய்
காரு லாவிம யாசல மென்னலாங் கடாவு
மேரு யர்த்தவ னாலயத் தெழில்சொல வெளிதோ. (௭௧)

மண்ட பங்களுந் திருமதி ளிலைபுமா நடனங்
கொண்ட பொற்சபை மற்றுமிவ் வுலகினிற் குடிவந்
தண்டர் தச்சனு லமைத்ததா மன்றெனி லலர்ந்த
புண்ட ரீகத்தன் சிருட்டியா மியாரிது புகல்வார் (௭௨)

வேறு

பூதிய முதல்வா மெய்வுல கோர்க்கும் போகமும் வீடு நல் குவதில், வாமமே கோமதி யார் பாகனை யென்று வான்

---

... ஆய் - போன்று. திறலின் - திறமையோடு. மறி - மான். மாதி கோமதி - அழகுடையவளாகிய கோமதியம்மை. நாட்டக் குறி - எண்ணத்தின்குறிப்பு. தவாது - கெடாது. கோலம் - (தவக்) கோலத்தை. காண்பவர் - தரிசிப்பவர்.

70. முறை - ஒழுங்கு. மூதுலகு - பழைய உலகம். புகழ்ப்பரப்பு - சீர்த்தியின் விரிவு.

71. மிளிர் - விளங்குகின்ற. கயிலை - கயிலாசம். கார் - மேகம். உலாவு - சஞ்சரிக்கின்ற. இமயாசலம் - இமயமலை. கடாவும் - செலுத்தும். ஏர் - இடபவாகனத்தை. உயர்த்தவன் - (கொடியாகக்) கட்டிய சங்கரேசுரர்.

72. மற்றும் - பிறவும். குடிவந்து - குடியாக வந்திருந்து. அண்டர்தச்சன் - தேவகம்மியன். புண்டரீகத்தன் - பிரமதேவன். சிருட்டி - சிருட்டிப்பு.

73. போகம் - செல்வம். வீடு - மோக்ஷம். வாமி - அழகுடையவளாகிய. வான்மொழி - பெரியவேதம். ஏமம் - பொன்.

மொழி சாற்றுதல் போல, வெமமால் வரைபோ லுயர்ந்
கோபுரத்தி லியற்றிய மணிப்பிராப் பகலாத், தாமத் மின்றிக்
கடிகைக டோறுங் கணகுணை வென்னத்தனி யொலிக்கும்.(௭௩)

வேறு.

ஆறு நால்மு மருச்சனை நிவேதன மடியார்
கூறு பாடல்கள் கணிகைய ராடல்கள் கோல
நீறு பூசிய தொண்டர்தங் கூட்டங்க ணினைத்த
பேறு தந்திடுஞ் சன்னிதி தனிலென்றும் பெயரா. (௭௪)

ஐந்து வாத்திய முழக்கமு மாகர முழக்கு
நந்தி பின்னின்று நாவமு தூறநற் றமிழான்
முந்து மூவர்சொல் பாடல்க ளோதிடு முழக்குஞ்
சந்திரா தித்தர் மண்டலந் தாண்டியே முழங்கும். (௭௫)

சித்தர் கூட்டமுந் தேவர்கள் கூட்டமுந் தேர்ந்த
முத்தர் கூட்டமு முனிவரர் கூட்டமு முதிர்ந்த
பத்தர் கூட்டமும் பாவலர் கூட்டமும் பரவ
வத்தர் சங்கர ரம்மையோ டருள்புரிந் திருப்பார். (௭௬)

---

இயற்றியமணி - செய்துவைத்திருக்கப்பட்டமணி. கடிகை - நாழி
கை தனி - தானே ஒலிக்கும் - முழங்கும்.

74. நிவேதனம் - நைவேத்தியம். கணிகையர் - உருத்திர
கணிகையர்; தேவதாசிகள். பேறு - பலன். பெயரா - நீங்கா.

75. ஐந்துவாத்தியம் - பஞ்சவாத்தியங்கள்; தோல், துளை,
நரம்பு, கஞ்சம், மிடறு ஆகிய கருவிகள். நந்தி - திருநந்திதேவர்.
முந்து - முற்பட்ட. பாடல் - தேவாரம். சந்திர ஆதித்தர் - சந்
திரசூரியர்.

76. சித்தர் - அணிமாமுதலிய அட்டமாசித்திகள் செய்ப
வர். முத்தர் - சீவன்முத்தர். முனிவர் - துறவிகள். பாவலர் -
பாட்டுக்களில் வலியவராகிய வித்துவான்கள். அத்தர் - பிதாவா
கிய.

## வேறு.

புன்னாக வனமுனிவர் போற்றநடம் புரிபவரைப் புகழ்தல் போலென், புன்னாக வனம்புரிதல் பொருளெனக்கொண் டார்வெண்ணம் புயத்தின் மானைப், புன்னாக வனந்தேடுங் கடவுளார்க்கு நிழறந்து பூத்துக் காய்த்த, புன்னாக வனப்பெருமை புகலவர வாயிரநா வுடையோ தாவே. (௭௭)

அன்பரகங் குவிவதுபோன் முகையரும்பி யவர்முகம்போ லலர்ந்தெந் நாளு, மின்பமுற வவருள்ளத்திற் சிவஞான முறுதல் போலெழிற்றே னூறி, மன்பதைக்கெல் லாந்துன்ப வினைநீக்கிப் பிறவிவெம்மை மாற்று தற்குத், தன்பதத்தி னிழறருவார் தமக்குநிழ றந்துபுக ழடைக்கும் புன்னை. (௭௮)

மூலமே மறையாக முளைத்தெழுந்தா றங்கமதாய் முதிர்ந்து மேற்சென், றாலுமடர் சினையாக மாதிபுரா ணங்கலைங் யானங்க ளாகிச், சூலமெரி மழுமானுந் துணைக்கரத்திற் கொண்டபரஞ் சோதி பச்சைக், கோலமயி லாளுடையம் பிகைக்குமிடங் கொடுத்துமேற் குலவும் புன்னை. (௭௯)

77. புல் - (முனிவர்) வியாக்கிரபாதமுனிவர். நாகவன முனிவர் - சர்ப்பவடிவமாகிய அழகிய பதஞ்சலிமுனிவர். நடம்புரிபவரை - நடேசமூர்த்தியை. புன் - சிறிய. நா - நாக்கு. கவனம்புரிதல் - பாடுதலை. பொருளென - பொருளாக. வெண் - வெள்ளிய. அம்புயத்தில் - தாமரை மலரில். புல் - பொருந்துகின்ற. நாக - இளமையுடைய. அனம் - பிரமாவாகிய அன்னப்பறவை. கடவுளார்க்கு - சங்கரேசுரர்க்கு. புன்னாகவனம் - புன்னைவனம். அரவு - ஆதிசேடன். போதர் - பற்று. கொண்டாராகிய கடவுளரெனக்கூட்டுக.

78. அகம் - மனம். குவிதல் - திரளுதல். முகை - அரும்பு. அரும்பி - உண்டாகி. மன்பதை - மக்கட்கூட்டம். வெம்மை - வெப்பம். புகழ் - கீர்த்தி.

79. மூலம் - வேர். மறை - வேதம். அங்கம் - வேதங்களி னுறுப்பு. ஆலும் - அசையும். அடர்சினை - நெருங்கிய கிளைகள்,

சங்கரர்தா முடையிருக்க வமைத்தருளும் விமானமெனச்
சங்கரேசர் சிங்கிதமா வணிபரவப் பணியமைத்த வணிமணிப்
பெட்டகமே யென்ன, வங்கவினைப் பிணிதீர்க்க வமுதமை
த்த கடமென்ன வமைந்தெந் நாளும், மங்களமா வடிவுபெற்ற
வன்மீகப் பெருமைபெரி தாகு மாதோ. (அ0)

பச்சைநிற மொருபுறமும் பவளநிற மொருபுறமும்
பணியுந் தொண்டர்க், கிச்சைதரு கௌத்துவமு மெழிலுரு
த்தி ராக்கமும்பூண் டினிமை யாக, நச்சரவு சங்கபத்மர் தவ
த்தினுக்கு வெளிப்படையா நாம ரூப, மச்சுதனு மரனு
மொன்றாஞ் சங்கரநா ராயணரே யநாதி மூர்த்தி. (அக)

நடுக்குமுடற் பிணிதீர நன்மருந்து புற்றுமருந் தாக
நாளுங், கொடுக்கும்வயித் தியர்பிறவிப் பெரும்பிணியை
யருண்மருந்தாற் கொன்றெய் தாமற், றடுக்கும்வயித் தியரா
ன சங்கரர்கோ மதிவளர்சீ ராசைத் தன்மை, யடுக்குமல
ரயன்முனிவ ரமரரா லும்புகழ வடங்கா தன்றே. (அஉ)

*திருநகரச்சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள் - கஙஅ.

---

கலைக்ஞானம் - கல்விநூல். எரி - சுடுகின்ற. துணை - இரண்டு.
மயில் - மயில்போலும். குலாவும் - விளங்கும்.

80. விமானமென - தாவிபோல. அரவப்பணி - சர்ப்பாபரணம். அமைத்த - வைக்கப்பட்ட. அணி - அழகிய. மணிப்பெட்டகம் - இரத்நமிழைத்த பெட்டி. அங்கம் - சரீரம். அமுதமைத்த - அமுதம் வைக்கப்பட்ட. கடம் - குடம். மங்களம் - மங்கலம். வன்மீகம் - புற்று.

81. கௌத்துவம் - கௌத்துவமென்னும் மாணிக்கமணியும். எழில் - அழகு. நச்சு அரவு - நஞ்சையுடைய பாம்பாகிய. நாமரூபம் - பெயர் வடிவத்தால். அச்சுதனும் - விஷ்ணுவும். அரனும் - சிவபிரானும். அநாதி - ஆதியில்லாதது. மூர்த்தி - கடவுள்.

82. அருள் மருந்து - கருணையாகிய மருந்து. சீராசைத்தன்மை - சீராசையென்னும் பெயருடைய தலத்தின் குணம். அமரர் - தேவர்.

# புராணவரலாறு.

இருநிலத் துயர்ந்த நைமிசாரணியத் திட்டுநற் றவத்தி
னர்க் காண்பான், பரிவுறு தவத்துச் சூதமா முனிவன் பழுத்
நல் லருளினோ டெய்த, விரைமலர் தூவி யுயர்தவி சளித்து
விருப்புடன் முகிழ்த்தகை யினராய்க், கரையிலி யின்பக் கட
லினுள் ளழுந்திக் கருதியோன் றுரைக்கலுற் றனரால். (க)

மறைகம ழிதழி மலிசடை முடித்த நாதன்வாழ்
பதிகளின் வீறு, குறையற வெமக்குப் பண்டைநா ளுரைத்
தாய் குருமணிச் சூட்டரா வசைத்த, கறைமிடற் றிறையும
ரந்துழா யலங்கற் கண்ணனு மோருருத் தாங்கி, யுறைதரு
பதியின் வீறெமக் கின்னே யுரைத்திட வேண்டுமென் றுரை
த்தார். (உ)

முரலுமிஞ் சுரும்பர் வீழ்கலா நினது முககம லத்தினில்
விளைந்த, வரியற் கதையாம் புதியசெந் தேனை மஞ்செவி
வள்ளவாய் முகந்து, பருகிடி லவர்க்கே தெவிட்டும்வெண்
டரங்கப் பாற்கடற் றுயிறரு மாயன், புரைதரு வியாதன்
மலரடி போற்றிப் புராணமீ ரொன்பதுந் தெளிந்தோய். (ங)

வேறு.

விண்ணினிற் சிறந்தனன் வியாழன் வேலைசூழ்
மண்ணினிற் சிறந்தனை மதியின் மிக்கநீ
பண்ணலஞ் சேடனே யரவி னுட்டிடை
யெண்ணிடிற் சிறந்தனை யென்று கூறினார். (ச)

*முனிவரே நீங்கள் வினவிய தலத்தின் மகிமையுந் தீர்த்
தமூர்த் தியுமப், பணிவருஞ் சடையான் மாலுமீ சனுமாய்ப்
பகருருத் தாங்கிய பண்புங், கனிதரு மன்ப னுக்கிர வழுதி
வழிபடு கதையுந்தக் கணையாம், வனிதைசெய் தவமும் வீர
சேனப்பேர் மன்னவன் பிணிதவிர்ந் ததுவும். (ரு)

*சயந்தன்மா பாவந் தீர்த்ததுங் கான வேடுவன் கதியு
றுந் தகையுங், கயுந்தனிற் பசுவை மாய்த்தகன் மாடன் கா
ணரும் வீடுபெற் றதுவு, முயர்ந்தபுன் னாக வனத்தினன் மக
த்வ மெனவுயர் வியாசன்முன் னெனக்குப், பயன்றரு பவிடி
யோத் தரபுரா ணத்திற் பகர்ந்தவா றேபகர் குவனால். (௬)

புராணவரலாறுமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௧௭௪.

## புராணவரலாற்றுச் சருக்கவசனம்.

பெரிய பூமண்டலத்திலுயர்ந்த நைமிசாரணியத்தில் வசிக்கும் இருஷிகள் (முனிவர்) முன்பு அன்புற்ற தவத்தையுடைய சூதமுனிவர் முதிர்ந்த கருணையுடனெழுந்தருள; அவரை அந்த இருஷிகள் பூசித்து உயர்ந்த ஆசனத்திலெழுந்தருளச்செய்து வணங்கியானந்தக்கடலிலே மூழ்கிச் "சுவாமீ! கொன்றைமாலையைத்தரித்த சிவபெருமானெழுந்தருளியிருக்குந் தலங்களின் பெருமையை யடியேங்களுக்குப் பூருவகாலத்தி லருளிச்செய்தீர். அந்தச் சிவபெருமானும் விஷ்ணுமூர்த்தியும் ஒருவடிவமெடுத்து எழுந்தருளியிருந்த வரராசை (சங்கரநாராயணர்கோயில்) யின் பெருமையையு மினி அருளிச்செய்யவேண்டு" மென்று கேட்டனர்.

உடனே சூதமுனிவர் அம்மகருஷிகளைநோக்கி "முனிவர்களே நீங்கள் கேட்ட வரராசைத்தலத்தின் மாண்மியமும், அந்தத் தலத்திலுள்ள தீர்த்தத்தின் மகிமையும், மூர்த்தியின் மேன்மையும், சிவபிரான் சங்கரநாராயணராகத் திருவுருக்கொண்டருளியதும், உக்கிரபாண்டியன் வழிபாடுசெய்தகதையும், தக்கணை யென்னும்பெண் செய்த தவமும், வீரசேன அரசன் வியாதிநீங்கிய சரிதமும், தேவேந்திரன் புத்திரனாகிய சயந்தன் பெரிய பாவந்தீர்த்த காதையும், கானவனென்னும் வேடன் மோக்ஷமடைந்த அற்புதமும், பசுவைக்கொன்ற கன்மாடன் முத்திபெற்ற வரலாறும் புன்னைவன க்ஷேத்திரத்தின் மகத்துவமென்று வேதவியாசமுனிவர் பவிஷ்யோத்தரபுராணத்தி லெனக் கருளிச் செய்தபடியே யுங்களுக்குச் சொல்லுவே" னென்று கூறியருளினர்.

நான்காவது:

# *தலவிசேடச் சருக்கம்.

இப்புவியிற் றலந்தீர்த்த மூர்த்தியோ ரிடத்திலிக பரத்தை நல்கு, மொப்பிறல மெத்தலத்து மில்லையிந்தத் தலத்துளதுங் கட்டு ளன்பாச், செப்புவல்யான் இத்தமொருப் படீவிர் கேண்மினெனச் செங்கை கூப்பி, யப்பணிபுஞ் செஞ்சடையார் சங்கரே சுரர்த்தொழுதங் கறைவ தானான். (க)

அத்தலத்தி னிருந்துசரி யையியற்றி லரனுலகை யடைகு வார்க, ளத்தலத்தி லிருந்துகிரி யையையியற்றி லரன் பக்க லணுகு வார்க, ளத்தலத்தி லிருந்தியோ கம்புரியிற் சிவரூப மாகு வார்க, ளத்தலத்தி லிருந்துமெய்ஞ்ஞா னந்தெரிவோர் சாயுச்ய மடைகு வாரே. (உ)

புலைபரோ டுறவாகிப் புன்னெறியா னன்னெறியைப் போக்கி னோருங், கொலைபரே யானோருஞ் சிராசை யாமிதனிற் கூடி னல்ல, நிலைபரே யாகியுயர் நெறியொழுக்க மாசார சீலத்துக் கல்விக், கலையரே யாவார்க ளிப்பிறப்பி லினிப்பிறவாத் தன்மை யாவார். (ங

முத்தொழிலு நடத்துசங்க ரேசுரர்வாழ் தலமகிமை முன்னா ராகி,யெத்தொழிலின் முயற்சியைக்கொண் டெய்தினு மேனுமங்கோ ரிரவி ருந்தாற், சித்தமலி னந்தீர்ந்து சிவனடியைச் சேவிக்குஞ் செல்வ ராகிப், பத்தரினும் பத்தராய்ப் பசுபதிபா சத்தினுண்மைப் பயனைத் தேர்வார். (ச)

ஒருதினமங் குறைபவர்க ளும்மையிற்செய் பவந்தீர்வருண்மை யாக, விருதினமங் குறைபவர்க ளிம்மையிற்செய் பவந்தீர்வ ரீசன் பொற்றாள், கருதியே மூன்றுதினங் காத்திருப்போர் மறுமைவினை கடந்து நிற்பார், சுருதிமொழி யிதுவாமென் றுறுதிகொள்வோர் சுவர்க்கபதந் தோய்குவாரே. ()

ஆதிவா ரத்திலிந்தத் தலத்திலிருந் தரன்விழிபா யமர்
ந்திருக்குஞ், சோதிபிர விலையதினைந்து நோன்பியற்றிற் கண்
ணோவு தொலைந்து செவ்வாய்ந், காதுகொடும் பிணிதவிர்ந்து
கதிரொளிபோ லெழில்விளங்கிக் காய நீங்கும், போதுகதி
ருலகிலுற்று வாழ்ந்துபின்பு பரகதியிற் பொருந்து வாரே.( )

மதிவாரத் தரன்சடையிற் பிறையாகி விழிபினிறை
யதிபு மாகித், ததிவான வருக்கமுத மூட்டுவிக்குந் தண்சீட
ரோற் றெழுது போற்றிப், பதிவாக விந்தலத்தி னோன்பி
யற்றும் பெரியோரப் பதத்தி னெண்ணிக், கதிவாய்ந்தீக்
கணம்பரவச் சிவலோக மிருப்பிடமாக் கைக்கொள் வாரே.

மங்களவா ரத்திலிந்தத் தலத்திருந்து நோன்பியற்றில்
வக்ர னாலே, பொங்குபிணி தோஷமும்போய்ப் பூமன
ருளாற்சிவபோ கந்துய்ப் பார்கடிங்களருள் செய்புதனைட்
சிந்தித்து நோன்பியற்றிற் சிறந்த கல்வி, தங்குபுத னுலகை
டைந்து சர்புதிரு வுலகமதிற் சார்கு வாரே. (௮)

குருதினத்தி லித்தலத்திற் குருவைநினைந் தேபத்தி
கொண்டு நோற்போர், கருதுமவ் வுலகடைந்து கடவுளுறை
சிவ்பதத்திற் கலந்து வாழ்வா, ரொருதிமையா வதுசுக்ர வார
விரதம்புரிந்தோ ரும்பர் செல்வம், பெருகுமவ வுலகடைந்து
பிஞ்ஞகன்றன் றிருவடிப்பே றெய்து வார்கள். (௯)

வேறு.

வெவ்வம தனைத்துந் தீர விருஞ்சனி தன்னை யுள்ளிச்
சைவநற் றலமாஞ் சீரா சைப்பதி தன்னி னோற்போ
ரவ்விய மகல வன்னு னுலகிடை யமர்ந்து பின்னர்க்
கைவரு செல்வி பெண்ணைக் கடவுடன் கழலைச் சார்வார் (௧௰)

பலமொரு வருடங் காய்ந்த சருகொரு வருடம் பற்றில்
சலமொரு வருடங் காற்றுக் காலொரு வருட மூண்டு
நிலையிலா வுடம்பை வாட்டி நீடவஞ் செய்வோர் பேறிந்
நலமுறு தலத்தி னோர்போ தாவினி [illegible])

வேறொரு தலத்தி னூறு பரிமகம் வியந்து செய்த
பேறொரு பரிம கத்தா லித்தலத் தெய்துவர் பேறு
மீறிலா வாச பேயம் பவுண்டர மிராச சூய
நூறுசெய் பலன்க ளக்னிட் டோமமே மொடியி னல்கும்.

தந்தையைத் தாயை யுண்மைச் சற்குரு பரனை வைது
நிந்தைசெய் தடித்துள் ளோரு நீபொரு தஞ்ச மென்று
வந்தவர்க் காவா தாரும் வறியவர்க் குதவா தாரு
மிந்தநற் பதியி னெய்தி யிருங்கதி யுடைவா ரன்றே. (கங)

பூதலந் தன்னி லுள்ள புண்ணிய தலங்கட் கெல்லா
மேதகு தலமீ தாகு மியாதினு மெண்ணில் வேத
நாதனை புற்று மண்ணை நன்மருந் தாக நல்கிப்
பாதக நோய்க ணீக்கிப் பரிந்துகாத் தருள்வ தாலே. (கச)

கங்கையைப் புனைந்த வீசன் கணங்களி னதிக நந்தி
மங்கையர்க் கதிகங் கற்பு வாய்ந்திடு மடநல் லார்கள்
செங்கண்வா ளரவிற் சேட னதிகமாஞ் சிவத் லத்திற்
சங்கர னுறையுஞ் சீரா சைப்பதி யதிகந் தானே. (கரு)

மணிகளொன் பதிற்சி ரேட்டம் வயிரமா மணியே யாகு
மணிநிலை நால்க டம்பி லத்தானி தஞ்சி ரேட்டங்
கணிதநூல் சொலும்பி ராசி தனிற்கன சிரேட்டஞ் சிங்கம்
பிணிதவிர் தலங்க டம்பிற் பெருஞ்சிரேட் டஞ்சீ ராசை. ( )

வானவர் தனிற்சி ரேட்டம் வயிரவாட் படைவ லாரி
சேனைமே கங்க டம்பிற் சொன்னமே கஞ்சி ரேட்டம்
கானமாக் கனிற்சி ரேட்டங் கமழுங்கத் தூரி யாகு
ஞானமி றலத்திற் சீரா சைப்பதி யுயர்சி ரேட்டம். (கஎ)

பத்திரந் தனிற்சி ரேட்டம் பலந்தரு வில்ல மாகு
மந்திரந் தனிற்சி ரேட்டம் பாசுப தாஸ்திர மாகுஞ்
சத்திக டனிற்சி ரேட்டந் தையல்கோ டிதித்தா யாகுஞ்
சித்திரத் தலங்க டம்பிற் சிரேட்டஞ்சீ ராசை யாமே. (கஅ)

மருக்கமழ் மலர்க டம்பில் வனசமா மலர்சி ரேட்டங்
குருக்களிற் றேவர் போற்றுங் குலகுருப் பொன்சி ரேட்ட
முருக்கிய பொன்னிற் சாம்பூ நதஞ்சி யுயர்சி ரேட்டந்
திருக்கிளர் தலத்திற் சீரா சைப்பதி சிரேட்ட மாமே. (௧௯)

மாதவ முனிவர் தம்மின் மலையமா முனிசி ரேட்டங்
காதையைப் பரக்குஞ் சேயிற் றருபகீ ரதன்சி ரேட்டங்
காதைதக் கணிற்சி ரேட்டங் கடவுடன் காதை யாகு
மேதகு தலசி ரேட்ட மிருவர ராசை யாமே. (௨௦)

வேறு.

முன்னைவினை யிப்பிறப்பின் மோதுபிணி வினையனைத்து முடுகி யோட்டும், பின்னைவினை வாராமற் பிரமனெழுத் தையுமழிக்கும் பெருமை யுள்ள, தின்னதல மகிமைதனை யாவரே யெடுத்துரைப்பா ரிதனி னும்ம், புன்னைவளர் சீராசை வரராசை புரமெனவும் புகல்வர் மேலோர். (௨௧)

பண்ணியங்க ளொன்பதுட னுபசாரஞ் செய்துசிவ னடியார்ப் போற்றிப், பண்ணியம்பா லடிசிலன்பா யித்தலத்தி லொருபோது படைத்த பேர்க, ளெண்ணியநூ றாயிரமே பேர்சிவனடியார்க் கயற்றலத்தி லிடுபே றெய்திக், கண்ணுதலான் கயிலையினிற் கணங்களெலாம் பரவமனங் களித்து வாழ்வார். (௨௨)

இத்தலத்தின் மறையவருக் கொருகாசி யன்பினொடீந் தோர்க, ளுத்தமமான் சுரபியமரி கேட்பவா னவர்க்கிணையா யுற்று வாழ்வார், முத்தங்கை நூறுங்கூந்தற் கன்னிகா தான மொன்று முடித்த பேர்க, ணித்தலுமா யிரங்கன்னி யயற் பதியி னுதவுபல னெய்து வாரே. (௨௩)

பூதியுருத் திராக்கமன்பாற் புனைந்துசிவ னடியினை யைப் போற்று வாருஞ், சாதியினிற் கீழான சண்டாள சன்ம மாய்ச் சனித்த பேருஞ், பானையினிற் போய்பொழுது சீநா

சைப் பதியினிற்கால் பதித்திட் டாரேன், மேதகுசன் மத்தி
னூற்று வினையெலாந் தீர்ந்துமெய்ஞ்ஞா னிகளா வாரே. (உச).

தூரதே சத்திருந்தித் தலமகிமை கேட்போருந் தொலை
வின் மூப்பாற், பாரதனி னடந்துவரச் செயலிலராய் மனத்
தினினை பத்தி யோரு, மோர்தருநல் விழியிலராய்த் தெரிசித்
தோ மிலையென்ன வெண்ணு வோருஞ், சீருயருங் கதிசேர்
வா ரெனிற்சீரா னைசப்பெருமை செப்ப லாமோ. (உரு)

தீர்த்தவி ரித்தலத்திற் சிவனடியார் திருவடிக்குச் சே
மஞ் செய்யும், பாதுகையும் வெயிற்குடையும் பனிக்காடை
கோவணமும் பற்றிச் செல்ல, வாதரவாங் கைத்தண்டு விசிறி
முதற் பலதான மளித்த பேர்கள், பூதகணா நாதர்விமா னஞ்
சுமப்பச் சிவலோகம் புகுது வாரே. (உசா)

எவ்வகைய தவப்பேறு மெவ்வகைய தானத்தா லெய்
தும் பேறு, மெவ்வகைய மகப்பேறு மெவ்வகைமெய்ந் நூல்
வழித்தா யெய்தும் பேறு, மெவ்வகைய தலந்தீர்த்த மூர்த்தி
யினா லியாவருக்கு மெய்து கின்ற, வெவ்வகைய பெரும்பே
றுமித்தலமே கொடுக்குமென விசைக்கு மெய்ந்நூல். (உஎ)

**வேறு.**

குன்று போலுந் தவத்தர்கள் கோவெலாம்
வென்ற சூதன் விரைச்சரண் போற்றியே
யின்று நீசொ றலத்தின் விசேடமே
நன்று நன்றினித் தீர்த்த நவில்கென்றார். (உஅ)

கார்த்தி கேயனைத் தந்த கடவுளைப்
பூர்த்தி யாவுளப் போதி விருத்தியே
பார்த்த பேர்கள் பவப்பிணி நீத்திடுந்
தீர்த்த மான்மியஞ் செப்பத் தொடங்கினான். (உகூ)

தலவிசேடச்சருக்கமுற்றிற்று.

ஆகச் செய்யுள் உ0கூ.

# தலவிசேடச் சருக்கச் சுருக்கவசனம்.

"இம்மைப்பயனையும் மறுமைப்பயனையுந் தலம், தீர்த்தம், மூர்த்தி கொடுக்குமிடம் எந்தவுலகத்திலுங் கிடையாது; அஃது இந்தப் பூமியின்கணுள்ளது. உங்களுக்கு உள்ளன்பாகச்சொல்லுவேன். மனமொற்றுமைப்பட நீங்கள் கேளுங்க" ளென்று சங்கரேசுரரைத் தியானித்துச் சூதமுனிவர் சொல்லுவாராயினர்:—

"மேலேசூறியவாரணாசையாகிய தலத்திலே சரியைமார்க்கத்தில் நின்றவர், சிவலோகத்தை யடைவர். கிரியைவழியிற் சென்றவர் சிவபெருமான் பக்கத்திற் போயிருப்பர். யோகஞ்செய்தவர் சிவசாரூபம் பெறுவர். ஞானத்தை யாராய்ச்சிசெய்தவர் சாயுச்சிய பதவியடைவர். நீசருடன் சிநேகித்துத் தீயவழியிலே சென்றவரும் கொலையாளியானவரும் வாராணசையில் வந்துசேர்ந்தால் சன்மார்க்கமுடையராய் அறிவிற்சிறந்து பிறவிப்பிணியை நீங்குவர். சங்கரேசுர ரெழுந்தருளியிருக்கு மந்தத் தலத்தின் பெருமையை நினையாமல் எந்தக் காரணத்தாலாவது அவ்விடத்துக்குவந்து ஒரு இராத்திரி வசிப்பாராகில் மனத்தழுக்கற்றுச் சிவனடியார்க்குத் தொண்டராகி மோக்ஷத்தையடைவர். ஒருநாளங்கிருந்தவர் முற்சென்மத்திற்செய்த பாவத்தை நீங்குவர். இரண்டுநாளிருந்தவர் இப்பிறப்பிற் செய்த பாவத்தை நீங்குவர். மூன்றுநா ளிருந்தவர் மறுமையிற் செய்யும் பாவங்களைப் போக்குவர். இது வேதவாக்கிய மென்று நம்புபவர் மோக்ஷத்தை யடைவர்.

ஞாயிற்றுக்கிழமையில் அந்தத் தலத்திலிருந்து சூரியனைத் தியானித்து விரதமிருப்பவர் கண்களில் வரும் வியாதியில்லாமலிருந்து முடிவிலே சூரியமண்டலத்தை யடைந்து பரகதி சேருவர். சோமவாரத்தி லங்கிருந்து சந்திரனை வணங்கி விரதமிருப்பவர் சந்திரனுடைய பதவியைப் பெற்றுச் சிவகணங்கள் வணங்கச் சிவலோகத்தை யடைவர். செவ்வாய்க்கிழமை விரதத்தை யந்தத்தலத்தில் அநுட்டித்தவர் சனிதோஷத்தினாலே வரும் வியாதிமுதலியவை நீங்கிச் செவ்வாயின் கிருபையைப்பெற்றுச் சிவபோகமநுபவிப்பர். சந்திரன் புத்திரனாகிய புதன்கிழமை விரதமிருப்பவர் கல்வியிற்சிறந்து சிவலோகஞ் சேருவார். வியாழக்கிழமை விரதமிருப்பவர் வியாழபதவியடைந்து சிவபதவி பெறுவர். ஒருநாளாவது சுக்கிரவார விரதமிருந்தவர் இந்திரசெல்வம்பெற்றுச் சாயுச்சியபதவி யடைவர். துன்பமெல்லாந் தீரும்பொருட்டு அந்தத்

தலத்திற் சனிக்கிழமைவிரத மிருந்தவர் பொறாமை முதலிய துர்க்குண நீங்கச், சனிபதவியடைந்து உள்ளும் புறமுமொத்துச் சங்கரேசர் திருவடியை யடைவர்.

ஒருவருடம் பழமும் ஒருவருடம் சருகும் ஒருவருடம் தண்ணீரும் ஒருவருடம் காற்றும் புசித்துப் பிறதலங்களிலே தவஞ்செய்வோர் பெறும் பயன் இந்தத்தலத்தில் ஒருகாலம் பட்டினியிருந்தவருக்குக்கிடைக்கும். வேறு தலத்தில் நூறு அசுவமேதஞ் செய்த பலன் இத்தலத்திலொரு அசுவமேதம் கொடுத்தருளும். வாசபேயம், பவுண்டரம், இராசசூயம் என்னும் யாகங்கள் நூறு பிறதலத்திற்செய்தபலன், இந்தத் தலத்திற்செய்த அக்கினிட்டோமம் ஒன்றுகொடுத்தருளும். பிதாவையுங் குருவையும் நிந்தித்து அடித்தவரும் அடைக்கலப்பொருளைக் காவாதவரும் தரித்திரருக்கு ஒன்றுங்கொடாதவரும் வராரணையாகிய இத்தலத்தில் வந்தால் கதியடைவர். சங்கரேசுரரே புற்றுமண்ணை மருந்தாகக் கொடுக்கின்ற காரணத்தினாலே பூமியிலுள்ள தலங்கட்கெல்லா மிந்தத் தலமே யுயர்ந்தது. சிவகணங்களுக்குள் திருநந்திதேவரும், பெண்களுக்குள் கற்புடைப்பெண்களும், பாம்புகளுக்குள் ஆதிசேடனும், நவரத்நங்களுக்குள் வயிரமும், சாத்திரங்களுக்குள் அத்துவிதமும், இராசிகளுக்குள் சிங்கராசியும், தேவர்களுக்குள் இந்திரனும், மேகங்களுக்குள் பொன்மாரிபெய்யுமேகமும், மிருகங்களுக்குள் கஸ்தூரிப்பூனையும், இலைகளுக்குள் வில்வமும், பாணங்களுக்குள் பாசுபதாஸ்திரமும், சத்திகளுக்குள் கோமதியாகிய வுமாதேவியும், பூவினுள் தாமரையும், குருக்களுக்குள் வியாழபகவானும், பொன்களுக்குள் சாம்பூநதப்பொன்னும், முனிவருக்குள் அகத்தியமுனிவரும், பிள்ளைகளுக்குள் பிரகலாதனும், கதைகளுக்குள் சிவகதையும் உயர்ந்ததுபோலத் தலங்களுக்குள் வராரணைத்தலம் உயர்ந்தது.

சென்ற பிறப்பிலும் இப்பிறப்பிலும் இனிவரு பிறப்பிலும் செய்த செய்கின்ற செய்யும் பாவங்கள் விராமற்றடிக்கும் பெருமையுள்ள இந்தத்தலத்தின் பெருமை யாவருஞ்சொல்லவல்லவர். இந்தத் தலத்திற்குப் பெயர்கள். புன்னைவனம், சீரரணை, வராரணைபுரம் என்று சொல்லப்படும். இத்தலத்தில் சிவனடியார் வந்தால் எதிர்கொண்டுபோதல், பணிதல், பாதங்களை விளக்கல், ஆசனங்கொடுத்தல், வாசனைப்பண்டம், மலர் தூய தீபங்களாற் பூசித்தல் செய்து பலகாரம் பாயசத்துடன் அமுது செய்வித்தவர்கள், அன்னிய

தலத்தில் லக்ஷம் சிவனடியார்களுக்கமுது செய்வித்த பலனடைந்து திருக்கைலாயத்திற் சிவகணங்கள் வணங்கும்படி வீற்றிருப்பர். ஒரு பசுவை யித்தலத்தில் பிராமணருக்குத் தானஞ் செய்தவர் காமதேனு தமக்கு ஏவல்செய்யத் தேவேந்திரபதவியடைவர். கன்னிகாதானமிந்தத்தலத்திற் செய்தவர் பிறதலத்தில் நாடோறும் ஆயிரங்கன்னிகாதானஞ் செய்த பயனைப் பெறுவர். விபூதியுருத்திராக்கமணிந்து சிவபிரான்றிருவடிகளைத் துதியாதவரும் புலையராய்ப் பிறந்தவரும் வழிநடக்கும்போது காலால் இத்தலத்தைப் பரிசித்தாரானால் மேற்குலத்திற் பிறந்து மெய்ஞ்ஞானிகளாவர். தூரதேசத்திலிருந்து இத்தலத்தின் மான்மியத்தைக் கேட்டவரும் நடந்துவரச் சத்தியற்று இத்தலத்தை மனத்தில் நினைப்பவரும் தரிசனஞ்செய்யக் கண்ணில்லாமல் மனத்தில் நினைத்தவரும் உயர்ந்தகதியடைவார்களென்றால் வாராணசைத்தலத்தின் பெருமையைச்சொல்லமுடியுமோ?

இத்தலத்திற் சிவனடியார்களுக்குப் பாதரக்ஷை குடை வஸ்திரம் கோவணம் ஊன்றுகோல் விசிறி முதலிய வற்றைத் தானஞ் செய்தவர் சிவகணங்கள் விமானஞ் சுமப்ப அதிலேறிச் சிவலோகம்போய்ச் சேருவர். எந்தத்தவத்தின் பலனும், எந்தத்தானத்தினாலாகிய பலனும், எந்த விதமான புத்திரப் பேறும், எந்தச் சாத்திரத்தினாலடையும் பிரயோசனமும், எந்தத் தலம் தீர்த்தம் மூர்த்திகளாலெய்தும் பெரும் பயனும் இந்தத்தலமே கொடுக்குமென வேதங்கள் சொல்லும்" என்றனர். மலைபோலுயர்ந்த தவசிரேட்ட முனிவர் குற்றங்கள் முழுவது நீங்கிய சூதமுனிவர் திருவடியை வணங்கி "இன்று நீர் அருளிச்செய்ததல விசேடமே நல்லது. இனித்தீர்த்த விசேடங்கூறியருளுக" என்றனர். அதுகேட்ட சூதமுனிவர் முருகக்கடவுளைப்பெற்ற சங்கரேசுரரை யிருதயதாமரையில் நிறைவாக வைத்துத் தரிசித்தவராய்ப் பிறவிப்பிணியைப் போக்கும் தீர்த்த விசேடத்தைச் சொல்லத் தொடங்கினர்.

ஐந்தாவது:

# * தீர்த்தவிசேடச்சருக்கம்.

ஆகம விதங்களு மநேகமுறை தேடித்
தோகையொரு பங்கிலுறை சோமசடி லேசர்
வாகுபெறு மாலயமு னேயிடம தாக
நாகசுனை யென்றுநவி தீர்த்தமது நண்ணும். (௧)

மாகனக வில்லினைநல் வந்தனைசெய் தற்கா
வேகவிட நாகரிரு வோரும்விய லூக
வோகையொடு தொட்டநி லுடன்படிக லாலே
நாகசுனை யென்றுபெயர் நண்ணினது மாதோ. (௨)

மோகமொடு சிதைமுலை யிற்கொடிய தாகி
வேகமொடு கொத்திடு சயந்தன்வினை விட
வோகையுட னுடமுன முள்ளவுரு நல்கு
நாகசுனை யின்பெருமை நாமறைப வற்றோ. (௩)

உலைவையுறு நாகமத னுலுறவ தாலே
சலவுதிரை தோய்தட மதிற்சுழல்வ தானு
நிலைமைபெறு ஞெண்டுகம டந்தவளை நீண்மீன்
சலசரம தென்பது தவிர்ந்திடுமெ நாளும். (௪)

மெய்ச்சுர வியாதிகளு மெய்யினி லுறுப்பை
யுச்சழிவு செய்தகொழு நோய்கள் வயிற்றைப்
பிச்செறிதல் போலவலி செய்பெரிய குன்ம
நச்சரவ வாவியிடை நண்ணுமுன மோடும். (௫)

போகிக ளியற்றிய யுகழ்ச்சியத னாலே
போகிபுல சுத்திலுறு பொற்பணிக ளாடும்
போகிதட மேன்மைபுகல் வோர்களயி ராணி
போகியென வேமகிழ்வு பூண்டினி திருப்பார். (௬)

நடுவனை யுதைத்தசிவ னாகசுனை யென்னு
மடுவிடைகுளித்துவளர் புற்றினன் மருந்தைக்

கடுகெடை யருந்தினவர் காலினின் வணங்கிக்
கொடுவிட மனைத்தும்விடை கொண்டுகுடி போகும். ()

அற்பவுடல் பொய்யென வறிந்துவர ராசைப்
பொற்பதி யுறைந்துதவ பூடணர்க ளாகிச்
* சற்பதட மாடினவர் தம்பவ மகன்று
கற்பவரை யீசனிரு கழல்பிரிகி லாரே. (௮)

கிரகவிட ரேனும்வெகு பாவியர்க ளேனு
மாரகர முழக்கமுட னைம்புல னடக்கிக்
கரகமல முச்சியுற வேகதிசை யுன்னி
யுரகசுனை யாடினவ ரும்பரென வுய்வார். (௯)

பொன்னகம் வளைத்தவுயர் புன்னைவன நாதர்
தன்னக மதிற்குடி யுறத்திடம தாய
சொன்னகலை நன்னெறி யுணர்ந்துறுக டாப்
பன்னக தடம்படிகு வோர்பரம னாவார். (௧௦)

புட்செவிய காதினருள் போதசிவ ஞானர்
விட்செவிய திங்களணி வேணியர் நகர்க்குட்
கட்செவி யகழ்ந்ததட மூழ்கினர் கருத்தி
னுட்செவிய ராகியுயர் வீடுபெறு வார்கள். (௧௧)

வேறு

நாகத்தின் பொருட்டாய் வந்த நற்றட மகிமை யுன்னோர்
நாகத்தின் பொருட்டாவேனுந் தண்புன லுட்கொண்டாரேற்
றேகத்தின் பொருட்டாய் வந்த தீவினை யனைத்து நீக்கி
யேகத்தின் பொருட்டாமோர்ந்திங்கிறப்பிலாமுத்திசேர்வார்.

முப்புவி தன்னி லுள்ள முதியதீர்த் தங்க டம்மிற்
செப்புதற் குவமை யில்லாத் திவ்விய நாக தீர்த்த
மெய்ப்படிற் புறமு முள்ளுந் தூயராய் வெம்பி றப்பாந்
கைப்புறு வினையு நீங்கிக் கடவுடன் கழலைச் சேர்வார். (௧௩)

* சர்ப்ப - எதுகைநோக்கிச். சற்பவென்றாயிற்று.

அக்கமா தீர்த்தந் தன்னி லாடுதற் கருது நல்லா
ரிந்தனைச் சாதி யானோர் நெஞ்சினி னினைக்கிற் பார்க்கி
லிந்தியிழ்ந் தாடு வோரா லுறுபுன லுடன்மேல் வீசிற்
சிந்திய பிறப்பின் மேலாம் பிறப்பினிற் பிறப்பா ரன்றே. ()

நண்ணிய வறிவின் ஞான நூலறி வதிக மாகு
மண்ணிய பொருள்கட் கெல்லா மறப்பொரு ளதிக மாகும்
பண்ணிய பாவ மெல்லாம் பரிதிமுன் னிருள்போ னீக்கும்
புண்ணிய தீர்த்தந் தம்மி னதிகமாம் புயங்க தீர்த்தம். (௧௫)

சத்தமா புரியின் மேலாந் தண்டமிழ் மதுரை மூதூர்
சத்தமா வுலகின் மேலாஞ் சத்திய வுலக மாகுஞ்
சத்தமா கடலின் மேலாந் தண்பயோ ததியே யாகுஞ்
சத்தமா நதியின் மேலாந் தடஞ்சுனை நாக தீர்த்தம். (௧௬)

அயனபுண் ணியகா லத்தி னந்தமா தடத்தின் மூழ்கிக்
கயல்விழி யுமையை யந்தக் கடவுள்சங் கரனைப் போற்றின்
வியனுறு தீர்த்த மெல்லா மாடிய மெய்ப்பே றெய்தி
யுயர்சிவ லோகத் தெய்தி யொழிவிலாப் போகந் துய்ப்பார் ()

மடநன் மதிப்பிறப்பின் மேவியத் தடத்தின் மூழ்கி
யேடலர் மலர்கொண் டந்த வீசனை யுமையைப் போற்றி
நேமா லயத்தை மூன்று வலம்வந்து நேசிப் பாரே
லாடகத் திறைவன் வாழு மளகையி னழகாய் வாழ்வார். (௧௮)

ஒப்பசி மதியின் முற்று மத்தடந் தன்னின் மூழ்கிச்
செப்பருஞ் சாந்தி ராய ணப்பெயர் விரதஞ் செய்வோர்
*சுப்பிர மனத்த ராகித் தால்சே சத்தோ டேவான்
மைப்பொலி கண்டர் வாழு மகாசிவ லோகஞ் சேர்வார். (௧௯)

ஆடிமா தப்பி றப்பி னத்தடத் தாடி னோர்கள்
கேடிலாச் செல்வ மெய்திக் கிரீசனுங் கன்ப ராவார்
மாடொறு மாடு வோர்க ணற்பரி சுத்த ராகி
நீடுநீர் வேலை சூழு நீணிலத் தரச ராவார். (௨௦)

---

* சுப்பிரம் - நித்தியயோகத்தொன்று.

பரிதியை மதியைத் தீண்டப் படர்கனல் விடவாய்ப் பாந்தள்
கருதிய கிராண புண்ய காலங்கட் செவித்த டத்திற்
றருதியெப் பேறு மென்று சங்கற்பஞ் செய்து மூழ்கிற்
சுருதியின் முடிவா மீசன் றொல்லுல கடைகு வாரே. (௨௧)

செவித்திடுந் தினத்தின் மூழ்கிச் சங்கரர் திருத்தாள் போற்றி
லனித்திய மான தேக மழிவிலா விதேக முத்திக்
கனிப்பதம் பெறுவர் திங்கட் டினத்தமா வாசை தன்னின்
மனித்தர்க டானம் பண்ணில் வானவ ராகு வாரே. (௨௨)

பிதிர்தின மந்த நீரின் மூழ்கியே பிண்டம் வைத்து
விதிவழி திலோத கங்க ளிறைத்துமேற் பிதிர்க்க ளெல்லாங்
கதிபெற வைக்கு மாந்தர் காதனன் மனைவி சுற்ற
மதியுடை மகப்பே றுற்று மாநிலத் தென்றும் வாழ்வார் (௨௩)

புண்ணிய நாக தீர்த்தம் படிந்துபூ சுரருக் கன்பா
லெண்ணிரு தானஞ் செய்தா லெண்ணிலாக் கோடி காலம்
வெண்ணில வணிந்த வேணி விமலர்வா ழுலகின் மூன்று
கண்ணின்றயுருவம் பெற்றுக் களிப்புட னிருப்பரன்றே. (௨௪)

மாதவுந் தத்தில் வந்த மகத்துவப் புகர்வா ரத்தின்
மேதகு மத்த டத்தின் விருப்புடன் மூழ்கிப் பூத
நாதசங் கரனைப் பொன்னு லுடையைப்பூ சித்த நல்லோர்
பாதக வினைகள் காற்றிற் பஞ்செனப் பறக்கு மன்றோ. (௨௫)

## வேறு

புன்னாக வனத்திற்சீர்க் கனுதினமு மாட்டுவிக்கும் புனித்
மான, விந்நாக தீர்த்தத்தின் பெருமையெவ ரெடுத்துரை
ப்பா ரியான றிந்து, சொன்னேனேனோர் கோடியிலோர் கடை,
கோடி யெனச்சூதன் சொல்லக் கேட்டு, மின்னாரா சைகளை
விடுத்த மெய்ம்முனிவர் சிரமசைத்து வியந்தார் மன்னோ. ()

பாகமா முடைமருவு சங்கரர்வாழ் தலமும்மன் பாற் படிந்
துன் போர்க்கு, நாகவமுத னையவிந்த நாகசுனை மகிமையுநீர்

கவிலக் கேட்டோருஞ், சோகவிடாய் தீர்த்தருளுஞ் சங்கரனார்
த் தியின்பெருமை சொல்லீ ரென்ன, யோகமுனி வரர்கேட்
பச் சூதமுனி யுரைப்பலென்றுங் குவந்து சொல்வான். (௨௭)

*தீர்த்தவிசேடச்சருக்கமுற்றிற்று.

ஆ. செய்யுள் - ௨௯௦.

---

## தீர்த்தவிசேடச் சருக்கச் சுருக்க வசனம்.

சகலாகமங்களும் அநேக காலந்தேடுஞ் சந்திரசேகராகிய சங்கரேசர் கோயிலுக்கு முன் இடப்பக்கத்தில் நாகசுனை யென்னொரு தீர்த்தமுள்ளது. சங்கரேசரை வழிபடுதற்காகச் சர்ப்பவடிவாகிய சங்கபத்ம அரசர்களாலே (பின்) தோண்டப்பட்டதனால் இந்தத் தீர்த்தத்துக்கு நாகசுனை யென்ற பெயர் வந்தது. தேவேந்திரன் மகனாகிய சயந்தன் காக்கைவடிவங் கொண்டு சீதாதேவியின் தனத்தைத் தொட்டதனால் வந்த பாவம் இந்த நாகசுனையிலே வந்து மூழ்கினவுடனே நீங்கிப் பழையவடிவத்தைப் பெற்றானென்றால் இதன் பெருமை நாஞ் சொல்லும் அத்தன்மையுடையதோ? காற்றைப் புசிக்கின்ற சர்ப்பங்களாலே செய்யப்பட்ட காரணத்தாலிந்தத்தீர்த்தத்தில் நண்டு, ஆமை, தவளை, மீன்முதலிய நீர் வாழுமுயிர்களில்லை. சுரநோயும் சரீரத்தின் நிலைகையழிக்குங்குட்டவியாதியும், வயிற்றைப்பிடுங்கி யெறிதல், போல வலிக்கின்ற குன்மநோயும் இத்தீர்த்தத்துக்குப் பக்கத்தில் வருமுன் ஓடிவிடும். நாகங்களாலுண்டாக்கப்படுதலால் நாகலோகத்திலுள்ளவரெல்லாரிங்கேயே வந்து தீர்த்தமாடுவர். நாகசுனையின் பெருமையைப் பேசுவார் தேவேந்திரன் போல மகிழ்ச்சியுற்றிருப்பர்.

இதிலே ஸ்நானஞ் செய்து புற்றமண்ணைக் கடுகளவு உண்டீரானால் விஷவியாதியடியோடே போய்விடும். சரீரமநித்தியமென்றறிந்து, தவவேடம் பூண்டு, இதிலே தீர்த்தமாடினவர் பிறவியைக் கெடுத்துச் சங்கரேசர் திருவடியைக் கலந்திருப்பர். தூர்த்தரானாலும் பாவிகளானாலும் அரகரவென்று சொல்லிக் கும்பிட்டு இதில் ஸ்நானஞ் செய்வாரானால் சுவர்க்கபதவியடைவர்.

புன்னைவன நாதர் தம் பக்கத்திலிருக்கும் அந்தத் தீர்த்தமாகிய நாகசுனையிலே சாஸ்திரவிதிப்படி ஸ்நானஞ் செய்பவர் சிவசாரூபம் பெறுவர். கரிக்குருவியின் அழகிய காதில் சிவஞானமுபதேசித்தவராகிய ஆகாயத்திலுள்ள சந்திரனைத் தரித்த சங்கரேசரது வராராசைத் தலத்தில் நாகங்களாற் செய்யப்பட்ட நாகசுனையில் பரிசுத்தமுடையராகித் தீர்த்தமாடினவரும் இதன் பெருமையுணராமல் தாகத்துக்காவது தண்ணீரெடுத்து உண்டவரும் தீவினைகளைப் போக்கி யுண்மைப்பொருளை யுணர்ந்து மோக்ஷமடைவார்கள்.

திரிலோகத்திலுள்ள தீர்த்தங்களிலு முயர்ந்த நாகசுனையின் தீர்த்தம் சரீரத்திற் பட்டாலும் உள்ளும் புறமுந் தூயராய்வினைகளைப் போக்கிச்சங்கரேசர் திருவடியையடைவார்கள். இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ய யோக்கியரல்லாத கீழ்ச்சாதியார் நினைத்தாலும் பார்த்தாலும் ஸ்நானஞ்செய்வோருடலிற் பட்ட தீர்த்தந் தெறிக்கப்பட்டாலும் மறுபிறப்பிலுயர்ந்த சாதியராகப்பிறப்பர். அறிவினுள் ஞானநூலறிவும், பொருள்களுள் தருமப்பொருளும், முத்திநகரமேழுள் மதுரையும், ஏழுலகில் பிரமலோகமும், ஏழுகடல்களுள் பாற்கடலும், ஏழுநதிகளுள் நாகசுனையும் உயர்ந்தனவாகும். அந்த நாகசுனையில் உத்தராயண தக்ஷிணாயன புண்ணியகாலங்களிலே ஸ்நானஞ்செய்து சங்கரேசரையும் கோமதியம்மையையும் வணங்கினால் எல்லாத்தீர்த்தங்களும் ஆடிய பயனடைந்து சிவபோகத்தையுமடைவர்.

சித்திரை மாதப்பிறப்பில் ஸ்நானஞ்செய்து சிவபூசை செய்து ஆலயத்தைப்பிரதக்ஷிணஞ்செய்து உபவசிப்பாரானால் குபேர செல்வத்தையடைவர். ஆடிமாதப்பிறப்பில் தீர்த்தமாடினவர் சிவபிரானுக்கன்புடையராவர். தினந்தோறுமூழ்கினவர் அரசராய்ப் பிறப்பார்கள். கிரகணகாலங்களிலே யெல்லாப்பலனுந்தருக என்று சங்கற்பஞ்செய்து ஸ்நானம்பண்ணினால் சிவலோகத்தைச் சேருவர். பிறந்தநாளில் மூழ்கிச் சங்கரேசரைத்தோத்திரஞ்செய்தால் விதேகமுத்தியடைவர். சோமவாரத்தோடுகூடும் அமாவாசையில் மனிதர்கள் தீர்த்தமாடினால் வானவராவார்கள். சிராத்தநாளிலே ஸ்நானஞ்செய்து பிண்டமிட்டு எள்ளும் நீருமிறைப்பவர் மனைவிமக்கள் சுற்றங்களைப்பெற்றுப் பெருவாழ்வடை

வார்கள். இந்நன்றித்தீர்த்தமாடினவுடன் பிராமணருக்குச் சோடசதானம் (பதினாறுதானம்) செய்தவர் அளவில்லாதகாலம் சிவசாரூபபதவி யடைந்திருப்பர். மாதாந்த வெள்ளிக்கிழமையில் தீர்த்தமாடிச்சங்கரேசரையும் ஆவுடையம்மையையும் பூசனைசெய்தவருடைய பாதகங்கள் காற்றிலகப்பட்ட பஞ்சுபோலப்பறந்தோடிவிடும். சங்கரேசருக்கு நாடோறுமபிடேகஞ்செய்யப்பெறும் நாகசுனை மகிமையை யெவர் சொல்லவல்லவர். 'கோடியிலொருசிறிதுயாகும் யான் சொன்னே' னென்ற சூதமுனிவர் கூற; பெண்மயலற்ற மகருஷிகள் கேட்டுச் சிரமசைத்து மகிழ்ந்தனர். "தலமகிமையும் நாகசுனைத்தீர்த்த மகிமையும் சுவாமீ! நீரருளிச்செய்யக் கேட்டுச் சந்தோஷித்தோம். இனி, சங்கரலிங்கமூர்த்தி மகிமையைச் சொல்லியருளவேண்டு" மென்று நைமிசாரணிய முனிவர் கேட்கச், சூதமுனிவர் சொல்வாராயினர்.

---

## ஆறுவது:
# மூர்த்திவிசேடச்சருக்கம்.

முன்னைமா வனத்தி னீழற் புவியினி லநாதி யாகி
யன்னைகோ மதியி னோடு மமர்ந்தரு ளமல வித்தாய்
மன்னிய தொண்டர்க் கெல்லா மங்கள நல்கி னாலே
தன்னையே யிவ்வி லிங்கஞ் சங்கர லிங்க மாகும். (௧)

வான்வளி யனனீர் மண்ணும் வகுத்தவைந் திலிங்கத்துள்ளுந்
தொன்மையாம் புவியின் பாங்காய் மேவுமிவ் விலிங்கந் தன்னை
ஞானமா முனிவர் சித்த ரும்பரே ரிடும்பர் நாக
ரானவ ரெவரும் போற்றி யறமுத னான்கும் பெற்றார். (௨)

பூவருமயனு மாலும் போற்றுதற் கரிய வள்ளல்
கோவருள் கொடுக்குந் தெய்வக் கோமதி யுமையி னோடு
மியாவருங் கண்டு பூசித் திகபர போக மெய்த
யாவரா லசை தன்னின் மகாசிவ லிங்க மாகும். (௩)

சீர்த்திகொ டேவ மூர்த்தி யசுரராற் செய்பு மூர்த்தி
* யோர்த்திகழ் நாக மூர்த்தி யிவ்வுல கத்தி னுள்ள
பார்த்திப ரியற்று மூர்த்தி யாகிய படிவங் கொண்ட
மூர்த்திகட் கெல்லா மந்தச் சங்கர மூர்த்தி முன்னும். (௪)

கண்ணினைக் காதைக் கையைக் காலினை வருத்தஞ் செய்ப
வெண்ணிய வன்மத் தாலே யெய்திய வியாதிக் கெல்லா
மண்ணினை மருந்தா நல்கித் தீர்த்திடு மகிமை யாலே
புண்ணிய வயித்ய லிங்க மாகுமிப் பூமி லிங்கம். (௫)

சித்தர்கண் முனிவர் தேவர் சேவிக்க வழியா வீட்டின்
முத்தியைக் கொடுக்குஞ் சைவ தலங்களின் முதன்மையாகு
மத்திரு விலிங்கந் தன்னி னதிகமாம் வரங்கொ டுக்குஞ்
சுத்தசை தன்ய மாமிச் சுயம்பிர காச லிங்கம். (௬)

தெய்வமா தலங்கட் கெல்லாந் தலைமைசீ ராசை யாகு
முய்வரு மூர்த்தந் தம்முட் டலைமையிவ் வுரக தீர்த்த
சைவளந் தெரிந்த கான நாரதர் முதலோர் போற்றுஞ்
சைவலிங் கங்கட் கெல்லாந் தலைமையில் விலிங்க மாதோ. (௭)

சமயங்கள் பலவிற் சைவ சமயமே யதிக மாகு
முயிர்குல மலைக டம்மு ளதிகநீண் மேரு வாகு
முமையொரு பாகங் கொண்ட வொளிர்சிவ லிங்கந் தம்மு
ளமலவா னந்த சங்க ரேசுர ரதிக மாமே. (௮)

மனமொழி மெய்யின் மூன்றான் மங்கள விலிங்கந் தன்னைத்
தினநினைந் துரைத்துப் போற்றல் செய்பவர் செனன மென்னுங்
கனவிருட் காட்டை வெட்டி மூலம தறுக்க லாந்து
சனகா தியர்போல் வீட்டிடைச் சாருந ரிவரோ யாவர். ( )

சோமவா ரத்தி லிந்தச் சங்கர சுயம்பைப் போற்றி
நாமமா யிரத்தெட் டாலே வில்வவர்ச் சனைந டாத்திக்
காயமே முதல மூன்று குற்றமுங் கடிந்து நல்ல
*நேமமா யொருபோ துண்டு கொள்பவர் நிருப ராவார். (௰)

---

*வர்த்திகழ் — விகாரம்..... [illegible] டன் மருந

வெள்ளிவா ரத்தி லிந்தச் சங்கர லிங்கன் றன்னைக்
கள்ளவிழ் கரிய கூந்தற் கவுரிகோ மதியைப் போற்றி
நள்ளிருட் காலந் தன்னி னயர்ந்துபூ சனைசெய் தேத்தி
யுள்ளிய வரங்க ளெல்லா முறுதியாப் பெறுவ ரன்றே (௧௧)

சித்திரைத் திங்க டன்னிற் பூரணைத் தினத்தி லைந்து
வத்திரத் தானு மைந்தொ டொழினடாத் தியம்கேசன்
சத்திய வடிவ மான சங்கர மூர்த்தி தன்னை
முத்தியை விரும்பிப் பூசித் தவர்பலன் மொழிய லாமோ. (௧௨)

நற்கட மாது நாமு மொன்றென நம்பன் காட்ட
விற்கட கப்பூண் செங்கை விமலைதற் றவம்பு ரிந்த
கற்கட கத்திற் பூசை தினத்தினிற் கனிந்து போற்றி
லற்கடற் பிறவி நீங்கி யருட்கடன் மூழ்கு வாரே. (௧௩)

மாசிவ ராத்ரி தன்னி லிந்தமா லிலிங்கந் தன்னைப்
பூசனை நாலு சாமம் புரிந்துபோற் றியமெய் யன்பர்
காசியிற் கங்கை மூழ்கிக் கடவுளைக் கற்ப கால
நேசமாப் பூசை செய்த பலனெலா நேர்கு வாரே. (௧௪)

பஞ்சபா தகம றிந்து செய்தபா விரா ளுந்
தஞ்சமீ தென்றிம் மூர்த்தி தாளிணை பணிந்திட் டாரே
லஞ்சனீ யஞ்ச னீயென் றருட்கடைப் பார்வை நல்கி
நஞ்சினை யமுத மாக்குந் தன்மைபோ லயர்ந்து காக்கும். (௧௫)

அற்பவா யுளைப் பெற்ற யாங்களி னாக மத்தின்
சொற்பய னறிந்துபூசைத் தொழில்செயற் குரியரல்லேம் [ ந்
பொற்பதந் துணையேயென்று போற்றுமெய் யடியார்க்கெல்லா
நற்பதங் கொடுக்கு மிந்தச் சங்கர சயம்பு வொன்றே. (௧௬)

அல்லுநற் பகலு மின்றி யடிநடு முடிவு மின்றி
யெல்லையில் பிரமந் தானே யிவ்வா ராசை தன்னிற்
பல்சரா சரத்தை யெல்லாம் பரிந்துகாத் தருள வேண்டி
நல்லதோர் விளையாட் டாக நவில்சிவ லிங்க மாகும். (௧௭)

கொவ்வைவா யிமயச் செல்வி கோமதி வலப்பா கத்திற்
றிவ்விய சொரூப மாகத் திருவருள் புரிந்தி ருக்கு [தும்
மிவ்விலிங்கத்தைப்போற்றுமியல்புளோர்பிறப்பென்றே
பௌவமேழ் கடந்து நித்த பரிசுத்த ராகு வாரே. (௧௮)

மறுவறு பிரதோ டத்தில் வான்சுட *ரத்த மத்தைப்
பெறும்பொழு தால யத்தை வலம்வந்து பிறைவாண் கங்கை
யறுகணி சங்க ரேசர்க் கருச்சனை யாதி யாற்றி
நறுமலர்த்தாளைப்போற்றி னமனைவென்றிடுவரன்றே. (௧௯)

மட்டவி ழிதழி வேய்ந்த மணிமுடிச் சங்க ரேசர்க்
குட்டதும் பன்ப ராகி யொருபொழு துணவு நீக்கி
யட்டமி விரத நோற்போ ரகத்தினிற் குறிப்பா வென்று
மிட்டமாம் பலன்க ளெல்லா மெய்தியின் புறுவர் மாதோ. ()

வேறு.

அட்டாங்க பஞ்சாங்க திரயாங்க மேகாங்க மாக வன்பா, மட்டார்ந்த மலர்ப்பதத்தில் வந்தனைசெய் திவ்வரனை வழிபட் டாரேற், கட்டான பிறப்பறுத்துக் கர்மமுத லறுபகையுங் கடிந்து நீக்கி, யெட்டாத பரமபதத் தின்பசுக போகத்தாழ்ந்.திருப்ப ரன்றே. (௨௧)

சோடசமா வுபசாரத் தாட்டியர் ணடகள்புனைந்து தூய வாசத், தேடலர்நால் வகைமலருஞ் சூட்டிநவ மணிப்பணிகளிசையப் பூட்டித், தேடரிய பாலடிசில் சித்ரவன்ன நிவேதித்துத் தெய்வக் கஞ்சத், தாடலைமேற் கொண்டுபணிந் திடிலிந்த மூர்த்திகருஞ் சகல பேறும். (௨௨)

சங்கமொன் றிற் புனல்கொண்டிச் சங்கரனை யாட்டிடிலா யிரத்தெண் சங்க, மூங்கலந்த் புனல்கொண்டு மந்த்ரவிதியாலாட்டு மகத்வஞ்சேர்வார், பொங்குதிரு மேனியெலாம் பொதிந்தனுத்தா லபிடேகம் புரிந்த போர்க, ளங்கணன்ற னுலகெய்தியன்னமொன்றுக்குகமொன்றுவமர்ந்துவாழ்வார். (௨௩)

* அத்தமம் - அத்தமனகிரி.

மடைப்பள்ளியி லன்னமமைத் திடுவதற்குப் பாத்திரங்
கண் மணிநீ ராட்டக், குடத்துடனே தூபக்கான் முன்றாங்
கேத மொன்பானுக் குறித்த லங்கத், தடுக்கியதீ பத்தட்டுக்
குடைகவரி கண்ணாடி யால வட்டங், கடற்கடுவுண் டமுதா
கரு மிக்கடவுட் களித்தவர்கள் கயிலை சேர்வார். (௨௪)

மீபுரங்க ணைகத்தெரித்த விச்சங்க ரேசுரர்க்கு விருப்
பமாகக், கோபுரங்கண் மண்டபங்க டிருமதில்கள் குறைவி
னறிக் குறித்துச் செய்வோர், மாபூரநத ராதியும்பர் வந்து
தொழப் புட்பமா னத்தி லேறி, நூபுரச்செஞ் சரணுமை
யோ டரனிருக்குங் கயிலையினி னெடியிற் சேர்வார். (௨௫)

மணிப்பணிகள் கூழைநா யகருளத்தி லுவப்புறநன் ம
ணியாற் செய்தோர், கணிப்புறவா கனமமைத்தோர் கரிபரி
தேர் சிவிகைவா கனத்தி லேறிப், பணிதகலைமே லிருந்தவி
ருதர் பாருலுக்கு கரசராய்ப் பத்தர் பாசந், துணித்தருள லப்
புடையார் தொல்லுலகிற் சென்றழிவில போகந் துய்ப்பார்.

புத்தமுத மதியணிந்த சிவசங்க ரேசுரர்க்குப் புழுகு
மூசக, கத்தூரி செறிநறுங் கலவையினுன் முழுக்காட்டுக்
குனிந்து செய்வோர், வித்தமுறு தெய்வகற்ப காடவியி லர
மைபயர்கள் மென்கை யாலே, கொத்தகர்நன் மலர்சூட்டிக்
கூடிவினை யாடவன்பு கூர்ந்திருப்பார். (௨௭)

மருவாருங் கொன்றையணி சங்கரனை வணங்கிமுதல்
வாசனை றன்னிற், றிருவாசி செய்துவைத்துத் திருவிளக்கிட்
டோர்தெய்வ மாத ரெல்லா, மிருபாலு மணிவிளக்கை யிரு
கையா லேந்திவர விந்தர போக, மொருநூறு கோடியுக மு
றாளித்துச் சிவபதத்தி லுறுவா ரன்றே. (௨௮)

கருப்பூர தீபமிட்டுக் கருப்பூர வடிவாஞ்சங் கரனைக் க
ண்ணால், விருப்பூரத் தெரிசித்து மேலவர்கள் விமானத்தி
லேறி வெள்ளிப், பொருப்பூர தாவிருந்து போதசிவா னந்த

பரஞ்சோதி பொற்றாட், டிருப்பூர்ணத் துடன்கலந்து நிறைந்துமீ ளாதென்றுந் திகழ்வ ரன்றே. (உகூ)

வரிராசை நாதன்வைத் தியநாதன் சிராசை நாதன் வுரானோர், பூரவுபுன்னை வனநாதன் சங்கரலிங் கங்கூழை யாண்டி பண்புர்த், தரைபுகழுஞ் சங்கரநா ராயணன்சங் கரமூர்த்தி தானென்றெட்டாய், விரவுதிரு நாமங்கள் பெற்றிருக்கு மிம்மூர்த்தி விசேட மூர்த்தி. (ஙo)

அருட்கடலாஞ் சங்கரர்சன் னிதிமுன்பு பரத்தையர்க ளாடல் பாட, விருக்குமுத லால்வேத மெடுத்தோதச் செய்தல்பல வின்னி யங்கள், பெருக்கமுடன் முழக்குவித்தோர் காமியத்திற் பெருங்காலம் பெயரா துற்றுக், கருக்கடலின் கரைகடந்து கடவுடிரு வடிக்கமலங் கைக்கொள் வாரே. (ஙக)

ஆறுகா லமுமிந்தச் சங்கரலிங் கம்பதத்தை யன்பாற் போற்றி, மாறிலாப் பொன்மணியா லயத்தைவல மாவருவோர் மதிபோல் வெள்ளை, நீறுபுனைந் துருத்திராக் கந்தரிப்ப ரைந்தெழுத்தை நினைவிற் கொள்வோர், பேறுசொல வந்தவுமை பாகனலான் மற்றொருவர் பேசொ ணாதே. (ஙஉ)

திருத்தலமுந் தீர்த்தமுமூர்த் தியுமுரைத்த சூதமுனி செம்பொற் றாளை, விருத்தமுனி வரரெல்லாம் விரைமலர்கொண் டர்ச்சித்து வியந்து போற்றி, மருத்தயிலுஞ் சங்கபத்மர் வாதநிவிர்த் திக்காக மறையோன் காணுக், கருத்தினுருச் சங்கரநா ராயணராய்க் காட்டியதைக் கழறென் றாரே.

மூர்த்திவிசேடச்சருக்கமுற்றிற்று.

ஆ செய்யுள் - உஅங.

# மூர்த்திவிசேடச் சருக்கச் சுருக்கவசனம்.

"புன்னைவிருக்ஷத்தினீழலில் அநாதியாய் மலமில்லாத மூலப்பொருளாகி அடியார்களுக்கு இன்பஞ்செய்தலாலே சங்கரலிங்கமென்னும் பெயர்பெற்ற மூர்த்தி, ஆகாயமுதலிய பஞ்சபூத இலிங்கத்துள்ளே பிருதுவிலிங்கமாகும்; இந்த இலிங்கத்தை ஞானத்தினையுணர்ந்த முனிவர் முதலிய எல்லாரும் வணங்கித் தர்மார்த்த காமமோக்ஷம் பெற்றார்கள். பிரமவிஷ்ணுக்கள் காண்டற்கரிய சிவபிரான் கோமதியம்மையுடன் எல்லாரு மிக பரசுகத்தையடைதற்காக வாராசைத் தலத்திலே மகாசிவலிங்கமாக இருந்தனர். தேவராலும், அசுரராலும், நாகராலும், அரசராலும் பூசிக்கப்பட்ட இலிங்கங்களுக்கெல்லாம் இந்த இலிங்கமுதன்மையான இலிங்கமாகும். வினைக்கீடாகக் கண், காது, கை, கால்களை வருத்தப்படுத்திய வியாதிக்கெல்லாம் புற்றுமண்ணை மருந்தாகக் கொடுத்துத் தீர்க்கின்றமான்மியத்தால் இந்த இலிங்கம் வயித்தியலிங்கமெனவும் பெயர்பெறும். சித்தர் முதலோர்க்கு முத்தியளிக்குஞ். சிவஸ்தலங்களின் முதன்மையான இலிங்கங்களுக்குள் பரிசுத்தமாகிய கடவுள்; இந்தச் சுயம்பிரகாசம் (தானே பிரகாசிப்பது) ஆகிய இலிங்கமாம். சமயங்களுக்குள் சைவசமயமும், மலைகளுக்குள் மகாமேருமலையும், சிவலிங்கங்களுக்குள் சங்கரலிங்கமும் உயர்ந்தனவாகும். மனம், வாக்குக், காயங்களால் இந்த இலிங்கத்தை நாடோறுந் துதிப்பவர் சென்மமாகிய காட்டை வேரோடு வெட்டிச் சனகர்முதலியோர்களைப்போல மோக்ஷவீட்டினைச் சேர்ந்திருப்பர்.

இந்த இலிங்கத்தைச் சோமவாரத்திலே வில்வார்ச்சனைசெய்து, காமம் வெகுளி மயக்கமாகிய முக்குற்றத்தையுங் கெடுத்து நியதியாக ஒருபொழுதுண்பவர் அரசராகிப் பிறப்பர். சுக்கிரவாரத்தில் கோமதியம்மையுடன் அர்த்தசாமத்திலே பூசித்துத் துதித்தவர் நினைத்தவரங்களை நிச்சயமாகப் பெறுவர். சித்திரா பௌர்ணமியிலே மோக்ஷத்தை விரும்பிப் பூசைசெய்தவர் பெறும்பலனை யின்னதென்று சொல்லமுடியாது. நல்ல குடக்கூத்தினையுடைய விஷ்ணுவும் தானும் ஒருவரென்றுசொல்லப்பட்ட சங்கரநாராயணராகிக் காட்சிகொடுத்த அந்த இலிங்கத்தை ஒளிதங்கிய கங்கணமணிந்தகையையுடைய கோமதியம்மை தவஞ்செய்யப்பட்ட ஆடிமாதப் பௌர்ணமியிலே வணங்கினால் பிறவிக்கடலைக் கடந்து

கருணைக்கடலிலே முழுகுவார்கள். மகாசிவராத்திரியிலே நாலு சாமமும் பூசித்து வணங்கிய மெய்யடியார்கள் காசிக்கங்கையிலே ஸ்நானஞ்செய்து விசுவேசரை யூழிகாலம் பூசித்தபலனைப்பெறுவார். பஞ்ச மாபாதகரானாலும் அடைக்கலமென்று வந்து பணிந்தால் பயப்படாதே யென்று நஞ்சை யமுதமாகவுண்டு தேவரைக்காத்தல் போல இந்த இலிங்கங்காத்தருளும். சிறிய வாணாளையடைந்த நாங்கள் ஆகமவிதிப்படி யுன்னைப் பூசிக்கவலிமையில்லோம் உன்னுடைய திருவடிகளே துணையென்று வணங்குவார்க்குத் தன்னுடைய திருவடிகளை இந்தச் சங்கரலிங்கமொன்றே கொடுத்தருளும். இரவும் பகலும் ஆதி, மத்தி, அந்தமில்லாத பிரமமே, இந்த வாரானசைத்தலத்தில் எல்லாவற்றையும் இரக்ஷித்தற்பொருட்டுத் திருவிளையாட்டாகச் சிவலிங்கவடிவமானது. இதைத்துதிக்குமியற்கையுடையவர் பிறவிக்கடலைக் கடந்து பரிசுத்தராயிருப்பர். பிரதோடகாலத்தில் சூரியாஸ்தமனகாலத்தில் கோயிலை வலஞ் சுற்றி வந்து சங்கரேசுரரைவணங்கி யருச்சனைமுதலிய தோத்திரஞ் செய்தவர் யமவாதனையில்லாதவராவர். இந்தச் சங்கரலிங்கத்துக்கு உள்ளே பெருகுமன்புடையவராகி அட்டமி விரதமிருப்பவர் மனத்திலே நினைக்குங் காரியங்களெல்லாமடைந்து இன்புற்றிருப்பர்.

இந்த இலிங்கத்தை அட்டாங்க பஞ்சாங்க திரயாங்க ஏகாங்க நமஸ்காரஞ்செய்து தொண்டு செய்தால் பிறவியை நீங்கிக்காமமுதலாகிய ஆறு பகையையுங் கெடுத்து உயர்ந்த பரம பதத்தின்பத்தை யநுபவித்திருப்பர். பதினாறு உபசாரத்தாலபிடேகஞ் செய்து பரிவட்டந்தரித்து நால்வகை மலர் மாலையும் புனைந்து இரத்நாபரணங்கள் தரித்து, பாயசம் சித்திரான்னம் நைவேத்தியஞ் செய்து திருவடித்தாமரைகளை வணங்கினா லிந்தச் சங்கரலிங்கஞ் சகல பலனையுந்தந்தருளும். இஃதன்றிச் சங்காபிடேகஞ் செய்தால் ஆயிரத்தெட்டுச் சங்காபிடேகம் (அன்னியதலத்து) இலிங்கத்துக்குச்செய்த மான்மியத்தையடைவர். அன்னாபிடேகஞ் செய்தவர்கள் ஒருசோற்றுக்கு ஒருயுகமாகச் சிவலோகத்திலிருக்கப் பெறுவர். தலையிற் பாத்திரங்களும் அபிடேகபாத்திரங்களுந் தீபக்கால் தூபக்கால்களும் குடை சாமரம் கண்ணாடி விசிறிகளும் இந்த இலிங்கத்துக்குக் கொடுத்தவரும், கோபுரம், மண்டபம், திருமதில்கள் செய்தவரும் இந்திரன் முதலியோர் [illegible] திற

சென்று திருக்கைலாசத்தையடைவார்கள். கூழைநாயகராகிய சிவலிங்கப்பெருமான் மகிழும்படி அழகிய கோபுரங்கள் நல்ல இரத்நங்களாற் செய்தவரும், வாகனங்கள் செய்தவரும் யானை குதிரை தேர் பல்லக்குகளிலேறிப் பூலோகத்தரசராயிருந்து, பின்னர் சிவலோகத்தையடைவர்.

புழுகு முதலிய வாசனைத்திரவியங்கள் சேர்ந்த கூட்டுவேர்க்கச் சந்தனத்தால் இந்த லிங்கத்துக்கு முழுக்காப்புச்செய்தவரும், முத்தத்திருவாயிலில் திருவாசி செய்துவைத்துத் திருவிளக்கேற்றினவரும் தெய்வப்பெண்களிரண்டுபக்கமுங் கைவிளக்குப்பிடித்துவர நூறு கோடியுக மிந்திரபோகமநுபவித்து அதன்மேற் சிவபதவியடைவார்கள். கருப்பூரதீபமேற்றி யாசைமிகத்தெரிசித்தவர் விமானத்திலேறிப்போய்க் கயிலாசத்தங்கள் நகரமாகவிருந்து சுயம்பிரகாசமாகிய சிவபிரான்றிருவடியில் நிறைவாகக் கலந்து விளங்குவார்கள்.

இந்த இலிங்கம் வர்ராசைநாதன், வைத்தியநாதன், சீராசைநாதன், புன்னைவனநாதன், சங்கரலிங்கம், கூழையாண்டி, சங்கரநாராயணன், சங்கரமூர்த்தி என எட்டுத் திருப்பெயர்களைப்பெற்றிருக்கும் விசேட இலிங்கமாம்; இதன் முன்னே உருத்திரகணிகைபராடல், பாடல், நான்கு வேதபாராயணம், அநேக வாத்தியமுழக்கஞ் செய்வித்தவர் இட்டகாமியங்களை நெடுங்காலமநுபவித்து முடிவில் திருவடித்தாமரையைச் சேருவார்கள். ஆறுகாலமுமிந்த இலிங்கத்தை வணங்கிப் பிரதக்ஷணஞ்செய்பவர், விபூதி யுருத்திராக்கம்புனைந்து பஞ்சாக்கர செபஞ்செய்தவர் மகத்துவங்களை அந்தச் சிவபிரானன்றி மற்றொருவர் சொல்லமுடியாது'' என்றனர். இங்ஙனந் தலம், தீர்த்தம், மூர்த்திவிசேடங்கூறிய சூதமுனிவர் பாதங்களைப் பெரிய முனிவரெல்லாரும் பூசித்துக் "காற்றையுண்ணும் சங்கபத்மராகிய நாகர்கள் வழக்குத்தீரும்பொருட்டுச் சிவபிரான் சங்கரநாராயண வடிவங்காட்டிய சரிதத்தைக்கூறியருளு" மென்று வினவினர்.

## ஏழாவது

# சங்கரநாராயணரான சருக்கம்.

அருந்தவ ரிவ்வண மறைய வாதியைப்
பொருந்திய வுணர்வினன் புகரின் மாதவன்
விரிந்தநூற் கடலுணர் சூதன் வேட்கையாத்
தெரிந்தநற் கதையினைச் செப்பன் மேயினான். (க)

வேறு

இன்றவம் புரியுங் காசிபன் மனைவி யிருவருட் கத்துரு
வென்பாண், பின்றிக மெயிற்றுச் சேடனை முதலாம் வெ
வ்விட நாகங்க ளுயிர்த்தாண், மன்றலங் கோதை வினதைத
ன்வயிற்றின் வள்ளுகிர்க் கலுழனுங் குதித்தான், கன்றிய ம
னத்தி னிகலினைப் புரிந்து கழிந்தது பற்பல காலம். (உ)

வேறு.

வெஞ்சின விடங்கால் வெய்ய வநந்தனை முதலீ நாக
மஞ்சிறைக் கலுழற் கஞ்சி யவனது சரணில் வீழ
வெஞ்சலி லுமக்கு வேட்கை யூறெனை வெம்மை யெல்லாந்
தெஞ்சுடர்பொழின்மெய்யிற்சீர்பெறவணிதல்வேண்டும்.
என்றலுங் குழுவி வெய்யோ னெழில்பெற விளங்கு கின்ற
வென்றியங்கலுழன்மெய்யிலரவெலாம்விழைந்துபூண்டா
னன்றுதொட்டணிகளாகத்தமதுநட்பவன்பால்வைத்துச்
சென்றன நாக லோகந்திவிடப் பாந்த ளெல்லாம். (௩)

வெள்ளைமுள்ளெயிறுக்கும் வெவ்விடப்பகுவாய்ச்சேடன்
பள்ளிகொ ளணைய தாகப் பகந்தூய் மாயற் சேர்ந்தா
னொள்ளொளி யணிய தாக வுருகெழு மழுவா ளேந்தும்
வள்ளல்பான் மணிச்செஞ் சூட்டு வாசுகி யெய்தி னானே. ()

உறைப்புழி விஞ்சை யெல்லா முணர்ந்திட வேண்டிக்காற்று
மருத்தியா லிருந்தி டாம லற்றைநாட் சங்க பத்மர் |
வரத்தினு லுயர்ச்சி மிக்க வாசுகி யநந்தன் றன்பால்
விருப்பினு லுள்ளம் வைத்து மெய்த்தவ மியற்றி னாரே. ().

அரியநற் றவங்கண் மேன்மே லாற்றலு மாற்றல் சான்ற
விருவர்தம் முகத்தி னின்று மெழுதரு விடத்தின் வெப்பி
விரியழற் புகைப ரந்து விம்மலா லரவ மெல்லாந்
தெருமர லுளத்திற் கொண்டு தெருண்டன தெருண்ட பின்னர்.

வெள்ளிவே தண்ட மீது விண்ணவ ரிறைஞ்சி யேத்தப்
பிள்ளைமா னேக்கி யோட்டங் குறைதரு பெம்மாற் கன்பா
லொள்ளொளி யணிய தாக வுறைந்தவா சுகியின் பாலு
முள்ளொளிற் றநந்தன் பாலு முதிர்விட நாகஞ் சேர்ந்த. (௮)

அடைந்தநா கத்தை நோக்கி யாதிவ னடைந்த தெங்ங, விடந்திக ழரவ மன்னன் விளைந்தமை விளம்ப லோடு, மடங்கைபா கன்பாற் கொண்டல் வண்ணன்பால் விடைகொண் டாங்கட், படந்திக ழிருவர் தங்கள் பதியினி லடைந்தா ரன்றே. (௯)

நற்றவ மியற்றுஞ் சங்க பத்மரை நபந்து நோக்கிக்
குற்றமி லவர்கள் வேண்டும் வரங்குறை வின்றி யீந்து
கற்றைவார் சடையோன் பாலுங் கமலலோ சனன்றன் பாலு
மூற்றுவா சுகிய நந்த னுறைந்தனர் விரைவிற் சென்றே. ()

பைத்தலைக் கவைநா வெய்ப பத்மனே யல்லா நாக
மெய்த்தவ மியற்றித் திங்கள் வேணிபாற் கன்பு பூண்ட
னமைந்தவல் விடங்கால் பத்மன் மாயனுக் கன்ப னாகி
யுய்த்துணர் சங்கன் றன்னோ டிரைந்தனன் மாறு கொண்டே. ()

எம்மிறை பெரிய னென்று மெம்மிறை பெரிய னென்றுந்
தம்மின்மா றூடிப் பொங்கிச் சாற்றிய சங்க பத்மர்
செம்முக நோக்கி நீங்க டெளிவுறச் செப்ப வல்லார்
நம்முழை யில்லைப் பாரி னடமினென் றுரைத்த நாகம். ()

அரவெலா முரைத்த வண்ணங் கேட்டது மறிவி னுடிப்
பரவருந் தகைய னான பதஞ்சலி பாதம் போற்றித்
தெரிவருங் கலைக ளெல்லாஞ் செவிப்புலன் குளிரக் கேளா
வுரவுநீ ருலகின் மக்க ளுருக்கொடு மேவி னாரே. (௧௨)

தெண்ணிலாக் குழனி வேய்ந்த சிவகதி படிந்து மாயோன்
புண்ணிய நதிக டோய்ந்து புகரறு சங்க னென்னு
மண்ணல்வா ளரவின் வேந்து மறிவுசால் பத்மன் றானுங்
கண்ணகன் ஞாலமேத்துங் காசியி னெய்தி னாரே. (௧௪)

காசியை யடைந்து முத்தக் கதிரிள முறுவற் செவ்வாய்
மூசிவண் டுறைபுங் கூந்தன் முகிழ்முலை பங்கின் வாழு
மீசனே பெரியோன் செய்யா னிறைவனே பெரியோ னென்று
மாசிலா முனிவர் பாற்ற மூகமுயர்த் துரைசெய் தாரே. (௧௫)

உரையது கேட்ட லோடு முரகர்தம் வதன நோக்கி
முருகவி ழிதழி வேய்ந்த முதல்வனே பெரியோ னன்றோர்க்
கரனிடைத் தூபினு மானு மயிக்கமாம் பொருளா மென்றே
பருநிலத் திரிதொன் னூலான் பலைவறக் கூறி னானே. (௧௬)

தாமரைச் செங்க ணன்மேற் றழைத்தபே ரன்பாற் பத்மன்
மாமுனி யுரைகொள் ளாது நிற்றன்மா தவத்தோர் நோக்கி
யேமுறு முங்கள் வாத மிவ்வழித் தீர்வ தன்று
போமின்விண் ணாடு காக்கும் புரந்தர னவையி னென்றார். ()

அறநெறி முனிவ ரவ்வா றறைதலு மறிவு சான்ற
விறல்கெழு புயங்க வேந்தர் விண்ணவர் வடிவந் தாங்கிப்
பொறிவரிச் சுரும்பர் மூசப் பொன்னிணர் முகைய விழ்ந்து
நறைகமழ் பாரி சாத நாட்டினி லெய்தி னாரே. (௧௮)

வேறு.

பாலொத்த தீஞ்சொன் மடவாரிரு பாலும் வீசுங்
கோலக் கவரிக் கொழுங்கற்றையு மென் கொங்கு லாவு
மாலைப் புயமேற் றுயல்வந்து வயங்கு சோதி
நீலக் கிரிமீது நிலாத்தவழ் செவ்வி காட்ட. (௧௯)

தாளிழிந்து கொண்ட றவழ்வானொழு கோற்ற நோக்கிக்
களிகொண்ட சாய லிளங்கார்மயி லாடு மாபோ
விளவஞ்சி யன்ன மருங்கிற்றிடு மென்ன வீங்கி
வளர்கின்ற கொங்கை யரமங்கையர் மன்னி யாட. (௨௦)

அந்தண் ணிழற்கற் பகத்தப்பொ னரும்ப விழ்ந்த
சிந்துந் திவலைப் பசுந்தேன்முடி மேற்றெறிப்ப
நந்தும் புகழ்த்தும் புருநாரதர் நாம நல்யா
ழுந்தின் னரம்பின் னிசைத்தேன்செவி யூற்றுப்ப. (௨௧)

காரேந்தி நின்ற பகலோனெழில் காட்டு கின்ற
சீரேந்து செம்பொற் கதிர்மாமுடி சேண்விளங்க
வாரேந்து கொங்கை யபிராமி மணப்ப விண்ட
தாரேந்து மார்பி னணியாரந் தழைத்து மின்ன. (௨௨)

இருள்சீத் தெழுந்த விளஞாயி றிலங்கு மாபோல்
விரிசோதி கக்கு மணிபிட்டு விளங்கு செம்பொ
னரியாச னத்தி லிருந்தான்றனை யாடல் கூருஞ்
செருவார் குலிசப் படைவேந்தனைச் சென்று கண்டார். ()

வேறு

படர்ந்த காதலிற் கண்டடி பணிந்தனர் நிற்ப
விடைந்த நுண்ணிடை யிந்துவா ணுதலபி ராமி
மடங்கொள் செப்பெனும் வனமுலை யிளைத்திடு மார்ப
னடைந்த நும்வர வென்னென வருளுடனுரைத்தான். (௨௪)

மங்குல் கண்படும் வெள்ளியம் பொருப்பினில் வாழுஞ்
சங்க வெண்குழை யிறைவனே தனிமுத லென்றும்
பங்க யத்தடங் கண்ணனே பரம்பொரு ளொன்று
மிங்கு வந்தன மென்றன ருரகருக் கிறைவர். (௨௫)

இருவர் மாற்றமுங் கேட்டலு மிமையவர்க் கிறைவ
னருகி ருந்தநல் வியாழத்தை யருளுட னோக்கித்
தெரியும் வண்ணநீ செப்புவா யிவர்க்கெனச் செப்ப
மருளு ருவனை யறிவினால் வகுத்துரை வழங்கும். (௨௬)

விண்ணயின் மீக்கிளர் வெள்ளியம் பொருப்பினின் மேலுட்
பண்ணணி னன்மொழி மலைமகள் பரமனை வணங்கி
பண்ணை லேகறைப் பசுந்துழா யலங்கன்மா லுடனீ
ரெண்ணு மவ்வுருக் காணவேட் டனனென நவின்றாள். (௨௭)

நிரையி தழ்ப்பொனின் கோதைவார் குழனிலஞ் சேனு
மரிய மாதவ மாற்றின் லல்லதவ் வருளர்
தெரியக் காண்டன்மற் றரிதெனச் செப்பினன் றிங்கீன்
சொரியு மந்தளி ரிதழியந் தொடையணி தொல்லோன். (௨௮)

திறம ருங்கொசிந் திறமி று மென்னல்போற் சிறைறண்
டுறையு மெல்லிணர்க் கருங்குழ லணிவரை மடந்தை
நிறைவுமா தவ மியற்றுவோர் தலமியம் பென்ன
மறிபு லாங்கரத் தண்ணலுங் வழங்கன்மே யினனல். (௨௯)

முத்த மிழ்க்குறு முனிவன்விற் றிருக்குமோர் தலனுண்
டுத்த லத்தினி லரும்பனிம் புன்னையின் வடிவாய்
மெய்த்த வம்பல ரியற்றினர் மெல்லவாங் கேலி
யெய்த்த நண்ணிடை நீயுமா தவமியற் றுதியால். (௩௦)

மருது விம்மிய மொய்குழ லவ்வரு நினைக்குத்
தெரியக் காட்டுவம் பசுந்துழாய்த் தேன்பொழி யலங்கற்
கரிய மாயனு நாமும்வே றின்மைதான் கருதிப்
பெரிய மாதவர் பெறலரு முத்தியைப் பெறுவார். (௩௧)

வெள்ளி யங்கிரி யொருவிரீ மெய்த்தவ மியற்றுந்
தெள்ளு நீம்புனற் பதியிலியாஞ் சிறந்தினி துறைவோம்,
கள்ளு லாங்குழ லப்பதி கருதின ரியாரு
முள்ள ருந்தனி வீடுசென் றடைவரென் றுரைத்தான். (௩௨)

என்று கூறலு மிதழியஞ் சடைமுடி யிறைவன்
மன்றலம் மாமலர்ச் சேவடி வணங்கியாங் கேகுவ்
குன்ற வெம்முலைக் கொடியிடைக் குயின்மொழி பரவுந்,
துன்று தேவரை நோக்கின ளினையன சொல்வாள். (௩௩)

அரனு மாயிதழ்த் துளவணி மாலுமோன் றுரு
முருவ நோக்குவா னருந்தவ மியற்றுதற் குவந்து
பொருவி றென்புலத் தேகுவல் பூந்தருவிடைந்து
மருவி கூடம்பினும் பிருக்கைத்தி னேகுதி ரென்றான். (௩௪)

பூண்ட வஞ்சியினிற் போகலார் பொருப்பிளங் கன்னி
சேண்ட யுங்கிய சில்லரிச் சிலம்படி வணங்கி
யாண்டு நாங்களு மடைந்தனக் காட்செயு மாறு
வேண்டினோமது பணித்தியென் றிறைஞ்சினர் விண்ணோர் ( )

அளிக வழ்ந்தபூங் குழலினா ளமரரை நோக்கித்
தளிர்செய் புன்னையின் காவினீர் தருவுருத் தாங்கித்
தளிர றுவுயர்த் தலர்ந்தபைந் தோட்டுமென் மலரால்
விளைந றுங்கனி யான்மன மகிழ்ச்சியை விளைமின். (௩௬)

காது லாங்குழ லரம்பைய ராவுருத் தாங்கிப்
போது தோறுமின் பால்பொழிந் துளமகிழ் புரிவீ
ராத லாலெமக் காவுடை யாளெனச் சிறந்த
கோதி லுமையெவ் வுலகமுங் கூறிட வேண்டும். (௩௭)

அழிவில் யோகிய ருச்சக ராகியே பூசைத்
தொழிலி யற்றுமின் றும்புரு நாரதர் நீவி
ரிழிவி னல்லிசை பாடுமி னெரிவிளக் கிடுநீ
வழிவி ளக்குவாய் வளியெனப் பணிவிடை வகுத்து. (௩௮)

கணங்க ளிற்சிலர் மானிட வுருவமாய்க் கனிந்து
மணங்க மழ்ந்தபூ மாலைத்தொண் டியற்றுமின் மற்றோ
ரிணங்கி நின்றுசீ பாதசே வைத்தொழி லியற்றி
வணங்கு வீரென மலர்விழிக் கருணையைத் துரைத்து (௩௯)

அந்த ரத்தினி னமரர்க ளடிதொழ வானு
மிந்தி ரன்சமு கத்தினி னெழிலுட னியற்றுங்
கந்த மென்குழற் கணிகையர் மனுடகன் னியராய்
வந்து நம்முன னாடல்செய் வீரென வழங்கி. (௪0)

இன்று நீவிர்க ளியாவரு மிக்கணத் தெழுந்து
கொன்றை யஞ்சடைக் குழகன்வாழ் காசிகோ சன்ன
தென்ற மிழ்த்திரு மதுரையின் றெரிசனஞ் செய்து
மன்ற லந்துணர்ப் புன்னையம் பொதும்பரின் வம்மின். (௪௧)

மண்ணு நீரும்வெங் கனலியும் வல்விசை வளியும்
விண்ணு ஞாயிறுந் திங்களும் விரிந்தசீ வனுமாய்
நண்ணு மாசிவ லிங்கங்க ளனில வுரைப்பி
னெண்ணி லன்னனஞ் சத்தியும் வேறுபட் டிருக்கும். (௪௨)

வேறு பட்டதால் விருப்புட னிறைஞ்சுவோ ரெய்தும்
பேறும் வேறதாம் பிள்ளைவண் டின்னிசை மிழற்று
நாறு மார்ப்புன்னை வனத்தினி னமிழ்றிய வெல்லாக்
கூறு மோருரு வாகியிற் றிருப்பனங் குழகன். (௪௩)

என்று கூறியெவ் வுலகமு மீன்றரு ளிறைவி
மன்ற லந்துணர் மலிபுனற் பொருநையின் வடபாற்
பொன்றி கழ்ந்தபூந் தாதுகு புன்னையங் காவிற்
சென்று மேவினள் சேடியர் வழுத்தினர் செறிய. (௪௪)

உற்ற புன்னையம் பொதும்பரி னிளநறு வுயிர்க்குங்
கற்றை வார்குழற் கதிரிள வன்முலைக் கயற்கண்,
பற்றி லாதநுண் மருங்குலா ளாயிரம் பருவ
நற்ற வம்புரிந் திருந்தன ளுபக ணுவப்ப. (௪௫)

மாத வத்தினால் வருந்தின ளென்மனக் கொண்டோ
காதன் மீக்கொளத் திருவுளஞ் சாலவுங் கனிந்தோ
போதி லுன்முகன் றிகழாப் பொன்னவிர் சடையோ
னாதி நாயகி தவம்புரி காவின்வந் தடைந்தான். (௪௬)

தேனு லாந்துணர்ப் புன்னையம் பொதும்பரிற் சென்று
தானு மாலுமொன் றாகிய வடிவினைத் தயங்க
மானு லாங்கரத் திறையவன் காட்டினன் வணங்கிக்
கானு லாங்குழ லுமையவள் கண்டுகண் களித்தாள். (௪௭)

களித்து நெஞ்சகங் கனிந்துமெய் தண்கடல் விளையமுதந்
துளித்த போலுமஞ் சொல்லினள் பன்முறை துதிப்ப
முளைத்த வெண்கதிர் முகிழ்நிலா முடித்தவெம் முதல்வ
னளிப்பன் வேண்டிய தியம்பென வருளின னருளால். (௪௮)

தழைத்த காதலான் மலைமக டாங்குமிவ் வுருவ
மொழித்து நின்னுருக் தாங்குவா யென்னவுரைத் திடலுங்
குழைத்த பைந்தளிர்க் கொன்றையான் றன்னுருக் கொண்டு
மழைக்கண் மாதொடு புன்னையங் காவினில் வதிந்தான். (௪௯)

ஆங்க ணெய்திநீ ரருந்தவம் பற்பல வாற்றி
பாங்கு யிற்சிறு குதலைப்பாண் மகிழ்ந்தமுன் கண்ட
தீங்கி லவ்வுருக் காணினுஞ் சிந்தனை மயக்க
நீங்கு மென்றனன் விண்ணவர் சூழவரு நிமலன். (௫௰)

இவ்வி டத்தரா வரசர்கள் வியாழத்தை நோக்கி
யெவ்வி டத்தது கூறிய தலமியம் பென்னக்
கொவ்வை வாய்மலை மகளொடு குழகன்வீற் றிருந்து
மவ்வி டத்தினை யாங்கவன் கூறவா னமைந்தான். (௫௧)

வேறு.

விரிசடையோ னுறைவேணு வனத்திற்கு மேல்பால்வின் னைகடு தோய்ந்து, மருவிரிசன் பகவனத்தின் வடபாற்றன் னீடனருந்தி வண்டு பாடு, முருதுகமழ் கள்ளவனத்தின் றென் பாற்றென் கடன்ஞால முழுது மேத்த, வுரைசெறிந்த புன் னைவன மொன்றுளதா லதன்பெருமை யுரைக்கற்பாற்றோ.()

இனமலர்த்தா ரணிகூந்த லிமயமயி றிருமுன்ன ரிமை யோர் செய்த, *சனைபுளகச் சுனைபடிந்து தூய்தவமியற்றுதி ரேற் சுடர்வெண் கீற்றுப், பணிமதிய முடித்தபிரான் பசந்து ழைவா னொருபாலாம் படிவங் காட்டுந், தனிசிரர்வே றிலத ந்தக் தலத்தினிலே குதிரென்று சாற்றினனே. (௫௩)

எதுபினொன் றுரைத்திடலு மிருவிசம்பு நீங்கிநில னே றும் போற்று,நாகிளமென் மலர்ப்புன்னை நறுங்காவி னடைந்

* இமையோர்செய்தசுனை - சங்கபத்மர் முதலிய பாம்புகள் தோண்டுதற்கு முதலிலே தேவர்கள் தோண்டப்பட்டசுனை. அது நாகர்கள் தோண்டியபின்னர் நாகசுனையெனப்பெயர்பெற்றது.

தானை நளினமாடிப் பாகமென் மொழிபாக னடிநினைந்து
பசுந்துளவோன் பாதந் தேர்ந்து, சோகையுடன் மாதவங்க
ளுஞற்றினரான் மணிச்செஞ்சூட் டுரக வேந்தர். (௫௪)

அருகினிலாங் கிருவோரு மான்றபல மாதவங்க ளாற்
றுங் காலைக், கருவிடவா ளெயிற்றநந்தன் கார்மேக வண்ண
னடிக் கமலம் போற்றி, யுருகெழுவா னழுத்தடக்கை யொரு
வனுட னொன்றாகி னுருவு காண்பா, னிருநிலமே லரியதவ
மியற்றுகின்றான் பதுமனென விசைத்தா னன்றே. (௫௫)

விடப்பாந்த ளணைத்துயில்வோன் வெவ்வரா வரசின்
முகம் விரும்பி நோக்கிப், படைப்பானு மளிப்பானும் வேறு
ளரோ வமரரெனப் படுவோ ரெல்லாஞ், சுடர்ப்பால்வெண்
மதிக்கொழுந்து சூடினோன் கூறுவார் சொல்லுங் காற்றன்,
னிடப்பாலா நம்முருவு மாங்கவனே காட்டுமென விசைத்தா
னன்றே. (௫௬)

விடமொழுகு முள்ளெயிற்று வாசுகிவெண் மதிக்
கொழுந்து மிலைந்த வண்ணன், மடலவிழுஞ் செங்கமல மல
ரனைய குரைகழற்றாள் வணங்கி யேத்தி, யுடைதிரைப்பாற்
கடற்றுயில்வோன் றன்னுடனொன் றாகியநின் னுருவு காண்
பான், புடவியிசை யரியதவம் புரிகின்றான் சங்கனெனப்
புகன்றா னன்றே. (௫௭)

குருமணிச்செஞ் சூட்டரவங் கூறுமுரை மனக்கொண்டு
குழவித் திங்கள், விரிசடையின் மிசைபுனைந்தோன் வெள்ளி
வரை நடந்தனைய விடைமேற் கொண்டு, திரைசெய்கடல்
பருகுமுனி தெள்ளுதமிழ்த் தென்றிசைக்கோர் திலக மாகி,
யிருவிசும்பு தவழவுயர்ந் திணர்விரியும் புன்னைவனத் தேகி
னான். (௫௮)

குழவியிள மதிக்கொழுங் குடுமிநெடு மாணிக்கக் குன்று
சேர்ந்து, பொழிகதிர்சூழ் முழுநிலப் பொருப்பென்னத் தன்

றொருபாற் புவனங் காக்கு,மழு வுமி ழுங் கூராழி யரவணையா
னுருத்திகழ வந்தி வண்ணன், விழிநவரும் வனப்பினெஞ்சும்
வெவ்வரா வரசர்முனம் வெளிப்பட் டானே. (௫௯)

## வேறு.

எறிதிரைக் கங்கை யாறுவட் டெடுக்கு மீர்ஞ்சடை
யொருபுடை யிலங்கச், செறிகதிர் பரப்பு மணிமுடி யொரு
பாற் சேட்டிளம் பரிதியிற் றிகழப், பொறிவரி யரவக் கொ
டுங்குழை யொருபாற் பொலிதரப் புதுவெயிற் கற்றை,
நிறைதருமகரகுண்டலமொருபா னீடுருள்பருகுபு நிலவ. (௬௦)

கடல்விளை பவளச் சடையின்மேற் கிடந்த கலைமதிக்
குழவிவிட் டெறிக்கு, நெடுநிலாக் கற்றை தவழ்வது போல
நீற்றணி யொருபுடை நிலவப், படரொளி பரப்பும் பசும்
பொனின் மௌலிப் பருமணி கொழித்திடு நிலச், சுடர்
தவழ்ந் தென்னத் தேங்கமழ் நானத் திலதமோர் புடை
யினிற் றுலங்க. (௬௧)

வழிவெங் கனல்கான் மழுப்படை யொருபா லொளிர்
தர வுருகெழு தோற்றத், தாழிமற் றொருபா லழலுமிழ்ந்
திலங்க வழல்விட மொழுகுமுள் ளெயிற்றுப், பாழிவாய்த்
துத்திப் பஃறலைக் கவைநாப் பருமணி கெழுமுசெஞ் சூட்
டுச், சூழர வொருபாற் றுயல்வர வொருபாற் சுடர்விடு
பசப்பொனாண் டுலங்க. (௬௨)

பிள்ளைவண் டரற்று நனைபயிற் கடுக்கை பிணையலோர்
புடைநறு பயிற்ற, வின்னறு மென் முகைய பசுந்துழாய்ப்
படலை விரையுயிர்த் தொருபுடை யிடைய, வள்ளுகிர்ப் பிடவ
ப்பூவா யுழுவையம் பசுங்கோல் வாய்த்தொரு மருங்கினிற்
றுழ, வொள்ளொளி விரிக்கு மாடகப் பசம்பொன் னுடை
யொருபுடைசெறிந் தொளிர, (௬௩)

உரைபெறு வேதத் தச்சியிற் றிருக்கு மொருமல ரடி
யின்மேற் செறிந்து, விரியிருள் பருகு மெரிமணிச் சூட்டு
வெவ்வரர் வணிகழன் மிளிரக், கருவிட முயிர்க்கு முள்ளெ
யிற் றகல்வாய்க் கட்செவிப் பஃறலைக் கிடையா, திருநில
மளந்த வொருமல ரடிமே லிலங்கொளிப் பொலங்கழ லிலங்க.

வேறு.

தூளிபரந் திமைக்க நின்று வுருவுகண் டுருகி யுள்ளங்
களிகொள வடிவிற் றாழ்ந்து கைம்மலர் முடியிற் கூப்பி
யினைதரப் பரமா னந்த மெய்யினிர் விதிர்ப்பக் கண்க
டுளிகொள வரக வேந்தீர் பன்முறை துதித்தா ரன்றே (௬௫)

நாறிதழ்க் கமலச் செங்க ணளிமலர்த் துளப மாலுன்
கூறென வுணர்கி லாது கூறரி யின்மை யாலே
வேறென வுணர்ந்து ளேற்கு விழியருள் சுரந்த தென்னை
யாறணி கடவு ளென்றுங் கடிதொழு துரைத்தான் பத்மன் ().

அவ்வுரை கேட்ட லோடு மகமகிழ்ந் தவரை நோக்கி
யெவ்வுர மேனு மீவ னிசைமினீர் விழைந்த தென்னக்
கோவ்வைவாய் மடந்தை பாகன் கூறலு மணிச்செஞ் சூட்டு
வெவ்வரா வரசர் தாழ்ந்து வேண்டுவ விளம்ப லுற்றார் (௬௭)

ஐயநின் கூறே மாலு மயன்முதற் றேவு மென்னு
மெய்யுணர் வேயெஞ் ஞான்றும் விளைவுற வேண்டு மீங்கே
கொய்யுறற் போது தாழ்உயுன் குறைகழ லிலங்கு கோன்றீண்
மையற வழுத்தி யாங்கள் வைகலும் வைகல் வேண்டும். (௬௮)

தொடுகட லுடுத்த பாரிற் சொல்லரும் பாவ மீட்டுங்
கொடியருங் மொருகா லந்தண் குவளையஞ் சுனைநீ ராடிக்
கடிநறு வொழுகுஞ் செய்ய கமலமொத் திலங்கு நின்பொன்
னடியிணை வணங்கப் பெற்றா லழிவில்வீ டெய்தல் வேண்டும். ()

எட்டிணர்ப் புன்னை நீழ லென்றும்விற் றிருந்து ஞாலம்
வேட்டன வழங்கல்வேண்டும் விமலவென் றிறைஞ்சலோடுஞ்
சேட்டநல் வரங்க ளெல்லாங் கேட்டவா றருளி யாங்குச்
சூட்டரா வரசர்க் கல்லாற் றேன்றல னுறைந்தா னன்றே.()

சங்கர நாராயணரான சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் ௩௩௩.

---

## சங்கர நாராயணரான சருக்கச் சுருக்க வசனம்.

சிவபிரானைத் தியானித்தவராய்க் குற்றமற்ற புராணங்களெல்லாந்தெரிந்த சூதமுனிவர் தாருகாவனத்து இருடிகள் கேட்க, அன்போடு சொல்லத்தொடங்கினர்:—"காசிபமுனிவர் மனைவிகளிருவரில் கத்துருவென்பவள் ஆதிசேடன் முதலாகிய பாம்புகளைப் பெற்றனள். வினதையென்பவள் கருடனைப் பெற்றனள். அக்கருடனும் பாம்புகளும் விரோதித்துச் சண்டை செய்ய, அனந்தன் முதலாகிய பாம்புகள் பயந்து கருடன் பாதத்தில் வந்து விழுந்து எங்களை யுன்சரீரத்திலாபரணமாகத் தரித்துக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க, உடனே கருடனும் ஆபரணமாக்கிச் சிநேகம் பாராட்டினன். அதன்மேல் பாம்புகளெல்லாம் நாகலோகம் போய்ச் சேர்ந்தன. பின்னர் ஆதிசேடன் விஷ்ணுமூர்த்திக்குப் பாயலாகி யிருந்தனன். அட்டநாகங்களிலொன்றாகிய வாசுகியென்பவன் சிவபிரானை வணங்கி அவருக்கு ஆபரணமாகி யிருந்தனன். அக்காலத்தில் எல்லாச் சாத்திரங்களுமறியும்பொருட்டுக் காற்றையும் உண்ணாமல் சங்கன், பதுமன் என்னும் நாகர் இருவர் வாசுகியிடத்தும் ஆதிசேடனிடத்தும் அன்புவைத்துத் தவஞ்செய்வாராயினர்.

அங்ஙனம் மேலுமேலும் அரியதவங்கள் செய்ய அவ்விரண்டு நாகர்முகத்தினின்றுமெழுந்த விடத்தின் புகையெங்கும் வியாபித்தலால் நாகங்களெல்லாந் துன்பமுற்றுப் பின்னர்த் தெளிந்தன.

அதன்மேல் வாசுகியிடத்திலும் ஆதிசேஷனிடத்திலுஞ் சங்கபத்மர் சென்று தங்களபிப்பிராயத்தைச் சொல்லுதலும், அவ்விருவருங் கேட்டுச் சிவபிரானிடத்திலும் விஷ்ணுமூர்த்தியிடத்திலும் விடைபெற்று நாகருலகம் வந்து சேர்ந்து சங்கபத்மருக்கு வேண்டும் வரங்களைக் கொடுத்து முன் போலத் தம்மிருப்பிடத்திற்குச் சென்றனர். அதன்மேல் சங்கன் தவஞ்செய்து சிவபெருமானுக் கடிமையாயினன். பத்மன் விஷ்ணுவுக்கன்புடையவனாகியடிமையாயினன். பின்னரிருவரும் விரோதித்துத் தங்கள் தங்கள் கடவுளைப் பெரிதென்று பேசிச் சண்டைசெய்தனர்; அது கண்ட நாகங்கள் உங்களுக்குத் தெளிவாக நியாயங் கூறுபவர் இங்கில்லை, பூலோகத்துக்குச் செல்லுங்களென்று கூறின. அது கேட்டலும் உடனே பதஞ்சலி முனிவருடைய பாதத்தை வணங்கி யநேக சாஸ்திரங்களெல்லாம் படித்துக்கொண்டு, மனிதவுருவெடுத்துப் பூலோகத்துக்குப்போய்ச் சிவதீர்த்தம், விஷ்ணுதீர்த்தங்களிலே தீர்த்தமாடிக் காசிக்ஷேத்திரத்தில் வந்து அங்குள்ள மகருஷிகளிடத்தில் சிவன் பெரியன் விஷ்ணு பெரியனென்றுகருவங்கொண்டு கூறினர்.

அதுகேட்ட அவர்களுள் சிவபிரானே யெல்லார்க்கும் பெரியவர்; அவரிடத்தில் விஷ்ணு ஐக்கப்பொருள் (கலந்தபொருள்) ஆகுமென்று மயக்கமில்லாத அத்திரிமுனிவர் நல்லசாஸ்திர முறைப்படி சொல்லினர். அந்தவார்த்தையை விஷ்ணுவினிடத்தில்வைத்த அன்பால் பத்மன் உட்கொள்ளாதிருக்க, மகருஷிகளைப் பார்த்து மயக்கமுற்ற உங்கள் வழக்கு இவ்விடத்தில் தீராமாட்டாது, தேவேந்திரன் சபைக்குச் செல்லுமென்றனர். உடனே சங்கபத்மராகிய அரசர்கள் தேவசொரூபத்தைப் பெற்றுத் தேவலோகத்தையடைந்தனராகி, நீலமலைமேல் சந்திரகிரணந்தவழ்தல் போல இரண்டு பக்கமும் தெய்வப்பெண்கள் வீசுஞ்சாமரத்தினொளி புயத்திலே பாயவும், மேகத்தைக் கண்டு நடிக்கின்ற மயில்கள் போல அரம்பை முதலிய மாதர் நடனஞ்செய்யவும், கற்பகமலர்களினின்று சிந்துந் தேன்றுளிதலைமேல் தெரிக்கவும், தும்புரு நாரதர் பாடும் வீணையிசைத்தேன் காதுகளிலூற்றவும், மேகந்தாங்கி நின்ற சூரியனைப் போன்ற செழும்பொன் மணிக்கிரீடம் தலையிற் பிரகாசிக்கவும், இந்திராணி தழுவுமார்பில் இரத்நப்பதக்கங்கள் மின்ன இளஞ்சூரியன் விளங்கினாற் போலும் மாணிக்கங்கள் பதித்தபொன்னூலாகிய

சிங்காதனத்திலிருந்த தேவேந்திரனைக் கண்டு ஆசையோடு வணங்கி நிற்றலும், இந்திரன் பார்த்து நீங்கள் வந்த காரியம் என்னென்று வினவினன்.

கயிலாசத்திலெழுந்தருளியிருக்குஞ் சிவபிரானே பெரியவனென்றும் தாமரைக்கண்ணராகிய விஷ்ணுவே பெரியவனென்றும் நினைத்து வழக்கிட்டு, அது தீர்ப்பதற்கு இங்கே வந்தனமென்று சங்கபத்மர் இருவருங் கூறினர்; அவ்விருவர் வார்த்தையும் இந்திரன் கேட்டுப் பக்கத்திலிருந்த தன் குருவாகிய வியாழபகவானை நோக்கி, இவர்கள் மனந்தெளியும்படி கூறுமென்று விண்ணப்பஞ் செய்தனன்; அவரும் மயங்காத விதமாகச் சொல்லுவார்: திருக்கயிலாசமலையிலே யுமாதேவியார் பரமேசுவரனை வணங்கிச் சுவாமீ! விஷ்ணு மூர்த்தியுடன் நீர் பொருந்தியிருக்குந் திருக்கோலத்தைக் காட்டவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனர். சிவபிரான் அவளை நோக்கிக் குற்றமற்ற தவஞ்செய்தாலன்றி, அந்த வடிவங் காணுதற்கரியது என்றருளிச் செய்தனர். அப்பொழுதே உமாதேவி சுவாமீ! தவஞ்செய்தற்கேற்ற ஒரு இடம் அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்கச், சிவபிரான் சொல்லுவார். அகத்தியமுனிவரிருக்கும் பொதிகை மலைப்பக்கத்தில் புன்னை விருக்ஷவடிவமாக அநேகர் தவஞ்செய்தனர். அங்கே நீயுஞ் சென்று தவஞ் செய்வாயாக. அப்போது நீ விரும்பிய திருவுருக்காட்டுவோம். விஷ்ணுவும் நாமும் வேறில்லாமையை நினைத்துத் தரிசித்துப் பெரியமாதவர்களும் பெறுதற்கரிய மோக்ஷத்தையடைவர். இவ்விடத்தைவிட்டு நீ போய்த்தவஞ் செய்யுமிடத்தில் நாமும் விசேடமாக இருப்போம். அந்தத்தலத்தை நினைத்தவரெல்லாரு மோக்ஷமடைவர்" என்றருளிச் செய்தனர். உடனே அவருடைய திருவடிகளைப் பணிந்து உமாதேவியார் தம்மை வணங்கிப் பக்கத்திலே நின்ற தேவர் முதலோர்களை நோக்கிச் சொல்லுவார்.

"சங்கரநாராயண வடிவந் தரிசிக்கும்பொருட்டு அரிய தவஞ் செய்தற்குத் தென்றிசைக்குச் சென்றுவருவேன். நீங்கள் அவரவரிருப்பிடத்துக்குப் போங்களென்று கட்டளையிட்டருளலும், தேவர் முதலியவர்கள் உமாதேவியாரை விடுப்பிரிந்திருக்கமனமில்லாதவராய் அவரை வணங்கி, "அவ்விடத்து நாங்களுங் கூடவே வந்து உனக்கு அடிமை செய்து கொண்டிருப்போ" மென்று

வேண்டிக்கொண்டனர். உமாதேவியாரும் அதற்கிசைந்து "நீங்கள் புன்னைவனத்திலே வந்து விருக்ஷவடிவாயிருந்து தேன் மிகுத்தலர்ந்தபூவாலுங் கனியாலுஞ் சந்தோஷிப்பித்திருங்கள். தெய்வப் பெண்களே நீங்களெல்லாரும் ஆ (பசு) வடிவமெடுத்து வந்திருந்து பால் கொடுத்து மகிழ்ச்சியைச் செய்யுங்கள். ஆவாகிய உங்களையுடைய காரணத்தாலெனக்கு ஆவுடையாள் என்ற பெயரையுலகெலாஞ் சொல்லவேண்டும். முனிவர்களே! நீங்கள் ஆதிசைவர் (பட்டமார்) ஆகி வந்திருந்து நம்மைப் பூசை செய்யுங்கள். தும்புரு நாரதராகிய நீங்கள் வந்து நல்ல இசைப்பாட்டுப் பாடுங்கள். அக்கினியே நீ வந்து திருவிளக்கிடுக. வாயுவே நீ வந்து திருவலகிட்டுக்கொண்டிருக்க" என்று அவரவர்களுக்குரிய பணிவிடைகளைக் கற்பித்துச் சிவகணங்களிற் சிலரை நோக்கி "நீங்கள் பனிதவடிவெடுத்து வந்து புட்பப் பணிவிடைசெய்யுங்கள்" என்றும், மற்றவரை "நீங்கள் வந்து நம்முடைய ஸ்ரீ பாததரிசனஞ் செய்து கொண்டிருங்கள் என்றும், அரம்பை யுருவசி முதலிய நீங்கள் மானிடப் பெண்கள் வடிவாகிவந்து நம் முன்னே நடனஞ்செய்திருங்கள். இப்பொழுதே புறப்பட்டு எல்லாரும் காசி, கோகன்னம், மதுரையைத் தரிசித்துக்கொண்டு புன்னைவனத்தில் வந்து சேருங்கள். பிருதுவி முதலிய பஞ்சபூதங்களும், சூரியனும், சந்திரனும், ஆன்மாவுமாகிய அட்டமூர்த்திகளாகிய சிவலிங்கங்கள் பூலோகத்திலே பலவுள. அங்ஙனமே சத்திகளும் வேறாக அனந்தமுள்ளன. சிவமும் சத்தியும் வேறுபட்டகாரணத்தால் வணங்குவார்களுடைய பலன்களும் வெவ்வேறாகும். புன்னைவனத்திலே யெல்லா ஆடி சங்கரரும் பிரிவுபடாமல் ஒன்றாகவே நம்முடைய தலைவராகிய சிவபிரானெழுந்தருளியிருப்பர்" என்றுஞ்சொல்லி விட்டுச் சர்வலோகமாதாவாகிய உமாதேவியார் தாம்பிரபருணி நதிக்கு வடதிசையிலுள்ள புன்னைவனக்ஷேத்திரத்திலெழுந்தருளி வந்திருந்து தோழிப்பெண்கள் சூழ்ந்திருக்க ஆயிரவருடந்தவஞ் செய்திருந்தனர்.

திருக்கயிலாசபதியாகிய சிவபிரான், உமாதேவி தவத்தினாலே திருமேனியிளைத்து விட்டனளென்று நினைந்தோ, பிரிந்திருந்ததனால் ஆசையதிகப்பட்டோ புன்னைவனத்திலெழுந்தருளி வந்து சங்கரநாராயணராகிய திருவுருவங்கொண்டு காட்சி கொடுத்தனர்;

அக்காட்சியை யுமாதேவியார் கண்கள் களிகூரத் தரிசித்து, அமுதத்துளிபோன்ற வார்த்தைகளாலே பலமுறை தோத்திரஞ்செய்து நிற்க, சிவபிரான் தவக்கோலத்துடனின்ற உமாதேவியாரைநோக்கி "உனக்குவேண்டிய வரத்தைக் கேட்பாய் கொடுப்போ" மென்றருளிச் செய்தனர். உமாதேவியார் சுவாமி! இந்தத்திருக்கோலத்தை மறைத்து உம்முடைய திருவுருக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்தலும், சிவபிரான் சிவலிங்க வடிவமாகி அவ்வுமாதேவியாருடன் புன்னை வனத்தி லெழுந்தருளி யிருந்தனர்.

"அந்த இடத்தில் நீங்க ளரியதவஞ்செய்து, உமாதேவியார் தரிசித்த சங்கரநாராயண வடிவக்காட்சியைக் கண்டால் உங்கள் மனமயக்கம் நீங்கு" மென்று சங்கபத்மராகிய நாகர்களுக்குத் தேவ குருவாகிய விடாழுபகவான் சொல்லினர். நாகராசாக்களாகிய சங்கபத்மர் எவ்விடத்திலுள்ளது புன்னைவனமென்று கேட்க வியாழபகவான் சொல்லுவார்: "வேணுவனமாகிய திருநெல்வேலிக்கு மேற்கு, சண்பகவனமாகிய திருக்குற்றாலத்துக்கு வடக்கு, களாவனமாகிய கரிவலம்வந்த நல்லூர் (கருவைநல்லூர்) க்குத்தெற்காகப் புன்னைவன க்ஷேத்திரமுள்ளது; அதன்பெருமை சொல்லும் பகுப்புடையதன்று. அந்தத்தலத்தில் வீற்றிருக்குங் கோமதியம்மை சந்நிதிக்குமுன்னே தேவர்கள்செய்த சுனையொன்றுள்ளது; அதிலே தீர்த்தமாடி நீங்கள் தவஞ்செய்வீராளுற் சிவபிரான் தானுந் திருமாலுமொன்றாகிய திருக்கோலத்தைக் காட்டுவர். அங்கே போ" மென்று கூறினர். அதுகேட்டுச் சங்கபத்மர் புறப்பட்டு விண்ணுலகமு மண்ணுலகமுந் துதிக்கும் புன்னைவனத்திலேவந்து கோமதியம்மை சந்நிதியிலிருக்குந் தேவர்களாற்செய்யப்பட்டசுனையில் தீர்த்தமாடிச் சிவபிரான்றிருவடியையும் விஷ்ணுமூர்த்தி திருவடியையு நினைந்து தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

இங்ஙனம் சங்கன் பதுமனென்னு மிருவரும் ஒருவருக்கொருவர் சமீபத்திலே யுயர்ந்தபல தவங்களைச் செய்துகொண்டிருக்குங் காலத்தில் மேகவண்ணனாகிய விஷ்ணுவினிடத்திலே யாதிசேடன் எழுந்து "சுவாமீ! சிவபிரானுடனொன்றாயிருக்கும் உம்முடைய திருமேனியைத் தரிசிக்கும்பொருட்டுப் புன்னைவனத்திலே பதுமன் அரிய தவஞ்செய்கின்றான்" என்னலும், ஆதிசேடனை நோக்கி விஷ்ணுமூர்த்தி சொல்லுவார்: "உலகத்தைச் சிருட்டிக்

கும்பிரமனும் காப்பவனாகிய மாலும் சிவபிரானுக்கு வேறாவாரோ? தேவர்களென்று சொல்லப்படுவோ ரெல்லாருஞ் சிவபிரான் அடிமைகளாவார். தமது இடப்பக்கத்திலே யிருக்கிற என்னுடைய வடிவத்தை அச்சிவபிரானே காண்பிப்பர்'' என்றனர். வாசுகியெழுந்து தன்னுடைய தலைவராகிய பரமேசுரன் பாதார விந்தத்தை வணங்கித் துதித்துப் ''பாற்கடலிலே நித்திரை செய்யும் விஷ்ணுவுடனொன்றாயிருக்கும் உம்முடைய திருவுருவைக்காணும் பொருட்டுப் புன்னைவனத்திலே சங்கன் தவம்புரிகின்றான்'' எனத்தெரியப்படுத்தினன். அந்தவார்த்தையைத் திருவுளத்துட்கொண்டு சிவபெருமான் வெள்ளியங்கிரி பூமியிலே நடந்தாற்போலும் தருமரிஷபத்தின் மேலெழுந்தருளி அகத்தியமுனிவர் வசிக்குந் தென்றிசைக்குத் திலகமாக விளங்கும் புன்னைவனத்தில் மாணிக்கமலையைச் சேர்ந்த நீலமலையென்று சொல்லப் பேரழுதுடனே சங்கபத்மர்க்கு முன்னேவந்து ஒருபக்கத்தில் கங்கையைத்தரித்த சடாமகுடமும் நாககுண்டலமும், சந்திரகிரணம் போன்ற விபூதியும் மழுவாயுதமும் சர்ப்பாபரணமும் கொன்றைமாலையும் புலித்தோலும் சர்ப்பமாகிய வீரக்கழலும், மற்றொருபக்கத்தில் இரத்நகிரீடமும் மகரகுண்டலமும் இரத்நகிரீடத்தின் நீலமணியினொளிபோன்ற கஸ்தூரிப் பொட்டும் சக்கராயுதமும் பொற்பூணாரமும் துளசிமாலையும் பீதாம்பரமும் பொன்னாலாகிய வீரக்கழலும், பிரகாசிக்க நின்று காட்சி கொடுத்தனர்.

இங்ஙனங் காட்சி கொடுத்த சங்கரநாராயண வடிவத்தைத் தரிசித்து மனமுருகித் தாழ்ந்து வணங்கிப் பரமானந்தமுண்டாக மெய்ம்மயிர் சிலிர்ப்பக் கண்கள் ஆனந்த நீர்த்துளிபெருகச் சங்கபத்மர் பலதரந் தோத்திரஞ்செய்தனர். அதன்பின் ''கமலக்கண்ணனாகிய விஷ்ணு உம்முடைய அம்சமென்று அறியும் புத்திகூர்மையில்லாமல் நீங்களிருவரும் வேறென்றெண்ணும் அடியேனுக்குத் திருவருள் செய்ததென்னையோ? கங்கையைத் தரித்த கருணையங்கடலாகிய கடவுளே'' யென்று பத்மன் கூறுதலும், அதுகேட்டுத் திருவுளமகிழ்ந்து சங்கபத்மரிருவரையு நோக்கி ''யுங்களுக்கு வேண்டிய வரமெதுவாயினுங் கொடுப்போம் கேளுங்கள்'' என்று சங்கரநாராயணராகிய பெருமான் கட்டளையிட, சங்கபத்ம ரிருவரும் அவரை வணங்கிச் ''சுவாமீ! பிரமவிஷ்ணுமுதலிய தேவரெல்

லாரும் உம்முடைய அமிசமென்னும் உணர்ச்சி யெய்தக்காலத்து மெங்களுக்கு விருத்தியாகவேண்டும். உம்முடைய திருவடிகளை யருச்சனைசெய்து தோத்திரஞ்செய்து நாங்க ளெப்பொழுதும் உம்மிடத்திலே யிருக்கவேண்டும். இந்தப்பூலோகத்தில் பாவத்தைச் சம்பாதிக்குங் கொடியவரும் ஒருதரம் இந்தச்சுனையிலே தீர்த்தமாடி யும்முடைய திருவடிகளை வணங்குவாராகில் அவர்கள் மோக்ஷமடையவேண்டும். நீரும் இந்தப் புன்னைமரநீழலிலிருந்து உலகத்தார் விரும்பிய வரங்களைக் கொடுக்கவேண்டும்" என்று கேட்க, அவ்வரமே கொடுத்தருளிச் சங்கபத்மருக்கன்றி மற்றொருவருக்குந் தெரியாமல் மறைந்து புன்னைமரநீழலில் சங்கரநாராயணராகிய பெருமான் எழுந்தருளியிருந்தனர்.

## எட்டாவது:

## உக்கிரன்வழிபடுசருக்கம்.

என்றது முனிவர் வாழ்த்தி யினமலர் முருகு விம்மு
நன்றலம் புன்னை நீழன் மறைந்துறை யண்ண றன்றி
நின்றவா றுரைத்தி யென்ன நெஞ்சகங் குழைந்து கூற
நன்றென மகிழ்ந்து சூதன் மீளவு நவில லுற்றான். (௧)

மலையமா மலையிற் சாந்தும் வயிரமும் வரன்றிப் பாயு
மலைகுலாம் பொருநை யாற்றி னரன்கரை மணலூர் மேவுஞ்
சிலைகுலாங் குவவுத் திண்டோட் டென்னவ *னரவாய்வேம்பி
னிலைகுலா மலங்கன் மார்பி னெண்டிசை புரக்குங் கோவே. (௨)

மற்றவர் குலவுத் திண்டோண் மாறுகொண் டெழுந்து நின்ற, பொற்கிரி திரித்துச் செஞ்சேற் பொறித்துவெம் புலிக்குரன் போக்கி, விற்கொடி தடிந்தோ னும்பர் விண்ணு விழுந் திருந்த தன்னை, கொற்றைசகர வலவன் முந்நீர்க் குமரி யந் துறையி னானே. (௩)

செருமுகந் தேற்ற தெவ்வர் செம்மல ரகலம் போழ்ந்து
சொரிபசுங் குருதி மாந்திச் சுவைத்திடு மிணம்வாய்ப் பில்கி

* அரவாயிலை - அரம்போலும் கீர்யினையுடைய இலை. வாய் - விளிம்பு.

பெரிதுமிழ்ந் திலங்கு வேலா னிருநில வரைப்பின் மன்னர்
முருமணி மவுலி தேய்க்குங் குரைகழற் காலி னானே. (௪)

மழைக்கருந் தடங்க ணல்லார் வனமுலைக் கோடு ழக்கி
யுழக்கலி னுடைந்து பைந்தே னூற்றிருந் தொழுகுந் தாமன்
பழுத்தமுந் தொழுத தீஞ்சொற் பயினுபா வல்ல ராய்ந்து
கொழித்ததீந் தமிழ்கூட் டுண்ணுங் கூடலம் பதியி னானே. ()

முடிவிலா வுலகின் மன்னர் முடித்தழும் பிருந்த தாளாற்
படுதிரை சுவற்றி நீலப் பணிமுகி லேறி னீக்கிக்
கடிமலர் முருகு விம்முங் கற்பக நீழல் வேந்தின்
சுடர்விரி பசும்பொன் மௌலி தொடியினுற் றுகள்செய் தானே ()

மோட்டிள முளைகயிற் றோன்றி முருகுகொப் பளிக்கு மன்றற்
றோட்டுமென் கமல வாவித் துறைதொறா மொழுந்து துள்ளிப்
பாட்டிளம் வண்டு மூசப் பாளைவாய்க் கமுகி னேற்றிச்
சேட்டிளங் கயல்கள் பாயுஞ் செந்தமிழ் நாட்டின் வேந்தே. (௭)

கீர்தடு வெள்குளி வேகக் கடாக்களி யானை மன்னர்
வெந்திறல் விளக்க லாற்றார் வெருண்டுதா மகளி ரென்னப்
பந்தொடு பாவை நல்கிப் பணிமதிக் கவிகை நீழ
லுந்துநீர் ஞாலங் காக்கு முக்கிர னென்னுங் கோவே. (௮)

பாடல்வண் டார்த்து மூசப் பச்சிளந் தேற லூற்றுந்
தேமலர் கடம்பி னீழற் சுடரிழை யொருபா லாகக்
கூடலம் பதியு ளீசன் குரைகழ லிலங்கு நோன்றா
ணேட்டாருஞ் சென்று சூடு நகைமணி முடியி னானே. (௯)

ஆபவ னொருநாட் டெண்ணீ ரலைகடன் முகட்டிற் றோன்றிப்
பாயிருட் பிழம்பு சீக்கும் பல்கதிர்ப் பரிதி யன்ன
சேயொளி மவுலி தாங்கித் திருமணிக் குன்றில் வீசு
மாயிரு ஞாலம் விற்கு மணிகளா வலைய மின்ன. (௰)

அதிர்திரைக் கடலிற் பட்ட வலம்கொளி யாரந் தோடும்
பொதியினிற் பிறந்த வாரம் பொருவியுந் மலங்கன் மார்பிற்

றனைமலர்ப் பாரி சாதத் தண்ணிழ லுறையும் வேந்தின்
கதிர்மணி பாரந் தாங்கிக் கனைகழல் வீக்கி னானே. (கக)

ஆழ்கடல் வரைப்பிற் றெய்வ மருவரை யகலம் போழ்ந்த
போழினுற் படிவண் டோச்சிப் பொருதிறற் கூற்று மஞ்ச
வூழிவெங் கனலிற் சீறி யுருமென வுரறி யார்க்கு
மேழுயர் களிநல் லியானை யெருத்தமேற் றோன்றி னானே. ()

விண்ணுற நிவந்த கோட்டு மேருமால் வரையிற் நீட்டு
மண்ணலஞ் சுறவு வாய்த்த வாடலம் பதாகை யோங்கத்
தண்ணிலாக் கவரிக் கற்றை யிருபுடை யெழுந்து தாழக்
கண்ணகன் ஞாலங் காக்குங் கடவுள்வெண் குடைநி ழற்ற. ()

பாய்திரைக் கடலிற் பட்ட பானிறப் பருவாய்ச் சங்கஞ்
சேயுயர் விசும்பி னோடு திசைமுகங் கிழிய வார்ப்ப
யுயர் குடுமிக் குன்ற மிசைத்தவழ் கமஞ்சூற் கொண்டல்
வாய்திறந் தார்ப்ப தென்ன மண்கணை முழவு விம்ம. (கச)

பருமணிச் சூட்ட ராவி னனந்தலைக் கிடந்த ஞாலத்
திகல்பெறு வாசி நம்மே லெழுந்தன போலு மென்று
பகலவன் பசும்பொற் றேரிற் பாய்பரி வெருவி யோட
வகலிரு விசும்பிற் றாவு மலங்குளைப் புரவி சூழ. (கரு)

படர்சிறை யரிந்து வென்ற பழம்பகை தீர வேண்டி
யிடல்கெழு மவுணர்ச் செற்ற வெந்திறற் குலிச வேந்தின்
சுடர்முடி தூளி யாகத் தொடிபெறு கொற்ற நோக்கித்
தடவரை யடைந்த போலத் தறுகண்மா வியானை செல்ல. ()

எரிசுடர்க் கற்றை கக்கு மிலங்கொளிப் பரிதி பொற்றேர்
விரைதரு கயின மாவின் வெந்தழ லாற்று மாபோற்
கருவிவா னகடு கீண்டு கதிரின நிலவு கான்ற
குருமணிக் கொடிக ளாடுங் கொடிஞ்சிமாத் தடந்தேர் சூழ. ()

வானம ருழுவை நீந்தி மற்புயத் துயர்ந்து வீங்கு
தோளினர் திருவில் வீசுந் தோடுகழ லரல யாத்த

தாவிலார் முருகு விம்மு தண்மலர்த் தொடையன் மார்பர்
கோளரி யேறு மானுங் கொலைத்தொழில் விளைஞர் சுற்ற. (௧௮)

எரிமணிக் குன்றஞ் சேர்ந்த மரகத வல்லி யேய்க்கு
மருள்சுரந் தலகை யீன்ற வங்கயற் கண்ணி பாகம்
பிரிவில் னினிது வாழும் பிறைக்கொழுந் தணிந்த பெம்மான்
மரைமல ரனைய பொற்றாள் வணங்குவா னேகி னானே. (௧௯)

புண்ணுறு புலவு வேலான் புதுநறு வுயிர்க்கும் புன்னைத்
தண்ணறுங் காவி னெல்லை சார்ந்துழித் தறுகட் சீற்றத்
தண்ணலங் களிற யானை யாடல்வெண் கோடு பாய்ந்து
மண்ணகங் குழிப்ப நீல வரையென வீழ்ந்த தன்றே. (௨௦)

கொலைமதத் தறுக ணியானை கோடுமண் குழிப்ப வீழ்ந்த
நிலைமைமற் றென்கொ லென்று மன்னவ னினைக்குங் காலை
மலைமகள் சாபந் தன்னாற் புலையனு மணிக்கி ரீட
னுலகடங் ஞாலங் காக்கு மரசன்முன் னெய்தி னானே. (௨௧)

வார்கழ லிலங்கு நோன்றாள் வந்துமுன் னிறைஞ்சி நிற்பக்
கூரிலை யலங்கல் வெள்வேற் கொற்றவன் குறித்து நோக்கி
யாரைநீ யென்ன லோடு மாய்வனந் திருத்தி யீங்குச்
சேர்தரு புலைய னென்றே செப்புவான் றொடங்கி னானே. ()

கொற்றவா விங்கு நாகக் கொழுமலர்க் காவொன் றுண்டதன்
மற்றத னிடையே தோன்றி வானுற நிவந்து நின்ற
புற்றினை யெறிந்த லோடும் பொறிவரி நாகந் தன்வா
யுற்றிட் டொன்றுதோன் றிற் றதின்றிற முரைப்பாரி யாரே. ()

கள்ளுயிர்த் தலர்ந்த கொன்றைக் கடிமலர்க் கண்ணியண்ணல்
வெள்ளெயிற் றரவ மாதல் வேண்டுமென் றுரைத்த லோடு
முள்ளிலை யலங்கல் வேலா னுங்கது காட்டு கென்று
வள்ளுறை கழிஇய வீரவாள் வயவரோ டேகி னானே. (௨௪)

போயவன் முருகு விம்மு புன்னையம் பொதும்பர் நீழற்
சேயுயர் புற்றின் பாங்கர்ச் சிவலிங்க மொன்று கண்டா

னையபே ருவகை வெள்ள மலைபுவட் டெடுத்துப் பொங்கத்
தீயவா ளரவந் தொட்ட சுனையினீ ராடச் சென்றான். (௨௬)

தேனொடுங் கரும்பும் வண்டுஞ் செவ்வழி பாட வின்று
சாறுலாம் பசுந்தேன் மல்குஞ் சாலியஞ் சுனைநீ ராட
மீனவே றுயர்த்த வண்மான் மேவினா னின்ற காலை
வானிடையெழுந்தோர்தெய்வவாய்விட்டுமொழிந்ததன்றே

பொங்குலா மலர்தூ வேத்தக் கூடலம் பதியி னேறும்
பொங்கிய வுவகை யோடு போதரு வருத்த நோக்கி
பங்கயக் கண்ணி யோடு மாலவா யமர்ந்த வண்ணா
லிங்கெழுந் தருளி நின்று னிருநிலம் புரக்குங் கோவே. ()

கோல்வளை யுமைபா லோடு கூரெயிற் றரவவேந்தர்
யேலொரா ளன்பு முற்றி யொட்டத்தவம் புரிதலாலே
மாலொரு பாதி யாகி வயங்கிட வடிவு விண்டோ
பாலமர் கடவுள் காட்டி யருளிய தலமு மீதால். (௨௮)

இன்னிளந் தென்றல் வாழு மிவ்வன முருகு விம்மு
புன்னையம்பொதும்பரென்னப் புகல்வரிப்பொதும்பர்வாழு
மின்னவிர் சடையி னானை விதிமுறை யருச்சி யென்றுச்
சொன்னவைகேட்டலோடுமகிழ்ந்தனன்சுடர்செய்பூணான் ()

தனைமலர்க் குவளை பூத்த தண்சுனைப் புனலின் மூழ்கி
மதிதவழ் பசும்பொற் கோட்டு மலயச்செஞ் சாந்து மன்றற்
புதுநறுப் போது மேந்திப் புன்னையம் பொதும்பர் வாழுஞ்
சோதியழற் சூல மேந்துங் குழகனை வழிபட் டானே. (௩௦)

மற்பக மலர்ந்த திண்டோண் மன்னவன் மகிழ்ச்சி கூர்ந்து
சிற்பநூற் றுறைபோ யுள்ளந் தெளிவுறு தச்சர்க் கூவிப்
பொற்பிதிரவிழ்ந்ததண்பூம் புன்னையம்பொதும்பரெல்லாங்
கற்பக நாடு நாணக் கடிநக ராக்கி னானே. (௩௧)

வானகந் துருவ நீண்ட மணிமதில் பரவை யேய்ந்த
தூநிறக் கொண்ட ராழ நிவந்துமண் டபங்க ளோங்கு

கூனிளந் திங்க டேய்க்குன் கோபுரந் திகழ்ந்து தோன்றத்
தேனுலாங் கொன்றை யார்க்குச் சினகர மியற்றி னானே. (௧௨)

ஒண்ணிறப் பசும்பொ னாழி யொளிபரந் திமைத்த லாலே
கண்ணினிற் பொலியுந் திண்டேர் காண்டக வியற்றல் செய்து
தெண்ணிலா வேணி யார்க்குச் சித்திரைத் திங்க டன்னில்
விண்ணவ ரிறைஞ்சி யேத்த விழாவினை நடத்தி னானே. (௧௩)

மஞ்சலாங் கடம்பி னீழன் மணிமிடற் றிறைவற் போற்றி
விஞ்சிசூழ் மதுரை மூதூர்க் கேகலான் கூழை வாழுஞ்
செஞ்சடை மதுரி யன்னாள் சேவடிக் கமலம் போற்றி
வெஞ்சின வடிவேல் வேந்தன் வியனகர் மேவி னானே. (௧௪)

விடம்பொழி யரவு போற்ற விழுசால் கூழை வாழு
மடந்தையோர் பாகன் பொற்றாள் வைகலும் வந்து போற்றி
யடங்கலர்ச் செகுக்கும் வேலா னப்பதுங் காலம் வைகி
யுடம்பொடு மழிவி லாத வுபர்கதி யெய்தி னானே. (௧௫)

பொருப்பிளங் கன்னி சாபம் பொருந்தலாற் புலைய னாகி
யருந்துன்னர் விரிந்த புன்னை வனத்துறை மணிக்கி ரீபன்
விரைத்துணர் தழையெய்ந் தோன்வெள்ளிவெற் படைந்தான் பின்ன
ரொருத்தியு மாங்கண் வைகி யுயர்கதி யெய்தி னானே. (௧௬)

உக்கிரன் வழிபடு சருக்கம் முற்றிற்று.

ஆகச் செய்யுள்-௧௬௪.

---

## உக்கிரன் வழிபடு சருக்கச் சுருக்க வசனம்.

---

(சங்கரநாராயணராகிய பெருமான் புன்னைவனத்தில் மறைந்தெழுந்தருளியிருந்தனர்) என்று சூதமுனிவர் கூற நைமிசாரணிய முனிவர் அவரைத் துதித்து, "அவ்வெம்பெருமான் பின்னர் வெளிப்பட்டிருந்த சரிதஞ் சொல்லியருளுக" என்று கேட்க மனமுருகி மகிழ்ந்து சூதமுனிவர் கூறுவாராயினர்:—

"பொதியமலையிற் சந்தனக்கட்டைகளையும் வயிரங்களையும் வாரிக்கொண்டு செல்லும் தாம்பிரபருணி நதிக்கரையிலிருக்கிற

மணலூரில் உதிக்கும் மலைபோலும் வலிய தோளையுடைய பாண்டியன் வேப்பமாலையைத் தரித்த தன் புயவலியாலெட்டுத் திக்குகளையுங்காக்கும் அரசன், தன்னுடைய புயங்களுடன் பகைத்துநின்ற மகாமேருமலையைச் செண்டாலடித்து, அதிலே தனது மீனக்கொடியை யெழுதிவைத்தவன், சோழனுடைய புலிக்கொடியைக் காட்டிலே துரத்தியவன், சேரனுடைய விற்கொடியை யறுத்துத் தள்ளினவன், தேவருலகம் கீழே யிறங்கியிருந்தாலொத்த கொற்கை நகரத்துக் கதிபதி, கன்னியாகுமரித் துறையையுடையவன், யுத்தக்களத்திலெதிர்த்த பகைவர் மார்பைப் பிளந்து, இரத்த முதலியவற்றையுண்டு பிரகாசிக்கும் வேலாயுதத்தையுடையவன். நிலவுலகிலுள்ள அரசர்களுடைய கிரீடங்களிலே உரோஞ்சும் வீரக்கழலையணிந்த பாதங்களையுடையவன், இளம்பெண்களுடைய கொங்கைகளாகிய கொம்புகள் பொருது கலக்கலால் அரும்புவிரிந்து பசிய தேனொழுக்கும் பூமாலை புனைந்தவன், முதிர்ந்த தித்திப்பாகிய சொற்களைப் பயிலு நாவினாலே யாராய்ந்து தமிழைக் கொள்ளைகொண்டுண்ணு மதுரைமாநகரத்தையுடையவன், பூலோகத்தரசர் மகுடத்தின்றழும்பிருந்த தன் பாதங்களால் கடல்நீர்வற்றச்செய்தவன், மேகத்தைத் தளையிட்டவன், தேவேந்திரனது பிரகாசம்பொருந்தியபொற்கிரீடத்தைவளையெறிந்து பொடியாக்கினவன், தாமரைத் தடாகங்களின் துறைதோறும் வாளைமீன்களெழுந்து துள்ளிக் கமுகமரத்தினுச்சியிலே தாவுந் தமிழ்நாட்டிற்குத் தலைவன், கட்டுத்தறியை முறிக்கின்ற கோபத்தையும் மதத்தையும்பொருந்திய யானைகளையுடைய தன்னோடு யுத்தஞ்செய்யமாட்டாமற் பயந்து நாங்கள் பெண்களென்று சொல்ல; அவர்கள் கைகளிலே * பந்தும் பாவையுங்கொடுத்து (அவரைப் போக்கிச்) சந்திரவட்டக்குடைநிழலில் உலகத்தை இரக்ஷிக்கும் உக்கிரனென்னுஞ் சிறப்புப் பெயருடையவன்;

இவன் வண்டுகள் முழங்கி மொய்ப்பத் தென்றற்காற்று வீசும் மலர்கள்விரிந்தகடம்பவனத்தில் மீனாக்ஷியம்மையிடப்புறமாகவிருக்

---

* பந்தும் பாவையுங் கொடுத்தல் பண்டைக்காலத்தரசர் வழக்கு. அஃதாவது:— தோற்ற பகைவர் வணங்குவாராயின் அவர் கையில் பந்தும் பாவையுங்கொடுத்து விளையாடச்சொல்லிப் பார்த்து விட்டுவிடுதல்; இதற்காகவே பந்தும் பாவையும் அரசர் தம் வாயிலிலே கட்டித் தூங்கவிட்டிருப்பர். (திருமுருகாற்றுப்படையில், "வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்பொருநர்த்தேய்த்தபோரருவாயில்") என்பதனாலுமுணர்க.

க மதுரைமாநகரத்தில் வாழுஞ் சோமசுந்தரக் கடவுள் திருவடித் தாமரைகளைத்தினந்தோறும் போய்த் தரிசிக்கு நியதியுள்ளவன். ஒருநாள் நவரத்ந கிரீடந்தரித்து இரத்நகுண்டலங்கள் ஒளிவீசவும், பெரிய பூமண்டலத்தில் விலையுயர்ந்த மாணிக்கங்கள் பதித்த வாகுவலயம் பிரகாசிக்கவும், முத்தாரமுஞ் சந்தனமும் பொலிவு பெற்ற மார்பிலே தேவேந்திரனாற் கொடுக்கப்பட்ட இரத்நாபரணத்தைத் தரித்து வீரக்கழலணிந்து, கடல்சூழ்ந்த இடத்திற் பகைவர் மலை போன்ற மார்பைப்பிளந்த பிளப்பால் (அப்பிளப்பில்) வந்து மொய்க்கும் வண்டுகளை விரட்டிப், போர்செய்யும் வலிய யமனும் பயப்படக் காலாக்கினிபோற் கோபித்து முழங்கும் எழுமுழமுயர்ந்த பிட்டத்தியானைமேலேறி உயர்ந்த சிகரங்களையுடைய மகாமேருமலையி லெழுதப்பட்ட பெருமைபொருந்திய மீனக்கொடி யுயர்ந்து விளங்கவும், குளிர்ந்த சாமரங்க ளிருபுறமு மெழுந்து வீசவும், இடமகன்றபூமியைத்தன் கிரணத்தாலே காக்குஞ் சந்திரவட்டக்குடை நிழலைச் செய்யவும், ஆகாயமுந் திசைகளுங் கேட்கும்படி பிளந்த வாயையுடைய வெற்றிச்சங்கமுழங்கவும், சூல்கொண்ட மேகங்கள் ஒலித்தாற்போல மங்கள முழவம் என்னும் வாத்தியங்கள் ஒலிக்கவும், பூலோகத்திற் சண்டைகிடையாமலி நம்மேல் யுத்தத்துக்கு வந்தனவோவென்று சூரியன் குதிரைகள் பயந்துபோக ஆகாயத்திலே தாவுங் குதிரைகள் சூழ்ந்துவரவும், விரிந்த சிறகுகளை யறுத்து வென்றி பழைய பகையைக் கெடுக்க விரும்பி, வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன் இரத்நகிரீடம் பொடிபட வளையெறிந்த வெற்றியை யுக்கிரனிடத்திலேகண்டு பெரிய மலைகளெல்லாம் வந்தனபோல அஞ்சாமையுடைய யானைகள் நடந்துவரவும், கிரணக்கூட்டத்தைவீசும் சூரியனுடைய தேரில் விரைந்துசெல்லுங் குதிரைகளின் கொடிய வெப்பத்தைப் போக்குதல்போல மேகங்களைக் கிழித்துச்சென்று பிரகாசஞ்செய்யு மணிகள் பதித்த கொடிகளசையவும், தலையலங்காரத்தையுடைய தேர்கள் சூழ்ந்து வரவும், யுத்தக் கடலைக்கடந்து உயர்ந்து பருத்த புயங்களையுடையாராய் முழங்கும்படி வீரக்கழலணிந்த காலையுடையவராய் வெற்றிமாலை யணிந்தவராய் ஆண்சிங்கம்போன்ற காலாள்கள் (சுத்தவீரர்) சூழ்ந்துவரவும், இரத்ந மலையைச்சுற்றிப் படரு மரகதவல்லிக்கொடிபோலும் மீனாட்சியம்மையைப் பிரியாத சோமசுந்தரக் கடவுளைத் தரிசிக்கும் பொருட்டு மதுரைமாநகரத்தைநோக்கிப் புறப்பட்டான்.

இங்ஙனம் புறப்பட்டுப் புலான்மணங்கமழும் வேலாயுதத்தை யேந்திய உக்கிரபாண்டியன் புதிய வாசனையைச்செய்யும் புன்னை வனத்தின் பக்கத்தில் வந்த இடத்தில் பட்டத்தியானை கொம்பினாலே குத்தி மண்குழியப்பாய்ந்து கீழே வீழ்ந்தது; அதுகண்டு உக்கிரனிதுயாதுகாரணமென்று நினைக்கும்போது உமாதேவி சாபத்தினாலே புலையனாகிய மணிக்கிரீவனென்பவன் அவன் முன்னேவந்து வணங்கிநிற்ப, அரசனவனைப்பார்த்து நீயாரென்று வினாவினன். மணிக்கிரீவன் "அடியேன்புலையன்" னென்றுசொல்லிப் பின்னுஞ் சொல்லுவான் "மகாராஜாவே இவ்விடத்திலேயொரு புன்னைவனமிருக்கிறது. அதிலே ஆகாயத்தையளாவிவளர்ந்தபுற்று ஒன்றுள்ளது; அதை வெட்டினேன் அவ்வெட்டுப்பட்டு ஒருபாம்பு வாலற்றுவெளியேதோன்றிற்று; அதன்வலிமையைச் சொல்லவல்லவர்யாவர்? அந்தப்பாம்பு கொன்றைமாலையைத் தரித்த சிவபிரானுடையதாக இருக்கவேண்டும்" என்றனன். உடனே அரசன் "அந்த இடத்தைக் காட்டுக" என்று வாளாயுதத்தையேந்திய வீரர் சூழ மணிக்கிரீவனுடன் போய்ப்புன்னையஞ்சோலை நிழலில்மிகவுயர்ந்த புற்றின் பக்கத்திலே ஒரு சிவலிங்கத்தைக்கண்டு பெரியமகிழ்ச்சியாகியகடல்பெருக்கெடுப்பவந்து ஒளிபொருந்தியநாகத்தினாலே தோண்டப்பட்ட நாகசுனையிலே ஸ்நானஞ்செய்தற்கு நின்றபோது, அவ்வரசன் கேட்கும்படி ஆகாயத்திலேயொரு தெய்வவாக்கானது "வாசனைதங்கிய மலர்களாலருச்சித்துப் பூசைசெய்ய மதுராநகரத்துக்கு நீ தினந்தோறுஞ் செல்லும் வருத்தத்தைப்பார்த்து மீனாட்சியம்மையுடன் திருவாலவாயாகிய மதுரையிலெழுந்தருளிய சோமசுந்தரக்கடவுள் இவ்விடத்திற் சிவலிங்கமாகியிருக்கின்றார். அரசனே! உமாதேவியாரும் சங்கபதுமரிருவரும் பூருவகாலத்தில் அன்பினால் அருந்தவஞ் செய்தலாலே சங்கரநாராயண வுருவத்தைச் சிவபிரான் காட்டியருளிய தலமு மிதுவே. தென்றற்காற்றுச் சஞ்சரிக்கு மிந்தவனத்தைப் புன்னைவனமென்று சொல்லுவர். இந்தவனத்திலே தங்குஞ் சிவலிங்கப்பெருமானை விதிப்படி பூசைசெய்" யென்று கூறியது.

அதுகேட்டு மகிழ்ச்சியடைந்து அரசன் நாகசுனையிலே தீர்த்தமாடிப் பொருந்திய மலைச்சந்தனமும் அன்றலர்ந்த மலர்களுங்கொண்டு மேற்கூறிய சிவலிங்கமூர்த்தியைப் பூசைசெய்து மகிழ்ச்சிமிகுந்து சிற்பசாத்திரத்திற் றேர்ந்த தச்சர்களை வரவழைத்துப் புன்

லையங்காடெல்லாங் கற்பகாடவி காணமடையக் காவல்பொருந்திய நாடாகச் செய்து, ஆகாயத்தையூடுருவிச்செல்லு மழகிய திருமதில்களும் நீருண்ட மேகங்கள் வந்துபடியு மண்டபங்களுஞ் சந்திரமண்டலத்தை யளாவிய கோபுரமும் விளங்கித் தோன்றச் சிவாலயங்கட்டுவித்து, ஒள்ளிய நிறந்தங்கிய பசியபொன்னாலாகிய சக்கரங்களின் கிரணம் வியாபித்துப் பிரகாசித்தலாலே (தூரத்திலே சென்றாலும்) கண்ணுக்குப் புலப்படுந் திண்ணிய தேர் அழகாகச்செய்து சித்திரைமாதத்தில் தேவரும் வணங்கத் திருவிழாவு நடாத்தி, அதன்மேல் விடந்தங்கிய சங்கபத்மர் முதலிய சர்ப்பங்கள் வணங்கப் பெருமையிருந்த *கூழையென்னும் புன்னைவனத்திலே தங்கும் அச்சிவலிங்கப் பெருமானைத் தினந்தோறும் வந்துபூசித்து, அளவற்ற காலமிருந்து தேகத்துடனேயுயர்ந்த மோக்ஷத்தை யடைந்தனன். பார்வதிதேவி சாபத்தாற் புலையனாகிப் புன்னைவனத்தில் வசித்திருந்த மணிக்கிரீபனுங் கைலாசபதவி யடைந்தனன். அதன்பின் தக்கனையென்பவள் அவ்விடத்தில் வசித்து, உயர்ந்த மோக்ஷமடைந்தனள்."

## ஒன்பதாவது:
## தக்கனைதவம்புரிசருக்கம்.

என்னனு முனிவ ரெல்லா மீறிலா வுவகை பூத்து
முன்னைநான் முழுதுந் தேர்ந்த முனிவனை விருப்பி னோக்கி
யன்னவள் வீடு பெற்ற தன்மையை யறைவா யென்னத்
தொன்னெறியுணர்ந்த சூதன் சொல்லுவான் றொடங்கினானே.

வேறு

மதுநறுந் திவலை பருகுவான் வீழ்ந்து மழலைபஞ் சுரும்
பர்பாட்டயரப், பொதியவிழ் கமலப் பொய்கைசூழ் பிரமபுரத்
தினின் முடிவிலா வேத, விதியயில் விண்டு சருமனென் றள
விலோர் வேதியு னங்கவன் றனக்குக், கதைமலர்க் கூந்தற் றக்
கனை யென்றோர் கன்னிகையுண் டெனத் தகுவாள்.(உ)

* கூழை — இப்பெயர் மணிக்கிரீபனுக்கு [illegible] புன்னைவனத்துக்காயிற்று; [illegible]

புத்தமு தனையாள் வடிவுகேட் டுருகிப் புட்கர சன்ம னென்றோர்ந்து, மெய்த்தவ மறையோன் விருப்புறு புதல்வன் விரிபுனற் காசிநா டகன்று, சத்திய கீர்த்தி யெனுமவ னன்றந்தைத னடியிணை தொழுது, மெத்தலை நின்று வந்தனை பேரென் னிசைக்கென விசைத்தன னன்றே. (௩)

சொல்லலு மந்த மறையவன் றனக்குத் துவர்படு மிதழ்ண்டைபங் கனிவாய், முல்லைவெண் முறுவற் புதல்வியை வேத முறையினிற் கடிமணம் புணர்வித், தல்லியங் கமலத் தாரினான் றனக்கோ ரரும்பெறற் புதல்வரின் மையினு, மில்லறம் புரிதி யென்றவன் றனைத்தன் னில்லிடை யிருத்தினன் றுறந்தான். (௪)

அங்கவன் மகிழ்கூர்ந் தங்கலும் மேனி யணங்கனாள் புதுநலங் கவர்ந்து, திங்களொன் றிருந்து மாண்டன னென்று செப்பலு மிருந்தவத் தோர்கள், பொங்குமெவ் முலையா ளிளமையிற் கைம்மை பொருந்துறக் கடிமணம் புணர்ந்த, கொங்கலர் தாரா னிளமையி லிறத்தல் சடறெனக் கூறுவான் சூதன். (௫)

முற்பிறப் பதனிற் றத்தரி நெடுங்கண் முகிழ்முலைத் தக்கணை யென்பாள், சொற்புனை கவிஞ ருரும்மாற் றனது துடியிடைத் தூமொழிக் கனிவாய்க், கற்புடை மனையாள் காதல்கூர்ந் திருப்பக் கணிகையர்ப் புணர்ந்தீதீ வினையாற், பொற்பினிற் பொலிந்த பெண்பிறப் படைந்து *கைம்மையைப் பொருந்தின ளன்றே. (௬)

வானவ னொருவன் றேவியுந் தானு மயனுருத் தாங்குபு மனப்பவூணவாய்த் தேவ னுயிர்செகுத் திடலுந் தேவிபாங் குழைந்தசா பத்தாற், கனலுலா மலங்கற் சத்திய கீர்த்தி கதிரிள வன்முலைக் கயற்கட், டேனவாங் கிளவித் துணைவி யோடின்பந் திளைத்திடு காலையி லிறந்தான். (௭)

* கைம்மை - நாயகனிறக்க மங்கலமிழத்தல்.

கைமையுற் றுருகுந் தக்கணை தடங்கண் கலுழ்ந்தனள்
புலம்புறு காலை, மெய்ம்மைநூ றெளிந்த காலப னென்னும்
விழுத்தவ னவ்வயின் மேவி, யிம்மையே யன்றி யெழுபிறப்
படையுங் கைமைதீ யிரங்கலென் றேக, மம்மர்நோய் தவிர்ந்
து புண்ணிய நதிக ளாடுவான் மனக்கொடு போனாள். (அ)

தெளிபுன னதிகள் பற்பல தோய்ந்துந் தெளிந்தில
ளுள்ளமா தலினாற், றளிமுகி றவழுஞ் சந்தனச் சாரற் றட
வரைக் குறுமுனி யுள்ளங், களிகொள வுறையுந் தென்றிசை
யெழுந்து கடிமலர் முருகுகொப் பளிக்கு, மளிமுரல் புன்னை
வனத்தினி லடைந்தா ளகன்றது மனத்தழுக் கன்றே. (கூ)

மனவிரு ளகற்றுந் தன்மையா னீல மணிமிடற் றிறை
வன்வாழ் பதியி, னினமலர்ப் புன்னை வனத்தினுக் கிணையொ
ன்றிலதென வெண்ணியா ளரவச், சுனைப்புனீர் படிந்து வற்
கலை யுடுத்துத் தூயவெண் ணீற்றணி துலங்க, வினையிருள்
கடியுமஞ் செழுத்துணர்ந்து மெய்த்தவம்புரிந் தனண்மன்னே.

மற்றவள் கணவன் மழுவலான் றோன்றி மதிநுதன் மணி
னுமோர் பிறப்பி, னுற்றதோர் குழவி யாகமற் றேழாம்
பிறப்பினி லோரெழு புதல்வர்ப், பெற்றபி னீக்கு வந்துயர்
வெள்ளிப் பிறங்கல்சென் றடையென வருளாற், சொற்ற
வை கேளா வவ்வழி யகன்று துஞ்சின டுவரிதழ் மடவாள்.

என்னலு முனிவர் சூதனை நோக்கி யீறிலா நான்முழு
துணர்ந்தோய், மின்னென நுடங்கு நுண்ணிடைக் கனிவாய்
மெல்லிய லிருந்தவம் புரிந்துந், துன்னிய பாவந் தீர்ந்தில தா
கித் தொடர்ந்தது கூறுவ யென்னத், தன்னிகரில்லாச் சூத
மா முனிவ னத்திறஞ் சாற்றுவான் சமைந்தான். (கஉ)

முத்தியை விளைத்தல் கருமமே யென்று முழுதுணர்
ஞானமே யென்று, மித்திற முலக முரைக்குமற் றன்றிய
ற்றுநல் வினையினாற் றெளியுஞ், சித்தமங் கதனுன் ஞானம்வந்

றெய்திச் செல்கலா முத்திதரு திடுமென், றய்த்துணர் வுடை
யோருரைப்புராணமெண்ணிலுண்மைநூற்றெளிவுமற்றஃதே. ()

கருநெறி பயின்ற குழுவினோர்க் குள்ளங் கனிவுறு காத
லர்க் கேவல், புரிவதே விதித்த கருமமங் கதனைப் புரிந்திடப்
பெற்றில ளதனு, லரியதோர் வீடு பெறுவதற் குரிய பால்ல
ளா யழுங்கினள் பின்னர்ப், பிரசநாண் மலர்ப்பூம் புன்னையம்
பொதுமபர்ச் சேர்தலா லுயர்கதி பெறுவாள். (கச)

என்றலு முனிவ ராங்கவள் பெற்ற வன்னமை யிசைத்
திடென் றியம்ப, நன்றெனச் சூத னருந்தவத் தோர்க ளனை
முக நோக்குபு பிறவி, யொன்றிலோர் குழவி யாகமற் றே
றாம் பிறப்பினி லோரேழு புதல்வர், மன்றலங் குழலா ளின்
றுயர் புன்னை வனத்திலவந் தடைந்தனள் மன்னோ. (கரு)

வந்தன ளீசன் குரைகழல் வணங்கி மாதவம் புரிந்தன
ளிருப்ப, விந்துவடர் சடிலத் திறையவன் வெளிப்பட் டிடன்
கொணீ வேண்டிய தென்னத், தந்திட வேண்டு நினதுதொல்
லுலக மென்றன டந்தன னென்னச், சிந்தரி நெடுங்கட் டே
மொழி மடவாள் சேயுயர் கயிலைசென் றடைந்தாள். (கசு)

## தக்கனை தவப்புரி சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் கசு.

---

## தக்கனைதவப்புரி சருக்கச் சுருக்க வசனம்.

---

நாருகா வனத்து முனிவரெல்லாரு மகிழ்ச்சியடைந்து பழை
ய சாத்திரங்க ளெல்லாவற்றையுந் தேர்ந்த சூதமுனிவரைப் பார்த்
து "மேலே சொல்லிய தக்கனை யென்பவள மோக்ஷமடைந்த தன்
மையைச் சொல்லியருளுக" என்று கேட்கச் சூதமுனிவர் சொல்லு
வாராயினார்:—

"மண்டுகள் தேனுண்ணும்பொருட்டுக் கீதங்கள் பாடிச்செல்லுகின்ற தாமரைத்தடாகங்கள் சூழ்ந்த பிரமபுரத்தில் அளவில்லாத வேதவிதிப்படி நடக்கின்ற விண்டுசருமனென்னும் பிராமணனொருவனிருந்தான்; அவனுக்குத் தக்கணையென்னும் ஒருபுத்திரி தெய்வப்பெண்ணென்று சொல்லத்தக்கவளாயிருந்தனள். புதிய தேவாமிர்தம் போன்ற அழகுடைய அவளை விசாரித்தறிந்து மனமுருகிப் புட்கரசன்மனென்னும் பிராமணன் புத்திரனாகிய சத்தியகீர்த்தி யென்பவன், தன்னுடைய பதியாகிய காசிக்ஷேத்திரத்தைவிட்டு நீங்கிப் பிரமபுரத்தில் வந்து விண்டுசருமன் பாதங்களை வணங்குதலும், அவன் இவனை நோக்கி "நீரெவ்விடத்திலிருந்து வந்தீர்? உம்முடைய பெயர் யாது" என்று கேட்கச் சத்தியகீர்த்தியும் வந்தவைதனைத்துங் கூறினன். அவையனைத்துங் கேட்டு, அவனுக்கு விண்டுசருமன் தன்புதல்வியாகிய தக்கணையை வேதசாத்திரவிதிப்படி விவாகஞ் செய்வித்துத் தனக்குப் புத்திரனில்லாமையால் "இங்கேயிருந்து இல்லறஞ் செய்வீராக" என்று சொல்லி யிருத்திவைத்துச் சின்னாட்சென்றபின் இவ்வுலகத்தைவிட்டு நீங்கினன்

அதன்மேல் தக்கணையுடன் புதிய போகங்களைச் சத்தியகீர்த்தி யொருமாதகால மனுபவித்துப் பின்னர் உயிர்துறந்தனன்" என்றுசொல்லிய சூதமுனிவரை மற்றை ருஷிகள் நோக்கித் "தக்கணை யிளமைப்பருவத்திலே விதவையாகும்படி அவள் நாயகனாகிய சத்தியகீர்த்தி யிறந்ததற்குக் காரணமென்னை" யென்றுகேட்கச் சூதமுனிவர் சொல்லுவார்.

"பூருவசன்மத்திலே தக்கணையென்பவள் இயாதியடைந்த கவித்துவமுள்ள வித்துவானைக் இருந்து தன்னுடைய கற்புடைமனைவி காமத்தால் வருந்தி விருப்பக் கணிகையரைக் கலந்துகொண்டிருந்த தீமையினாலே பெண் சன்மமெடுத்து வாலிபத்திலே விதவையாயினள். விண்ணுலகத்திலுள்ள தேவனொருவன் றன்மனைவியுந் தானும் முயலுருவங்கொண்டு காமவின்பமனுபவித்திருக்கிறபோது மாமிசத்தை விரும்பி அத்தேவனுயிரைக் கொலைசெய்ததும் அத்தேவன் மனைவியிட்ட சாபத்தினாலே சத்தியகீர்த்தி தக்கணையோடு நெடுநாட் போகமநுபவித்தற்கில்லாமல் இளமையிலே யிறந்துவிட்டனன். விதவையாகி வருந்தும் தக்கணை யழுது புலம்புங்காலத்தில் உண்மையுணர்ந்த காலவமுனிவர் அவ்வி

டத்துக்குவந்து "விதவையாகிய மாதே இந்தப்பிறப்பு மட்டுமன்று. இன்னும் 'எழுபிறப்பு அடைவாய். இதற்கு வருத்தமடையாதே'" யென்று சொல்லிச் சென்றனர்.

"அதன்பின் தக்கனை மயக்கம் நீங்கிப் புண்ணியதீர்த்தங்களாடுதற்குச் சென்று அநேக நதிகளிலே தீர்த்தமாடியு மனந்தெளியாதவளாய் அகத்தியமுனிவர் மனமகிழும் பொதிகைமலைச் சாரலின் றென்றிசையிலிருக்கும் புன்னைவனத்தையடைதலும், அப்பொழுதே மனத்தின்றுன்ப நீங்கியது. தன்மனத்துன்பத்தைப் போக்கிய காரணத்தா லிந்தப் புன்னைவனத்துக்கு நிகரொன்றுமில்லையென்று நினைத்து நாகசுனையிலே ஸ்நானஞ்செய்து மரவுரியுடுத்து விபூதிதரித்துப் பஞ்சாக்ஷர செபஞ்செய்து தவஞ் செய்திருந்தனள்; அவளுடைய சொப்பனத்திற் கூழைநாத ரெழுந்தருளித் "தக்கனையே நீயினி யொவ்வொரு பிறப்புக்கும் ஒவ்வொரு பிள்ளைபெற்று ஏழாவது பிறப்பி லேழுபுத்திரரைப் பெற்றபின் இவ்விடத்துக்குவந்து உயர்ந்த கயிலாசப்பதவி யடைவாய்" யென்றருளிச் செய்தனர். அதுகேட்டு அவ்விடத்தை விட்டுத் தக்கனை யுயிர் துறந்தனள்" என்று சூதமுனிவரை நைமிசாரணிய முனிவர் "தக்கனை யரிய தவத்தைச் செய்தும் பாவம் நீங்காமலவளைத் தொடர்ந்த காரணஞ் சொல்லியருளுக" என்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவார்.

"முத்தியைத்தருவது கருமமென்றும் ஞானமென்றுங் கூறுவர், அப்படியன்று. சற்கருமத்தால் மனத்தெளிவுண்டாகும். அத்தெளிவினால் ஞானங்கிடைக்கும். அந்தஞானம் மோக்ஷத்தைக் கொடுக்கும். உண்மையாகிய சாத்திரக் கருத்துமிதுவே. கற்புடைப் பெண்கள் தங்கள் கணவருக்குப் பணிவிடை செய்வதுவே சற்கருமம். அந்தக் கருமத்தைச் செய்யாதவளாதலினாலே தக்கனை மோக்ஷம் பெறுதற்குரிய ளல்லளாகி வருந்தினவளாய் மேலே கூறிய ஏழாவது பிறப்பிலே யேழுபுத்திரர்களைப் பெற்றுப் பின்னர்ப் புன்னைவனத்தையடைந்து சங்கரேசர் திருவடிகளை வணங்கித் தவஞ்செய்து கொண்டிருந்து அவ்வெம்பெருமான் றிருவருளாலே திருக்கயிலாசபதவி யடைந்தனள்.

# பத்தாவது:

# வீரசேனன்பிணிதீர்ந்தசருக்கம்.

என்ன முனிவர் மகிழ்ந்தாங்கி யிணர்வா யவிழ்ந்த மட்டு
இர்க்கும், புன்னை வனத்தின் வீறின்னம் புகல்வா . யென்ன
மாதவத்தோர், சொன்ன தன்மை மனக்கொண்டு துகடீர்
கேள்விச் சூதமுனி, மின்னி னருசெஞ் சுடரிலைவேல் வேந்
தன் கதையொன் றுரைசெய்வான். (௧)

வெண்ணங் குயிர்த்த கதிர்முத்தம் விளங்கு மரகத்
தர்வணைமேல், வண்ணங் கரிய முகில்காட்ட வாயு முகமுங்
கருணைபொழி, கண்ணுங் கமல மலர்காட்டுங் கண்ணன் றுயி
லுங் காவேரித், தண்ணந் துறைவண் புனனாடன் றமிழ்தே
ருறந்தை காவலனே, (௨)

ஒளிரும் வடிவாள் விதிர்த்திடும்போ ருழக்கு மருவா
ருரம்போழ்ந்து, குளிரும் பரவைத் திரைசிவப்பக் குருதிப்
பெருக்கா றெடுத்தோடப், பிளிறு முருமுக் குரற்பனைக்கைப்
பிறைவெண் கோட்டுப் பாவடிய, களிறு தொலைத்து மூவெ
யில்சூழ் கலிங்க மெறிந்த கதிர்வேலான். (௩)

திரைசெய் கடற்பார் பொதுநீக்கித் திங்கட் கவிகை
தனிநிழற்று, மாசர்க் கரசன் மனுதுங்க னபய னடல்வே லத
னங்கன், குறைசெய், வரிவண் டொருகோடி கொழுதி நறவு
கூட்டுண்ணும், விரைசெ யலங்கற் றடமார்பன் வீர சேன
னென்னும்வேந்தன். (௪)

அமர்வேட் டெழுந்த திணிதடந்தோ ளபய னொருநா
ளரையிருளிற், றமிய னாக வெழுந்துநகர்த் தன்மை தேருங்
காலையிரு, டமிய மின்னி யதிர்ந்துகமஞ் சூல்வான் பொழிய
விதிர்விதிரா, வுமிழுங் கைவே லவன்மறையோ னொருவன்
மனைவாய்ச் சென்றடைந்தான். (௫)

வேட்டு முத்தீ நெறிவளர்க்கு மெய்ஞ்ஞான் மறையோன்
றென்புலத்தோர்க், கூட்டக் கொணர்ந்த தீங்கனியை யுடற்று

பசியாற் றருகென்னக், கேட்ட பொழுதின் வேந்தனெனக்
கிளர்ந்த வுவகையா லறிந்துதவத், தோட்டு மலர்த்தா ரடல்
வேந்தன் றுய்த்துக் *கோவில் சென்றடைந்தான. (௬)

சுடர்வேற் காளை வரல்கண்டு தொழுது நெஞ்சந் தண்
ணென்று, வடமீன் புகழு மருங்கற்பின் மதர்வை நோக்கின்
மணிமுறுவற், படவா ளரவப் பத்தனைய பரவை யல்குற்
பணைமென்றோட், கொடிநேர் மருங்கி னவன்றேவி குறித்
தோர் மாற்றங் கூறுவளால். (௭)

மன்னர் மகுட நிரையுழுது வுயர்ந்த கழற்கா லகளங்கா,
வென்னை களங்க முற்றனைகொ லெழுதா மறையின் றுறை
போய, பொன்னங் கமலத் தார்மார்ப பொருள்வெள விளை
கொல் பிழைபுரியா, மின்னி னகுவேல் வேந்தர்தமை வெகு
ண்டு கொலைசெய் தனைகொல்லோ (௮)

அருள்பாரத் திருக்குந் தொல்குடிக ளலமுற் றிரங்க
வாறின்றிப், பொருள்வேட் டனைகொல் புராணங்களில் பொ
ழுது பொய்ம்மை யிதுவென்ன, மருளா னிகழ்ந்து கூறினை,
கொன் மதிசேர் சடையா னடிபரவு, மிருடீர் மனத்தார்
தமக்கின்ன லிழைத்தி கொல்லோ வெனப்புகன்றாள். (௯)

மருவா ரலங்கற் றடமார்பன் மடந்தை மதிவாண் முக
நோக்கி, நிரைவால் வளைக்கை யணங்கனையாய் நெருந லிரவு
மறைநெறியா, னொருநான் மறையோன் றென்புலத்தோர்க்
கூட்டுக் கொணர்ந்த தீங்கனியைத், தருவா யென்ன வெழுந்
தபசி தணிப்பான் வாங்கி யருந்தினனால். (௰)

மணநா றிதழிப் பூந்தொடையு மாலை மதியு மணிச்சூட்டுப்
பணவா ளரவு முடித்தசடைப் பரமன் முதலாங் கடவுளருக்
குணவா மதனை யுறிந்திருந்து முண்ட வதனா லுள்ளுருகித்
தளர்வா வுடலம் நடுக்குற்றேன் றவிர்க்குந் திறனுங் காணேனால்.

கமறசேர் பிடற்றான் கடலுலகங் கட்டு மூர்த்தி மலர்க்
கடவுள், மறையோ ரிவர்தம பொருள்கவர்ந்து துய்த்த

*கோவில் - அரண்மனை.

வஞ்ச ரொருநூற, பிறவி வளைவான் ஞமலியாய்ப் பிறந்து பின்னர் நரகத்தி, னுறுவா ரென்ன வருத்துரைத்தா ரேனு டோர்த் தாளை விறல்வேந்தே. (௧௨)

தேவி கோளா மனநடுங்கித் தெருமந் தினியென் செய் துமெனக், காவி நெடுங்கண் ணீர்வாரக் கலங்கி யயர்கூர்ந் தனளிருப்ப, வாவும் பரிமான் றேர்க் கிள்ளி வருக வென்று திறலமைச்சர்க், கூவி யுற்ற பிணிதீர்ப்பான் குறிப்பி னவ ரோ டாய்ந்தனனால். (௧௩)

ஆய்ந்து நிருபர் சிகாமணியென் றறையும் புதல்வன் றனையருளாற், பாந்தண் முடிமேற் கிடந்தகடற் பரவை ஞா லம் பரித்தியெனப், பூந்தண் மாலை முடிமிலைச்சிப் புலவு கம ழுங் கூரிலைவே, லேந்த லுற்ற வுன்மத்தந் தீப்பா னெண்ணி யெழுந்தனனால் (௧௪)

நெய்வா யொழுகு மழற்றிகிரி நெடியோன் றலங்கள் பலபணிந்து, வெவ்வாய் வடிவேற் றிறற்கிள்ளி மீட்டும் விரி பூந் துளவமுகில, பெய்வான் முகில்போன் மணிமேனி *பிற ழ்ந் துணைக்கட் கமலமலர்ந், தைவா யரவிற் றுயில்கின்ற வநந்த புரஞ்சென் றடைந்தனனால். (௧௫)

வீங்கு புனித நீர்படிந்து விரைசேர் பசும்பொற் றுணர் தாவி, வாங்கு கடல்சூழ் மண்ணளந்த மாய னடித்தா மரை யிறைஞ்சி, யாங்குந் தனதுன் மத்தநோ யகலா மையினான் மீள்கின்றான், றேங்கொ ளரும்பு கதிர்முத்திற் றிகழும் புன்னை வனஞ்சேர்ந்தான். (௧௬)

வார்ந்து பசுந்தே னூற்றிருந்து வழியு நறுந்தண் மலர் வனத்தி, லீர்ந்த பளிங்கிற் றெளிகின்ற வெறிநீர்ச் சுனையி னிடைமூழ்கி, யார்ந்த விடத்தா லிருண்டமிடற் றண்ண லடித்தா மரையிறைஞ்சித், தேர்ந்த கேள்விச் சிவசன்ம னுறையு மில்லஞ் சென்றடைந்தான். (௧௭)

---

* பிறழ - விளங்க.

எய்தா விருப்பான் மறைக்கிழவ னிணைத்தாட் கமல
மலர்பரவி, மைதோய் புன்னை வனத்தியல்பு வகுத்து மொ
ழிய வேண்டுமெனப், பொய்தீர் கேள்வித் துறைபோய வந்த
ணாளன் புலவுகமழ், நெய்தோய் வடிவே லகளங்க னெஞ்சங்
களிப்ப வுரைசெய்தான். (கஅ)

உரைத்த வேடு மூள்ளுருகி யுடலுஞ் சினத்த திற
லாழி, தரித்தோன் றனைமுன் வழிபட்ட தவத்தாற் குறைந்
து மூவெயிலன், றெரித்தோர்க் கன்புற் றஞ்செழுத்தி
னியல்பு மனத்தி னிருடீர, விரித்து நவில வேண்டுமென
மெய்ஞ்ஞான் மறையோ னுரைசெய்தான். (க௯)

தேறு புனல்வார் சடைக்கரந்த தேவ னானு மஞ்செழுத்
தின், வீறு தெரிந்து நூறாண்டு விரித்து மொழிதற் கரிதா
மா, னாறு கமலத் தவன்முதலோ ரின்னு மறியார் நானறி
ந்து, கூறுந் தன்மை யுடையேன்கொல் குவவுத் திணிதோட்
கோவேந்தே. (௨௦)

இன்ன தாய வஞ்செழுத்தின் றன்மை தன்னை யித்தல
த்திற், றென்னன் பொருப்பின் வீற்றிருக்குந் தெள்ளு தமி
ழ்மா முனிவர்க்கு, முன்னம் பகர்ந்தான் புரிசடையோன்
முனியுந் திங்க டொறும்வந்து, பொன்னாந் துணைத்தா யிறை
வனடி போற்றி வழிபட் டேகுவனால். (௨க)

பரிதி வெயிலாற் பாயிருள்போம் பான்மை யென்னப்
பண்டுநான், புரியும் வினைவல் லிருளெல்லாம் புறந்தந் திரிய
வீங்கதனைத், தெரியுந் தமிழ்மா முனியெனக்குத் தெரிய
வுரைத்தான் றிறல்வேந்தே, யரிய தவமாற் றினனினக்கின்
றதனை யுரையப் பட்டதால். (௨௨)

கறங்கு பரவைக் கடற்றுயிலுங் கண்ணன் முதலோர்
கடவுளரு, மறுந்தண் கொன்றை மாலைபுனை நம்பன் சிறந்த
தன்மையா, லறிந்தோர் புரவு மந்திரங்க ளனைத்தி னுள்ளு

மஞ்செழுத்தே, இறந்த தாகு மென்றென்றுஞ் செப்புந் தெ
ய்வ நான்மறையே. (௨௩)

முருகு கமழும் பசுந்தேறன் முகைவிண் டொழுகு நறுங்கொன்றை, யரவு புனையும் புரிசடிலத் தண்ண லுருவா மஞ்செழுத்தின், வருண நான்குந் தோற்றினவான் மக்கட் கதியின் வந்துதித்தும், பரவுந் தகைய வஞ்செழுத்தின் பான்மை யறியார் விலங்காமால். (௨௪)

எண்ணின் மறையின் றெளிவாய வெழுத்தஞ் சறியா ரிருங்கடல்சூழ், மண்ணி னடக்குஞ் சவமாகு மவனைக் காணின் மறையோரை, விண்ணி னிருள்சீத் தெழுங்கதிரை வெய்ய கனலை தனைப்பசுவைக், கண்ணிற் காண வேண்டு மிவை காணான் பதித னவனே. (௨௫)

அறத்தின் வழியே யனல்வேள்வி யனைத்து மாற்றி யொருநூறு, பிறப்பு மேலாம் வேதியனாய்ப் பிறந்தார்க் கன்றிப் பெறலாகா, நறைப்பூங் கடுக்கை மாலைபுனை நம்ப னடித்தா மரைக்கன்புஞ், சிறப்பி னுயர்ந்த வஞ்செழுத்துந் தெரியக் கேட்குஞ் சிந்தையுமே. (௨௬)

புலையனெனினுஞ்செந்நாயின் புலால்வாய்மடுப்போனெனினு
மலர்தார் வேணி யண்ணலெழுத் தைந்து மறிந்தான் முனிவனே
மலர்பூங்கமலத்தொடைபுனையுமறையோனெனினுமறியாதா
னுலகிற்புலையனெனவேயுரைக்குங்கடவுண்மறையே.

காசி பிரயா கைகாளத் திகாஞ்சி நைமி சாரணிய
மாசின் மதிதோய் முதுகுன்றஞ் சித்தாச் சிரிய மறைக்காடு
வீசு தென்ற றவழ்மலையங் கும்ப கோணம் வேணுவன
மூசி யளிக ளொருகோடி மொய்க்குங் கடம்ப வனந்தில்லை.

என்னுந் தலத்தி னைந்தெழுத்தை யிறைந் தாண்டு நவின்றப்பலன், புன்னை வனத்தி னொருஞான்று பொருந்திப் புகழ்ந்து பெறலாமாற். பன்னும் பழநான் மறையுமற்றும்

மகரப் பாற்றோ வுளமுருகி, யன்ன வனத்தி லெஞ்ஞான்று மமர்ந்து நவில்வோ ருறும்பேறே. (௨௯)

வழுத்துந் தகைய வித்தலத்தின் மறைநூற் றுறை போங் குரவனுழை, யெழுத்தஞ் சென்பாற் கேட்டிந்தோ ரெப்பாண்டுச் சென்று தஞ்சிடினுங், குழைக்குங் கடுக்கைப் பொலந்தாருங் குளிர்வெண் டிங்கட் பசுங்கொழுந்துஞ், சுழிக்கும் புனற்செஞ் சடைமௌலித் தொல்லோனன் கயிலை யடைவாரே. (௩௦)

பஞ்சு தவழு நறும்புன்னை வனஞ்சே ரிந்தத் தலத்தி னெவர், துஞ்சும் பொழுது மழவிடைமேற் றுவர்வா யுமையி னொடுந்தோன்றி, நஞ்சு பொதிந்த மணிமிடற்று நம்ப னவர் தஞ் செவியிலெழுத், தஞ்சும் புகல்வ னங்கவர்பே றறைபற் பாற்றோ வடல்வேலோய். (௩௧)

அலர்பூஞ் சினைய புன்னைவன மடைந்து மென்ன மனங் குழைந்து, புலரி யெழுந்தோ ரடியிடினும் புரிந்த வினைவல் லிருளகல, விலகு பசும்பொன் கொழித்துமணி யெறிந்து சூழுந் திரைக்கங்கை, மலிபூம் புனல்சூழ் வடகாசி வைகும் பெரும்பே றடைவாரே. (௩௨)

பிள்ளை மழலை யளிபரந்து மிதிப்பக் கிளர்ந்து பிறங்கிணரின், கள்ளுண் வழியு நறும்புன்னைக் காவு சூழ்ந்த வித்தலத்தி, னுள்ளங் குழைந்தோர் பிடியேனு மறிபார்க ளுதவி னொளிர் வயிரந், தெள்ளு நறவந் திசைதிசைபாய் செழும்பொற் கயிலை சென்றடைவார். (௩௩)

என்ன மறையோ னியம்புதலு மெறிநீர்த் தரங்கக் கருங்கடற்பார், மன்னன் வணங்கி யினியக்க மணியின் விறு விரிந்தெனக்குப், பன்ன வேண்டு மெனப்புகரப் பவளச் செவ்வாய்ப் படர்சிறைப, வன்ன முபர்த்த மறைக்கிழவ னனையோன் கூறத் தொடங்கினனால். (௩௪)

ஆற்றற் கரிதா மூவெயில்வா ளவுணர்க் கினியபென் றன்றி றந்தமரர், போற்றி யருள்வா யெமக்கென்னப் பொன்னங் கயிலைத் தாதொழுது, மாற்றற் கரிய வெந்துயரி னோராப் படையுடைய மனத்துணரா, வேற்றுக் கொடியீ துயர்த்தக்கினி யிறைகண் முகிழா திருந்தனனால். (௩௫)

சூழிக் குளிரவம்புனற் கங்கைசூடும் பவளச்சடை முதல்வன் விழிக்குங் கமலமலர்க்கண்ணீர் விழுந்த தலத்தினிடை நின்று தழைத்த தருவின் மணியான தன்மையான் மற்றுங் ககனை வழுத்தற்கரிய வக்கமணியென்னுங் கடல்சூழ் வையகமே. (௩௬)

போற்றற்கரியவெண்ணிறத்தபொன்னைநிறத்தசெந்நிறமுந் தோற்றத் திகழ்வ கருநிறத்த வாய தாசமர் தருமணிகள் சாற்று மறையோர் முதலான சாதி நான்கு மாமென்பர் கூற்ற மடர்ந்து கொலைபுரியுங் குருதி காலுங் கூர்வேலோய் ()

ஒற்றை முகத்த மணியணியி னுட்கொன்று நினைத்தாற் றேறு ன்றலுயிர், செற்ற பாவந் திருமுக மிரண்டிற் சிறந்த மணி யணியி, னற்ற தாகும் பசுவினுயிரட்ட வினைமும் முகத்த மணி, முற்ற வணியின் மகளிருயிர் முடித்த பாவந் தொலை ந்திடுமால். (௩௮)

பொருந்து நான்கு முகத்தமணி பூணி னுறுவர்க்கொன் றவினை, யிரிந்து சாயு மைந்துமுக மிலங்கு மணிகள் விழைந் தணியி, னருந்தா ததனை யருந்தவினை யகலு மாறு முகத்தம ணி, தெரிந்து புனையி லந்தணனைச் செகுத்த பாவந் தீர்ந் திடுமால். (௩௯)

ஏழு முகஞ்சேர்ந் திலங்குமணி யிலங்க வணியிற் பிறர்க் குரிய, மாழை கவர்ந்த வினையகலு மெட்டு முகத்த மணியணி யிற், சூழுங் குரவற் கிழைத்தவினை தொலையு முயமொன் பதுதிகழுங், கேழ்சேர் தெய்வ மணியணியிற் கேடில் செல்வம் பெறலாமால். (௪௦)

ீர்சால் பத்து முகத்தமணி தெரிந்து புனையிற் பேயினிடர்,
யாரா தாகும் பதினொன்றாய் வயங்கு முகந்த மணிபணியி,
னோராப் பொருள்க ளனைத்தினையு நேரு மேவள் விப் பலனுண்
டா, மீரா றுப வக்கமணி யணிவார் முத்தி யெய்துவரால். ()

இவ்வா றுப வக்கமணிக் கணிபு மிடனு மிறையவனும், வெவ்வே றென்பா ரறியாதார் விரிவெண் ணிலவுப் பசுங்கொள மூர்ந்து, மொவ்வா தெனுக் கிலகுமுடன் முழுது முணியா பணிதவனேற், செவ்வான் பதியங் கிடந்தசடைத் தேவா திறைவ னாகுமால். (௪௨)

வேறு.

ான்று கூறலு மிருநில மன்னவ னிறைஞ்சி
ன்று சொற்றனை நீற்றது தன்மையை கவின்று
துன்றும் வல்வினைத் தொடர்ச்சிதீர்த் தருளெனத் தொழுதுங்
கொன்றை வேணியார்க் கன்புறு மறையவன் கூறும். (௪௩)

கூற்ற டர்ந்தபூங் கழலினான் கோயில்வெண் ணீறும்
போற்றும் வேள்விசெ யந்தணன் பொங்கழ னீறுந்
தேற்ற மேவிய மறையவன் றுறந்துசெல் காலை
மாற்று மோமவெண் ணீறுமற் றனைவர்க்கு மாகும். (௪௪)

தெரிந்த வேதியர் நாடொறுஞ் செய்கடன் வழாமற்
புரிந்த வோமவெண் ணீறவர்க் கல்லது பொருந்தா
பிரிந்த சாதிக ளவற்றிற்கும் வெவ்வழ லஞ்ச
மருந்தி ஞான்றிரு நீற்றினை யணியலா மன்றே. (௪௫)

நிலையி னீற்றினை யணிந்திடிற் றன்முத்தயிர்ங் கதிர்க
ணிலவு வெண்மதி சேர்தரு நெற்றியி னணியி
னிலகு கண்மலர் பொருந்திடு மெழிற்றழுத் தணியின்
மலரு மொண்கதிர் மணிதிற மடைந்திடு மாதோ. (௪௬)

சந்த மத்தடர் தோளினிற் றிலங்கரி றணியிற்
கொந்த முற்கொலை மழுவொடு கன்றுமான் குலவு

மூர்த்தி மீதினி லணிந்திடி னுடனும்வெஞ் சினத்த
வெந்தி றற்புலி யதளுடை மேவிடு மன்றே. (சஎ)

## வேறு.

தலையி னுதலிற் றடமார்பி னுந்திக் கடத்தின் முழந்தா
ளின், மலையி னுயர்ந்த திணிதோளின் மணிகண் டத்தின் மு
ன்கைதனி, லிலகு கழுத்திற் சுவன்மிசையிற் பஞ்சப் பிரம
மெடுத்தோதி, நிலவு பொழியும் வெண்ணீறு நெறியி னணி
தல் வேண்டுமால். (சஅ)

இறைவ னீறு புனையாம லிழைத்த வினைகள் பயனுதவா,
நெறியின் வெண்ணீ றணிந்துகதிர் நிலவு புனைபு முழுமுதலை,
முறையினியற்றிவழிபட்டான் முத்திபெறுவதெளிதாகும்,
கறைசேர் மிடற்றான் பூசையினை யியல்புஞ் சிறிது கட்டுரைப்
பாம். (சகூ)

பிறவிக் கடற்கோர் புணையாகும் பெம்மான் பூசை யாங்
கதனை, நெறியிற் புரியா வாக்கைதனை நிலையென் றிருக்குங்
கொடியோரை, முறையிற் றிகிரி தனையுருட்டி முன்னீ ருலகி னி
னிதளிக்கு, மிறைவனினைக் காண்போக்கா திருக்கிற் பாவ
மெய்துவனால். (ருO)

மண்ணின் மணலிற் சிலைதன்னிற் படிக முதலா மாமணியி
னன்னுறுப் பஞ்ச லோகத்தி னிழைத்த லிங்க நன்னகரின்
விண்ணினுயருந்தடவரையின் விரைசேர்காவிற்பேராற்றின்
றண்ணார் துறையின் வழிபடுவா ரழியா முத்தி நெறிசார்வார்.

திருந்து தவத்தர் ஞபர்குபிச் செம்பொ னிமயப்
பொருப்பின்ற, முருந்தின் முறுவற் கொடிபாகன் பூசை
முறையிற் புரியாமற், புரிந்த வினைகள் பயன்படா பொங்கி
யெழுந்த பசிதீர, வருந்து முணவு நாயூனை யாமென் றுரை
க்கு மருமறையே. (ருஉ)

சீர்சால் கமலப் பொகுட்டிருந்து தெண்ணீ ருலகம்
படைப்ப துவு, மேர்சா ரசப்பொற் றருவினிழ லிருந்து

வான மளிப்பதுவுங், கார்சேர் மேனித் திருமாலா யுலகு மனைத்துங் காப்பதுவும், வார்சேர் முலையாள் பாகனைமுன் வழிபட் டவர்தம் பேறுமால். (௫௩)

என்று மறைபோ னியம்புதலு மிகல்வே லரசர் முடியு ரிஞ்சு, துன்று கழற்கால் விறல்வேந்தன் சுடர்வெண் மதிய முடித்தபிரா, னன்றி யிறைவ னில்லையென வறிந்தா னறிந் தாங் கவன்றுணைத்தாள், மன்றற் கமல மலர்பரவி வணங்கிக் கேட்டா னஞ்செழுத்தே. (௫௪)

எழுத்தஞ் சவன்றன் செவிப்படலு மெறிகருஞ் சுடர் முன் னிருளேபோற், றழைத்த வினைநோய் தணிந்தொழி யத் தணியா வுவகைக் கடன்மூழ்கிக், குழைத்த தளிர்ப்பூங் கொன்றையணி குழகன் கமல மலர்ப்பாதம், வழுத்தித் தொழுதா னிறைபவனு மழவே றிவர்ந்து வெளிப்பட்டான்.

வெளிவந் தெய்து மிறைபோனை வீழ்ந்து தொழுது பேரின்பக், களியின் மூழ்கித் தனிமுதலே கருணைக் கடலே மெய்ஞ்ஞான, வொளியி னொளியே யருட்பரந்தே னொழுகு முக்கட் கொழுங்கனியே, தெளியு மமுதே யென்னென்று சிந்தை யுருகிப் பரவினனால். (௫௬)

பரவு மன்னன் முகநோக்கி விழைந்த தென்னை பகரெ னவென், மரபின் வந்தோ ரியாவருநின் மலர்த்தாட் கன்ப ராய்முடிவி, னெறிபொற் குடுமி வெள்ளிவரை யெய்தல் வேண்டு மெனக்கூற, விரைசெய் கடுக்கை மாலைபுனை விமலன் வழங்கி மறைந்தனனால். (௫௭)

பொன்னங் குடுமி யெயிலுடுத்த நகரிற் போய்த்தன் புதல்வனைநீ, முன்னம் போல வகன்ஞால முழுதும் புரந்தி யெனப்பணித்தே, யன்னுண் மருங்குற் றேவியொடுங் கான் போ யரிய தவமாற்றி, மன்னர் மன்னன் மணிமிடற்றோன் மலர்த்தாட் கமல மலர்சேர்ந்தான். (௫௮)

வீரசேனன் பிணிதீர்த்த சருக்கம் முற்றிற்று.

ஆக செய்யுள் - ௪௪௮.

# வீரசேனன் பிணிதீர்ந்த சருக்கச் சுருக்க வசனம்.

நைமிசாரணிய ருஷிகள் மகிழ்ச்சியடைந்து "புன்னைவனத்தின் பெருமை யின்னமு மருளிச்செய்ய வேண்டு" மென்றுகேட்கச் சூதமுனிவர் மின்போலப் பிரகாசிக்கும் வேலாயுதத்தைத் தாங்கிய வீரசேன அரசன்கதையைச் சொல்லுவாராயினர்:—

வெள்ளியசங்குகளாற் கொடுக்கப்பட்ட முத்துக்கள் விளங்கும் காவிரியாற்றின் மத்தியிலுள்ள ஸ்ரீரங்கத்தில் சர்ப்ப சயனத்தில் நிறம் கரியமேகத்தைக்காட்டவும், வாயும் முகமும் கண்களுந் தாமரைமலரைக்காட்டவும் விஷ்ணுபிரான் நித்திரைசெய்கின்ற சோழதேசத்திலே தமிழறிவிற்சிறந்த உறந்தை (உறையூர்) க்கு அரசன் பகையரசர் மார்பைப்பிளந்து இரத்தவெள்ளம் பெருகியோட யானைப்படைகளைக்கொன்று பொன் வெள்ளி இரும்பாலாகிய கோட்டைகள் சூழ்ந்த கலிங்கதேசத்தை வென்றவன், சமுத்திரஞ்சூழ்ந்த வுலகத்தைத் தனக்கே சொந்தமாக்கிச சந்திரவட்டக்குடை நீழலில் வைத்துக்காக்கும் இராசாதிராசன். மனுதுங்கன் அபயன் அகளங்கன் வீரசேனனென்னுஞ் சிறப்புப்பெயர் படைத்தவன்; அவனொருநாள் நடுராத்திரியிலெழுந்து தனியனாகச்சென்று நகர்காவல் செய்துகொண்டுவரும்போது பெருமழை பொழிய நடுநடுங்கி யொருபிராமணன்வீட்டிற்சென்று பசிவருத்தத்தினாலே அவன் சிராத்தத்துக்காகக் கொண்டுவந்து வைத்திருந்த மதுரமான பழத்தைக் கேட்டனன். பிராமணன், வார்த்தையினாலே யிவன் இராசனென்றறிந்து உடனே கொண்டுவந்துகொடுக்க அரசன் அதனை உண்டு பசிதீர்ந்த பின் அரண்மனைக்குச் சென்றனன்.

இங்ஙனம் வீரசேன மகாராசன் வரவை அவன் மனைவியாகிய பட்டத்தரசி கண்டு வணங்கிக் 'களங்கரகிதரான பிரபுவே! யும்மைப் பார்க்கும்போது களங்கமுற்றவர்போலத் தோற்றுகின்றீர் தாமரைமாலையணியப்பட்ட பிராமணர்பொருளை யபகரித்தீரோ? நிரபராதிகளாகிய இராசாக்களைக் கொலைசெய்தீரோ? உம்முடைய கருணையை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஏழைய குடித்தனக்காரர்களிருந்து நியாயமில்லாமல் அவர்கள் பொருளைப் பறிமுதல்செய்தீரோ? புராணங்கள் படிக்குமிடத்திலே கதைகளைப் பொய்யென்றுரைத்தீரோ? சிவனடியார்களுக்குத்தீங்குசெய்தீரோ' வென்றுவினவினள். வாசனைதங்கிய மாலையணிந்த புயத்தையுடைய வீரசே

னன் மனைவியைநோக்கித் தெய்வப்பெண்போன்ற மாதே! நேற்றிரவில் சிராத்தத்தில் விசுவதேவர் முதலியோருண்பதற்காக வைத்திருந்த பழமென்றறிந்தும், அதை யொருபிராமணனிடத்திற் கேட்டுவாங்கிப்புசித்தேன். அந்தத் தோஷத்தாலே சரீர ரோகமடைந்தேன். இதைத்தவிர்க்கு மார்க்கமுந் தெரிந்திலது. சிவதிரவியம் விஷ்ணுதிரவியம் பிராமணர்திரவியமாகிய இவைகளைக் கவர்ந்து அநுபவித்த வஞ்சகர் நூறு சனனம் நாயாகப்பிறந்து பின்னர் நரகத்தையடைவார் என்று சொல்லினன். அதுகேட்டு இராசபத்தினி மனமடங்கிக் கலக்கமுற்றுக் கண்ணீரொழுகும்படி யினியென்செய்வோமென்று சோர்ந்து நிற்க. அரசன் மந்திரிமார்களை வரவழைத்துத் தனக்குவந்த வியாதியைத் தீர்க்கும்பொருட்டு, அவர்களுடன் ஆராய்ச்சி செய்து நிருபர் சிகாமணியென்னுந் தன் புத்திரனுக்கு மகுடந்தரித்து, 'இந்த வுலகத்தை யிரட்சிப்பாய்' யென்று சொல்லிவிட்டு வெளிப்புறப்பட்டு அநேக விஷ்ணுக்ஷேத்திரங்களிற் சென்று வணங்கி அப்பால் திருவனந்தபுரமென்னு மலையாளத்துக்குப்போய்த் தீர்த்தமாடி அனந்தசயனத்திலே நித்திரை 'செய்யும் பத்மநாதசுவாமியை யருச்சனைசெய்து கும்பிட்டு; அவ்விடத்துந் தன்னுடைய மயக்கமாகிய ரோகவியாதி நீங்காமையினாலே யவ்விடத்தைவிட்டு நீங்கிப் பூவரும்புகள் முத்தைப்போலப் பிரகாசிக்கும் புன்னைவனக்ஷேத்திரத்தில்வந்து பளிங்குபோலத் தெளிந்த சுத்தசலத்தையுடைய நாகசுனையிலே ஸ்நானஞ்செய்து சங்கரேசனை வணங்கிக் கல்வியறிவிற்சிறந்த சிவசன்மரென்னும் பிராமணருடைய கிருகத்திற்போய்ச் சேர்ந்தனன்.

பின்னர் வீரசேனன் சிவசன்மருடைய திருவடிகளைத் துதித்து, 'இந்தப் புன்னைவனமான்மியஞ் சொல்லியருளவேண்டு'மெனக்கேட்க, அவரும் களங்கமில்லாதவனாகிய வீரசேனன் மனமகிழும்படி சொல்லி முடித்தலும், அரசன் நெஞ்சநெக்குருகிச் 'சக்கரபாணியாகிய விஷ்ணுமூர்த்தியை, முதலிலே தரிசித்த தவத்தினாலே திரிபுரதகனராகிய சிவபிரானிடத்தி லன்புபொருந்திய அடியேன் இருதயத்திலுள்ள மயக்கம் நீங்கப் பஞ்சாக்ஷரமந்திரத்தி னியல்பைவிரித்துக்கூறியருளுக' வென்று கேட்க, நான்கு வேதங்களையு முணர்ந்த சிவசன்மர் சொல்லுவாராயினர்.

கங்கைவார் சடையுடைய பரமேசுரனாலும் பஞ்சாக்கர மந்திரத்தின் பெருமை நூறுவருடஞ்சொன்னாலுமுடியாது. பிரம விஷ்ணுக்கள் முதலியோரின்னமும் அறியார். அதனை நானறிந்துசொல்லுந் தரமுடையேனோ? அரசனே! அத்தகைய பஞ்சாக்ஷரமந்திரத்தின் றன்மையைப் பொதியமலையிலிருக்கும் அகத்தியமுனிவருக்கு இந்தத்தலத்திலே சிவபிரானுபதேசித்தருளினர். அம்முனிவரும் பூதந்தோறு மிங்கேவந்து சங்கரேசரை வணங்கி வழிபாடுசெய்து செல்லுவர். சூரியகிரணத்தாற் புறவிரு ளொழிதல்போலப் பூருவத்திலே நான்செய்த வினையெல்லாம் ஓட்டெடுப்ப அம்முனிவரெனக்கும் பஞ்சாக்கர மந்திரப் பொருளை யுபதேசித்தனர். அம்மந்திரத்தை யுனக்குச் சொல்லுவதனால் அரிய தவஞ்செய்தவனானேன். விஷ்ணுமுதலிய தேவர்களுக்குள் சிவபிரானே யுயர்ந்தோனாதல்போல, பெரியோர் துதிக்கு மந்திரங்களுக்குள் பஞ்சாக்கரமந்திரமே யுயர்ந்ததாகும் என்றுதெய்வத்தன்மையுள்ளநான்கு வேதங்களுஞ்சொல்லும். சிவபிரான் றிருவுருவாகிய ஐந்தெழுத்து மந்திரத்தின் றன்மையறியாதவர் நான்கு வருணமு முண்டாதற்கிடமாகிய உயர்ந்த மானிடப்பிறவியில் வந்து பிறந்தும் மிருகமாவர். வேதசாரமாகிய பஞ்சாக்கரத்தை யறியாதவர் கடைப்பிணமாவர். அப்பிணத்தைக் கண்டால் அந்தப்பாவம் பிராமணரை, சூரியனை, அக்கினியைப், பசுவைப்பார்த்துப் போக்கல் வேண்டும். இவற்றைக் காணாதவன் இழிந்தோனாவான். சிவபிரான் றிருவடிக்கன்பும் பஞ்சாக்கர மந்திரப்பெருமை தெரியக்கேட்கு மனமும் தருமவழியே யாகமெல்லாஞ்செய்து நூறுசனனம் பிராமணனாகப் பிறந்தார்க்கன்றி யேனையோர்க்குக் கிடைக்கமாட்டா.

புலையனானாலும் நாய்மாமிசம் புசிப்பவனானாலும பஞ்சாக்கர மந்திரந் தெரிந்தவன் முனிவனாவான். பிராமணனானாலும் அம்மந்திரந் தெரியாதவன் புலையனென்று நான்குவேதமுஞ் சொல்லும். காசிமுதலிய புண்ணியக்ஷேத்திரங்களில் பஞ்சாக்கர மந்திரத்தைப் பத்துவருடம் உச்சரித்தபலனை இந்தப் புன்னைவனத்திலே யொருவருடமுச்சரித்தாற்கிடைக்கும். இவ்வனத்தி லெந்நாளுமிருந்து அம்மந்திரசெபஞ்செய்வோர் அடையும் பலன் நான்குவேதந்தெரிந்த பிரமனாலுஞ்சொல்லும் பகுப்புடையதோ? இத்தலத்திலே குருவினிடத்திற் பஞ்சாக்கர மந்திரோபதேசங் கேட்டு

தெரிந்தவர் எந்த இடத்திற்போ யிறந்தாலும் கயிலாசபதவியை அடைவர். யாவரிந்தத் தலத்திலிறந்தாலும் உமாதேவியுடன் சிவபிரான் இடபாரூடராய்த் தோன்றி, அவர் காதிலே பஞ்சாக்கரத்தை உபதேசிப்பர். அவருடைய பலன் சொல்லும்பகுப்புடையதன்று. புன்னைவனத்துக்குப் போவேனென்று விடியற்காலத்தி லொரு அடி யெடுத்துவைத்தாலும் காசிக்ஷேத்திரத்திலே தங்கும் பயனை யடைவார்கள். இத்தலத்தில் ஒருபிடி சோறுவது தரித்திரருக்குக் கொடுத்தவர் திருக்கயிலாசமலையைச் சேருவார்' என்று சிவசன்மர் சொன்னவுடனே வீரசேனராசன் அவரை வணங்கி "யினிமேல் உருத்திராக்க மான்மியஞ் சொல்லவேண்டு"மென்று கேட்கப் பிரமனுக்குச் சமமான சிவசன்மர் கூறுவார்.

ரா 'திரிபுரத்தசுரர் செய்யுந் துன்பஞ் சகிக்கமுடியவில்லையென்று தேவர்களெல்லாருஞ் சிவபிரான் றிருவடிகளை வணங்கி முறையிடுதலும், அவ்வெம்பிரான் அகோராத்திர மந்திரத்தை நினைத்துத் திருக்கண்களிமையாமலிருந்தனர்; அவரது கண்களினின்றுஞ் சிந்திய நீர்த்துளிகள் விழுந்த இடத்தினின்று முளைத்த மரத்திலுண்டாகிய மணிகளே உருத்திராக்கமணிகள். உருத்திரன் (சிவன்) அக்கத்தில் (கண்ணில்) உண்டான காரணம்பற்றி யிப்பெயர் பெற்ற அம்மணிகள் வெண்ணிறமும் பொன்னிறமும் இவ்விரண்டுங்கலந்தநிறமும் கருநிறமும்உடையன. இந்நான்குநிறமணிகளையு முறையே பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரராகிய நான்குசாதிமணிகளென்பர்; இவற்றுள் ஒருமுக மணியணிந்தால் புத்திரனைக்கொன்றபாவமும், இரண்டுமுக மணியணிந்தால் பசுவைக்கொன்ற தோஷமும், மூன்றுமுக மணியணிந்தால் பெண்கொலையும், நான்குமுக மணியணிந்தால் முனிவரைக்கொன்றபாவமும், ஐந்துமுக மணியணிந்தால் போசனத்துக்கு விலக்கப்பட்டவைகளைப் புசித்த தோஷமும், ஆறுமுக மணியணிந்தால் பிரமகத்தியும், ஏழுமுக மணிபுனைந்தால் பொன்களவு செய்தபாதகமும், எட்டுமுக மணிதரித்தால் குருவுக்குச் செய்த தீவினையும் நீங்கும். ஒன்பதுமுக மணிதரித்தால் கெடாத பெருஞ்செல்வங் கிடைக்கும். பத்துமுக மணிதரித்தால் பேயினாலே துன்பம் வரமாட்டாது; பதினொருமுக மணிதரித்தால் எல்லாப்பொருள்களையுங் கொடுக்கும் யாகபலனுண்டாகும். பன்னிரண்டுமுக மணிதரித்தால் மோக்ஷங் கிடைக்கும்.

இத்தகையவாய உருத்திராக்க மணிகளணியுமிடமும், அவற்றிற்குத் தெய்வமுமாம வெவ்வேறென்று சொல்லுவர் அறிவில்லாதவர். விபூதி பூசிய சரீரமெங்கும் உருத்திராக்க மணிகளணிவானானவனே சிவபிரானாவன், என்று சொன்னவுடனே அரசன் வணங்கி விபூதிமான்மியத்தை யினியருளிச்செய்க என்று கேட்க முனிவர் கூறுவார்:—சிவன்கோயில் விபூதியும் யாகத்திலுண்டாகிய விபூதியும் பிராமணன் துறவியாகுங்காலத்திற் செய்யும் ஓமத்திலுண்டாகிய விபூதியும் எல்லாருந் தரித்துக்கொள்ளலாகும். பிராமணர் நித்தியாக்கினியிற் செய்த விபூதி அவரே தரித்துக்கொள்ளற்பாலது. சங்கரசாதி முதலிய கீழ்ச்சாதியார்களெல்லாம் சிவன்கோயில் விபூதி தரித்துக்கொள்ளலாம். விபூதியைச் சிரசிலே தரித்தால் அதிலே சந்திரனையும் நெற்றியிலே தரித்தால் அதிலே நேத்திரத்தையும் கழுத்திலே யணிந்தால் அதிலே கரிய நிறத்தையும் கைகளிலேயணிந்தால் அவற்றிலே மழுவையும் மானையும் கொப்பூழிலே யணிந்தால் அதிலே புலித்தோலையும் பெறலாம் (எனவே சாரூபபதவி பெறுவரென்பதாயிற்று) தலை, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், கண்டம், (கழுத்தின் முற்பாகம்) முன்கைகள், கழுத்து, பிடர் இவைகளில் பஞ்சப்பிரமம் (கலாமந்திரம் ஐந்து) சொல்லி விபூதி முறைப்படி யணியவேண்டும். விபூதி தரியாமற் செய்யுங் கிரியைகள் பயன்படமாட்டா. விபூதியணிந்து சிவபிரானை வழிபாடுசெய்தால் இலேசாக மோக்ஷங்கிடைக்கும்.

இனிச் சிவபூசையி னியல்பையுஞ் சிறிது சொல்லுவோம். சிவபூசையானது பிறவிக்கடலுக்கு ஒரு தோணியாகும். அப்பூசையைச் செய்யாமல் சரீரத்தை நிலையென்று நினைக்குந் தீயவரை அரசன் னாட்டிற்குத் துரத்திவிடாமலிருந்தா லவன் பாவத்தை யடைவன். மண், மணல், கல், படிகம், இரத்நம், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் ஆகிய இவற்றி லொன்றாற் செய்யப்பட்ட இலிங்கங்களை நகரத்திலும் மலையிலும் சோலையிலும் நதித்துறையிலும் பூசைசெய்தவர் முத்திநெறியடைவர். சிவபூசை செய்யாதவர் செய்யுந் தொழில்கள் பயனடையமாட்டா. அவருண்ட வுணவு மலமேயென்று வேதஞ்சொல்லும். உலகத்தைப் பிரமன் சிருட்டிப்பதும் விஷ்ணு காப்பதும் இந்திரன் தெய்வலோகத்தை யாளு

வதும் சிவபூசை செய்தவ ரடையும்பதவிகளாகும், என்று முனிவர் சொல்ல அரசன் கேட்டுச் சிவபிரானையன்றித் தெய்வ மில்லையென்றுதெரிந்து முனிவரைப் பணிந்து அவரிடம் பஞ்சாக்ஷர வுபதேசம் பெற்றுத் தன்னுடைய தீவினையாகிய வியாதி சூரியனைக்கண்ட இருள்போலக் கெட்டொழியச் சந்தோஷமாகிச் சமுத்திரத்திலாழ்ந்து சங்கரேசனைத் தோத்திரஞ்செய்து வணங்கினான். உடனே சங்கரேசர் இடபாரூடராய் அவன்முன் னெழுந்தருளினர்; அவரை அரசன் தரிசித்து மனமகிழ்ந்து வாயில்வந்தபடி அவருடைய குணங்களைத் துதித்து வந்தித்தலும் அவனைச் சங்கரேசர் நோக்கி 'நீ வேண்டும் வரங்களென்' னென்றுகேட்க, அரசன் 'என் குலத்திலுதித்தோரெல்லாரும் சுவாமீ! உம்முடைய திருவடிக்கன்பூண்டவராயிருந்து முடிவிலே கயிலாசபதவி பெறவேண்டும்' என்றனன். அவ்வாறே யருளிச்செய்து சங்கரேசர் புன்னைவனத்தின் மறைந்தருளினார். பின்னர் வீரசேனராசன் தன்பட்டினத்துக்குப்போய் முன்போல அரசுசெய்யென்று தன் புத்திரனுக்குச் சொல்லிவிட்டு மனைவியுடன் வனத்துக்குப் போய்த் தவஞ்செய்திருந்து திருவடி நீழலைச் சேர்ந்தான்.

## பதினொராவது:
# சயந்தன்வினைதீர்த்தசருக்கம்.

கேட்டனு முவகை வெள்ளங் கிளர்ந்தெழு முனிவ ரின்னம்
பாட்டிள வண்டு மூசிப் பச்சிளந் தேற லுண்ணுங்
கூட்டிணும் புன்னை நீழற் குழகன்றன் காதை கேட்பான்
வேட்டன மென்னச் சூதன் மீளவும் விளம்ப லுற்றான். (க)

புலத்தியன் புதல்வன் றேவி யரும்புபுன் மாலைக் காலை,
நலத்தகு கொழுநன் றன்னை நகையினாற் கலத்தி யென்னக்,
கலத்தலி னரக்க னாகிக் கண்ணகன் ஞால மஞ்ச, வுலத்தொ
டும் பொருத திண்டோ ளிராவண னுதித்தா னன்றே." (௨)

பூவுறை யவனை நோக்கி யருந்தவம் புரிந்த போதிற்
றேவரார் செருக்க லாகாத் திண்டிறல் வலியி னோடு

மூவுல காளுஞ் செல்வம் பெற்றனன் முறையி னீங்கித்
தாவருஞ் சீற்றத் துப்பி னழித்தன னவங்க ளெல்லாம் ( )

முயனூற் றவத்தி னோடு முதறங் காப்பா னன்பாக்
கயிலையி னுறைபு முக்கட் கடவுடன் னேவல் பூண்டு
தயரதன் புதல்வ னாகிப் பிறந்தன னயங்கு செஞ்சூட்
டயிலெயிற் றரவப் பள்ளி யரிதுயி லமர்ந்த வள்ளல். (௨)

பூசல்வண் டார்த்து மூசும் பூந்தளி ரலங்கன் மாலை
யீசன்வார் சிலையி ராம னெனப்பெயர் புனைந்து பாரின்
மாசற விளங்கு கோட்டு மதியென வளரு நாளிற் [றன்.
கோசிகன் வேள்வி காப்பான் கொண்டனன் வனத்திற் சென்

தாடகை மடிய நூறித் தவமுனி வேள்வி போற்றி
யாடகப் பசும்பொன் மாட மிதிலையி லடைந்து விண்டோய்
கோடுயர் பசும்பொற் குன்ற மன்னவிற் குழைய வாங்கி
வாடுநுண் மருங்குற் சீதை வனமுலை வேட்டா னன்றே. (௩)

மையலங் களிநல் லியானை மறங்கிளர் தந்தை கூறு
மெய்யுரை நிறுத்தல் வேண்டி வெஞ்சிலை யிராமன் கானிற்
செய்யபூங் கமல நீத்துத் திருவுறை மிதிலை வந்த
வையநுண் மருங்குற் செவ்வா யணங்கொடு மேகி னானே.

சித்திர கூடஞ் சேர்ந்து தேமரு துளப மாயோன்
றத்தரி பரந்த வுண்கட் சானகி குறங்கிற் சென்னி
வைத்தனன் றுயிலுங் காலை மற்றவண் முலையின் மீது
கொத்தினன் காக்கை யாகிக் கொடுந்தொழிற் சயந்த னென்பான்

வில்லரி நெடுங்கட் பேதை தெருமர லுழந்து மாழ்கி
மல்லலைத் தெழுந்த திண்டோண் மன்னவன் றுயிலை நீக்கி
யல்லலுற் றுரைத்த லோடு மவன்மு ளம்பு கொள்ளத்
தொல்லுரு வெடுத்து வீழ்ந்து தொழுதனன் சயந்தன் மன்னோ

மழைநிற வண்ணல் பொற்று மரையடி யிறைஞ்சி யேத்திப்
பிழைபது பொறுத்தி யென்று மவனருள் புரியப் பெற்றான்

தொழுதகுகைநற்பின் றேகி துணைமுலை தொட்ட வாற்றாற்
பழியுறு காக்கைத் தன்மை நீங்கிலன் பரிவு கொண்டான். ()

மல்லலங் கங்கை சூழ்ந்த வளமலி காசி யாதித்
தொல்லைமப் பதிகள் சேர்ந்துந் தூய்நதிப் புனல்க டோய்ந்தும்
புல்லிய காக்கைத் தன்மை போகல னாகி யுள்ள
மல்லலுற் றழுங்கி நாணி யகலிரு விசும்பிற் போனான். (௧௧)

இன்றளிர்த் தருவி னீழ லிந்திர னவையி னெய்திக்,
குன்றிய மனத்தி னோடு கண்களீர் வார வெள்கி, நின்றதன்
புதல்வற் குற்ற தன்மையை நெஞ்சி லெண்ணி, யொன்றுநீ
கவல லென்றுங் குறைசெய்வான் றொடங்கி னானே. (௧௨.)

சேர்ந்தநின் காக்கைத் தன்மை தெண்ணிலாக் குழவி
வேய்ந்த, பாந்தளங் கற்றை வேணிப் பரமனை லன்றித் தீரா,
தேந்துவெண் கோட்டு வேழத் திருரி போர்த்த தேவன், பூந்
துணர் முருகு விம்மு புன்னையங் காவொன் றுண்டால். (௧௩)

ஆங்குநீ யெய்தி முக்க ணண்ணலுங் களித்தி யென்ன
வீங்கிருட் பிழம்பு மேயும் விழுமணி யாரங்கில்கித் "
தீங்கறச் சேறி யென்னச் செப்பலுங் குலிச வேந்தன்
பூங்கழல் வணங்கி யேகிப் புன்னையம் பொதும்பர் புக்கான்.

மணிதெளித் தனைய வாவி மறித்திரைப் புனலின் மூழ்கி
பணிகிளர் சரசுந் சாத்தி யண்ணலை வழிபட் டேத்தித்
தணவருங் காக்கைத் தன்மை தணந்தனன் மகிழ்ச்சி யெய்தி
பிணர்விரி தருவி னீழ லிந்திர னிருக்கை சேர்ந்தான். (௧௫)

சயந்தன் வினைதீர்த்த சருக்க முற்றிற்று.

ஆ. செய்யுள் - ௨௬௮.

# சயந்தன் வினைதீர்த்த சருக்கச் சுருக்கவசனம்.

மேலே கூறிய சரித்திரங்கேட்ட நைமிசாரணியருஷிகள் மனமகிழ்ந்து "இன்னமும் புன்னைவனநாதர் கதை கேட்க ஆசையுற்றோ" மென்று விண்ணப்பஞ்செய்யச் சூதமுனிவர் சொல்லுவாராயினர்:—

"புலஸ்த்தியமுனிவர் புத்திரனாகிய விசிரவசு தன்மனைவியாகிய கைகசியைச் சிறிய மாலைக்காலத்தில் ஆசையதிகப்பட்டுக் காமநுகர்ச்சி செய்துகலத்தலினாலே இராக்ஷதனாகிய இராவணன் பிறந்து பிரமாவைநோக்கித் தவஞ்செய்து சகல செல்வமும்பெற்று முறைதவறி முனிவர் தவங்களையெல்லாங் கெடுத்தனன். அதைத்தெரிந்து தருமத்தைக் காக்கும்பொருட்டு விஷ்ணு திருக்கயிலாசபதி ஆஞ்ஞையினாலே தயரதன் புத்திரனாகத் திருவவதாரஞ் செய்து இராமனென்னும் பெயரைத் தரித்து வளருங்காலத்தில் அவரை விசுவாமித்திர முனிவர் தமது யாகத்தைக் காப்பதற்காக அழைத்துக்கொண்டு காட்டுக்குச் செல்லுதலும், அங்கே தாடகையாகிய இராவணன் பாட்டியைக்கொன்று யாகத்தைமுடித்து மிதிலைநகரத்துக்குப்போய் மகாமேரு மலைபோன்ற வில்லைவளைத்துச் சீதாதேவியை விவாகஞ்செய்து, அயோத்திக்குவந்து தந்தையாகிய தயரதன் சொற்படி மனைவியுடன் வனத்துக்குவந்து சித்திரகூடமென்னும் சிகரத்தைச்சேர்ந்து சீதாதேவியின் தொடையிலே தலையை வைத்து நித்திரைசெய்துகொண்டிருந்தான். அப்பொழுது கொடிய பாதகனாகிய சயந்தன் (தேவேந்திரன் மகன்) காக்கை வடிவங்கொண்டு வந்து, அவள் தனத்திலே கொத்தினன்; அதைச்சீதாதேவி ஸ்ரீராமனுக்குச் சொல்லுதலும் அவன் ஒரு பாணத்தைக் காக்கைமேலே செலுத்தினன். சயந்தன் பழைய வடிவெடுத்து வந்து இராமனை வணங்கிப் 'பிழைபொறுத்தரு' ளென்று அவனருளைப் பெற்றும் தான் செய்த பாதகத்தாற் காக்கைத்தன்மை நீங்காமல் துன்புற்றுக் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களிற்சென்று கங்கையாதி நதிகளிலே தீர்த்தமாடியுங் காக்கைத்தன்மை போகாமல் வெட்கமுற்றுத் தெய்வலோகத்திற் சென்று இந்திரன்சபையிலே போய்க் கண்ணீரொழுக வெட்கத்துடன் வருந்திநின்றான். அதை யிந்திரன்கண்டு நிகழ்ந்தவையெல்லாந் தெரிந்து புத்திரனை நோக்கிப் 'பயப்படாதே யுன் காக்கைத்தன்மை சிவபிரானாலன்றி நீங்கமாட்

டாது. பூலோகத்திலேயொரு புன்னைவனமிருக்கிறது, அவ்விடத்திலெழுந்தருளியிருக்குஞ் சங்கரேசர்க்கு இந்த முத்தாரத்தைச் சாத்தி வழிபாடு செய்க' என்று கூற அவ்வாறே சயந்தன் புன்னைவனத்திலேவந்து நாகசுனையிலே தீர்த்தமாடித் தான் கொண்டுவந்த முத்தாரத்தைச் சங்கரலிங்கத்துக்குச் சாத்திப் பூசித்துக் காக்கைத்தன்மை நீக்கி மனமகிழ்ந்து தன் பிதாவினிடம் போய்ச் சேர்ந்தான்.

---

## பன்னிரண்டாவது:

# காளவன்வீடுபெற்றசருக்கம்.

என்னலு முவமை பூத்த விருந்தவ முனிவ ரின்னும்
புன்னையம் பொதும்பர் வீறு புகலெனப் பரவ லோடுங்
கொன்னுனைச் சூல மேந்துங் குழகனை வணங்கிச் சூதன்
பின்னுமோர் காதைதேர்ந்து பேசுவான் றொடங்கினானே. (௧)

பலர்தலை யுலகி னுலாம் வருணத்தான் றனக்குத் தாழும்
புலைமகள் வயிறு வாய்த்த புதல்வன்மற் றொருவன் வேலை
வலைமுகங் கிழிக்கும் வைப்பாற் றகன்கரை மருங்கி னெய்தி
யெலிகவர் வேட்டை தூண்ட விருங்கில மகழ்ந்திட் டானே. (௨)

அகழ்ந்திடு நிலத்தி னுங்கோ ரருநிதிக் குடமுன் றோன்ற,
மகிழ்ந்தனன் கொண்டுபோய்த்தன் மரபினை மறந்த தனால
யிகழ்ந்திடக் கருப்பை வெள்வு மியல்பினை யொழிந்து காம
மிகழ்ந்துளங் கனற்ற வாற்று நெறிகடந் தொழுகி னானே. (௩)

பின்னவன் குலத்துட் டோன்றும் பிணையெனு மதரை
வை நோக்கி, கன்னிமற் றொருத்தி தன்னைக் கடிமணம் புரிந்
தம் மாதின், பொன்னவிர் திதலை பூத்த புணர்முலைப் போகந்
துய்த்து, நன்னிதிக் குப்பையெல்லா நாளினி லழித்திட்டானே.

வறியனாய்க் கொலைகள் செய்து மரபினோ ரிகழப் பட்டு
சிறகுவிற் றயின்று வாழ்நாள் சிறகுறு மிற்பான் வேண்டிச்

சிறையளி குடைந்து பாடத் தேங்கமழ் கடுக்கை வேணிக்
கறையிடற் றிறைவன் வாழும் புன்னையங் காவிற் புக்கான். (௫)

விலைப்பட லின்றி யாங்கோர் விங்கிருட் போது வைகி, மலை
த்தெழு பசியி னாற்று தாகவ னெழுந்த காலை, மலர்ச்சுனை
த் தெண்ணீ ருண்ண வருதலுந் தளர்ந்து மாழ்கித், தலைப்படு
வருத்தத் தன்னாற் றடங்கரை வீழ்ந்திட் டானே. (௬)

அளியுடை மனத்தாற் கண்டோ ராங்கவ னுற்ற மைம்
மர், தெளிவுறு முகத்திற் றெண்ணீர் தெளித்தனர் தெளிக்
கப் பெற்றுந், தளர்வுறு பசியி னுற்ற மூர்ச்சனை தவிரா தாகி,
விளைதரு வறிவு சோர்ந்து மெய்யுயிர் நீங்கி னானே. (௭)

ஓரிரா வைக லானு மொலிகெழு சுனையின் றெண்ணீர்
தீர்கலா மம்மர் தீரத் தெளித்திடப் படுத லானு, மேரினார்
விரிந்த புன்னை வனத்தினி லிறத்த லானுங், கார்தொட நிவந்
த கோட்டுக் கயிலைசென் றடைந்தான் மன்னோ. (௮)

கானவன் வீடுபெற்ற சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள் - ௩௬௬.

---

## கானவன் வீடுபெற்ற சருக்கச் சுருக்கவசனம்.

மேற்கூறிய சரிதங்கேட்டு மனமகிழ்ந்து "இன்னமும் புன்னைவனக்ஷேத்திர மான்மியம் அருளிச்செய்க" என்று நைமிசாரணிய முனிவர் வணங்கச், சூலபாணியாகிய சிவபிரானைக் கும்பிட்டுச் சூத முனிவர் மேலுமொரு சரிதங் கூறுவாராயினர்:—

"விரிந்த இடத்தையுடைய நிலவுலகத்தில் சூத்திர னொருவனுக்குத் தாழ்ந்தசாதிப் புலைச்சி வயிற்றிற் பிறந்த கானவனென்பவன் சமுத்திரசங்கமஞ்செய்யும் வைப்பாற்றங் கரையின் பக்கமமைந்து வலைபிடிக்கும் ஆசையால் பூமியைத் தோண்டினான். தோண்டிய இடத்தில் நிறைந்த திரவியமுடைய ஒரு குடம் வெளிப்

படக்கண்டு சந்தோஷித் தெடுத்துத் தன்வீட்டுக்குக் கொண்டு போய் வைத்துத் தன் சாதியை மறைத்து, எலிபிடிக்குந் தொழிலையும் விட்டுக் காமமானது மனத்தை வருத்தப்படுத்தச் சகியாமல் முறைகடந்த செய்கையுடையவனைப் பின்னர் அவன் குலத்திற் பிறந்த ஒரு பெண்ணை மணந்து அவளுடன் போக மநுபவித்துத் திரவியங்களெல்லாஞ் சிறிதுசிறிதாகச் செலவாக்கித் தரித்திரனாகிக் கொலைத்தொழில் செய்து தன்குலத்தோரிகழ விறகுவிற்றுக் காலங்கழிப்பானைப் புன்னையஞ்சோலைக்குவந்து விறகுவிலைப்படாமல் ஒருநாளிராத்திரிப்பொழுதி லங்கிருந்து பசியைச்சகியாது மறுநாட் சூரியோதயகாலத்தில் நாகசுனையில் சலம் சாப்பிட வருதலுந் தளர்ந்து மயங்கி வருத்தத்தாற் கரையிலே வீழ்ந்துகிடந்தனன். அப்போது அன்புடைய மனத்தினாலே கண்டவர்கள் அவன் மயக்கந் திரும்பொருட்டு நாகசுனைத்தண்ணீரெடுத்து முகத்திலே தெளித்தனர்: அங்ஙனந் தெளிக்கப்பட்டும் பசியினாலுற்ற ஆயாசத்தைதெளியாமல் அறிவுசோர்ந்து சரீரத்தைவிட்டிறந்தனன். ஒருநாளிரவு அந்த க்ஷேத்திரத்திலே வசித்தலாலும் நாகசுனைநீர் தெளிக்கப்பட்டதனாலும் புன்னைவனத்திலே மரணமடைதலாலுங் கானவன் கயிலாசபதவி யடைந்தனன்.

## பதின்மூன்றாவது:

## கன்மாடச்சருக்கம்.

என்று கூற மறைமுனிவ ரிருந்த குலத்திற் றோன்றியுயிர் கொன்றான் மிசைந்த கொடும்பாவி குளிர்பூஞ் சுனையி னீர்தெளிப்ப, மன்றல் கமழு மலர்ப்புன்னை வனத்தி னெய்தி யுள்ளானி, பொன்றப் புரிந்த தவமென்னை புகல்வா யென்ன முனிபுகலும். (௧)

திகழ்வெண் முத்த மணிசுருட்டுந் தேவி யாற்றந் தடங் கரையிற், றுகடீர் மறையின் றுறைபோய வாம தேவன் முதலோரோர், முகிண்மென் முலையா ளொருபாகன் முளரி மலர்த்தா ளிணைபோற்றி, நகுமா மலர்தூஉய்த் தவமாற்றி யாஞு முவந்து வைகுவரால். (௨)

ரைசெயாற்றற் கடங்கரையிற் றிங்கட் சண்டையா னடிபர் ழ, மரிய தவத்துச் சிவராத னென்னப் புகலு மந்தணற்குத், ருமசிந்தை யெனக்கற்பாற் றழைக்கு மனையாள் வயிற்று தித்தா, னொருவ னுளனாற் கன்மாட னென்னு நாம முடை யானே. (ங)

சாற்றும் புதல்வ னொருஞான்று தந்தை யேவற் றெ நில்பூண்டு, போற்று மோம விறகினொடு தருப்பை கவர்ந்து பாதுங்கா, லாற்றி னிடையே யெதிர்ப்பட்ட வாவொன், தனை யாழ்ந்தகருஞ், சேற்றிற் றள்ள வாங்கதுவுஞ் சேற்றி ழ்ந்து துஞ்சியதால். (ச

மைந்தன் வெருவிச் சவிமழுங்கி மனைவா யடைந்த கா லயினிற், றந்தை நோக்கி யென்புரிந்தாய் தயங்கு மொளிதீ ந் திருக்கின்றாய், சிந்தை வெருவல் செய்தவினை செப்பிற் தீர்க்கு மாறுனக்கு, முந்து நூல்கண் டுரைப்பனென்ன வவனும் புரிந்த வினைமொழிந்தான். (ரு)

கேட்டு வெருவித் தீர்க்குநெறி தன்னாற் கிளத்த லரிதெ ன்று, வேட்டு முத்தீ நெறிவளர்க்கு மெய்ஞ்ஞான் மறையோ ரவையெய்தி, யீட்டும் பாவ முரைத்திடலு மிருந்தமறையோர் களிலொருவன், கோட்ட மில்லா வருங்குணத்தோன் குறித்துக் கூற லுற்றனனால். (சா)

பாவ மிதுபோற் றொடிதில்லைப் பகரி லிவன்றன் குலத் தோரை, மூவேழ் முறையின் வெந்நரகின் முழுகு விக்கு மிவ் வறிந்தும்; தீவி ரிவனை நீத்திடுமி னிகழ்ந்த பாவ நம்மிடத் து, மேவல்செய்யா தீசனடி விரும்பிவழுத்துந் தன்மையினால்.

என்று புதல்வற் பயந்தோர்பா லியம்ப வுள்ள நடுக்குற் று, நின்ற புதல்வன் றனைநோக்கி நெடுநீர்க் காசி முதலப தி, சென்று தொழுதி, யாங்காங்குச் சேர்ந்து வணங்கு நல்வி னையான், மன்றல் கமழு மலர்ப்புன்னை வனத்தி னெய்தப் பெறுதியால். (அ)

மொய்த்துச் சுரும்ப ரொருகோடி முரலும் புன்னை வனமடைந்து, துத்தி யரவ முள்ளெயிற்றுந் தொட்ட வந்தண் ணைமூழ்கிப், பைத்த பாம்பு சடைக்கணிந்த பரமன் பசும் பொற் கழலிணைகள், சித்த முருக வணங்கில்வினை தீர்ந்து கயிலை சென்றடைவாய். (௯)

வேறு.

என்னதிப டிந்திடினு மீசனுறை கின்ற
புன்னைவன மூடுதிகழ் பொங்கரவ வாவி
தன்னுள நினைந்துவிரி தண்புனல் படிந்தார்
முன்னைவினை தீர்ந்திறைவன் மூதுலகு சேர்வார். (௧0)

பாண்முரலும் வண்டுகள்ப டிந்துநற வுண்ணை
நாண்மலர்ம ணங்கமழு நாகசுனை யாட
நீணிலவ ரைப்பினி னினைந்தவரை யேனுங்
காணிலவெரு வுற்றகல்வர் காலபடர் மாதோ. (௧௧)

பாயலைக ளெழுந்தபணி வாவிவினை யாட்டி
ஞாயிறுமு ழுங்குபுன லாடின்வினை யெல்லாம்
போயகல வெண்மதி புனைந்தவனி ருக்குஞ்
சேயுயர்செ ழுங்கயிலை சென்றடைவ ரன்றே. (௧௨)

தெய்வமறை மந்திர நவின்றுசிறை வண்டின்
கௌவைமலி பூஞ்சுனை கருத்தொடு படிந்தா
ரெவ்வழி யடைந்துமி றந்திடுவ ரேனு
மைமலிமி டற்றிறைவன் வாழுலகுசேர்வார். (௧௩)

மார்கழி தொடங்கமதி மூன்றுசுனை யாடி
யோரொரு பகற்பொழுதி லோர்பிடிகு றைத்துண்
டார்வமொடு புன்னைவன மேவியமர் கிற்பார்
தீர்வரிய வல்வினைக டீர்ந்துசிவ னாவார். (௧௪)

மாசிமகத் தாயிகழ் மலர்ச்சுனையின் மூழ்கி
மேசமுற வெள்ளிதெழு நீர்க்கட லிரப்பிற்

றேசுறுவ தாகுமெனத் தென்புலத்தி னுறைந்தோவா
ராசிபகர் செய்வர்த மகங்களி சிறந்தே. (௧௫)

கார்த்திகையிற் சாகந்தக ராதுகமும் போது
பூத்தசுனை யாடிவளர் புன்னைவன மேவி
யேத்தியிறை யோனடி யிறைஞ்சில்வினை யெல்லா
நீத்துவளர் பொற்றருவி னீழலுறை வாரே. (௧௬)

ஆவணியின் வெங்கதிரின் வாரமதி னந்தண்
வாவியிடை மூழ்கினவர் வல்வினை தொலைப்பார்
மேவுமக ரந்தனில் விரிந்தசுனை யாடிற்
பாவமெவை யேனுமவர் பற்றுவிடு மன்றே. (௧௭)

வெள்ளியுறு மாயிலிய நாளில்விரை நாறு
தெள்ளுசுனை யாடியிறை சேவடி வணங்கி
யுள்ளமகிழ் பாலடிசி லந்தணருக் கூட்டிற்
கள்ளொழுகு கொன்றைபுனை கடவுளுல கடைவார்.

போதுமண நாறவளி பொங்கரவ வாவி
யாதிரையி லாடிலம ரர்க்கிறைவ னாவார்
மூதறிவின் வைகறுறு மூழ்கினவர் பேறு
நாதனல தார்புகல்வர் நாநவிலற் பாற்றே. (௧௯)

வேறு.

வரையு யிர்த்த பசுங்கொடி மாதவம்
புரியுங் காலையிற் பொன்னுல கத்துறை
யமர டங்கைய ராங்கறி யாவகை
யுரவு நீருருத் தாங்கி யுறைந்தனர். (௨௰)

தூய வாளராத் தொட்டிடு காலயி
லாய் பூஞ்சுனை தோன்றிய தாங்கதன்
பாய்பு னற்கட் படிந்தவர் பேறுதான்
மாய னாலு முரைத்திட வல்லதோ. (௨௧)

தோட லர்ந்த துளிநற வுண்டளி
பாடு பூஞ்சுனைத் தென்றிசைப் பாதலத்
தூடு பாய்நதி யுண்டதன் பாங்கெலாம்
வீடு பூந்தரு வாயினர் விண்ணவர். (௨௨)

என்ன லோடு மிசைத்த மறையவன்
பொன்னந் தாமரைச் சேவடி போற்றுபு
வன்ன வாவுயிர் செற்ற மறையவன்
நன்ன தீப்புன லாட லயர்ந்தனன். (௨௩)

கங்கை யாதி கடலுல கத்தினிற்
பொங்கு மாநதிப் பூம்புனல் மூழ்கியுந்
தங்கு பாவந் தணந்தில னெய்தினான்
மங்குல் கண்படு புன்னை வனத்தினே. (௨௪)

அரவ வார்சடை யாடி யரும்பவிழ்
விரைசெய் கொன்றை மிலைந்த விறைவனைப்
பரவி நெஞ்சினுட் பாவித்து வல்வினை
யிரியும் வண்ண மிருந்தனன் மூன்றுநாள். (௨௫)

சடையுந் திங்களுந் தாழும் புலியத
ளுடையு மங்கை யொளிருந் திறன்மழுப்
படையுந் தாங்கிப் பசுங்கொடி பங்கினன்
விடையின் மீது வெளிவந்து தோன்றினான். (௨௬)

தண்ணு நெஞ்சங் களித்திடக் கண்டுதன்
னுண்ணி றைந்த வுவகையின் மூழ்கலு
மண்ண றன்னுரு நல்கின னங்கது
நண்ணி யேத்தி நவிலலுற் றனரோ. (௨௭)

செய்த வம்பல செய்யினு முன்னுரு
வெய்து தற்கரி தாமெவர்க் காயினுங்
கொய்து ணர்ப்பொலங் கொன்றையங் காரினாய்
நொய்து நான்பெற நோற்றதென் னென்றனன்.

என்னோடு மிறைவ னியம்புவான்
மன்னு மாதவ மாற்றியெம் வாளரா
முன்னந் தொட்ட சுனைப்புனன் மூழ்குவோர்
துன்னு வல்வினை யாவுந் தொலைப்பரால். (௪௯)

யாங்கி நுப்பினு மின்ன வனத்தினை
யோங்கு மன்பொ டுறைப விரும்புவார்
நீங்க லாவினை யாவையு நீத்துநந்
நீங்கி லாவருள் சேர்வது திண்ணமே. (௫0)

தாவி லந்தணர் சாதி முதலினோ
ரியாவ ராயினு மேடவிழ் புன்னையங்
காவி னெஞ்சங் களிப்புற வைகினோன்
மேவ ருந்தனி வீட்டுலகெய்துவார். (௫௧)

வேறு.

மாயிரு ஞாலந் தன்னின் மற்றுநம் பதியின் மேவி
யாயிரம் பிறப்பிற் றீரா வருந்தவம் புரியு நன்றி
சேயுயர் விசும்பு தோயும் புன்னையங் காவிற் சேர்ந்
தேயுமத் தலத்தி லாவி யிறந்தவந் தெய்தி டாதே. (௫௨)

மணிமுடி கிடந்த ஞாலப் பரப்பின்முற் பவத்தி லக்க
ணணிபகர் வணிக னீயம் மணிகளை வயங்க மெய்யி
லணிகிலையெனினுங் கையாற் றொடுதலான் மறைநூலாய்ந்த
துணிவுறு சிவராதற்குத் தோன்றலாயுதித் தாய்மன்னோ. (௫௩)

நம்முடைப் பதிக ளெல்லா நாடினை திகழ்ந்த பேற்றின்
மைமுகி றவழும் புன்னை மலர்வனந் தன்னி லெய்தி
யம்மலர்ச் சுனையிற் றெண்ணீ ராடினை யதனா லிங்கே
யெம்முரு வெய்தப் பெற்றா யிருவினை தொலைந்து மாதோ. ()

விரியிருள் வருகும் பைம்பொன் விமானமேற் கொண்டு வெள்ளி
யருவரை யடைதி யென்ன வணங்கவ னடைந்தா னாக

வெரிமணியிமைக்குஞ்செஞ்சூட் டிலங்குவாளெயிற்றுநாகம்
பரவிய சிவலிங் கத்தி னுறைந்தனன் பகவன் மாதோ. (௩௫)

ஆய்வனன் றூனு மூன்றைப் பிறப்பிலா ராய னென
மேயபோர் பொருள்கொள ாம லிச்சேப் பரவு கின்ற
தூயவர்க் கேவல் கேட்ட தன்மையாற் சுரும்பு பாட
வாய்விரிமலர்ப்பூம் புன்னைவனத்திடைவந்தான்மன்னோ. (௩௬)

அத்தகை விறகு விற்பா னடைந்துழிப் பசியின் மாழ்கித்
துத்திவா ளரவந் தொட்ட சனைப்புன றௌிக்கப் பெற்றுங்
கெய்த்ததோ ரிளைப்பா லாவி யிறந்திடப் பெற்ற பேற்றான்
முத்தலைச்சூலமேந்து முதல்வன்வாழ்கயிலைசேர்ந்தான். (௩௭)

அறிந்தில னுகி யோர்நா ளவ்வுழி யொன்று முண்ணு
துறைந்தவ னழிவி லாத வுயர்கதி யெய்தப் பெற்று
னிறைந்தபே ரறிவா னுடி நெஞ்சகந் திருக்கப் பெற்றோர்
பெறுங்கதி யெம்ம னேரற் பேசலாந் தகைமைத் தன்றே.

விரைப்புனற் கமலத் தண்ணா னிகர்தரு வியாதன் மேனு
ளுரைத்தவா றுரைத்தேனின்னநூலினையுமைப்பொருள்ளத்
தருத்தியாக் கேட்டல் செய்வோரகவிரு ளிசுப்பு நீண்ட
வரைச்சிலை குழைத்த விசன் மலரடிக் கன்ப ராவார். (௩௮)

கோட்டமில் குணத்தா ரிந்நூல் குழுவொடு நவிலல் செய்வோர், கேட்டுளங் கனிவோர் நெஞ்சங் கெழுமுபே ரன்பி னுலே திட்டுதல் புரிவோர் திட்டியருச்சனை செய்பு வோர், வேட்டன வேட்ட வெல்லாம் விரைவினி லெய்து மாதோ. ()

துளிப்பசுந் தேறன் மாந்தித் துன்தந்தபெல் லரும்பு மூசிக், களிச்சுரும் பரற்றும் புன்னை வனத்துறை கடவு டொன்றுக, வுளத்தினில் விருப்பாற் றீட்டி யுணர்வுசா லந்தணுளர்க், களித்தவ ரசுவமேதம் புரிந்தபே றடைவர் மன்னோ. (௪௧)

விண்ணவர்க் கிறைவன் கூறை விமலனற் காதை கேட்போர், தண்ணுளங் குழைந்து கூறுந் தகைமையோர்க் கருள வேண்டு, மண்ணலம் பசும்பொன் றாய வலங்கொளி யாடையென்று, மெண்ணருந் தவத்தோர்ப் போற்று மிருந்தவச் சூதன் றானே. (௪௨)

மூவுல கினிது வாழி முதுமறை வாழி தூய
நாவிலா மறையோர் வாழி தையலா ளுடையாள் பங்கின்
மேவியவிறைவன்காதை விருப்புடன்படிப்போர்கேட்போ
ரோவறு நிதிபெற் றோங்கி யுவப்பொடும் வாழி தானே. ()

## கன்மாடச்சருக்க முற்றிற்று.

ஆக செய்யுள். - ௫௦௯.

## கன்மாடச் சருக்கச் சுருக்கவசனம்.

மேலே சொல்லிய கதையைக் கேட்ட ருஷிகள் "இழிந்தசாதியிற் பிறந்து மாமிசபோசனம்பண்ணிய பாவியாகிய கானவன் புண்ணியவனக்ஷேத்திரத்தையடைந்து மரிப்பதற்கேற்ற தவம்யாது சொல்லியருளும்" என்று கேட்கச் சூதமுனி சொல்லத் தொடங்கினார்:—

சேற்றூருக்குப் பக்கத்திலுள்ள தேவியாற்றங்கரையில் வேதங்களைபுணர்ந்த வாமதேவ முனிவராதியோர் சிவபிரான் றிருவடியைத் தொழுது தவஞ்செய்துகொண்டிருந்தனர்; அம்முனிவருள் சிவபத்தி முதிர்ந்த சிவாநதனென்னு முனிவர் புத்திரனாகிய கன்மாடனென்பவன் ஒருநாள் பிதாவின் ஆஞ்ஞையாலே யோமஞ்செய்தற்குச் சமித்து (விறகு) தருப்பையெடுத்துக் கொண்டு வரும்போது ஆற்றினிடையே யெதிர்ப்பட்ட ஒரு பசுவை அழகாகிய சேற்றிலே தள்ளுதலும், உடனே யப்பசு மாண்டது. கன்மாடன் அதுகண்டு பயந்து வீட்டிற்கு வர அவன்பிதா அவனைப்பார்த்து 'என்ன செய்

தாய் சரீரம் பொலிவிழந்திருக்கின்றாய் பயப்படாதே. உன்னைத் தொடர்ந்த பாவத்தை யெனக்குச் சொன்னால் அது தீர்க்குமாறு பண்டை நூல்களாலே தெரிந்து சொல்லுவேன்' என்னலும் கன்மாடனும் நடந்ததைச் சொல்லினன்; அதுகேட்டுச் சிவநாதன் பயந்து நான்குவேதங்களையுணர்ந்த பிராமணர் சபையையடைந்து பசுக்கொலை செய்ததைச் சொல்லினன். அவருள்ளே அரிய குணமுள்ள ஒருபெரியவர் சொல்லுவார்; 'இது போலுங் கொடியபாவமொன்றில்லை. இந்தப்பாவ மிவனுடைய குலத்துள்ளோர் இருபத்தொருபேரை நரகத்திலே சேர்க்கும், இவனை நீங்கள் சாதியிலே சேராமற் றள்ளிவிட்டா லுங்களைச் சேராமற் போகாது நீங்கள் சிவபத்தியுடையீராதலா' லென்று சொல்லக் கன்மாடன் பிதா மாதாக்க ளதுகேட்டு மனநடுங்கிக் கன்மாடனைப்பார்த்து நீ காசிமுதலிய புண்ணிய க்ஷேத்திரங்களைப் போய்த் தரிசனஞ்செய் அத்தரிசனத்தின் பலனால் புன்னைவனத்தை யடைந்து நாகசுனையிலே தீர்த்தமாடி, அதன் பக்கத்திலுள்ள சங்கரமூர்த்தியை வழிபட்டால் பசுவைக்கொன்ற பாவநீங்கிக் கயிலாசத்திற் போயிருப்பாய். கங்கை முதலிய நதிகளில் மூழ்கினும் யாதுபயன்? புன்னைவனத்தின் நடுவே விளங்கும் நாகசுனையிலே ஸ்நானம் செய்தவர் பழவினை நீங்கிச் சிவபுரத்திலே சேருவர்.

அதிலே தீர்த்தமாட நினைத்தவரைக்கண்டாலு மவருக்கு யமதூதர் பயந்தோடுவர். விளையாட்டுக்காவது நாகசுனையிலே மூழ்கினரும் தெய்வமந்திரஞ்சொல்லி உண்மையோடு மூழ்கினவராய் எந்த இடத்திலே போயிறந்தவருஞ் சிவலோகத்தையடைவர். மார்கழி மாதமுதல் மூன்று மாதம் நாகசுனையிலே மூழ்கி முன்றயே யொவ்வொருநாளும் ஒவ்வொருபிடி யன்னங்குறைத்துச் சாப்பிட்டு விரதங் கொண்டு புன்னைவனத்திலிருப்பவர் வினையெல்லா நீங்கச் சாரூபபதவி பெறுவர். மாசிமகத்திலே நாகசுனைத் தீர்த்தமாடி எள்ளினாலே பிதிர்தர்ப்பணஞ்செய்தால் அழகுண்டாகுகவென்று தென்புலத்தாரா சீர்வதிக்கப்பெறுவர். கார்த்திகை மாதத்தில் இலை (கீரை) தின்னாமலிருந்து நாகசுனையிலேமூழ்கிப் புன்னைவனநாதரைவணங்கினால் வினையெல்லா நீங்கித் தேவேந்திரபதவி யடைவர். ஆவணி ஞாயிற்றுக்கிழமையில் நாகசுனையிலே தீர்த்தமாடினவர் வலிய வினையைக் கெடுப்பர். தைமாதத்தில் மூழ்கினால் எல்லாப்பற்றும் நீங்கும். வெள்ளிக்கிழமைவந்த ஆயிலியநக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்

செய்து சங்கமேசரை வணங்கிப் பாலுஞ் சோறும் பிராமணரையுண்ணச்செய்தால் சிவலோகத்தை யடைவார். திருவாதிரை நக்ஷத்திரத்திலே மூழ்கினால் இந்திரனாகியிருப்பர். தினந்தோறு மூழ்கினவர்பலன் சிவபிரானன்றி நாஞ்சொல்லும் பகுப்புடையதன்று.

புன்னைவனத்தில் பார்வதிதேவி தவஞ்செய்யுங்காலத்தில் தெய்வப்பெண்கள் நீர்வடிவமாகிப் பிரதியாமலிருந்தனர். அந்நீரையுடைய நாகசுனையில் மூழ்கினவர் பலனை விஷ்ணுவானு முரைக்க முடியுமோ? நாகசுனைக்குத் தென்பக்கத்திற் பாதலத்தூடு செல்கின்ற நதியொன்றுண்டு; அதன் பக்கமெல்லாம் விருக்ஷவடிவாகித் தேவர்களிருந்தனர்" என்று சொன்னவுடனே தன்னுடைய பிதாவின் பாதங்களைத் துதித்து வணங்கிப் பசுக்கொலைசெய்த கன்மாடனாகிய பிராமணன் தீர்த்தயாத்திரைபோய்க் கங்கையாதி நதிகளிற் றீர்த்தமாடியும் பாவந்தீராமல் புன்னைவனத்தின்கண்வந்து சேர்ந்து நாகசுனையிலே மூழ்கிச் சங்கரலிங்கத்தைத் துதித்து மூன்றுதினமிருந்தனன்; அவன்முன்னர் பார்வதிதேவியாரோடும் சிவபிரான் இடபவாகனத்தி லெழுந்தருளி, அவனுக்குச் சாரூப பதவி கொடுத்தனர். அவ்வுருவத்தைக் கன்மாடன் பெற்று, சுவாமி! அநேக தவஞ்செய்தாலுங் கிடைத்தற்கரியதாம் உமது திருவுருவம், அதை யெளிதி லடியேன் பெற்ற தென்னகாரண' மென்று வினவினன். அவனுக்குச் சிவபிரான் சொல்லுவார். 'பெரிய தவத்தைச் செய்து நம்முடைய சர்ப்பம் தோண்டியசுனையிலே தீர்த்தமாடுவோர் வலிய வினைகளெல்லாவற்றையுங் கெடுப்பர். எந்தவிடத்திலிருந்தாலு மிந்தப் புன்னைவனத்திலிருக்க ஆசைப்படுவர். நமது திருவருளை யுடைவர். பிராமணர் முதலிய எந்தச் சாதியாரானாலும் புன்னைவனத்திலிருந்தால் மோக்ஷத்தையடைவர்.

பூலோகத்திலே நம்முடைய பிறதலங்களிலேபோ யாயிரஞ் சனனத்தில் நீங்காத தவஞ்செய்யும்பலன் இப்புன்னைவன க்ஷேத்திரத்தையடைந்தவர்க்கே கிடைக்கும். இக்ஷேத்திரத்தில் மரணஞ்சம்பவிக்கமாட்டாது (மோக்ஷங்கிடைக்குமென்பது கருத்து) கன்மாடனே நீ சென்ற பிறப்பில் உருத்திராக்கமணி விற்கும் வைசியன். அம்மணியை நீ யணியாவிட்டாலுங் கையாற்றொட்டு விற்ற புண்ணியத்தால் பிராமணனாகிய சிவநாதனுக்குப் புத்திரனாகப் பிறந்தாய். நம்முடைய தலங்களையெல்லாந் தேடித் திரிந்தகாரணத்தால் புண்

னைவனத்தைச் சேர்ந்து நாகசுனையிலே ஸ்நானஞ்செய்தாய் ஆதலால் எம்து சாரூப்பம் உனக்குக் கிடைத்தது. இனி நீ பொன்விமானத்திலேறிக்கொண்டு போய்த் திருக்கயிலாசமலையைச் சேர்வாய் என்று அருளிச்செய்தனர். அவனும் அங்ஙனமே போய்ச்சேர்ந்தனன். சிவபிரானும் புன்னைவனத்திலிருக்கிற சங்கரலிங்கத்துள்ளே புகுந்தனர்.

அந்தக் கன்மாடன் முன்னொரு பிறப்பிலே யிடையனாயிருந்து சிவனடியாருக் கேவல்செய்துகொண்டிருந்ததனாலே புன்னைவனத்தில் விறகுவிற்கும்பொருட்டு வந்த இடத்திற் பசியால் வாடி நாகசுனைத்தீர்த்தந் தெளிக்கப்பெற்றுத் தன்னுடலைவிட்டுப் பிரிந்து கயிலாசபதவி யடைந்தனன். அறியாதவனாகி யொருதினம் புன்னைவனத்தில் பட்டினியேயிருந்தவன் உயர்ந்த மோக்ஷம் பெறுவானென்றால் அறிவாற் புன்னைவனத்தின் பெருமையைத் தெரிந்து மனமகிழ்ந்திருக்கப்பெற்றவர் அடையும்பலன் நம்போலியர் பேசுந் தன்மையுடையதன்று. தாமரை மலரிலிருக்கும் பிரமதேவருக்கு நிகரான, வேதவியாசமுனிவர் எனக்குப் பூருவகாலத்திற் சொன்னபடியே நைமிசாரணிய முனிவர்களே யுங்களுக்குச் சொல்லினேன்.

இந்தப் புராணத்தைப் படிப்பவரும் ஆசையாகக் கேட்பவரும் பொறாமைக்குணமில்லாமற் பிறருக்குப் போதிப்பவரும் கேட்டு மனமுருகுபவரும் அன்பினால் எழுதினவரும் எழுதிவைத்துப் பூசிப்பவரும் நினைத்த நினைத்த பலன்களையடைந்து சிவபிரான் திருவடிக்கன்புடையராவர். இப்புராணத்தை யெழுதி, அறிவான் முதிர்ந்த பிராமணருக்குத் தானஞ்செய்தவர் அசுவமேதஞ்செய்த பிரயோசனத்தைப் பெறுவர். வீராசை நாயகராகிய சங்கரேசர் சரிதமாகிய இப்புராணங்கேட்போர் புராணிகர்க்குப் பொன்னும் வஸ்திரமுங் கொடுக்கவேண்டும்" என்று பெரிய தவத்தையுடைய சூதமுனிவரருளிச்செய்தனர். திரிலோகங்களும்வாழ்க. நான்கு வேதங்களும் வாழ்க. அவ்வேத பாராயணஞ்செய்யும் பிராமணர் வாழ்க. இப்புராணம் படிப்போருங் கேட்போரும் நீங்காத திரவிய சம்பன்னராயிருந்து மனமகிழ்ச்சியுடன் வாழ்க.

சங்கரேசர் திருவடிவாழ்க.

**சங்கரநாராயணசாமிகோயிற்புராண முற்றிற்று.**

# பரிசோதனை பத்திரம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 26 | வர | ஓ |
| 5 | 25 | கல்வி | கல்வி |
| 20 | 4 | யடுவது | யாடுவது |
| ,, | 18 | தாடகம் | தடாகம் |
| 21 | 2 | நாடு | ம் |
| 25 | 22 | சொல் | என்றுசொல் |
| 27 | 12 | நெய்தரி | நெய்தனி |
| ,, | 20 | பொருந்து | பொருந்தும் |
| 41 | 2 | ொகாணாந | கொணர்ந் |
| 42 | 10 | பணியுந் | பணியும் |
| 45 | 13 | தல்வ | தல்வந் |
| 50 | 33 | டயை | டைய |
| 57 | 4 | ெயபபாற் | வெப்பாற் |
| 67 | 15 | லெண்னி | லெண்ணி |
| 69 | 19 | நதிகளுள் | நதிகளின் |
| 91 | 14 | துபபு | துப்பு |
| 94 | 5 | யஙாககு | புனக்கு |
| 95 | 29 | திருவுரு | திருவரு |
| 97 | 5 | றாற்றி | னூற்றி |
| 106 | 27 | குறை | குரை |
| 116 | 12 | மனி | மணி, |